# கள்ளர் வரலாறு

## இந்தியாவையும், கடல் கடந்த நாடுகளையும் கட்டியாண்ட ஓர் இனத்தின் வீர வரலாறு


ஆசிரியர்

புலமை **வேங்கடாசலம் வன்னியர்**, எம்.ஏ., பி.எல்.,

வழக்கறிஞர்

தஞ்சை மாவட்டச் செயலாளர்

தமிழ்நாடு கள்ளர் பேரவை



(புலமை)

திருமதி ஞானசரசுவதி நினைவு வெளியீடு

முதற்பதிப்பு : பிப்ரவரி 1994

உரிமை : ஆசிரியருக்கு

நூல் : கள்ளர் வரலாறு

ஆசிரியர் : புலமை வேங்கடாசலம் வன்னியர்

விலை : ரூ. 25-00

வெளியிட்டோர் : திருமதி பார்வதி புலமை &
செல்வி புலமை மகள் கண்ணுக்கினியாள்

கிடைக்குமிடங்கள் :

1. புலமை வேங்கடாசலம் வன்னியர், எம்.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர்
15 பூக்கார இரண்டாந்தெரு,
தஞ்சாவூர்-613 001.

2. முரசு புத்தக நிலையம்
C/o தஞ்சை வள்ளல் S.N.M. உபயதுல்லா, Ex.M.L.A.
மணிக்கூண்டு அருகில்,
தஞ்சாவூர்-613 001.

3. நியூ செஞ்சுரி புத்தக நிலையம்
இராசராசன் வணிக மையம்,
பேருந்து நிலையம் அருகில்,
தஞ்சாவூர்-613 001.



# புலமை வேங்கடாசலம் வன்னியர்,

வழக்கறிஞர் எம். ஏ., பி. எல்.,

முன்னணித்தலைவர்

தமிழ்நாடு கள்ளர் பேரவை

தமிழ்நாடு கள்ளர் பேரவை



## வாழ்க! வளர்க!! வல்லமைபெறுக !!!
## கள்ளர் பேரவை !!!!

வழக்கறிஞராகி வாதாடும் திறமைபெற்றதோடு
வையகத்துக் கள்ளரெல்லாம் போற்றவல்ல
புள்ளவராயன் குடிகாட்டில்பிறந்த
புலமை வேங்கடாசல வன்னியருடைய

கள்ளர் வரலாற்றை படித்ததும்
கருத்தாழமிகுந்த புதுக்கவிதையை
கள்ளரெனும் தன்மானவுணர்ச்சி இருந்ததால்
கள்ளர் பேரவைக்குக் காணிக்கையாக்கியுள்ளேன்.

இவண்
**கவிஞர் கற்புக்கரசு**



# கள்ளர் பேரவையில்!
# உறுப்பினராகத் தயக்கமேன்?
# உறுப்பினராகாத கள்ளர் ஒரு கள்ளரா?

---

கொடிகட்டி ஆண்டவன் கள்ளனடா!
கொடியபுலிக்கொடியை ஏற்றியவனும் கள்ளனடா!
குறுநிலமன்னர்களாக ஆண்டவனும் கள்ளனடா!
குறுநிலமன்னர்களுக்கு ஆலோசனைக்கூறியவனும் கள்ளனடா!

கொத்தளங்கள் அமைத்தவனும் கள்ளனடா!
கோவில்கள் எழுப்பியவனும் கள்ளனடா!
கடவுள்பற்று உள்ளவனும் கள்ளனடா!
கடவுள்பற்றி பாடியவனும் கள்ளனடா!

தமிழை வளர்த்தவனும் கள்ளனடா!
தன்மானத்தோடு வாழ்ந்தவனும் கள்ளனடா!
தமிழகத்தில் வரலாறுபடைத்தவனும் கள்ளனடா!
தரணிபோற்ற வாழ்ந்தவனும் கள்ளனடா!

மாப்பிள்ளை, மாமா, மச்சானென
மனங்குளிர கூவியழைப்பவனும் கள்ளனடா!
மழவராயரேயென சோழகர் ஒருவர் கூவியழைத்தால்,
மாமாவருகிறேனென மறுகுரல்கொடுப்பவன் கள்ளனடா!

கள்ளரினத்திலொருவர் இறந்துவிட்டால் கண்ணீர்வடித்துக்
கவிதைநயம்பொழிய இறந்தவர்கள் வரலாற்றைக்கூறி
கதறியழுதுவரும் கள்ளரினப்பெண்களைக் கண்டவுடனே
கண்கலங்காத கள்ளரெல்லாம் கண்கலங்கிடுவர்!

தமிழ்உணர்ச்சியுள்ள புலமை வேங்கடாசல வன்னியர்
தன்மான உணர்ச்சியோடு வெளியிட்டுள்ள
கள்ளர் வரலாற்றை படித்ததும்
கர்ச்சிக்காத கள்ளர் ஒருகள்ளரா?

தோள்தட்டி மார்தட்டி வாழ்ந்தவனும்கள்ளனடா!
தோள்மேல் தோள்போட்டு வாழ்ந்தவனும்கள்ளனடா!
தோள்மேல் தோள்போட்டு வாழ்ந்ததுபோதும்கள்ளரே!
தோள்தட்டி மார்தட்டவேண்டிய காலம்வந்துவிட்டது கள்ளரே!

அய்யர் அய்யரெனச்சொல்லி சலுகைபெறும்போது
அரிஜன் அரிஜனரெனச்சொல்லி சலுகைபெறும்போது
நாடார் நாடார்சங்கமெனச்சொல்லி சலுகைபெறும்போது
நாட்டிற்கே இதுவரைதெரியாதவன்னியர் சலுகைபெறும்போது

கள்ளர் கள்ளரெனச்சொல்லி சலுகைபெற
கலக்கமேன்? உறுப்பினராகத்தயக்கமேன் கள்ளரே!
கள்ளரெனச்சொல்லி கழகத்திற்கு உதவிசெய் கள்ளரே!
கள்ளரெனச்சொல்லி காங்கிரசிற்கு உதவிசெய்கள்ளரே!-தவறில்லை!

சாதிமதபேதமற்ற அறிவுவளர்ச்சியடைந்த இந்திய-தமிழகத்தில்
சாதிக்கலவரத்தை உண்டுபண்ணுவதா எனநினைக்கின்றகள்ளரே!
சான்றிதழில் இந்து - கள்ளன் எனநீர்எழுதத்தவறினால்
சான்றிதழை அந்தப்பள்ளிநிறுவனம் ஏற்கமறுக்கிறது கள்ளரே!

எந்தச்சாதியையாவது ஒருசாதிப்பெயரைக் குறிப்பிட்டால்தான்
எந்தப்பள்ளியிலும் அனுமதிக்கிறார்கள் கள்ளரே!
சாதியை ஒழிக்கவேண்டிய இந்திய-தமிழக அரசு
சாதியைச் சான்றிதழ்களில் குறிப்பிடச்சொல்லுகிறது! கள்ளரே!

ஏட்டளவில் சாதியை அரசாங்கம் குறிப்பிடாதிருந்தால்
எண்ணத்தளவில் சாதியொழிய வழியுண்டு கள்ளரே!
ஏட்டளவில் சாதியொழியுங்கால் கள்ளரே!
எண்ணத்தளவில் கள்ளரென்றசொல்லை மறக்கவேண்டும் நீர்!

புலிகளாயிருந்த கள்ளர் கூட்டமெல்லாம்
பூனைகளாகிவிடக்கூடாதென எண்ணி! எண்ணி!
புலமை வேங்கடாசல வன்னியர்
புகழுடைய கள்ளர் வரலாற்றை வெளியிட்டுள்ளார்!

புலவர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதன்முதலாக
புகழுடைய கள்ளர் சரித்திரத்தையும் வெளியிட்டுள்ளார்!
கள்ளர் இனத்திற்கு வேதமாக திகழ்கின்ற இந்நூல்களை
கள்ளரினத்தவர் வாங்கிடவேண்டுமென வற்புறுத்திக்கூறுகின்றேன்.

கள்ளரினத்தினர் படிப்பதற்கு வாய்ப்புகள் அதிகம்பெற
கள்ளரினப்பட்டதாரிகள் பதவியுர்வு வேலைவாய்ப்புஅதிகம்பெற
கள்ளரினத்தில் உறுப்பினர்களை அதிகரித்துக்காட்டவேண்டிய
காலக்கட்டம் வந்துவிட்ட காரணத்தினால் கள்ளர்களுக்காக

கள்ளர்பேரவையென ஒருபேரவையை உருவாக்கி
கன்னித்தமிழகத்தில் கலங்கரை விளக்காய் திகழ்கின்ற
கம்பீரத்தோற்றமுள்ள கருத்தாழமிகுந்த ஐ. ஏ. எஸ். பட்டம்பெற்ற
கள்ளரின எம். எம். சந்திரகாசன்காங்கேயர் அவர்களே !

நந்தையாறு கூலையாறு கொள்ளிட காவிரியை
நீந்துவதில் வல்லவராய்திகழ்ந்திருந்த காரணத்தால்
நாட்டில் நடமாடும் நான்குகட்சிக்காரனிடமும்
நாவன்மையால் நீந்திவந்ததை கள்ளரினம் போற்றுதய்யா!

உறவுமுறைக்காரனுக்கும் உற்றதுணை நண்பனுக்கும்
உன்னைநாடிவந்த கள்ளரின மக்களுக்கும்
உரிமையினை பயன்படுத்தி உற்றவேலை தேடித்தந்தாய்
உன்தன்மான உணர்ச்சியினை கள்ளரினம் போற்றுதய்யா!

மாங்குடி கள்ளரிலே மானமுள்ள கள்ளராய்
மன்னர்களும் போற்றவல்ல மதிப்பிற்குரிய கள்ளராய்
மண்ணுலகில் வாழுகின்ற கள்ளரின மக்களுக்கு
மணிமகுடமாய் திகழ்வதை கள்ளரினம் போற்றுதய்யா!

கள்ளர் பேரவைக்குக் கலங்கரை விளக்காய்
கள்ளர் வாழ்வுக்கு விடிவெள்ளியாய்
கள்ளர் சமுதாயத்திற்கு இருளகற்றும் கதிரவனாய்
கர்ச்சிக்கும் புலிக்கொடியேற்றிவருவதை கள்ளரினம்போற்றுதய்யா!

கள்ளரென்ற சொல்லுக்கு அரசரென்று பொருள்.
கள்ளரினத்தவர் அரசாளும் திறமைபெற்றவராகையால்
கள்ளரினப் பட்டதாரிகளுக்கு அரசாங்கவேலைகொடு
கள்ளரினப் பட்டதாரிகளுக்கு பதவியுயர்வுகொடு அரசே !

இல்லையேல் அரசனும் ஆண்டியானதுபோல்
இந்தக்கள்ளர் இனத்தையும் ஆண்டியாக்கி
இவர்களை மிகமிகப்பின்தங்கிய வகுப்பில்சேர்த்து
இவர்கட்கு அரசாங்கவேலையில் அதிகப்பிச்சையிடு அரசே ! என

உண்ணாவிரதமிருந்து அரசிற்கு அறிவுறுத்தும் ஆற்றல்படைத்த
உண்மையான தலைவர் எம். எம் சந்திரகாசன்காங்கேயரே !ஐ.ஏ, எஸ்,
உன்னுடைய தள்ளாடும் வயதிலும் தன்மானஉணர்ச்சியினை
உன்னுடைய கள்ளரினம் போற்றுதய்யா ! போற்றுதய்யா !!

இவண்

கவிஞர் கற்புக்கரசு என்கிற
**T. K. சம்பந்தம் மழவராயர்**
இந்திய தேசிய காங்கிரஸ்.
திருச்சென்னம்பூண்டி (கீழப்படுகை)
திருக்காட்டுப்பள்ளி (வழி)
தஞ்சை (மாவட்டம்)

# கள்ளர் என்பவர் யார்?

தமிழகத்தை ஒரு காலத்தில் பேரரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும், நாடுகாவல் அதிகாரிகளாகவும், படைத் தலைவர்களாகவும் இருந்து ஆண்ட மரபினரே கள்ளர் எனப்படுவர்கள். கள்ளர் பெருமக்கள் தமிழகத்தில் தஞ்சை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் திண்டுக்கல், திருநெல்வேலி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் பெருவாரி யாக வாழ்ந்து வருகிறார்கள்.

கள்ளர் என்ற சொல்லுக்கான பொருள் :- கள்ளர் என்ற சொல்லுக்கு அரசர் என்பது பொருளாகும். "கள்ளராற் புலியை வேறு காணிய" என்ற சீவகசிந்தாமணி பாடல் (எண். 741) வரிக்கு உரை எழுதப் புகுந்த உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் அவர்கள் கள்ளரை அரச ரெனக் குறித்திடும் வகையில்",

"அரசரைக் கொண்டு சீவகனைப் போர் காணவேண்டி" எனப் பொருள் கண்டார்.

கள்ளர் என்று குறிப்பிடப்பட்ட அரசப் பெருமக்கள் : சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், தொண்டைமான், புல்லி

முத்தரையர் போன்ற மன்னர்களும் பழந்தமிழ் இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் கள்வர், கள்ளர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார்கள்.

"இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்ச நிறையழித்த கள்வனென்-றஞ்சொலாய்
செல்லு நெறியெலாஞ்சேரலர் கோக்கோதைக்குச்
சொல்லும் பழியோ பெரிது.

என முத்தொள்ளாயிரம் சேரமானைப் பற்றியும்;

"கழப்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்"

என அகநானூறு புல்லியைப் பற்றியும்;

"கள்வர் பெருமகன் தென்னன்"

என அகநானூறு பாண்டியனைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

கள்ளர் முத்தரைய மன்னர்களில் பேரும் புகழும் பெற்ற மாமன்னன பெரும்பிடுகு முத்தரையன்,

"வல்லக்கோன், தஞ்சைக்கோன், கள்வர் கள்வன் பெரும்பிடுகு முத்தரையன்" (- செந்தலைக் கல்வெட்டு)

"ஸ்ரீமாறன், ஸ்ரீ கள்வர் காவலன்" எனக் கல்வெட்டுக்களிலும் சாசனங்களிலும் குறிப்பிடப்படுகிறான்.

சோழரைக் கள்வர் என்கிறார்கள் டாக்டர் பர்னல் அவர்களும் வெங்காசாமி அவர்களும்.

சோழர் சாதியிற் கள்ளர் என்பார் ஒரு சாரார் (செந்தமிழ், தொகுதி-2, பக்கம்-175), எனக் குறிப்பிடுகிறார் திருவாளர் ம. சீனிவாச அய்யங்கார் அவர்கள்.

கள்வர், கள்ளர் என்ற பெயரிலுள்ள கடவுள்கள் :- கடவுளர்களில் சிவபெருமானும் திருமாலும் கள்வன், கள்ளர் எனக் குறிப்பிடப்படுகிறார்கள்.

சிவபெருமானை,

"- உள்ளங் கவர் கள்வன்-"

என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரங் கூறு கிறது.

திருமாலை,

"-கள்ள மாதவா கேசவா"-

"-காரகத்தாய் கார்வானத்துள்ளாய் கள்வா-"

"-விரிபொழி லரங்கந்தன்னுள் கள்வனார் கிடந்த வாறும் -"

என்று திருமொழிப் பிரபந்தங்கள் கூறுகின்றன.

அலர்மேல் மங்கை கள்ளர் இனத்துப் பெண்மணி என்பது :- திருப்பதி வேங்கடாசலபதி பெருமானின் மனைவியான அலர் மேல் மங்கை கள்ளர் இனத்துப் பெண்மணியாவாள். இவள் திருவேங்கடமலையை ஒரு காலத்தில் சீரோடும் சிறப்போடும் ஆண்ட முனியத் தொண்டைமானின் மகளாவாள்.

திருமங்கை ஆழ்வார் (திருமங்கை மன்னன்) கள்ளர் இனத் தவர் என்பது :- பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை ஆழ்வார் கள்ளர் இனத்தைச் சார்ந்தவராவார். இவருக்கு கள்ளாழ்வார் (கள்ளர் + ஆழ்வார் = கள்ளராழ்வார் - கள்ளாழ் வார்) என்ற ஒரு பெயரும் உண்டு.

திருமங்கை ஆழ்வார் வரலாறு :- செம்பாகமான செந்தமிழ் நடையில் பெரிய திருமொழி என்ற ஆயிரம் பாசுரங்களை அருளிச் செய்த இப்பெரியார் சோழ மண்டலத்தே திருவாலி நாட்டைச் சேர்ந்த திருக்குறையலூரில் சோழ மன்னனது சேனைத் தலைவனான நீலன் என்பவர்க்குத் திருமகவாகக் கலியுகம் 398-வதான நள ஆண்டு கார்த்திகை மாதம் பௌர்ணமி கிருத்திகை நாள் கூடிய நன்னாளில் அவதரித் தார். கலியன் என்ற திருப்பெயருடன் ஆலி நாட்டின் தலை வராகவும், சோழ மன்னனது சேனைத் தலைவராகவும் விளங்கியவர். மருத்துவத் தொழிலை மேற்கொண்ட ஓர் சீவைணவரின் மகளான குமுதவல்லியாரை மணந்தவர்.

வைணவப்பற்று மிகுந்த இவ்வாழ்வார், அரசனுக்குச் சேர வேண்டிய தொகைகளைக் கொண்டு வைணவ அடியார்கட்கு உணவளித்து வந்தார். நாளடைவில் இவரது செயல் வெளிப் பட அரசன் இவரைக் காவலில் இட்டானென்றும் பின்னர் திருமாலின் அருளால் இவர் பெரும் பொருள் கச்சியிற் பெற்று, அரசற்குரிய கடனைத் தீர்த்தனர் என்றும், குருபரம்பரை முதலிய வரலாறுகள் கூறும். இந்நிகழ்ச்சியின் பின்னரும் பொருள் முட்டுப்பாடு காரணமாக இவர் ஆறலைத்துப் பொருளீட்டி அப்பொருளைக் கொண்டு அடியாரை அமுது செய்வித்து வரு நாட்களில் ஓர் நாள் திருமணங்கொல்லை என்ற ஊர்ப்புறத்தில் ஒருவர் தமது மனைவியுடன் வரக்கண்டு, தமது பரிவாரங்களுடன் சென்றெதிர்த்துப் பொருளைக் கவர்ந்து மூட்டையாகக் கட்டியெடுத்துச் செல்ல எழும்போது, மூட்டையைத் தூக்க மாட்டாமல் வருந்தி, 'அம்மறையவரை நோக்கி "நீர் ஏதோ மந்திரம் செய்தீர்'' என்று கூற, அவர் "ஆம், அந்த மந்திரத்தை உமக்கும் உபதேசிக்கின்றேன்'' என்று கூறி ஓதிய அளவில், வாட்கலி கன்றியார் ஞானம் பெற்றுத் திருமால் மீது பல பாசுரங்களைப் பாடினார் என்ப. ஆழ்வார்களைப் பற்றிக்கூறும் திவ்யசூரிசரிதம், இவ்வாறு வழிப்பறி செய்யப்பட்டவர் ஸ்ரீ ஆண்டாளை மணம் செய்து வந்த திருவரங்கப் பெருமானே என்றும், இவ்வாழ் வார்க்குப தேசிக்கப்பட்டது "திருவெட்டெழுத்து எனறும் கூறும்.

திருமங்கை ஆழ்வாரின் பாசுரங்கள் தரும் செய்திகள் :- திருமங்கை ஆழ்வார் பாடிய பாசுரங்களிலிருந்தும் திருமங்கை ஆழ்வாரின் வாழ்க்கையைப் பற்றிச் சில குறிப்புகள் காணப் படுகின்றன.

இவர் ஆலி நாட்டுக்கும், திருமங்கை, குறையல் என்ற திருப்பதிகட்கும் தலைவர் என்றும், (கூரணிந்த வேல்வலனா லிநாடன், மங்கையர்கோன் குறையலாளி (பெரிய திரு. 4, 4, 10); மங்கைவேந்தன் (ஷை 1, 3, 10); ஆலிநாடன் (7, 3, 10); புலமங்கைக் குலவேந்தன் (6, 6, 10); வயலாலி நன்னாடன், மங்கையர் தலைவன் (9, 8, 10), இவர்க்குக் கலிகன்றி முதலாகப் பல திருநாமங்கள் உண்டென்றுப் (அருண்மாரி

யரட்டமுக்கி யடையார்சீயம் பரகாலன் கலியன் (ஷை 3, 4, 10); கலிகன்றி ஷை (3, 2, 10); அமரில்போர் செய வல்ல யானைப் படை, குதிரைப்படைகளைப் படைத்தவர் என்றும் (அமரிற் கடமாகளியானை வல்லான் (2, 4, 10); கடமாருங் கருங்களிலு வல்லான் வெல்போர்க் கலிகன்றி (2, 5, 10), ஆடன்மாவலவன் (5, 8, 10); வாமான் றேர்ப் பரகாலன் (7, 4, 10); அலுமாவலவன் கலிகன்றி (9, 10, 10) பெருங் கொடையாளியென்றும் (காரார் புயற்கைக் கலிகன்றி (3,2,10); அருண்மாரி (4, 2, 10); திண்ணிய தோள்வலி மிக்கார் என்றும் கன்னவிலும் தோளான் (6, 8, 10); கன்னீர மால்வரைத் தோட்கலிகன்றி (7, 2, 10); தேர்ப்படை, காலாட் படை களையுடையார் என்றும் (வாமான் றேர்ப் பரகாலன் (7, 4, 10) வாட்டிறட்டானை மங்கையர் தலைவன் (10, 9, 10); வேல் வல்லார் என்றும் (கூரணிந்த வேல்வலவன் (4, 4, 10); கூரார்ந்த வேற்கலியன் (3, 4, 10); போர்த்திறம் வாய்ந்த பெரு வீரர் என்றும் (மருவலர் தமுடல் துணிய வாள்வீசும் பரகாலன் (3, 9, 10); அடையார் சீயம் (3, 4, 10); செந்தமிழ்ப் புலமை வாய்ந்த சீரியோ ரென்றும்; (கோவைத் தமிழாற் கலியன் சொன்ன (5, 2, 10); சொன்னவின்றமிழ் நன்மணிக்கோவை (7, 7, 10); கலையார் பனுவல் வல்லான் கலியன் (9, 6, 10); கற்ற நூல் கலிகன்றி (10, 1, 10) இவரது பாசுரங்கள் குறிப் பிடுகின்றன.

# கள்ளர் பட்டப் பெயர்கள்

அகத்தியர், அகத்தியார் : தமிழ் நாட்டின் தொன்முதுக் குடியான அகத்தியர் குடியைச் சார்ந்தவர்கள். அகத்தியர் குடியில் தலைசிறந்து விளங்கியவர் தமிழ் முனிவர் என்றழைக்கப்படும் அகத்திய முனிவராவார்.

அகத்திய முனிவர் வரலாறு அகத்திய முனிவர் சங்க காலத் தமிழகத்தில் தலைச்சங்கம். இடைச் சங்கத்தின் கண் தலைமைப் புலவராய் இருந்து தமிழை ஆராய்ந்தவராவார்.

"தலைச் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கம் இர்இயினார் பாண்டியர்.

அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருக வேளும், முரிஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்நூற்று நாற்பத்து ஒன்பதின்மர் என்ப."

"இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல் காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்

மாறனும், துவரைக் கோமானும், கீரந்தையும் என இத்தொடக் கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப'' என்பன களவியல் என்ற இறையனார் அகப்பொருள் தரும் சான்றுகளாகும்.

**அகத்தியரும் காவிரியும் :-** அகத்திய முனிவரின் கமண்டல நீரிலிருந்தே காவிரி உண்டாயிற்று என மணிமேகலை உரைக்கிறது.

"அமர முனிவ னகத்தியன் றனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை''.

– மணிமேகலை, பதிகம் 11, 12.

**அகத்திய முனிவரின் குடும்ப வரலாறு :** அகத்திய முனிவர் பொதிய மலையைத் தமது இருப்பிடமாகக் கொண்டு தமிழ் சங்கம் ஒன்றை வைத்து நடத்தி வந்தார்.

"தென்றமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன்
தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல்" - கம்பராமாயணம்

அகத்திய முனிவருக்கு உலோபமுத்திரை என்ற ஒரு மனைவியும் சித்தன் என்ற ஒரு மகனும், தம்பி ஒருவரும் இருந்தார்கள்.

அகத்திய முனிவர் இராமர் முதலிய அரசர்களாலும் வான்மீகர் போன்ற முனிவர்களாலும், இந்திரன் முதலிய கடவுளர்களாலும் அச்சத்தோடும் அன்போடும் வணங்க தக்க வராக இருந்தார். அவர் தொல்காப்பியர் முதலான பன்னிரு பெரும் புலவர்கட்கு ஆசிரியராகவும் இருந்தார். (-இலக்கிய வரலாறு, முதல் பாகம், கா. சுப்பிரமணிய பிள்ளை, பக்கங்கள் 43, 44).

''மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும்", - பன்னிரு பாட்டியல்.

அங்கதராயர் : அங்கதன் என்ற அரசனின் மரபினர்.

அங்கராயர், அன்கராயர், அனகராயர் : முதல் இராசேந்திர சோழன் காலத்தில் கங்கை நதிக்கரையில் அங்கம் என்னும் நாட்டை வென்று கங்கையில் நீரை எடுத்த வீரர்கள்தம் மரபினர். அங்கம் + அரையர் = அங்கஅரையர்- அங்கவரையர்- அங்கராயர்; அன்கராயர், அனகராயர் எனவழைக்கப் பட்டார்கள்.

அசையாத்துரையர், அசையாத்துரையார், அம்மையத் துரையர் : அம்மையன் என்னும் அரசனின் மரபினர்; அம்மையன் - அம்மையபுரம், அம்மையப்பன், அம்மனூர் என்னும் ஊர்களையும் அம்மணியாறு என்னும் பேராற்றையும் உண்டாக்கிய வனாவான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம் 104)

அச்சித்தேவர், அச்சுத்தேவர், அச்சுதர், அச்சுதராயர், அச்சுத பண்டாரம் : முதலேழு வள்ளல்களில் ஒருவரான செம்பியன் மரபில் வந்த அச்சுதன் என்னும் அரசனின் மரபினர். அச்சுதனின் வேறு பெயர்களான அச்சுதராயன், அச்சுதேவன் என்னும் பெயர்களால் அவனது மரபினர் அச்சித்தேவர், அச்சுத்தேவர், அச்சுதர், அச்சுதராயர், அச்சுத பண்டாரம் எனவழைக்கப்பட்டார்கள். அச்சுதன் அச்சுத மங்கலம், அச்சுதன்குடி என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். (-சூரியகுல கள்ளர் சரித்திரம்).

அச்சுதனைப் பற்றி தனிப்பாடல் தரும் செய்திகள் : தனிப் பாடல் திரட்டு என்னும் தமிழ் இலக்கிய நூலின்கண் அச்சுதனைப் பற்றி பின்வரும் குறிப்புகள் காணப்படுகின்றன.

“குடகர் குணகடல் என்பர்; குடக்கு
இடகர் வடகடல் என்பர்; - வடகடலோர்
தென்கடல் என்பர் ; திருந்துதார் அச்சுதநின்
முன்கடை நின்றார்க்கு முரசு”.

- பாடல் 159

பொருள் : அச்சுத வள்ளலே ! நின் முற்றத்தில் ஒலிக்கும் முரசை, மேற்குத் திசையில் உள்ளவர் கிழக்குக் கடலின் ஒலி என்பார்; மேற்குத் தென்திசையில் இருப்பவர் வடக்குத் திசையில் உள்ள கடலின் ஒலி என்பார்; வடகடற் பகுதியில் உள்ளவர்கள் தென்கடலின் ஒலி என மொழிவார்.

''தினைவிளைத்தார் முற்றம் தினை உணங்கும்; செந்நெல்
தனைவிளைத்தார் முற்றமது தானாம்;-கனையும்
முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர் தானை
அரசு உணங்கும் அச்சுதன் முற்றம்.
- பாடல் 160

பொருள் : தினை என்னும் பயிரை விளைவித்தவரின் வாயிலில் அந்தத் தினையே உயர்த்தப் பெற்றிருக்கும் நெல்லை விளைவித்தவரின் வாயிலில் நெல்லே உலர்த்தப் பெற்றிருக்கும். தேரும் படையும் உடைய மன்னர்கள் வந்து வாடிநிற்கும் அச்சுதன் முற்றத்தின்கண் பேரிகையும் சங்குகளும் உலர்ந்து கிடக்கும்.

''குறையுளார் எங்குஇரார் ? கூர் வேலி ராம
இறைஆறு திங்கள் இருந்தான்; - முறைமையால்
ஆலிக்கும் தார்மார்பா, அச்சுதா, அந்நாளில்
வாலிக்கு இளையான் கடை''.
- பாடல் 161.

பொருள் : மாலையை அணிந்தவனே ! அச்சுதனே, முன் காலத்தில் வாலியின் தம்பியான சுக்கிரீவனின் வாயிலில் இராமபிரானான அரசன், விதி காரணமாக ஆறு மாதங்கள் காத்துக்கொண்டிருந்தான். எனவே குறைபாடு உடையவர்கள் எவ்விடத்தில்தான் இல்லாமல் இருப்பர் ? எங்கும் இருப்பர். (அச்சுதன் வாயிலில் மன்னர்கள் காத்திருப்பர் என்பது உட்பொருள்.)

''அரசன் அகளங்கன் அச்சுதன் முற்றத்து
அரசர் அவதரித்த அந்நாள் - முரசு அதிரக்
கொட்டிவிடும் ஓசையினும் கோவேந்தர் கால்தளையை
வெட்டிவிடும் ஓசை மிகும்.'' - பாடல் 162.

பொருள் : அரசர்கள் பிறந்த நாளில் மிக்க ஓசை எழுமாறு அடிக்கும் முரசு ஓசையைவிட, அச்சுதன் என்னும் பெயருடைய மன்னனின் வாசலில் மன்னர்க்கு மன்னரின் காலில் உள்ள விலங்கைத் தறிப்பதால் எழும் ஓசையே மிக்குக் கேட்கும். (- தனிப்பாடல் திரட்டு, முதற்பகுதி, உரையாசிரியர் புலவர் அ. மாணிக்கம், எம். ஏ., பூம்புகார் பிரசுரம், சென்னை)

அச்சிராயர் : குதிரைவீரர்களின் மரபினர்; அச்சுவவாரியார் என்பது காலப்போக்கில் அச்சிராயர் என வழங்கப்படலாயிற்று. (–மணிமேகலை, பக்கம் 401, உ. வே. சா அரும்பத முதலியவற்றின் அகராதி.)

அடவளைஞ்சார், அடைவளைஞ்சார், அடவளைந்தார், அடைவளைந்தார், அடைக்கப்பட்டார், அண்டம் வளைந்தார் : அடைவளை சோழனின் மரபினர். அடைவளை சோழன் அடைக்கப்பட்டு என்னும் நகரத்தையும், அடையாறு(அடைப்பாறு) என்னும் ஆற்றையும் உண்டாக்கியவனாவான். அடையாறு சென்னை நகரின் தெற்கு எல்லையில் ஓடிக் கொண்டிருக்கிறது. (-சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.)

அண்டங்கொண்டார், அண்டமாண்டார், அண்டப்பிரியர், அண்டமாளியார், அண்ணுண்டார், அண்ணூத்திப்பிரியர், அண்ணுப்பிரியர்: பேரரசன் அண்டசோழனின் மரபினர். அண்டசோழன் அண்டபுரம் என்னும் நகரத்தையும், அண்டகுடி (அண்ணுகுடி), அண்டக்குளம், அண்டத்துறை என்னும் ஊர்களையும் உண்டாக்கியவனாவான். அண்ணாமலை என்னும் தேவாரம் பெற்ற திருத்தலமும் இவனால் உருவாக்கப்பட்டதாகும். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்).

அண்ணா கொண்டார் : அண்ணா என்றழைக்கப்படும் திருவண்ணாமலையை வெற்றி கொண்டு ஆண்டவர்கள் தம் மரபினர். (அண்ணா-திருவண்ணாமலை, பக்கம்-21, கழகத் தமிழ் அகராதி, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.)

**அத்தாணியார் :** திருவோலக்க மண்டபத்திற்கு உரியவர். அரசன் போர்க்களம் புகுந்தபோது திருவோலக்க மண்டபத்தைக்காத்து அரசன் நாடு திரும்பும்வரை நிர்வாகப்பொறுப்பை ஏற்றிருந்தவர்களின் மரபினர். இவர்களின் பெயர்களில் தமிழகத்தில் பல்வேறு சிற்றூர்கள் உள்ளன.

**அதிகமார், அதிகமான், அதிகாரியார், அதிகையாளியார் :** சங்க காலத் தமிழகத்தில் தொல் பழங்குடிகளில் ஒன்றான அதியர் அல்லது அதிகையர் குடியைச் சார்ந்தவர்கள்; இக்குடியில் தலைசிறந்து விளங்கியவன் கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதிகமான் நெடுமானஞ்சி என்னும் மன்னனாவான்.

**அதிகமான் நெடுமானஞ்சி வரலாறு :** இவனது இயற்பெயர் நெடுமான் அஞ்சி என்பதாகும். அதியர் அல்லது அதிகையர் குடியிற் பிறந்து சிறந்தமையால் அதியமான் நெடுமான் அஞ்சி எனப்பட்டான். இவன் ஒரு குறுநில மன்னனாவான். இவனது தலைநகர் இக்காலத்தில் தருமபுரி எனப்படும் தகடூராகும். இவன் சேரர்க்குரிய கண்ணியையும் தாரையும் தனக்குரியனவாகக் கொண்டான். முதன்முதலாகத் தமிழகத்திற்குக் கரும்பினை வேற்று நாடுகளினின்றும் கொணர்ந்தவர் இவனுடைய முன்னோராவர்.

இவன் ஒருகால் தன்நாட்டு மலையொன்றின் உச்சிப் பிளவின் சரிவில் நின்ற கருநெல்லி மரத்தின் அருங்கனி ஒன்றைப் பெற்றான். அதனைப் பெற்ற இவன் தானே உண்ணாது நல்லிசைப் புலமை சான்ற ஔவையார்க்குக் கொடுத்து அழியாப் புகழைப் பெற்றான். இவனுக்கு ஔவையார் பால் பெருமதிப்பும் பேரன்பும் உண்டு. ஒருகால் தன்னோடு மாறுபட்ட தொண்டைமானிடைச் சந்து செய்வித்தற்கு ஔவையாரைத் தூதுவிடுத்தான். இறுதியில் இவன் சேரமான் பெருஞ்சேரலிரும் பொறையுடன் போர் உடற்றி உயிர் துறந்தான். தகடூர் யாத்திரை என்பது இவனைப் பற்றி பாடப்பெற்ற இலக்கியமாகும். இந்நூல் இப்போது கிடைத்தியது; சிற்சில பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன.

பிற்காலச் சோழர்கள் காலத்திலிருந்த அதிகமான்கள் : முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் தகடூர் அதிகமான் என்பவனும், இரண்டாங் குலோத்துங்க சோழன் காலத்தில் அதியமான், அதிகமான் இராசராச தேவன் என்போரும் தகடூரைத் தலை நகராகக் கொண்டு சிற்றரசர்களாய் வாழ்ந் தார்களெனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. (-S. I. I., Vol. VII, Nos. 533 : 534 S. I. I., Vol. VIII. No. 126)

அதிகமான் இராசராச தேவன் வரலாறு : இவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவனும் கடைச்சங்க காலத்திலிருந்தவனு மாகிய அதிகமான் நெடுமானஞ்சியின் வழித்தோன்றல்; சேரர் மரபினன்; கங்க நாட்டிலுள்ள தகடூரிலிருந்து அந்நிலப் பரப்பை அரசாண்ட ஒரு குறுநில மன்னன். இவனது தலை நகராகிய தகடூர் இந்நாளில் தர்மபுரி எனவழைக்கப்படுகிறது. இவன், திருவண்ணாமலைக் கோயிலுக்குத் தகடூர் நாட்டிலுள்ள மலையனூர் என்ற ஊரை இறையிலியாக வழங்கினான் என அக்கோயிலில் காணப்படும் கல்வெட்டொன்று உரைக்கிறது. (EP. Ind, Vol. VI pp. 332-334; S. I. I., Vol. VIII. No. 126.)

அத்திஅரையர், அத்தியரையர், அத்திரையர், அத்திராயர், அத்தியாக்கியார், அத்திரியாக்கியார், அத்திரிமாக்கியார், அத்திப் பிரியர், அத்தியாளியார், அத்திரியர் : அத்தி என்ற சிற்றர சனின் மரபினர் (அகநானூறு). அத்தங்குடி, அத்திக்கரை, அத்திப்பட்டு, அத்திப்புலியூர், அத்திச்சோழமங்கலம், அத்திக் கடை, அத்திப்பேட்டை, அத்தியூர், அத்திப்பக்கம், அத்தி வெட்டி, அத்திக்குடி என்னும் கோயில் தலங்கள், ஊர்களின் பெயர்கள் இப்பட்டப் பெயரின் அடிப்படையில் ஏற்பட்ட தாகும்.

அம்பலம், அம்பலகாரர், அம்பலத்தார் : தென்பாண்டி நாட்டிலிருந்த கள்ளர் நாடுகளின் தலைவர்களின் மரபினர். (தென்பாண்டிச் சிங்கம், கலைஞர் மு. கருணாநிதி.)

எ. எ. ஸ்டுவர்ட் குறிப்பிடுவது : அம்பலம் என்பது திறந்த வெளி அல்லது திறந்த கட்டிடத்தைக் குறிக்கும். அங்கே நியாயம் வழங்கும் நடவடிக்கைகள் நிகழும். அம்பலக்காரன்

அவையின் தலைவன் அல்லது அம்பலத்தில் கூடியிருப் போரின் முடிவை அறிவிப்பவன்.

கள்ளர், மறவர் வாழும் மாவட்டங்களில் அம்பலக்காரன் என்பது ஊர்த்தலைவனுக்குரிய பட்டப்பெயராகும். இது கள்ளர் சாதியார் குடிக்கொள்ளும் பொதுவான பட்டப்பெய ராகும். (-தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் பக்கம் 32, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.)

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் எழுதப் பட்ட 'தென்பாண்டிச்சிங்கம்' என்னும் வரலாற்றுப் புதினம் இப்பட்டப் பெயர்களையுடைய கள்ளர் பெருமக்களை அடிப் படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

அம்மாலைத்தேவர் : செம்பியன் மரபில் வந்த அம்பன் என்னும் அரசனின் மரபினர். அம்பன் அம்பர், அம்பராயன் பேட்டை, அம்பத்தூர், அம்புக்கோயில் என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். (சூரிய குலக் கள்ளர் சரித்திரம்).

அய்யனார் கிராம தேவதைகள் பலவற்றுள் ஒரே ஒரு ஆண் தேவதையான அய்யனார் பெயரை ஒட்டி ஏற்பட்ட தாகும். (-தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு).

அயிரப் பிரியர், அய்யப் பிரியர் : அய்வ சோழனின் மரபினர். அய்வசோழனின் வேறு பெயரான அயப்பிரியன் என்னும் பெயரால் இவனது மரபினர் அயிரப்பிரியர், அயப்பிரியர் என வழைக்கப்பட்டார்கள். அய்வசோழன் (ஐவசோழன்) அய்யம் பேட்டை, ஐயனாபுரம், ஐஹூர், ஐயூர், ஐவனல்லூர் என்னும் ஊர்களையும் ஐயனாறு. ஐயவையனாறு என்னும் ஆறுகளை யும் உண்டாக்கியவனாவான். (-சூரிய குலக் கள்ளர் சரித்திரம்)

அரசர் : அரச மரபினர். பண்டை நாட்களில் அரசர்கள் எவ்வாறு இருந்தனர் என்பதை ந. சி. கந்தையா பிள்ளை பின்வருமாறு எழுதுகிறார் !

"அரசன் எல்லா அதிகாரமும் உடையவனாயிருந்தான். அவனைக் கட்டுப்படுத்தும் பிரமாணங்கள் எதுவும் இருக்க

வில்லை. அரசரின் குழந்தைகளைக் கைத்தாயர் பாலூட்டி வளர்த்தனர்; வளர்ந்தபின் அவர்கள் தனி ஆசிரியர்களிடம் கல்வி கற்க விடப்பட்டனர். (பாண்டவர் துரியோதனாதியோர் துரோணரிடம் கல்வி பயின்றமை மாபாரதத்திற் கூறப்படு கின்றது.) கல்வி பயின்றபின் அவர்கள் நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கு உவ அரசர்களானார்கள். அரசனுக்குப் பல தேவியர் இருந்தனர். அவருள் பட்டத்தரசியின் மூத்த புதல்வனே பட்ட மெய்தினான். அரசாட்சி, தந்தையிலிருந்து மகனுக்கு வழிவழி யே சென்றது. அரசனுக்குப் பிள்ளைகள் இல்லாதவிடத்து அவன் உடன்பிறந்தோரும், உடன்பிறந்தான் இல்லாதவிடத்து மருமகனும் ஆட்சி ஏற்றனர். இளவரசுப் பட்டம் கட்டும் போது புரோகிதர் வலம்புரிச் சங்கிலும் பொற்குடத்திலு மிருந்து இளவரசன் மீது நீர் தெளித்தனர். அக்காலத்தில் அவன் மனைவியும் உடனிருத்திப் பட்டத்துத் தேவியாக்கப் பட்டாள். பின்பு வெண்கொற்றக் குடை விரிக்கும் கிரியை நடத்தப் பட்டது. நகர மாந்தர் நகரை அணி செய்தார்கள் இளவரசன் பட்டத்து யானை மீது நகர்வலம் வந்தான்.

அரசனது மனை நகரின் நடுவிலிருந்தது. அது ஏழு மாடி கள் அல்லது பல மாடிகளுடையது. தானியக் களஞ்சியமும் நிதியும் அரண்மனையிலிருந்தன. அரண்மனையின் பொது மண்டபம் மிகவும் விசாலமானது வழக்குகளில் தீர்ப்பைப் பெறுவதற்கு அல்லது அங்கு நடக்கும் கொண்டாட்டங் களைப் பார்ப்பதற்கு மக்கள் கூட்டமாகச் சென்றார்கள். நகரத்தில் நடக்கும் எல்லாவகைக் களியாட்டங்களையும் அரசன் பார்வையிட்டான். அரசன் தனது சுற்றத்தாரோடு மகிழ்ந்திருக்கும் மணடபம் சந்தனம், பன்னீர் முதலிய தெளிக்கப் பெற்று நறுமணங் கமழ்ந்தது. அது பலவாறு அழகு செய்யப் பட்டிருந்தது. அரசிருக்கை மண்டபத்தில் அரசன் அமைச்சர்களாலும் நடனமாதராலும் சூழப்பட்டிருந்தான். அரசனது பள்ளியறை மாடிமீது இருந்தது. அதனிடத்தே அழகிய கட்டிலும் அதன் மீது அணைகளும் இடப்பட்டிருந் தன, அதன் அயலே சூதாடும் மண்டபம்; அங்கு வெள்ளி நாற் காலிகளும் பொன் சூதாடு காய்களுமிருந்தன. அரசன் பொது

மண்டபத்தே இருந்து மக்களின் வழக்குகளை உசாவித் தீர்ப்பு அளித்தான். அரண்மனையைப் பெரிய மதில் சூழ்ந் திருந்தது. அங்கு 16,000 நடனமாதர் இருந்தனர். இளவரசரும் இளவரசியரும் உறைவதற்கு வெவ்வேறு மாளிகைகளிருந்தன. அட்டிற்சாலையில் மீன் இறைச்சி, சோறு, கஞ்சி முதலியன ஆக்கப்பட்டன. அரசன் உண்பதற்குச் செய்யப்படும் சமையல் நூறு வகையினது.

அரசனது நாவிதன் பொன் கத்தியினால் அரசனின் மயிரைக்களைந்து, அவனை முழுக்காட்டி நறுமணம் பூசினான். நாவிதன், அரண்மனையில் கவனத்துக்குரியவனாக விருந்தான். அரசன், அணி செய்யப்பட்ட தலைப்பாகை அணிந்து பட்டாடை உடுத்துப் பொன் செருப்புத் தரித்தான்.

அவன் செல்லும் தேரில் வெள்ளைக் குதிரைகள் பூட்டப் பட்டன. விழாக் காலங்களில் அவன் யானை மீது சென்றான் யானை பொன்னாலும் ஆடையாலும் அணிசெய்யப் பட்டது.

அரசனுக்குப் பெரிய மாளிகைகள், பல மனைவியர், விலை உயர்ந்த உடைகள், மணப்பண்டங்கள், பொன், வெள்ளி, முத்து, இரத்தினம், செம்பு, இரும்பு, சந்தன மரம், மான்தோல் முதலிய பல செல்வங்கள் உண்டு. அவன் வேட்டை நாய்களோடு வேட்டையாடச் சென்றான்; மது வருந்தினான்; பெண்களும் (பெரும்பாலும் நடனமாதர்) மது வருந்தினர். அரசனது பூங்காவனம் பதினெட்டு முழம்உயர்ந்த மதிலாற் சூழப்பட்டது. அதன் ஒரு பக்கத்தே பெரிய கதவுகள் இருந்தன. அங்கு அரசனும் தேவியரும் நீராடிக்களிக்கும் கேணியிருந்தது. அங்கு அவனுக்கென அமைக்கப்பட்ட இருக் கையில் அரசன் இருந்தான். அப்பொழுது அவனெதிரே நடன மாதர் நாட்டியம் ஆடினர். சிலர் இனிய வாத்தியங்களை ஒலித்தனர்.

அரசனிடத்தில் தேர், யானை, குதிரை, காலாள் என்னும் நால்வகைப் படைகள் இருந்தன.

பண்டை நாட்களில் அரசன் எவ்வாறு இருந்தான் என்பது பற்றி சீன யாத்திரீகள் ஒருவன் தரும் செய்திகள்: அரசன்

அரையில் வெள்ளையாடையுடுத்துத் தலையில் தலைப்பாகை வைத்திருக்கின்றான். இவன் யானையிற் செல்லும்போது முத்தும் இரத்தினமும் பதித்த பொன் தொப்பியைத் தரிக்கின்றான்; கையில் பொன் நாடாக் கட்டுகிறான்; காலிற் பொற் சங்கிலி அணிகிறான். சிவந்த கம்பில் மயிலிறகு கட்டிய ஆல வட்டங்களைப் பலர் கொண்டு செல்கின்றனர் தெரிந்தெடுக்கப்பட்ட 500 பிறநாட்டுப் பெண்கள் அரசனைச் சுற்றி நின்று காவல் காக்கின்றனர்.இவர்கள் நடனமாடிக்கொண்டு முன்னே செல்கின்றனர். இவர்கள் காலில் செருப்புத் தரித்திருக்கவில்லை. அரையில் ஆடை உடுத்தியிருக்கின்றனர்; முத்து மாலை பொன் வளைகளை அணித்திருக்கின்றனர். அவர்களின் உடம்பு கற்பூரம், கஸ்தூரி முதலியவைகள் பூசி நறுமணமூட்டப் பட்டிருக்கிறது. அவர்கள் வெயில் படாதபடி மயிலிறகுக் குடை பிடிக்கின்றனர். நாட்டிய மாதருக்கு முன்னால் அரசனது கருமகாரர் பல்லக்குகளிற் செல்கின்றனர். பல்லக்குக் கொம்பு பொன்னாலும் வெள்ளியாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளது. வீதிகள் புழுதியாயிருப்பதால் அரசன் 100 போர் வீரர்களை ஏவி வீதிகளுக்குத் தண்ணீர் தெளிக்கச் செய்கின்றான். (-Ad chau Jukua (1225 A-D)-A chinese traveller (- தமிழ் இந்தியா, ந. சி. கந்தையா பிள்ளை,பக்கங்கள் 73-76)

அரசாண்டார், அரசுக்குழைத்தார், அரசுக்குடையார் அரசத் தேவர் : அரசதேவன் என்னும் அரசனின் மரபினர். அரசதேவனின் வேறு பெயர்களான அரசாண்டான், அரசுக்குடையான் என்னும் பெயர்களால் இவனது மரபினர் அரசாண்டார், அரசுக்குழைத்தார், அரசுக்குடையார் எனவழைக்கப் பட்டார்கள். அரசதேவன் அரசூர், அரசங்குடி, அரசமங்கலம், அரசங்குளம் அரசப்பட்டு என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். (-சூரியகுலக் கள்ளர் சரித்திரம்).

அரியப் பிள்ளை, அரிப் பிரியர் : அரியசந்திர சோழன் மரபினர். அரியசந்திர சோழனின் வேறு பெயரான அரிப் பிரியன் என்னும் பெயரால் இவனது மரபினர் அரியப் பிள்ளை, அரிப்பிரியர் எனவழைக்கப்பட்டார்கள். அரியசந்திர சோழன் அரிய சந்திரபுரம், அரியலூர், அரியமங்கை, அரியக்

குடி என்னும் ஊர்களையும், அரிசிலாறு, அரியசந்திரநதி என்னும் ஆறுகளையும் உண்டாக்கினான். (-சூரியகுலக் கள்ளர் சரித்திரம்).

தொண்டை மண்டல சதகச் செய்யுளை இயற்றியவர் பெயரும் அரிய பிள்ளை என வழங்கப்படுகிறது. இப்புலவர் திருவல்லத்தில் திரு வல்லமுடைய நாயனாருக்கும் அம்பி கைக்கும் சந்தி விளக்கு வைத்ததாகச் சாசனமொன்று குறிப் பிடுகிறது.

அருவா நாட்டார், அருவாத் தலைவர், அருமை நாடர், அருமைநாட்டார், அருமை நாடார்: கொள்ளிடத்திற்கு வடக்கில் தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும் பகுதியில் பரவிக் கிடந்த அருவா நாட்டையாண்ட அருவன் (ஆதி அருமன்) என்னும் சிற்றரசனின் மரபினர். (அருவன் என்பவனும் ஆதி அருமன் என்பவனும் ஒருவனே என்பார் டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி அவர்கள்; சங்ககால சிறப்புப் பெயர்கள்; பக்கம் 326).

ஆதி அருமன் என்னும் பெயரில் ஒரு சிற்றரசன் சங்க காலச் சமுதாயத்தில் வாழ்ந்தான் என்பதைக் குறுந்தொகைப் பாடல் 293-ம், நற்றிணைப் பாடல் 367-ம் உண்மையென உணர்த்துகின்றன.

"ஆதி யருமன் மூதூ ரன்ன
அயவெள் ளாம்பல் அம்பகை நெறித்தழை"

- குறுந்தொகை 293, வரிகள் 4, 5.

"கொடுங்கட் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து
கருங்கட் கருணைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய குலுங்காற்
கூழுடை நன்மனை குழுவின விருக்கும்
மூதில் அருமன் பேரிசைச் சிறுகுடி"

- நற்றிணை 367.

என்பன சான்றுகாட்டும் பனுவல்களாகும்.

இப்பனுவல்களின் வரிகளில் ஆதி அருமன் என்பானின் பண்டைய நகரைப் பற்றிய குறிப்பும், அவனது பண்டைய நகரான சிறு குடியின்கண் மக்கள் இடும் வெண்சோற்றுப் பலியைக் கவர்வதற்காகக் காக்கைகள் கூட்டமாகக் குழுமி யிருப்பது பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன.

**அருண்மொழித்தேவர், அருமொழித்தேவர் :** சோழ மரபினர். மாமன்னன் இராசராசசோழன், பெரியபுராணம் பாடிய சேக்கிழார், சோழமாதேவிகளில் ஒருவர் இப் பட்டப் பெயரை இயற்பெயர்களாகக் கொண்டிருந்தார்கள். (96, of 1191, 81 of 1900, 671 of 1919; K. A N. Sastry's 'Cholas' Vol. I. P. 224; Vol. II. Part I P. 459, 482 of 1925, 304 of 1907.)

இந்தப் பட்டப் பெயரில் இராசராச சோழன் காலத்தில் ஒரு வள நாடும் இருந்துள்ளது.

**அருமொழித் தேவன் என்ற பெயரில் ஊர்கள் :** பாண்டி மண்டலத்தைச் சேர்ந்த கான நாட்டில் அருமொழித்தேவபுரம் என்னும் பெயருடைய ஊர் ஒன்று இருந்ததாகச் சாசனம் அறிவிக்கின்றது. (-255 of 1914); மயிலாடுதுறை வட்டத்தில் அருமொழித் தேவன் என்ற பெயருடைய இரண்டு ஊர்களும், நாகப்பட்டின வட்டத்தில் ஓர் அருமொழித் தேவனும், தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் ஓர் அருமொழித் தேவனும் உள்ளன (-தமிழகம் ஊரும் பேரும், ரா. பி. சேதுப் பிள்ளை, பக்கம் 156)

**அலங்காரப் பிரியர் (அலங்காரப் பேரியர்) :** அலங்காரப்பேரி என்னும் ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டவர் தம் மரபினர். அலங்காரப்பேரியர் என்பது காலப் போக்கில் அலங்காரப்பிரியர் என்று வழங்கப்படலாயிற்று. (-தமிழகம் ஊரும் பேரும், ரா. பி. சேதுப்பிள்ளை, பக்கம். 22, 23).

**அழும் புள்ளார் :** மானவிறல் வேள் என்னும் குறுநில மன்னனின் மரபினர். புதுக்கோட்டை நாட்டிலுள்ள (அம்புக் கோயில்) அழும்பில் என்னும் ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டதால், இவனும் இவனது மரபினரும் தொடக்

கத்தில் அழும்பில்லார் என்றும் பின்னர் அழும்புள்ளார் என்றும் அழைக்கபபடுவாராயினர்.

அன்ன வாசல்ராயர் : அன்ன சோழன் மரபினர். அன்ன சோழனின் வேறு பெயரான அன்னவாயில்ராயன் என்னும் பெயரால் இவனது மரபினர் அன்னவாயில்ராயர் (அன்ன வாசல்ராயர்) எனவழைக்கப்பட்டார்கள். அன்னசோழன் அன்னவாயில், அன்னப்பன் பேட்டை என்னும் ஊர்களை உண்டாக்கினான்.

இவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்லவர் காலத்து ஓவியங்களால் புகழ்ப்பெற்று விளங்கும் சித்தன்னவாசல் போன்ற பகுதிகளை ஆண்ட அரசர்கள்தம் மரபினர்கள் என்று கருதிடவும் வாய்ப்புள்ளது.

அமரகொண்டார், அமரண்டார், அமராண்டார் : போர்க் களத்தில் இறுதி வெற்றிக்குக் காரணமாக இருந்த போர்வீரர் களின் மரபினர், இவர்கள் போர்க்களத்தில் வெற்றி மேம்பட அரசர்கள் படைக்கலன்களை அளித்திட்டார்கள்.

பகைவர் முனையிடத்தே போரினை மேம்படுப்பார் சிலர்க்குப் படைக்கலம் வழங்கும் முறைமை அரசர்க்கு உண்டென்பதைச் சிலப்பதிகாரமும் பின்வருமாறு உரைக் கிறது.

"அடையார் முனையகத் தமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண்டாகலின்".

- சிலம்பு.

அச்சமறியார் : பழந்தமிழ் வேந்தர்களின் படைப்பிரிவில் தற்கொலைப் படைப்பிரிவினராக இருந்தவர்தம் மரபினர். பண்டை நாட்களில் அரசர்கள் போர்க்களம் புகுமுன் காளிக் கோயிலின் முன்பு வைக்கப் பட்டிருக்கும் சூலாயுதங்களின் மீது வீழ்ந்து தங்களது தலைகளை இவர்கள் துண்டித்துக்கொள்ள, இவர்களின் உடலிலிருந்து வழிந்தோடும் இரத்தத்தை அரசன் முதல் போர்வீரர்கள் அனைவரும் நெற்றியில் வீரதிலமாக இட்டுக் கொண்டு போர்க்களம் புகுந்தார்கள். மரணபயமே

இல்லாது இவர்கள் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டதால், இவர்கள் அம்மறியார் எனப் பழந்தமிழ் வேந்தர்களால் பட்டஞ் சூட்டப் பட்டார்கள்.

அம்பர் கொண்டார், அம்பராண்டார், அம்பர்த்தேவர் : சோழ நாட்டில், நன்னிலம் வட்டத்தில் அம்பர் என்னும் ஊரைத்தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட அரசர்கள் தம் மரபினர். அம்பர்கிழான் அருவந்தை இவர்களின் முதாதைகளில் ஒருவனாவான்.

அம்பர்கிழான் அருவந்தை வரலாறு இவனைத் திவாகர முடையார் "கற்ற நாவினன் கேட்ட செவியினன், முற்ற வுணர்ந்த முதறிவாளன், நாகரிக நாட்டத்தாரியன் அருவந்தை" யென்றும், "நாடே பிறர்நாட்டிற் குவமையாறே, காலமறிந்து தவுங் காவிரிதானே, ஆடவர் திலக னம்பர் மன்ன. னீடிசைத் தலைவன் அருவந்தை" யென்றும் குறிக்கிறார்.

திருப்பழனத்துக் கல்வெட்டொன்று, "உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு அம்பர் அருவந்தை" என்று குறிப் பிடுகிறது.

அம்பர்கிழான் அருவந்தை கல்லாடனார் என்னும் சங்கச் சான்றோரை ஆதரித்தவனாவான். (- புற நானூறு 385)

அம்பர் கொண்டார், அம்பராண்டார் என்னும் பட்டப் பெயர்களையுடையோர், வட-ஆர்க்காடு மாவட்டம், வேலூர் வட்டத்திலுள்ள ஆம்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட வீரர்கள்தம் மரபினர் என்று உரைப்பாரும் உளர். இவர்களின் முதாதைகளில் ஒருவன், தனது உடல் முழுவதும் மாற்றாரின் அம்புகள் தைத்திட்ட நிலையிலும் வாளும் வேலும் தாங்கிப் பகைவருக்குப் புறங்கொடாது இருந்தானெனசாசனங் கள் குறிப்பிடுகின்றன. ஆம்பூரில் கண்டெடுக்கப்பட்ட நடுகல் ஒன்றிலும் இவனது உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. (தமிழகம் ஊரும் பேரும், பக்கங்கள் 83, 84, ரா. பி. சேதுப்பிள்ளை).

ஆச்சராயர், ஆச்சாப்பிரியர், ஆட்சிப்பிரியர், இராச்சாப் பிரியர் : ஆச்சன் என்னும் அரசனது மரபினர். ஆச்சனின்

வேறு பெயர்களான ஆச்சராயன், ஆச்சாப்பிரியன், ஆட்சிப் பிரியன், இராசாப்பிரியன் என்னும் பெயர்களால் இவர்கள் ஆச்சராயர், ஆச்சாப்பிரியர், ஆட்சிப்பிரியர், இராச்சாப்பிரியர் எனவழைக்கப்பட்டார்கள், ஆச்சாபுரம் (பெருமணநல்லூர்), ஆச்சாமங்கலம், ஆச்சனூர், ஆச்சங்குடி, ஆச்சான்பட்டி என்பன இப்பட்டப் பெயர்களின் அடிப்படையில் அமைந்த ஊர்களாகும்.

ஆதனழிசியார் : ஆதனழிசி என்பவனின் மரபினர். ஆதன ழிசி ஒல்லையூர் தந்த பூதபாண்டியனின் நண்பனாவான். (- புறநானூறு, மூலமும் பழைய உரையும், பக்கம் 63 டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர்).

ஆதாழியார் : சேர மன்னன் ஆதன் வழியினர்; ஆதன் வழியார் காலப் போக்கில் அதாழியார் எனவழைக்கப்பட்டார் கள். ஆதன் மரபில் புகழ்பெற்ற சேரமன்னர்கள், பெருஞ் சோற்று உதியஞ் சேரலாதன், இமயவரம்பன் நெடுஞ்சேர லாதன், ஆடு கோட்பாட்டுச் சேரலாதன், சேரமான் கடுங்கோ வாழியாதன், சேரமான்குடக்கோ நெடுஞ்சேரலாதன், சேர மான் பெருஞ்சேரலாதன் ஆகியோராவர்.

பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் : சேரநாட்டில் குட்ட நாட்டு வஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். மகாபாரதப் போரில் பாரத வீரர்கட்குப் பெருஞ்சோறு அளித் தவன்.

''அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்''.

- புறநானூறு 2

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் : இமயம் வரையில் படை யெடுத்துச் சென்று நாடுகள் பலவற்றை வென்றதால், இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனப் பெயர் பெற்றான். சேர்நாட்டில் மாந்தை என்னும் ஊரைத் தனது தலைநகரமாகக்

கொண்டு ஆண்டான். முரஞ்சியூர் முடிநாகராயர் இவனது ஆசிரியராவார். குமட்டூர் கண்ணனார் பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்தை இவன் மீது பாடியதையடுத்து இவன் அவருக்கு உம்பற்காட்டைச் சேர்ந்த ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகக் கொடுத்தான். மேலும் தன் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டின் தென்பகுதி வருவாயில் முப்பத்தெட்டு ஆண்டுகள் பாகம் கொடுத்தான். (– பதிகம்).

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் இவன் பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்தின் பாட்டுடைத் தலைவனாவான. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய புதல்வன். சேர நாட்டில் தொண்டியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டவன். ஒரு கால், தொண்டை நாட்டுக்கும் கொண்கான நாட்டுக்கும் இடையிலிருந்த தண்டாரணியத்தில் வாழ்ந்த வேந்தருக்கும் சேரருக்கும் பகைமையுண்டாக, இச் சேரலாதன் சேரர்படையொன்றைக் கொண்டு சென்று வெட்சிப்போர் செய்து வரையாடு நிரைகளைக் கவர்ந்து வந்ததால் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் எனப் பெயர் பெற்றான்.

**சேரமான் கடுங்கோவாழியாதன்** : இவன் செல்வக் கடுங்கோவாழியாதன் என்றும் கூறப்படுவான். இவனைப்" பொறையன் பெருந்தேவி யீன்ற மகன்'' என்று பதிற்றுப்பத்து ஏழாம் பதிகம் கூறுகிறது. இவன் புலவர் கபிலருக்கு நூறாயிரம் காணம் பொன் தந்து நன்றா வென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் தானமாகக் கொடுத்தான்.

**சேரமான் பெருஞ்சேரலாதன்** : சிறந்த வீரமும் சான்றோர் பாடும் சால்பும் உடையவன். சோழநாட்டை ஆண்ட கரிகால் வளவன் வெண்ணிப் பறந்தலையில் (கோயில் வெண்ணி இவன்மீது செலுத்திய நெடுவேல் இவன் மார்பில் தைய்த்து முதுகுப் புறமாகச் சென்றதை, இவன் புறப்புண் என்று கருதி நாணி மானம் பொறாது வடக்கிருந்தான்.

**ஆதித்த நெடுவாண்டார்** : முதல் ஆதித்த சோழனுக்கும் நெடுவாண்டார் என்னும் பேயருடைய நெடுங்கிள்ளிக்கும் உறவுமுறையில் இருந்தவர்கள் தம் மரபினர்.

முதல் ஆதித்த சோழன் வரலாறு முதல் ஆதித்த சோழனின் காலம் கி. பி. 9-ஆம் நூற்றாண்டாகும். இவன் விசயாலய சோழனின் தந்தையாவான்.

நெடுங்கிள்ளி வரலாறு : சங்க காலத்தைச் சேர்ந்தவன். கள்ளர் பெருமக்கள் நிறைந்த ஊர்களாகிய தஞ்சை மாவட்டம், வலங்கைமான் வட்டத்திலுள்ள ஆவூரிலும் திருச்சி உறையூரி லுமிருந்து ஆட்சிச் செலுத்தியவனாவான். இவனுக்குக் காரி யாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்று ஒரு பெயருமுண்டு. இவன் கோவூர்கிழாரால் புறநானூறு 44-ஆம் பாடலில் பாடப் பெற்றுள்ளான்.

ஆதித்தர், ஆதிவாத்தர், ஆதியார் : ஆதித்த சோழனின் மரபினர். ஆதித்த சோழன் ஈழநாட்டை (இலங்கையை) வென் றவன். கொங்கு நாட்டிலிருந்து பொன் கொணர்ந்து தில்லைச் சிற்றம்பலத்தைத் பொன்னால் வேய்ந்தவன். சைவப் பெரிய ராகிய நம்பியாண்டார் நம்பி அவர்கள் இவனைப் பற்றி தமது திருத்தொண்டர் திருவந்தாதியில் மூன்று பாடல்களில் பாராட்டி யுள்ளார். (-சைவ இலக்கிய வரலாறு, பக்கம் 439, ஔவை சு துரைசாமிப்பிள்ளை).

ஆரக்கண்ணியார், ஆரம்பூண்டார், ஆரமுண்டார், ஆர் சுற்றி யார், ஆர்சுத்தியார், ஆரச்சுத்தியார், ஆரிச்சுற்றியார், மாலை யிட்டார் : சோழ மரபினர். செம்பியனின் வழித் தோன்றலான ஆத்திமன் என்ற அரசனின் வழிவந்தோர். ஆத்திமனின் வேறு பெயர்களான ஆரம்பூண்டான், ஆரஞ்சுற்றி, மாலையிட்டான் என்னும் பெயர்களால் இவனது வழித்தோன்றல்கள் ஆரக் கண்ணியர், ஆரக்கண்ணியர், ஆரம்பூண்டார், ஆரமுண்டார், ஆர்சுற்றியார், ஆர்சுத்தியார், ஆரச்சுத்தியார், ஆரிச்சுற்றியார். மாலையிட்டார் எனவழைக்கப்பட்டார்கள். ஆத்திக்கோட்டை ஆத்தூர், ஆத்தங்குடி, ஆத்தமங்கலம், ஆரம்பூண்டான் பட்டி என்பன இப்பட்டப் பெயர்களின் அடிப்படையில் அமைந்த ஊர்களாகும்.

இப்பட்டப் பெயர்களையுடையோர் பாண்டிய அரச மரபினர் என்று உரைப்பாருமுளர். உக்கிரகுமார பாண்டியன் யார், ஆர்சுத்தியார், ஆரச்சுத்தியார், ஆரிச்சுற்றியார், மாலை

இந்திரனுலகம் சென்று செருக்குடன் இந்திரன் அமரும் அரியணையில் அமர்ந்ததால், தன்னால் தாங்க முடியாத பாரமணியாரத்தை தாங்கி வந்ததையடுத்து அவனும் அவனது மரபினரும் இத்தகைய பட்டப் பெயர்களைப் பெற்றதாக அறிஞர் பெருமக்கள் உரைக்கிறார்கள்.

(-திருவிளையாடற் புராணம்)

''செங்கணா யிரத் தோன்றிநல் விளங்காரம்
பொங் கொளி மார்பிற் பூண்டோன் வாழி''

(-சிலம்பு 11-24)

"தேவர் கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே''.

(-சிலம்பு 17, உள்வரி 2)

ஆலங்கொண்டார், ஆலத்தரையர், ஆலத்தொண்டமார், ஆலம்பிரியர், ஆலமாண்டார், ஆவத்தியார், ஆவாத்தியார் : ஆலசோழன் மரபினர். ஆல சோழனின் வேறு பெயர்களான ஆலத்தரையன், ஆலங்கொண்டான், ஆலம்பிரியன் என்னும் பெயர்களால் இவனது மரபினர்கள் ஆலங்கொண்டார், ஆலத்தரையர், ஆலம்பிரியர், ஆலமாண்டார், ஆலத்தொண்டமார், ஆவத்தியார், ஆவாத்தியார் என அழைக்கப்பட்டார்கள். ஆலங்கோட்டை, ஆலந்துறை, ஆலம்பொழில், ஆலங்குடி, ஆலம்பாக்கம், ஆலம்பள்ளம், ஆலம்பாடி என்னும் ஊர்கள் இப் பட்டப் பெயர்களின் அடிப்படையில் அமைந்தவைகளாகும்.

ஆளற்பிரியர், ஆய்ப்பிரியர் :கடையெழு வள்ளல்களில், ஒருவனான ஆய் என்பவனின் மரபினர். ஆயின் வேறு பெயரான ஆய்ப்பிரியன் என்னும் பெயரால் இவனது மரபினர் ஆளற்பிரியர், ஆய்ப்பிரியர் எனவழைக்கப்பட்டார்கள்.

வள்ளல் ஆய் பற்றிய வரலாறு : ஆய் பொதியின் மலையின் தலைவன். சிறந்த போர்வீரன். ஆய்குடி என்னும் ஊரைச் சார்ந்தவன் இவனுக்கு ஆய்ப்பிரியன் என்பதுடன் கூட ஆய்அண்டிரன், அண்டிரன் என்னும் பெயர்களும் உண்டு. ஆய் பாணர்களுக்கும் இரவலர்களுக்கும் யானைகளையும் பிறவற்றை பரிசுகளாகக் கொடுத்தான். சுரபுன்னை, பூமாலையை

உடையவன். கொங்கு நாட்டாரோடு போர் செய்து அவர்களை புறங்காட்டி ஓடச்செய்தவன். யாதொரு பயனையும் கருதாது இரவலர்களுக்குக் கொடுத்து மகிழ்வித்தலையே கடனாகக் கொண்டிருந்தவன். இவனைப் புறநானூற்றுப் பாடல்கள் 127, 136, 240, 241, 374, 375-ல் புலவர்கள் பலரும் பாராட்டி உள்ளார்கள்.

இவனது வள்ளல் தன்மையைப் பற்றி சிறுபாணாற்றுப் படை பின்வருமாறு குறிப்பிடுகிறது:

"நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்."

—சிறுபாணாற்றுப்படை, 96-99

இதன் பொருள், பாம்பு பெற்றுக்கொடுத்த நீல உடையினை ஆலின் கீழ் எழுந்தருளிய தலைவனுக்கு (பரமசிவனுக்கு) அளித்தான் என்பதாகும்.

ஆக்காட்டரையர், ஆக்காட்டியர், ஆக்காட்டியார், ஆக்காடு கொண்டார், ஆட்காட்டியார், ஆர்க்காட்டார், ஆர்க்காட்டரையர், (ஆற்காட்டரையர்) ஆர்க்காட்டுராயர், ஆர்க்காடு கொண்டார், ஆள்காட்டியார் : அழிசி சோழனின் மரபினர். அழிசி சோழன் ஆர்க்காட்டிலிருந்து ஆட்சிப் புரிந்ததால் ஆர்க்காட்டான் எனப்பட்டான். அழிசி சோழன் ஆர்க்காட்டிலிருந்து ஆட்சிப் புரிந்ததை,

"வெல்போர்ச் சோழர் அழிசியம் பெருங்காட்டு
நெல்லியம் புளிச்சுவைக் கனவி யாங்கு".

((- நற்றிணை-87)

என்னும் பாடல் வரிகளுக்கு உரையெழுதப் புகுந்த பின்னத்தூர் நாராயணசாமி அய்யர் அவர்களும் உண்மையென உறுதிபடுத்துவார்.

உரை பின்வருமாறு "தனக்குக் கிட்டப்பெறாத வெல்லும் போரையுடைய சோழர் குடியிற் பிறந்த ஆர்க்காட்டின் உளனாகிய அழிசி". (-நற்றிணை நானூறு,பக்கம் 150,பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.)

ஆரூரார் (ஆரார்)ஆரூராண்டார், ஆரூராளியார்(ஆராளியார்) மனுநீதிச் சோழனின் மரபினர். திருவாரூரைத் (ஆரூரை) தலைநகராகக் கொண்டு ஆண்டதால் இவன் ஆரூரான், ஆரூராண்டான், ஆரூராளி (ஆராளி) எனப்பட்டான். மனுநீதிச் சோழனின் இத்தகு சிறப்புப் பெயர்களால் அவனது மரபினர் ஆரூரார் (ஆரார்), ஆரூராண்டார், ஆரூராளியார் (ஆராளியார்) எனவழைக்கப்பட்டார்கள்.

மனுநீதிச்சோழன் நீதிக்காகத் தனது மகனை தேர்க்காலில் இட்டு மடித்தவனாவான்.

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்."
— சிலப்பதிகாரம்,வழக்குரைகாதை, வரிகள் 53-55

"ஒரு மைந்தன் தன்குலத்துக் குள்ளான்என்
பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்."
(— பெரிய புராணம்)

என்பன அதனைச் சான்று காட்டி நிற்கும் பனுவல்களாகும்.

ஆந்தையர், ஆந்தையார், ஆந்தைராயர் : எயில் என்னும் நகரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட ஆந்தை என்னும் அரசனின் மரபினர். ஆந்தை ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனின் நண்பனாவான்.

" ... மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறரும்."
(-புறநானூறு 71, வரிகள் 13-15)

ஆலங்கொண்டார், ஆலத்தரையர் : ஆலங்கானம் என்று அழைக்கப்படும் தலையாலங்கானத்தை, தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடன் வெற்றி கொண்டு ஆண்டவர்கள். ஆலங்கானத்தை வெற்றி கொண்டதால் ஆலங்கொண்டார் என்றும் ஆலங்கானத்தை ஆண்டதால் ஆலத்தரையர்என்றும் அழைக்கப்பட்டார்கள்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாறு இவன் பால் குடிக்கின்ற பருவத்திலேயே இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்னும் சோழ மன்னனையும், யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை என்னும் சேர மன்னனையும், திதியன், எழுனி எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் ஐந்து வேளிர்களையும் தலையாலங்கானம் எனுமிடத்தில் வென்று வெற்றி மேம்பட்டவனாவான். இவனைப் பற்றி புறநானூற்றில் பல பாடல்கள் காணப்படுகின்றன. இவனை மாங்குடி மருதனார், குறுங்கோழியூர்கிழார், குடபுலவியனார், கல்லாடனார், மாங்குடிகிழார், இடைக்குன்றூர்கிழார் ஆகியோர் பாடியுள்ளார்கள்.

ஆவணத்தார் : பிற்காலச் சோழர்கள் காலத்தில் ஓலை வடிவிலிருந்த அரசாங்க ஆவணங்களைக் காத்தவர்கள் தம் மரபினர்.

இடங்காப்பிறந்தார் : இடைமச் சோழனின் மரபினர். இடைமசோழனின் வேறு பெயரான இடங்காப்பிறந்தார் என அழைக்கப்பட்டார்கள். இடைமசோழன் இடங்கான் கோட்டை (எடமேலையூர்) இடைமருதூர், இடையாறு, இடைவாய் (விடைவாய்), இடைக்குளம், இடைப்பள்ளம், இடையாத்திமங்கலம், இடைக்கோரை, இடையூர், இடையகாடு, இடைக்

குடி என்னும் ஊர்களை உண்டாக்கியனாவான் முல்லை நில மக்களுக்கு இடையர் என்ற பட்டத்தை அளித்தவனும் இவனேயாவான். ( - சூரிய குலக் கள்ளர் சரித்திரம், சுவாமி நாத மாதவராயர்.)

இராசாளியரர், இராசாபிரியர், இராங்கியர், இராங்கிப்பிலியர் இராங்கிப்பீலியர், இராங்கியர், இராயாளியார், இராயர், இராயங் கொண்டார், இராயமுண்டார் இராயசோழன் மரபினர். இராய சோழனின் வேறு பெயர்களான இராயங்கொண்டான்' இராயாளி, இராயப்பிரியன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இராசாளியார், இராசாப்பிரியர், இராங்கியர், இராயர், இராங்கிப்பிலியர், இராங்கிப்பீலியர், இராங்கியர், இராயாளியர் இராயங்கொண்டார், இராயமூண்டார் எனவழைக்கப்பட்டார் கள். இராயசோழன், இராயன்பேட்டை, இராயபுரம், இராய நல்லூர் (இராயந்தூர்), இராயமங்கலம், இராயன்குடி, இராயன் பட்டி, (இராங்கியன்பட்டி) என்னும் ஊர்களை உண்டாக்கிய வனாவான்.

இருங்களா, இருங்களார், இருங்கள்ளர், இருங்கோ இளர், (இருங்கோளர்) : கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த இருங்கோ வேள் என்ற மன்னனின் மரபினர். இருங்கோவேள் சோழ மண்டலத்திற்கும் பாண்டி மண்டலத்திற்கும் இடைப்பட்டுக் கிடந்த கொடும்பாளூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டவனாவான். உத்தமசோழன் மனைவியரில் இருங் கோளர் மகள் வானவன் மாதேவி என்பவள் இப்பட்டப் பெயர்களையுடையோரின் மரபைச் சார்ந்தவளாவாள். - Ins. 494 of 1925; Ins. 298 of 1908); (பிற்காலச் சோழர் சரித்) திரம் - பகுதி I, பக்கங்கள் 7, 94, டி. வி. சதாசிவ பண்டாரத் தார்.)

இன்பச் செட்டி : புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங் கிக்கு அருகில் பாளைமண்ணிய வளநாட்டைத் தலைமையிட மாகக் கொண்டு ஆண்ட அரச மரபினர்.

ஈங்கொண்டார் : ஈச சோழனின் மரபினர். ஈசசோழனின் வேறு பெயரான ஈங்கொண்டான் என்னும் பெயரால் இவனது

மரபினர் ஈங்கொண்டார் எனவழைக்கப்பட்டார்கள். ஈச சோழன் ஈங்கை, ஈங்கோய்மலை (திருவீங்கோய்மலை), ஈங்கூர், ஈஞ்சூர், ஈசனூர் என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். (- சூரியகுல கள்ளர் சரித்திரம்)

ஈழங் கொண்டார், ஈழமுண்டார், ஈழத்தரையர், கோட்டை சுருட்டியார், கோட்டை மீட்டார், முடி கொண்டார்: சோழ மரபினர். ஈழத் (இலங்கை) தரைகளையும் திரைகளையுங் கட்டியாண்டதால் ஈழத்தரையர், ஈழத்திரையர், ஈழங் கொண்டார் என்னும் பட்டப்பெயர்களையும், இலங்கை அரசனின் கோட்டையையும் முடியையுங் கொண்டதால் கோட்டை சுருட்டியார், கோட்டை மீட்டார், முடி கொண்டார் என்னும் பட்டப் பெயர்களையும் பெறுவாராயினர்.

பிற்காலச் சோழர்களில் அனபாய சோழன் என்றழைக்கப்படும் குலோத்துங்க சோழன் கள்ளர் இன மக்களின் பட்டப்பெயர்களான ஈழத்தரையன், ஈழங்கொண்டான், கோட்டைச் சுருட்டி, கோட்டை மீட்டார், முடி கொண்டார் என்னும் பட்டப்பெயர்களைத் தனது சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தானெனக் கல் வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. (– History of the Kallas of the sular Dynasty. M. Swaminatha Mathavarayar).

பிற்காலச் சோழர்கள் காலத்தில் முடி கொண்டான் என்னும் பெயரில் வாழ்ந்த படைத்தலைவன்: முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் காஞ்சறன் பஞ்சநதி முடி கொண்டானான வத்தராயன் என்பவன் ஒருவன் படைத்தலைவனாக இருந்தான்.

வரலாறு காஞ்சறன் பஞ்சநதி முடிகொண்டானான வத்தராயன் சோழ மண்டலத்தில் திருவிந்தளூர்(திருவழுந்தூர்) நாட்டிலுள்ள கஞ்சாறு (ஆனந்த தாண்டவபுரம்) என்னும் ஊரைச் சார்ந்தவனாவான். இவன் பஞ்சநதிவாணன் என்பவனின் புதல்வன். குலோத்துங்க சோழனால் வத்தராயன் (வத்ஸ்ராயன் அல்லது வச்சராயன் என்றும் அழைக்கப்படுவதுமுண்டு.) என்னும் பட்டமளிக்கப்பட்டுப் பாராட்டப்

பட்டவன். வச்சத்தொள்ளாயிரம் என்பது இவன்மீது பாடப் பெற்ற ஒரு பிரபந்தமாகும்.

பஞ்சநதி முடிகொண்டான் கர்நாடக மாநிலம், பெங்களூர் மாவட்டம், நிலமங்கலம் வட்டத்திலுள்ள மண்ணையில் குலோத்துங்க சோழனின் பகைவர்களாகிய மேலைச் சளுக்கி யர்களைப் போரில் வென்று வாகை குடியவனாவான்.(-விக்கிர மசோழன் உலா, வரிகள் : 164-166, EP. Ins. Vol IX-P. 230).

ஆந்திர மாநிலம், கோதாவரி மாவட்டம்,இராமச்சந்திரபுரம் வட்டத்தைச் சேர்ந்த திராட்சாராமம் என்ற ஊரின் கண்ணுள்ள பீமேசுரமுடைய மகாதேவர்க்குக் குலோத்துங்க சோழனின் 25-ஆம் ஆட்சி ஆண்டில் இவன் ஒரு நுந்தா விளக்கு வைத்தா னென்று அங்குச் செய்யுள் வடிவிலுள்ள கல்வெட்டொன்று உரைக்கிறது. (- S. I. I Vol. IV-No. 1338.).

உத்தங்கொண்டார், உத்தமுண்டார், உத்தமங்கொண்டார், உத்தமண்டார், உத்திமாண்டார், உத்தப் பிரியர், உத்தமப்பிரியர், யுத்தப்பிரியர் : சோழ மரபினர். பிற்காலச் சோழர்களில் இரண்டாம் இராசேந்திரசோழன் சிறப்புப் பெயர்களாகப் பெற்றிருந்த உத்தமாண்டான், உத்தமங்கொண்டான். உத்த மப்பிரியன் என் பவைகளை இவர்கள் பட்டப் பெயர்களாகப் பெற்றார்கள்.

''துயரத் தன்பொடு கருதுகா தலரு
ளித்த லம்புகழ் ராசேந்திர சோழனை
யுத்தம சோழ னென்றும்''.

(- இராசேந்திர சோழன் கல்வெட்டு).

உய்யக்கொண்டார் : சோழ மரபினர், மாமன்னன் இராச ராச சோழனுக்குரிய சிறப்புப் பெயர்கள் பலவற்றுள் உய்யக் கொண்டான் என்பதும் ஒன்றாகும்.

உய்யக் கொண்டார் என்னும் பெயரில் மாமன்னன் இராச ராச சோழன் காலத்தில் ஒரு வள நாடு இருந்தது.

"அரிகிலுக்கும் காவிரிக்கும் நடுவான உய்யக் கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுப்பள்ளிச் சந்தம் இறக்கின நெற்குப்பை அளந்தபடி நிலம்." (- தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டு.)

உய்யக்கொண்டார் பட்டப்பெயரில் சோழ நாட்டில் ஒரு வளநாடு இருந்து வந்ததுடன்கூட ஊர்கள், மலைகள், ஆறுகளுள்கூட அந்தப் பெயரில் இருந்து வருகின்றன. சோழ நாட்டில் பாடல்பெற்ற பகுதிகளுள் ஒன்றாகிய கற்குடி என்பது உய்யக்கொண்டான் திருமலை என்றழைக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரியாற்றினின்றும் கிளைத்து செல்லும் வாய்க்கால் உய்யக் கொண்டான் வாய்க்கால் என்றழைக்கப்படுகிறது.

உய்யக் கொண்டார் பட்டப் பெயரிலுள்ள ஊர்கள்: வடஆர்க்காடு மாவட்டத்தில் உய்யக்கொண்டான் சோழபுரமும், இராமநாதபுரத்துத் திருப்பத்தூர் வட்டத்தில் உய்யக் கொண்டானும், தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டத்தில் உய்யக்கொண்டராவியும் உய்யக்கொண்டார் என்னும் பட்டப்பெயர்களில் அமைந்த ஊர்களாகும். (-தமிழகம் ஊரும் பேரும், பக்கங்கள் 121, 122, ரா. பி. சேதுப்பிள்ளை).

உலகங்காத்தார், உலகுகாத்தார், உலகாண்டார், உலகுடையர், உலகுடையார், உலகுய்யர், உலயர் தமிழ்கூறு நல்லுலகத்தைக் காத்தவர்தம் மரபினர். சோழர்களில் உலகநாத சோழன் இப்பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தான். (-கல்வெட்டுக்கள்). உலகுண்டம், உலகங்காத்தான்பட்டி என்பன இப்பட்டப்பெயர்களின் அடிப்படையில் அமைந்த ஊர்களாகும்.

உழுக்கொண்டார், உழுப்பிரியர், உழுவண்டார், உழுவாண்டார், உழுவாட்சியார், உழுவாளர், உழுவாளியார், உழுவடையர், உழுவுடையார்: பகை அரசர்களது கோட்டைகளை அழித்து யானை ஏர் அல்லது கழுதை ஏர் பூட்டி உழுத அரச மரபினர்.

கழுதை ஏர் பூட்டி பகைவர் நாட்டை உழுத மன்னர்கள் : 1. பாண்டியன பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி; 2. அதிகமான் மகன் பொகுட்டெழினி; 3. சேரன் செங்குட்டுவன் ஆகியோர் பகைவர் நாட்டை கழுதை ஏர் பூட்டி உழுத மன்னர்களாவார்கள்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி பகைவர் நாட்டை வென்று கழுதை ஏர் பூட்டி உழுத செய்தியைப புறநானூற்றுப் பாடல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ் செய்தனை யவர் நனந்தலை நல்லெயில்".

(- புற நானூறு 15, வரிகள் 1-3).

அதிகமான் மகன் பொகுட்டெழினி பகைவர் நாட்டை வென்று குருதி ஈரத்தோடு இருந்த இடத்தைக் கழுதைகள் பூட்டிய ஏரினால் உழுது வரகும் கொள்ளும் விதைத்த செய்தியை இன்னொரு புற நானூற்றுப் பாடல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"உருகெழு மன்னர் ஆரெயில் கடந்த
நிணம்படு குருதிப் பெரும்பாட் டீரத்து
அணங்குடை மரபின் இருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்
வைகல் உழுவ".

- (புறநானூறு 392, வரிகள் 6-11).

சேரன் செங்குட்டுவன் பகைவரை வென்று கழுதை ஏர் பூட்டி உழுத செய்தியைச் சிலப்பதிகாரம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"வடதிசை மன்னர் மன்னெயில் முருக்கி
சுவடி வித்திய கழுதையேர் உழவன்
குடவர் கோமான் வந்தான். (- சிலப்பதிகாரம்,
நீர்ப்படை, காதை, வரிகள் 225-227).

கழுதை ஏர் பூட்டி உழுத வட நாட்டு மன்னர்கள்: காரவேலன் என்னும் கலிங்க நாட்டரசன் பிதுண்ட நகரத்தைக் கழுதை ஏர் பூட்டி உழுதானென ஹத்திகும்பா குகைக் கோயில் சாசனம் குறிப்பிடுகிறது. (-The Hatigumpa Inscriptions of Kara vela. pp. 71-89. Epigraphia Indica. Vol XX.)

கோணிகன் என்னும் அரசன் வைசாலி நாட்டரசனை வென்று அவனுடைய கோட்டையை இடித்துத் தகர்த்து கழுதைகள் பூட்டிய ஏரினால் உழுதான் என ஆவஸ்யக விருத்தி நூல் குறிப்பிடுகிறது. (- சங்ககால தமிழக வரலாற்றில் சில செய்திகள், பக்கங்கள் 123-125, மயிலை சீனி, வேங்கட சாமி).

உறந்தை கொண்டார், உறந்தைப் பிரியர், உறந்தையர், உறந்தையாண்டார், உறந்தையாளர், உறந்தையாளியார், உறந்தையாட்சியார், உறந்தையுடையர், உறந்தையுடையார், உறந்தைராயர், உறயர், உறியர்: உறந்தைச் சோழ மரபினர். சோழர்கள் முதன்முதலில் உறந்தை என்றழைக்கப்படும், உறையூரையே தமது தலைநகரமாகக் கொண்டு ஆண்டார்கள். சங்க காலத் தமிழகத்தில் உறந்தை (உறையூர்) ஊர்களுக்கெல்லாம் தலைசிறந்த ஊராக இருந்தது. இக்காரணம் பற்றியே பண்டைப் புலவர்கள் ஊர் எனப்படுவது ஊறையூர் என்றார்கள். இன்றைய திருச்சிராப்பள்ளி உறையூர் சீர் பெற்றிருக்கும் போது ஒரு சிற்றூராகும். ஆனால் இன்று திருச்சிராப்பள்ளி சீர்பெற்றிருக்கும்போது உறையூர் அதன் மேற்கே ஒரு சிற்றூராகத் தனது சிறப்புகளையெல்லாம் இழந்து கிடக்கிறது.

ஊணர், ஊணியர்: போர்க்கள வெற்றிக்குப்பின் பகை அரசர்களின் முடித்தலைகளை அடுப்பாகக் கொண்டு பேய்களுக்கு உணவு தயார் செய்து படைத்திட்ட வீரர்கள் தம் மரபினர்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பகை அரசர்களின் முடித்தலைகளை அடுப்பாகக் கொண்டு, குருதிப் புனலாகிய உலையின் கண் தசை

மூளை முதலாயினவற்றைப் பெய்து; வீரவளையையுடைய தோளாகிய துடுப்பால் துழாவியடப்பட்ட உணவைப் பேய் களுக்குப் படைத்த செய்தியை மாங்குடி மருதனார் புறநானூற் றுப் பாடல் ஒன்றில் உரைக்கிறார்.

"முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் துடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய''

(- புறநானூறு 26, வரிகள் 8-11).

ஊமத்தநாடர், ஊமத்தநாடார், ஊமத்தயர், ஊமத்தரையார் ஊமத்தப்பிரியர், ஊமப்பிலியர் : ஊமத்த நாட்டை யாண்ட ஊமத்தன் என்னும் சிற்றரசனின் மரபினர். ஊமத்தனின் வேறு பெயர்களான ஊமத்தரையன், ஊமப்பிரியன் என்னும் பெயர் களால் இவனது மரபினர் ஊமத்த நாடர், ஊமத்த நாடார், ஊமத்தயர், ஊமத்தரையார், ஊமத்தப் பிரியர், ஊமப்பிலியர் எனவழைக்கப்பட்டார்கள். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்' சுவாமிநாத மாதவராயர்).

ஏனாதி கொண்டார், ஏனாதிப்பிரியர், ஏனாதியார் : ஏனாதி பட்டம் பெற்ற போர்வீரர்களின் மரபினர். ஏனாதி பட்டம் என்பது அரசன் தானைவீரன் ஒருவன்மீது கொண்ட நன்மதிப் பை உணர்த்துவான் வேண்டி தனது பெயர் பொறித்த கணை யாழி ஒன்றை நல்குவதாகும், (-சைவ இலக்கிய வரலாறு, பக்கம் 289, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.)

சங்க காலத்தில், மலையமான் சோழிய ஏனாதி திருக் கண்ணன், ஏனாதி திருக்கிள்ளி, சோழிய ஏனாதி திருக்குட்டுவன் ஆகியோர் ஏனாதி பட்டம் பெற்ற அரசர்களாவார்கள். ஏனாதி சாத்தஞ் சாத்தனார் என்பவர் ஏனாதி பட்டம் பெற்ற புலவரா வார்.

மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் வரலாறு சோழர் வேந்தர்கட்குத் துணைபுரிந்து அதனால் ஏனாதி என்னும் மாராயம் பட்டம் பெற்றது பற்றி, இவனைச் சான்

றோர்' சோழிய ஏனாதி திருக்கண்ணன் என்று குறிக்கின்றனர். மலையமான் திருமுடிக்காரி இறந்தபின் இவனே நாட்டுக்கரச னாகிச் சிறந்தான். இவனுடைய முன்னோர்கள், ஒருகால் சோழநாட்டு வேந்தன் ஒருவன் தன் பகைவரொடு பொறாது வெல்லும் வலியழிந்து அஞ்சி ஓடி மலையமான்களுக்குரிய முள்ளூரின் கண் ஒளிந்திருந்தானாக, சோழநாடு ஞாயிற்றை இழந்த உலகம் போல அரசனை இழந்து வருந்துவதாயிற்று; அதனை அறிந்த மலையமான் முள்ளூர்க்குச் சென்று சோழ னைக் கொணர்ந்து சோழநாட்டு வேந்தனாக்கி அவனது வெண்குடையும் அரசும் நிலைபெறச் செய்தனன். இவனைப் பற்றி மாறோக்கத்து நப்பசளையார் புறநானூற்றில் பாடல் (174) ஒன்று பாடியுள்ளார்.

ஏனாதி திருக்கிள்ளி வரலாறு: இவன் சோழ நாட்டுக் குறுநில மன்னர்களுள் ஒருவனாவான். சோழவேந்தர்க்குப் படைத்துணையாய்ப் பல போர்களைச் செய்து மேம் பட்ட வன்; பகைவர் படைக்கலங்களாற் புண்பட்ட மேனியும். பகைவர்புறங்காண்டலாலும், இரவலர்க்கு வரையாது வழங் கலாலும் இசைபெற்ற நல்வாழ்வும் உடையன். இவனைப் பற்றி கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் புறநானூற்றிப் பாடல் (107) ஒன்று பாடியுள்ளார்.

சோழிய ஏனாதி திருக்குட்டுவன் வரலாறு: இவனது இயற் பெயர் திருக்குட்டுவன் என்பதாகும். சோழ வேந்தன் பால் தானைத்தலைவனாயிருந்து போர்ச் செயல் மாண்பால் சோழிய ஏனாதியென்று அவனால் மாராயந்தரப்பட்டான். அதனால் இவன் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் எனப் பட்டான்.

ஏனாதி சாத்தஞ் சாத்தனார்: இவர் பாண்டி நாட்டுப் புலவர் களுள் ஒருவராவார். இவருடைய தந்தை பெயரும் சாத்தன் என்பதால் இவர் சாத்தஞ் சாத்தன் எனவழைக்கப்பட்டார். சாத்தனார் நல்ல தமிழ்ப் புலமையொடு பேராற்றலும் பெற் றிருந்தமையால் பாண்டிய வேந்தனால் ஏனாதி என்னும் பட் டங்கொடுக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டார். (-சைவ இலக்கிய வரலாறு, பக்கம். 282, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.)

ஏத்தொண்டர், ஏத்தொண்டார், எத்தொண்டார். ஏற்றாண்டார், எண்ணாட்டுப் பிரியர், என்னாட்டுப் பிரியர் ஏனாட்டுப் பிரியர் ஏனாட்டுப் பிரியர், எத்திப் பிரியர், ஏத்திரிப் பிரியர், எத்தியப் பிரியர், எத்திரியப் பிரியர் : ஏனாதி திருக்கிள்ளி சோழனின் மரபினர். இவனது வரலாற்றை ஏனாதி கொண்டார் பட்டப் பெயரில் காண்க.

ஐயர் : அரசமரபினர். பழந்தமிழகத்தில் ஆணும் பெண்ணும் தமக்குள் ஒருவரையொருவர் காதலித்துக் கணவன் மனைவியாக இருந்து இல்லறவாழ்க்கை நடத்துங்கால், நெடுங் காலத்துக்குப் பிறகு அவர்களிடையே பொய்யும் வழுவும் உண்டாகிச் சமூக வாழ்க்கையில் ஒழுங்கீனமும் துன்பமும் குழப்பமும் ஏற்பட்டதையடுத்து, அவ்வொழுங்கீனத்தைத் தடுத்துச் சமூக வாழ்க்கையில் அமைதியையும் ஒழுங்கையும் ஏற்படுத்துவான் வேண்டி இந்த மரபினர், கணவன் மனைவியாக வாழவிரும்பும் ஆணும் பெண்ணும் பலர் அறியத் திருமணஞ் செய்ய வேண்டும் என்று கரணத்தை (திருமணச் சடங்கை) அமைத்தார்கள்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப".
- தொல்காப்பியம், கற்பியல்- 145.

கள்ளர் பட்டப் பெயர் ஐயர் என்பதும் பிராமண சாதிப் பெயர் ஐயர் என்பதும் ஒன்றல்ல - ஐயர் சொல்லாராய்ச்சி : கள்ளர் பட்டப் பெயரான ஐயர் என்பதும் பிராமண சாதிப் பெயரான ஐயர் என்பதும் ஒன்றல்ல; பிராமணருக்கு இப் பெயர் மிகவும் அண்மைக் காலத்திலேயே வழங்கப்பட்டதாகும். விஜயநகர அரசர் காலந் தொடங்கியே (கி. பி. 15-ஆம் நூற்றாண்டு தொடங்கி) இப்பெயர் இவர்களுக்கு (பிராமணர்களுக்கு) வழங்கப்பட்டது. அதற்கு முன்பு ஐயர் என்னும் சொல்பிராமணரைச் சார்த்தி வழங்கப்படவில்லை. பழைய கல்வெட்டெழுத்துச் சாசனங்களிலும் பிராமணருக்கு ஐயர் என்னும் பெயர் கூறப்படவில்லை. சங்க காலத்திலும் ஐயர் என்னும் சொல் பிராமணருக்கு வழங்கவில்லை.

ஐ, ஐயன், ஐயர் என்னும் சொற்கள் சங்க இலக்கியங்களில் அண்ணன், தகப்பன், பெரியவன் என்னும் பொருளில் பொதுவாகவும் அரசன், அரசர் குலத்தைச் சார்ந்தவன் என்னும் பொருளில் சிறப்பாகவும் வழங்கி வந்துள்ளன.

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலை எழுதிய ஐயன் ஆரிதனார் அரசமரபைச் சார்ந்தவர் என்பதால் ஐயன் என்னும் அடைமொழியுடன் சேர்த்தழைக்கப்படுகிறார்.

> 'ஓங்கிய சிறப்பி னுலகமுழு தாண்ட
> வாங்குவிற் றடக்கை வானவர் மருமான்
> ஐய னாரிதன் அகலிடத் தவர்க்கு
> மையறு புறப்பொருள் வழாலின்று விளங்க
> வெண்பா மாலை யெனப் பெயர் நிறீஇப்
> பண்பு மொழிந்தனன் பான்மையிற் றெரிந்தே."
>
> - சிறப்புப் பாயிரம்

ஐயடிகள் காடவர்கோன் அரசமரபைச் சார்ந்தவர் என்பதால், ஐயன் என்னும் அடைமொழியுடன் சேர்த்தழைக்கப் பட்டார்.

தமிழ் நாட்டுக்கு அருகிலிருக்கும் சிங்களத் தீவாகிய இலங்கைத் தீவிலேயும் பண்டைக் காலத்தில் அரச குலத்தவர் அய (ஐயன்) என்று பெயர் வழங்கப்பட்டனர். இலங்கையில் கலனிப் பகுதியை அரசாண்ட மன்னனின் தம்பி உத்தியன் என்பவன் ஐயன் என்று கூறப்படுகிறான். (மகாவம்சம் XXII. V15: P. 82 Epigraphia Zeylanica Vol III - சங்க கால தமிழக வரலாற்றில் சில செய்திகள், மயிலை. சீனி. வேங்கடசாமி)

மொகஞ் சொதரோ முத்திரையில் ஐயர் என்னும் சொல் : ஐயர் என்னும் சொல் மொகஞ்சொதரோ முத்திரைகளிலும் காணப்படுகிறது. அங்கு அது கோயிற் குருவைக் குறிக்கின்றது. ஹெரஸ்பாதிரியார், "மீனனிர் மாறு அடுஇர் ஐயன் செறிதல் தல்வ" என்று மொகஞ்சொதரோ முத்திரையில் பொறிக்கப் பட்டிருத்தலைக் காட்டி அதற்கு "மீனவரின் பகைவர் மறியற் படுத்தப்பட்ட அரசகுரு" என்று பொருள் எழுதியுள்ளார்.

'Minnir maru adirayyan sere teltalva. (the object of) the hostility of Minnas is the imprisoned illustrious ruler who is a priest. The Journal of the University of Bombay - July 1936-FR Heras. (- தமிழ் இந்தியா, பக்கம் 164, ந சி கந்தையா பிள்ளை).

ஐயப்பிரியர், ஐரைப்பிரியர், ஐந்நூற்றுப் பிரியர் : ஐவசோழனின் மரபினர். ஐவசோழனின் வேறு பெயர்களான ஐயங்கொண்டான், ஐயாண்டான், ஐயப்பிரியன், ஐயுடையான், ஐயாளி என்னும் பெயர்களால் இவனது மரபினர் ஐயப்பிரியர் ஐரைப்பிரியர், ஐந்நூற்றுப்பிரியர் எனவழைக்கப்பட்டார்கள். ஐவசோழன் ஐஹூர், ஐயூர், ஐவனல்லூர், ஐயன்பேட்டை என்னும் ஊர்களையும் ஐயனாறு, ஐயவையனாறு என்னும் சிற்றாறுகளையும் உண்டாக்கியவனாவான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம் 118, 119).

ஒண்டிப்பிரியர், ஒண்டிப்பிலியர், ஒண்டிப் புலியார் : நியமி. மரபில் வந்த ஒளிமன் என்னும் அரசனின் மரபினர். ஒளிமன் அறிவிலும் புகழிலும் சிறந்தவனாவான். இவன் ஒளியூர், ஒளிமதி, ஒளிமங்கலம், ஒளிக்குடி, ஒளிக்கடை (உள்ளிக்கோட்டை) என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். (-சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-75).

ஒளிகொண்டார், ஒளிப்பிரியர், ஒளியாண்டார், ஒளியாளர், ஒளியாளியார், ஒளியாட்சியார், ஒளியுடையர், ஒளியுடையார், ஒளிராயர், ஒளிவராயர், ஒளிவிராயர் : சேர அரச மரபினர். சேர மன்னர்களில் ஒளிநாட்டை ஆண்டவர்கள் ஒளி கொண்டார், ஒளிப்பிரியர், ஒளியாண்டார், ஒளியாளர், ஒளியாளியார், ஒளியாட்சியார், ஒளியுடையர், ஒளியுடையார், ஒளிராயர், ஒளிவிராயர் என்னும் பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். ஒளிநாடு என்பது சேரநாட்டில் தற்போதைய கோட்டாறு-திருவாங்கூர் பகுதியில் இருந்த ஒரு நாடாகும்.

இப்பட்டப் பெயர்களையுடையோர் நியமி மரபில் வந்த ஒளிமன் என்பவனின் மரபினர் என்றுரைப்பார் திருவாளர்

எம். சுவாமிநாத மாதவராயர் அவர்கள் (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-75.)

ஒற்றையர், ஒற்றையார் : ஒற்றர் மரபினர் (இன்றைய RAW, CIA, KGB போன்று பேரறிவுமிக்க ஒற்றர் மரபினர்). ஒற்றர் என்பது காலப் போக்கில் ஒற்றையர்-ஒற்றையார் என வழங்கப் படலாயிற்று.

பண்டை நாட்களில் ஒற்றர் செயற்பாடுகள் பண்டை நாட்களில் ஒற்றர்கள் துறவியர், வணிகர், ஊமையர், செவிடர், பள்ளி மாணாக்கர் வேடமணிந்து ஒற்றர்பணி புரிந்தார்கள். வணிகராகச் சென்றோர் பகைவரின் படைவீரர்கட்கு நஞ்சு கலந்த மதுவகைகளை விற்றார்கள். வேலையாட்களாகச் சென்றோர் பகைவரின் ஆடு, மாடுகளுக்கு நஞ்சு கலந்த தண்ணீரும் புல்லும் கொடுத்தார்கள். (- தமிழ் இந்தியா, பக்கம்-79, ந. சி. கந்தையா பிள்ளை).

ஓசையர், ஓசையார், ஓந்தரையர், ஓந்திரியர், ஓந்திரையர், ஓமசையார்ஓமனாயர்,ஓனாயர் : முசுகுந்தன் மரபில் வந்த ஓமாம் புலிமன் என்பவனின் மரபினர் ஓமாம்புலிமன் "ஓமாம்புலியூர்" என்னும் தேவாரம் பெற்ற சிவதல நகரத்தை உண்டாக்கிய வனாவான். (- சூரிய குலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-73).

முசுகுந்தன் வரலாறு : மாந்தாதா மரபில் வந்தவன். சோழர்களின் தலைநகரங்களில் ஒன்றான புகார்ப் பட்டினத்தை உண்டாக்கியவன். புகாரில், வெள்ளிடை மன்றம் (திருட்டை வெளியாக்கும் மன்றம்); இலஞ்சி மன்றம் (கூன், குறள், ஊமை, செவிடு, பெருவியாதி போக்கும் மன்றம்); பூத சதுக்கம் (பொய்த்தவஞ் செய்வோர், விபச்சாரம் செய்வோர், வருவதுரையா அமைச்சர், பிறர்மனை நயப்போர், பொய்யுரை போர், புறங்கூறுவோர் என்பவர்களை நான்கு காதங் கேட்கும் படி கடுங்குரலெழுப்பிப் பூதம் புடைத்துண்ணும் மன்றம்); பாவை மன்றம் (அரசன் நீதி தவறினாலும், அரசனுக்குத் தீங்கு நேரிடுவதாகயிருந்தாலும் பாவை நின்றழும் மன்றம்) என்னும் ஐவகை மன்றங்களை ஏற்படுத்தியவன். (- சிலப்பதிகாரம், இந்திர விழ வூரெடுத்த காதை, வரிகள் : 115, 138.)

புகார்ப் பட்டினம் வரலாறு : புகார்ப்பட்டினத்திற்குக் காவிரிப்பூம்பட்டினம் என்றும் பூம்புகார் என்றும் வேறு பெயர்கள் உள்ளன. காகந்தி என்றும் சம்பாபதி என்றும் வேறு பெயர்களும் உண்டு. பாலி மொழியில் எழுதப்பட்ட புத்த ஜாதகக் கதை, அகித்தி ஜாதகத்தில் இப்பட்டினம் டமிள நாட்டு (தமிழ் நாட்டு) கவீரபட்டணம் என்று கூறப்படுகிறது. போதிசத்துவராகிய புத்தர், தமது பழம்பிறப்பில் அகித்தி முனிவராகப் பிறந்து காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு தோட்டத்தில் தங்கித் தவஞ்செய்திருந்தார் என்று அதில் கூறப்படுகிறார். கி.மு. முதல் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட துட்டகமுனு என்னும் அரசனது மனைவி, அவளுடைய முற்பிறப்பில் காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு கப்பல் தலைவனுடைய குடும்பத்தில் பிறந்தாள் என்று கூறப்படுகிறாள். பெரிப்ளஸ் என்னும் கிரேக்க நூலாசிரியர் காவிரிப்பூம்பட்டினத்தைக் 'கமரா' என்று கூறுகிறார். டாலமி என்னும் யவனர் இப்பட்டினத்தை 'கபேரிஸ் எம்போரியன்' என்று எழுதியிருக்கிறார்.

இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பு, காவிரிப்பூம் பட்டினம் உலகப்புகழ் பெற்ற துறைமுகப்பட்டினமாக விளங்கிற்று. கீழ் நாடுகளிலிருந்தும் மேல் நாடுகளிலிருந்தும் வந்த அயல் நாட்டுக் கப்பல் வணிகர் சந்திக்கும் இடமாக இப்பட்டினம் இருந்தது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர் யவனர் எனப் படும் கிரேக்கர் ஆவர். புகார் நகரத்துக் கப்பல் வணிகர் இங்கிருந்து கப்பல்களில் பண்டங்களை ஏற்றிக் கொண்டு ஈழம் (இலங்கை), சாவகம் (ஜாவா), காழகம் (பர்மா), கடாரம் (மலேயா) முதலிய நாடுகளில் சென்று வியாபாரம் புரிந்தனர். (- சங்க கால தமிழக வரலாற்றில் சில செய்திகள், பக்கங்கள் 126, 127, மயிலை. சீனி. வேங்கடசாமி).

புகார்ப்பட்டினத்தின் பிற சிறப்புகளைச் சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை, பெரும் பாணாற்றுப்படை, அகநானூறு. புறநானூறு ஆகிய இலக்கியங்களில் கண்டறிந்து கொள்ளவும்.

ஓடம்போகியார், ஓட்டம் பிடிக்கியார், ஓட்டம் பிடுக்கியார் : ஓடம்போகி சோழன் மரபினர். ஓடம்போகி சோழன் ஓடம் போகி என்னும் ஆற்றையும், ஒடாச்சேரி, ஒட்டப்பிடாகை, ஒட்டப்பிடாரம், ஒட்டத்தட்டை, ஒட்டக்குடி, கொரடாச்சேரி (சோஓடச்சேரி என்பது காலப்போக்கில் கொரடாச்சேரி என வழங்குவதாயிற்று) என்னும் ஊர்களையும் உண்டாக்கியவ னாவான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-119, 120).

ஓமாந்தரையர், ஓமாமரையர், ஓமாமுடையர், ஓமாம்பிரியர், ஓம்பிரியர், ஓமாம்பிரியர், ஒயாம்பிலியர் : திண்டிவனத்தைச் சார்ந்திருந்த ஒய்மான் நாட்டை ஆண்ட அரச மரபினர். இவர் கள் ஒய்மான் நாட்டு அரசராயிருந்து அதன்மீது பிரியம் மிகக் கொண்டவர்கள் என்பதால், ஓமாந்தரையர், ஓமாமரையர், (ஒய்மான் நாட்டு அரையர் (அரசர்) என்பது காலப்போக்கில் ஓமாந்தரையர், ஓமாமரையர் எனத்திரிந்து வழங்கலாயிற்று.) ஓமாம்முடையர் (ஒய்மான் நாட்டார், ஒய்மான் நாட்டுக்குரிய வர்) ஓம்பிரியர், ஓமாம் பிரியர், ஒயாம்பிரியர் எனவழைக்கப் பட்டார்கள்.

ஒய்மானாட்டு நல்லியக்கோடன், ஒய்மான் வில்லியாதன், ஒய்மான் நல்லியாதன் ஆகியோர் இப்பட்டப் பெயர்களை உடையோரின் மரபில் தோன்றிய தலைசிறந்த மன்னர்களா வார்கள்.

ஓய்மானாட்டு நல்லியக்கோடன் வரலாறு : சிறுபாணாற்றுப் படையின்பாட்டுடைத் தலைவன். உள்ளி உள்ளமெல்லாம் உவந்தீயும் வள்ளன்மையில், பேகன் முதலிய எழு வள்ளல் கட்கும் இவன் ஒருவனே சமனாவான் என, நத்தத்தனார் இப்புரவலனைப் புகழ்ந்து போற்றியுள்ளார். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் பயின்ற புலவர்கட்குத் தாயாகி அவரையும் அவர் தம் கலைகளையும் நன்கு போற்றி யவன். செய்ந்நன்றி அறிதலும் சிற்றினமின்மையும், இன்முக முடைமையும், இனியனாதலும், அஞ்சினர்க்களித்தலும், வெஞ் சினமின்மையும் ஆணணி புகுதலும், அழிபடை தாங்கலும், கருதியது முடித்தலும், காமுறப்படுதலும் ஒருவழிப் படாமை

யும், ஓடிய துணர்தலும், அறிவுமடம் படுதலும் அறிவு நன் குடைமையும், பிறவும் உடையனாய்த் திகழ்ந்தவன்.

நல்லியக்கோடன் காலத்தில், அவன் நாட்டில் கிடங்கில், எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகியன தலைசிறந்த நகரங் களாகும். கிடங்கில் என்னும் ஊர் இப்பொழுதும் அப்பெயரா லேயே வழங்கப்படுகிறது. இற்றை நாளிலும் அங்கு இடிந்த அரண்மனைகளின் அறிகுறிகளும் அகழிகளும் காணப்படு கின்றன.

நல்லியக்கோடன், தன் பகைவர்களின் மிகுதி கண்டு அஞ்சிச் செந்தமிழ்க் கடவுளாகிய முருகனை வழிபட்டான் என்றும், அக்கடவுள் அவன் கனவிற்றோன்றி, "அவ்வூர்க் கண் உள்ள ஒரு கேணியிற் பூத்த பூவைப் பறித்து நின்பகை வர் மேல் விடுதி" எனத் திருவாய் மலர்ந்தருளினர் என்றும், அவ்வாறே அவனும் பூவைப் பறித்து பகைவர்மேல் எறிய அதுவே வேலாகிச் சென்று பகைவரை அழித்தது என்றும், இக்காரணம் பற்றியே அவ்வூர் வேலூர் என வழங்கப்பட்டது என்றும் உச்சிமேல் புலவர் கொள் நச்சிக்கினார்க்கினியர் உரைப்பார்.

ஓசையார், ஓமசையார், ஓந்தரையர், ஓமாமரையர், ஓமாந் திரையர், ஓந்திரியர், ஓயாம்பிலியர், ஓனாயர் ஆகிய பட்டப் பெயர்களையுடையோரை ஓமாம்புலிமன் என்பவனின் மரபி னர் என்பார் எம். சுவாமிநாத மாதவராயர் அவர்கள் (-சூரிய குலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-73).

கக்கொடையார், களவார், களத்து வென்றார், களத்தில் வென்றார், களந்தாண்டார், களப்பாடி. களப்பாடியார், களமுடை யார், களந்தை கொண்டார், களந்தைப் பிரியர், களந்தையாளி, களந்தையுடையர், களப்பாளி, களர், களமுடையர், களபர், களவர், களாவர், களப்பாளர், களப்பளார், களப்பிலார், களப் பிரார், களப்பாளியார், களப்பாள்ராயர், கிளாக்கர், கிளாக்குடை யார், கிளாவர், தத்தாண்டார், தத்துவண்டார், தத்துவாண்டை யார், தெத்துவெண்டார், தெத்து வென்றார் : களப்பாளன் என்னும் அரசனின் மரபினர். களப்பாளனின் வேறு பெயர்

களான களந்தையாண்டான், களத்தைகொண்டான், களந்தைப் பிரியன்,களந்தையாளி, களந்தையுடையன், களப்பாளி, களன், களமுடையன், களத்துவென்றான், களப்பாடி, களந்தாண்டான், தெத்து வெண்டான், களக்குடையன், கக்குடையன், களக்கடையன், கிளாக்குடையன், கிளாக்கன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

களப்பாளன் களப்பாள், களர், களமங்கலம், களத்தூர் களக்குடி, களமாலூர், களக்காடு, களஞ்சேரி முதலிய ஊர் களை உண்டாக்கியவனாவான்.

களப்பாளனுக்குக் கூற்றுவன் என்று ஒரு பெயரும் உள் ளது. நாடுகளையெல்லாம் கூற்றங்களாகப் (Taluk) பிரித்த காரணத்தால் இவன் கூற்றுவன் எனப்பட்டான். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவனான கூற்றுவநாயனார் இவனே யாவான்.

இவன் (களப்பாளன்) களப்பாள் (களந்தை) என்னும் (திருவிசைப்பா பதிகம் பெற்ற) சிவதல நகரத்தை உண்டாக்கி இராசதானியாகக் கொண்ட சிற்றரசனாவான். சிறந்த சிவ பக்தியும் வீரமுங் கொடைமுயுடையவன். பெரிய போர்க் களத்தை உடையவன். சேர, சோழ, பாண்டியர்களைப் போரில் வென்றவன். (-சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம் 205, 206.)

இவன் தனக்கு தில்லைவாழ் அந்தணர்களை முடிசூட்ட பணித்திடுங்கால், அவர்கள் "சோழர்க்கன்றிப் பிறருக்கு முடி சூட்டோம்" என மறுத்துரைத்தனர். அதனால் அவர்கள் இவனது சீற்றத்திற்கு அஞ்சி சேரநாடு புகுந்தனர். (- பெரிய புராண ஆராய்ச்சி, பக்கங்கள் 94, 95, டாக்டர் மா. இராச மாணிக்கம்).

பிற்காலச் சோழர்கள் காலத்தில் வாழ்ந்த களப்பாளன் களப்பாளராயர் : முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் நெற் குன்றங் கிழார் களப்பாளராயர் என்பாரும் மூன்றாம்

இராசேந்திர சோழன் காலத்தில் களப்பாளன் (Ins 339 of 1925) என்பாரும் சோழ மன்னர்களின் அரசியல் தலைவர்களாக இருந்ததாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

நெற்குன்றங்கிழார் களப்பாளராயர் வரலாறு : இவர் தொண்டை மண்டலத்தில் புலியூர் கோட்டத்துப் பேரூர் நாட்டிலுள்ள நெற்குன்றம் என்ற ஊரில் வாழ்ந்த ஓர் அரசியல் தலைவராவார். இவர் நெற்குன்றம் என்னும் ஊரைத் தமக்குரிய காணியாகக் கொண்டமையால் நெற்குன்றங்கிழார் என்று வழங்கப்பட்டார். இவருக்குக் கருவுணாயகர் எனனும் இயற்பெயரும் அரையர், களப்பாளராயர் என்ற பட்டங்களும் உண்டு. இவர் சிறந்த தமிழ்ப்புலமையும் சிவபக்தியும் வாய்க்கப் பெற்றவர். சோழ நாட்டில் திருப்புகலூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்பால் பெரிதும் ஈடுபட்டு திருப்புகலூரந்தாதிபாடிய கவிஞர் கோமான் இவரேயாவார். இவர் நம்பிகாளியார் முதலான புலவர் பெருமக்களை ஆதரித்த பெருங்கொடை வள்ளலாவார்.இவர் கல்வெட்டொன்று (Ins No.96 of 1927-28) திருப்புகலூரிலுள்ளது. (-பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி II, பக்கம் 71, டி. வி. சதாசிவ பண்டாரத்தார்).

கங்கர், கங்கநாடர், கங்கநாடார், கங்கநாட்டார் : சங்ககால அரச மரபைச் சார்ந்தவர்கள். இவர்கள் மரபினரே பிற்காலத்தில் தழைக்காட்டை தலைநகராகக் கொண்டு ஆண்டவர்களாவார்கள். (- தமிழ்மொழி - இலக்கிய வரலாறு, சங்க காலம், பக்கம் 186, டாக்டர் மா. இராச மாணிக்கனார்).

கங்கை நாடர், கங்கைராயர், கங்கைகொண்டார், கங்கையாண்டார், கங்கையுடையர், தானைத்தலைவர், தானைத்தலையர், தானாதியார், தானாதிபதியார், தானாபதியார், தானாதிபர் படைத்தலைவர், படையாட்சியார், படையெழுச்சியார், மாவெட்டியார், மாவெற்றியார் : சோழ மரபினர். கங்கை கொண்ட சோழன் என்றழைக்கப்படும் முதலாம் இராசேந்திர சோழன் இப்பட்டப் பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தான்.

கச்சிராயர் : பல்லவ அரச மரபினர். கச்சி (காஞ்சி)யைத்

தலைநகராகக் கொண்டு ஆண்டதால் கச்சி அரையர் (காஞ்சி அரசர்) எனப்பட்டார்கள். கச்சி அரையர் என்பது காலப் போக்கில் கச்சிராயர் எனத் திரிந்து வழங்கலாயிற்று.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் அரச நாராயணன் ஏழிசை மோகனாகிய சனநாத கச்சிராயன் என்பவன் ஒருவன் திருமுனைப் பாடி நாட்டில் நாடுகாவல் அதிகாரியாக இருந்தானெனக் கல்வெட்டொன்று (S. I. I. Vol. VIII. No 298) குறிப்பிடுகிறது.

கடம்பர், கடம்பராயர், கடம்பையாண்டார், கடம்பை கொண்டார், கடம்பைப்பிரியர், கடம்பையுடையர், கடம்பையாளியார்: கடம்பசோழனின் மரபினர், கடம்ப சோழனின் வேறு பெயர்களான கடம்பன், கடம்பராயன், கடம்பையாண்டான், கடம்பை கொண்டான், கடம்பைப் பிரியன், கடம்பையுடையன், கடம்பையாளி என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

கடம்பசோழன், குழித்தண்டலை, கடம்பன்றுறை, கடம்பூர், கடவூர், கடவூர் மயானம், கடம்பர் வாழ்க்கை, கடம்பன் குடி, கடலங்குடி என்னும் ஊர்களையும் கடலாழி என்னும் சிற்றாற்றையும் உண்டாக்கியவனாவான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.)

பிற்காலச் சோழர்கள் காலத்தில் கடம்பைராயர் மரபில் நாடு காவல் அதிகாரிகளாக இருந்தவர்கள் : 1. குலோத்துங்க சோழன் கடம்பராயன்; 2. ஊருடைப் பெருமாளான எதிரிலி சோழக் கடம்பராயன், ஆகியோர் இரண்டாம் இராசராச சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் நாடு காவல் அதிகாரிகளாக இருந்த பெருமக்களாவர். (- Inscription of the Pudukkottai State No. 169).

இவர்களில் குலோத்துங்க சோழ கடம்பராயன் என்பவன் புதுக்கோட்டையைச் சார்ந்த நிலப்பரப்பை ஆண்டுகுடுமியான் மலையிலுள்ள திருநலக்குன்றமுடையார் கோயிலில் நாள் தோறும் இரண்டு திருவிளக்கு வைப்பதற்கு நிவந்தம் அளித்துள்ளான். (- Inscriptions of Pudukkottai State No. 135.)

கடாத்தலைவர், கடாரத்தலைவர், கடாரந்தாங்கியார், சோழ சனகராசர், போர் பொறுக்கியார், போரிற் பொறுக்கியார் : சோழ மரபினர். கடாரத்தலைவர், கடாரந்தாங்கியார் என்; போர் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் மலேயாவை வென்றவர்களாவார்கள். (கடாரம் என்பதை மயிலை. சீனி வேங்கடசாமி அவர்கள் மலேயா என்று குறிப்பிடுவர்கள் சங்க கால தமிழக வரலாற்றில் சில செய்திகள் பக்கம் 127)

சோழசனகராசன், போரிற்பொறுக்கி ஆகிய பட்டப் பெயர்களை முதலாம் இராசேந்திரசோழன் சிறப்புப் பெயர் களாகக் கொண்டிருந்தான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம் பக்கம் 171).

கட்டவெட்டியார், கட்டாணியார், கட்டைக்குண்டர், கட்டை கொண்டார், கட்டையாளியார் : கரிகாற் சோழன் மரபினர். கரிகாற் சோழன் காடு கொன்று நாடாக்கியதையடுத்து. காட்டை வெட்டி, காட்டை கொண்டான், காட்டையாளி என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றான். கரிகாற்சோழனின் இச் சிறப்புப் பெயர்கள், அவனது காலத்திற்குப்பின் அவனது மர பினர்கட்குப் பட்டப் பெயர்களாக அமைந்தன.

காட்டைவெட்டி, காட்டை கொண்டான், காட்டையாளி, என்பன காலப்போக்கில் முறையே கட்டவெட்டி (கட்ட வெட்டியார்), கட்டை கொண்டார் [ன்]. கட்டையாளி என வழங்குவதாயிற்று.

கட்டயர், கட்டையார் : கட்டி என்னும் சிற்றரசனின் மரபி னர். கட்டியர் என்பது காலப் போக்கில் கட்டயர், கட்டையர் என வழங்கப படலாயிற்று.

சங்க காலத் தமிழகத்தில் கட்டி என்னும் சிற்றரசன் ஒருவன் வாழ்ந்தமையை அகநானூறும், குறுந்தொகையும் பின் வருமாறு சான்று பகர்கின்றன.

> "போரடு தானைக் கட்டி" - அகநானூறு 226, வரி 16
> [பொருள் : போர் அடுதலில் வால்ல தானையை யுடைய கட்டி.]

"பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்" - குறுந்தொகை 11, வரி 6.

(பொருள் : பலவாகிய வேற்படையையுடைய கட்டி என்பானுடைய நல்ல நாட்டிற்கு அப்பால்.)

கட்டியைச் சேரனுடைய படைத்தலைவர்களுள் ஒருவன் என்பார் பெருமழை புலவர் சோமசுந்தரனார் அவர்கள், குறுந்தொகை மூலமும் உரையும், பக்கம்-20.

கதகளி பட்டவர்குறி, கம்பசேவை, கம்பக்கூத்து எனவும் பெயரிட்டு அழைக்கப்படுகிறது இந்தக் கூத்தில் பண்டை நாட்களில் விழாக் காலங்களில் கூத்தாடுபவர்களுடன் உழவர் களும் கலந்தாடுவது வழக்கமாகும். (-K.P.P. Menon's History of Kerala, vol. IV D. 525)

கரடியார் (கருடிய) : படைக்கலம் பயிற்றுவித்தவர் தம்) மரபினர். கருடியார் என்பது காலப்போக்கில் கரடியார் என வழங்கப்படலாயிற்று.

கரம்பையார், கரம்பைகொண்டார், கரைமீண்டார், கரமுண்-டார் : கரம்பை சோழன் மரபினர். கரம்பை சோழன், கரம்பைக் கோட்டை, கரமுண்டான் கோட்டை, கரவீரம், கரபுரம், கரம் பை, கரம்பையம், கரம்பைக்குடி, கரஞ்சிப்பட்டி என்னும் ஊர் களை உண்டாக்கியவனுவான். (-சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.)

கருப்பட்டியர், கருப்பட்டியார், கருப்பூண்டார், கரும்பூரார், கருவூரார், கருக்கொண்டார் : கருப்பன் சோழனின் மரபினர் கருப்ப சோழனின் வேறு பெயர்களான கருவூரான், கருக்-கொண்டான் என்னும் பெயர்களால் இவனது மரபினர் கருப் பட்டியர், கருப்பட்டியார், கருப்புண்டார், கருப்பூண்டார், கரும்பூரார், கருவூரார், கருக்கொண்டார் எனவழைக்கப்பட்-டார்கள், கருப்ப சோழன், திருக்கருகாவூர், கருக்குடி, கருப்ச பறியலூர், கருப்பூர், கருப்புக்களர், கருப்பஞ்சேரி, கருப்பட்டி மூலை, கருங்குளம், கருங்கண்ணி, கருவாக்குரிச்சி என்னும் ஊர்களை உண்டாக்கினான்.

கலியன், கலியனார், கலியராயர், கலியரையர், கலியாட்சியார், கலிச்சியார், கலிகொண்டார், கலிப்பிரியர், கலியுடையார், கலியாளியர் : கலிக்காம சோழனின் மரபினர். கலிக்காம சோழனின் வேறு பெயர்களான கலியன், கலிராயன், கலியாண்டான், கலிக்கொண்டான், கலிப்பிரியன், கலியுடையன், கலியாட்சி என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்ட பெயர்களைப் பெறுவாராயினர். கலிக்காம சோழன் கல்யாண புரம், கலிக்காமூர், கல்யாண ஓடை என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்). திருமங்கை ஆழ்வாரின் இயற்பெயர் கலியன் என்பதாகும்.

கலிங்கராயர், காளிங்கர், காலிங்கராயர், காளிங்கராயர், காளியங்கராயர் : காளிங்கன் என்னும் அரசனின் மரபினர்களாகவோ, ஒரிசா என்றழைக்கப்படும் கலிங்கத்தை வெற்றி கொண்டு ஆண்டவர்கள்தம் மரபினர்களாகவோ இருத்தல் வேண்டும்.

காளிங்கன் வரலாறு இவனைப் பற்றித்திரண்ட வரலாறு எதுவும் கிடைத்திலது. தனிப்பாடல் திரட்டு என்னும் பழந் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பாடல் ஒன்றின் மூலமே இப்படி ஒரு மன்னன் இருந்தான் எனபது தெரியவருகிறது. பாடல் பின்வருமாறு

"வாய்த்த வயிரபுர மாகாளி அம்மையே
ஆய்த்த மணலில் அணிவரையில் - காய்த்த
கதிரைமா ளத்தின்னுங் காளிங்கன் ஏறும்
குதிரைமா ளக்கொண்டு போ" - பாடல் 404.

பொருள் : பல வளங்களும் பொருந்திய 'வயிரபுரம்' என்னும் தலத்தில் வீற்றிருக்கும் காளியம்மையே! நுண்ணிய மணல் நிலத்திலும் மலைச் சாரலிலும் விளைந்த பயிரின் கதிரை அழிந்து போகுமாறு தின்னும் காளிங்கன் என்னும் மன்னன் ஏறும் குதிரையானது இறக்குமாறு அதைக் கொண்டு செல்வாயாக! (- தனிப்பாடல் திரட்டு, உரையாசிரியர் புலவர் அ. மாணிக்கம்.)

திருக்குறளுக்கு உரை எழுதிய பழைய உரைகாரர்களில் ஒரு உரையாசிரியரின் பெயர் காளிங்கர் என்பதாகும் (-தமிழ் மொழி - இலக்கிய வரலாறு, பக்கம் 125, டாக்டர் மா. இராச மாணிக்கனார்.)

முதல் சடையவர்மன் குலசேகர பாண்டியனின் இரு சிங்காதனங்களில் ஒன்றின் பெயர் காலிங்கராயன் என்பதாகும். [- Ins. 540 of 1916; S. I. I., Vol. V. No. 302; பாண்டியர் வரலாறு, T. V சதாசிவ பண்டாரத்தார்; பக்கம் 110.]

பிற்காலச் சோழர்கள் காலத்தில் படைத்தலைவனாக இருந்த காலிங்கராயர் வரலாறு அல்லது அரும்பாக்கிழான் மணவிற் கூத்தனான காலிங்கராயன் வரலாறு: இவன் தொண்டை மண்டலத்திலுள்ள இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய மணவிற் கோட்டத்து மணவில் என்னும் ஊரினன். அருளாகரன், அரும்பாக்கிழான், பொன்னம்பலக்கூத்தன்' நரலோகவீரன் முதலான பெயர்களையுடையவன். குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் படைத்தலைவனா யமர்ந்து பெரும் புகழ் எய்தியவன். குலோத்துங்கன் வேண் நாடு, மலை நாடு, பாண்டிநாடு, வட நாடு முதலியவற்றோடு நிகழ்த்திய போர்களில் படைத்தலைமை வகித்து வெற்றி பெற்று, அதனால் தன் வேந்தனுக்கு என்றும் அழியாத புகழை உண்டு பண்ணி யவன். இவனது பேராற்றலை நன்குணர்ந்த குலோத்துங்கன் இவனுக்குக் காலிங்கராயன் என்னும் பட்டமளித்துப் பாராட்டி னான். இவன் தில்லையம்பலத்தில் நடனம்புரியும் இறைவன் பால் பேரன்புடையவனாய் ஆண்டு இயற்றிய திருப்பணிகள் பலவாகும். அவற்றில், தில்லையில் பேரம்பலத்திற்குச் செப்புத் தகடு வேய்ந்தமை, நூற்றுக்கால் மண்டபமும் சிவகாம கோட் டமும் கட்டுவித்தமை, திருஞான சம்பந்தரது கோயிலுக்குப் பொன் வேய்ந்தமை, திருநந்தவனம் அமைத்தமை சுடலைய மர்ந்தார் கோயிலைக் கற்றளியாக்கியமை, தில்லைப் பேரேரிக்கு மதகு அமைத்தமை ஆகிய செயல்கள் குறிப்பிடத்தக்கனவா கும். அன்றியும், திருவதிகைவீரட்டானேச்சுரர் திருக்கோயிலில் பொன் வேய்ந்தும் காமகோட்டம் எடுப்பித்தும் நூற்றுக்கால்

மண்டபம் கட்டுவித்தும் திருநாவுக்கரசு அடிகளுக்குத் தனிக் கோயிலும் நடராசப் பெருமானுக்கு ஆடரங்கும் வேள்விச் சாலையும் அமைத்தும் தேவதான இறையிலி நிலங்கள் வழங்கியும் இவன் புரிந்துள்ள தொண்டுகள் பல எனலாம். இவன் சைவ சமயத்திற்கு ஆற்றியுள்ள அரும்பணிகளுள் மிகச் சிறந்தது. சமய குரவர் மூவரும் பாடிய தேவாரப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத் தில்லையம்பதியில் சேமித்து வைத்தமையேயாம், இவ்வாறு இவன் புரிந்த தொண்டுகளை யெல்லாம் விளக்கக் கூடிய முப்பத்தாறு வெண்பாக்கள் [- S. I. I., Vol. IV No. 225. பெருந்தொகை, பாடல்கள் 1959-1994] தில்லையம்பதியிலும் இருபத்தைந்து வெண்பாக்கள் [Ins. No. 369 of 1921. பெருந்தொகை, பாடல்கள் 1095-1119.] திருவதிகை வீரட்டானத்திலும் உள்ள கோயில்களில் வரையப் பட்டுள்ளன. இவன் விக்கிர சோழன் ஆட்சியிலும் உயர்நிலையில் இருந்தனன் என்பது விக்கிரம சோழனுலாவினால் நன்கு புலனாகிறது. அரும்பைத் தொள்ளாயிரம் என்னும் நூல் இவன் மேற் பாடப் பெற்றதாகும். [-பிற்காலச் சோழர் சரித்திரம் II. பக்கம். 61, 62, T. V. சதாசிவ பண்டாரத்தார்.]

களப்பாள்ராயர், களப்பாளராயர்! களப்பாள் என்னும் ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட அரசமரபினர். பிற்காலச் சோழர் காலத்தில் நெற்குன்றங்கிழார் களப்பாளராயர் என்னும் பெயரில் ஓர் அரசியல் தலைவன் இருந்துள்ளான்.

நெற்குன்றங்கிழார் களப்பாளராயர் வரலாறு! கருவுணாயகர் என்னும் இயற்பெயரும் அரையர், களப்பாளராயர் என்ற பட்டப்பெயர்களும் உடையவர். நெற்குன்றம் என்னும் ஊரைத் தமக்குரிய காணியாகக் கொண்டமை பற்றி நெற்குன்றங்கிழார் என்று வ்ழங்கப் பெற்றவர். சிறந்த தமிழ்ப் புலமையும் சிவ பக்தியும் வாய்க்கப் பெற்றவர். சோழ நாட்டில் திருப்புகலூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்பால் ஈடுபட்டு திருப்புகலூரந்தாதி பாடிய கவிஞர் இவரே யாவார். இவர் நம்பி காளியார் முதலான புலவர் பெருமக்களை ஆதரித்த பெருங்கொடை

வள்ளலாவார். இவர் கல்வெட்டொன்று திருப்புகலூரில் உள்ளது. [- Ins. No. 96 of 1927 - 28 ]

**கன்னப்பட்டையர்** கன்னப்பட்டையார், கன்னமுடையார், கன்னாண்டார், கன்னப்பிரியர், கன்னாளியார் : கன்னசோழன் மரபினர். கன்னசோழனின் வேறு பெயர்களான கன்னாண்டான், கன்னகொண்டான், கன்னமுடையன், கன்னப்பிரியன், கன்னாளி என்னும் பெயர்களால் இவனது மரபினர் கன்னப்பட்டையர், கன்னப்பட்டையார், கன்னாண்டார், கன்ன கொண்டார், கன்னப்பிரியர், கன்னாளியர் எனவழைக்கப்பட்டார்கள்.

**கன்னசோழன்** இடையெழு வள்ளல்களில் ஒருவனாவான். இவன் கன்னபுரம், கன்றாப்பூர், கன்னாரப்பேட்டை, கன்னான் குளம், கன்னந்தங்குடி [கண்ணந்தங்குடி], கன்னக்கொடையான் என்னும் ஊர்களையும் கன்னனாறு என்னும் ஆற்றையும் உண்டாக்கினான். கன்னனாறு வடுவூர் பெரிய ஏரிக்கு அருகில் ஓடிக் கொண்டிருக்கிறது. [-சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.]

**கன்னதேவர், கன்னரதேவர்** : சோழன் கன்னர தேவனின் மரபினர். கன்னரதேவன் என்பது காலப்போக்கில் கன்ன தேவன் எனத்திரிந்து வழங்கலாயிற்று. கன்னரதேவன் முதல் ஆதித்த சோழனின் இரு புதல்வர்களில் ஒருவனாவான். (S 1. I., Vol V., No. 595, சோழ பெருமானடிகள் மகனார் ஆதித்தன் கன்னரதேவன்.) கன்னர தேவனின் தாய் பெயர் இளங்கோபிச்சி (- E P. Ind., Vol. XXVI, PP. 233 and 234.,) மனைவி பெயர் பூதிமா தேவ அடிகள். இவள் கொடும்பாளூரிலிருந்த குறுநில மன்னன் ஒருவனின் மகளாவாள். [- S. I. I, Vol. VIII, No. 665.] - பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கம்-36, 37, டி. வி. சதாசிவ பண்டாரத்தார்.)

**கண்டர், கவுண்டர்** : சோழ மரபினர், இரண்டாம் இராசராச சோழனின் சிறப்புப் பெயர்களில் கண்டன் என்பதும் ஒன்றாகும். கண்டன். என்பது உயர்சொற்கிளவியாகக் கண்டர் [கவுண்டர்] என வழங்குவதாயிற்று.

"........................ திருக்குலத்துக்
கண்ட னயிரா பதமதங்கால் காலத்துக்
கொண்ட தொருசுவடு மேல்கொண்டு".
- இராசராச சோழனுலா, வரிகள் 512-514.

கன்னகுச்சிராயர் (கன்ன குச்சிராசர்): சோழ மரபினர். பிற்காலச் சோழர்களில் வீரராசேந்திர சோழன் என்பவன் இப் பட்டப் பெயரைச் சிறப்புப் பெயராகக் கொண்டிருந்தான்.

வீரராசேந்திர சோழன் வரலாறு: இராசராசசோழனின் ஆறாம் பெயரன். இராசராசசோழனின் முதல் மகனாகிய இராசேந்திர சோழனால் "சோழகன்னகுச்சியராசன்" என்று முடிசூட்டப் பெற்று "சிறிய பாட்டன், தந்தையர், சகோதரர், புதல்வர்" முதலானவர்களோடு மா றி மாறி திக்கு விசயம் செய்து "ஆகவமல்லன், விக்கலன், சிங்கணன், கேரளன், வீர கேசரி, சாமுண்டராயன், கோசலசிங்கன், கேசவன், தார்க் கெத்தரயன், மாரயன், போத்தரயன், இரேச்சயன், கோதை மூவத்தியன், மதுவணன், மலியண்ணன், மஞ்சிப்பய்யன், பிரம தேவன், அசோகையன், சத்தியண்ணன், விக்கிரகப்பத்தியண் ணன், வீமயன், மாமதிவங்காரன், நாமவேற்கங்கன், நுளம்பன், கடவர்கோன், வைதும்பராயன் பொத்தப்பிவேந்தன், பொத்த வன், தேவநாதன், சித்தி, கேசி, சனநாதன், இராசய்யன், மூதப்பரசன்". முதலியவர்களைப் போரில் வென்று இரட்ட பாடி ஏழரையிலக்கமாகிய "கம்பிலி நகரை" கொளுத்தி துங்க பத்திரிக்கரைக் கரடிக்கல்லில், "சயத்தம்பம்" நட்டு. "பெரு நிதிப் பெருக்கங்கள் பெண்கள், யானைகள், குதிரை கள், ஒட்டகங்கள், கொடிகள், வாத்தியங்கள்" முதலியவற் றைக் கைப்பற்றி சரணடைந்த விசயாதித்தனுக்கு இட்ட பாடி யைக் கொடுத்து, இராசராசசோழன் இரண்டா மகனாகிய இராசாதிராச சோழனால் "கன்னகுச்சிராசன்" என்று முடி சூட்டப் பெற்று அந்நாட்டையாண்டவன்; இவன் பெயர் கன்னகுச்சிராயன், போரிற் கொளுத்தி, போரிற்சுற்றி, திராணி எனவும் வழங்கும். "வீரராசேந்திரப் பெருவிலை" என்னும் ஒருவித "நாணயம்" உண்டு பண்ணினவன்; தன் மனைவி

பெயரால் "சுத்தவல்லி [நீடாமங்கலத்திற்கருகில் தற்போது சித்தமல்லி என்னும் பெயரில் உள்ளது] என்னும் ஊரை உண்டாக்கினான். இவன் கன்னகுச்சிராயன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றிருந்ததைப் பின்வரும் கல்வெட்டு வரிகளும் சான்று பகர்கின்றன.

"செந்தமிழ்ப் பீடிக லிரட்ட பாடி கொண்ட
சோழனைத் தொல்புவி யாளுடைச் சோழ
கன்னகுச் சியராச னென்றும்." (இராசேந்திர சோழன் கல்வெட்டு).

[- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கங்கள் 174, 175.]

கத்தரியர், கத்தூரியர், கஸ்தூரியார், கத்தரிகொண்டார், கத்தூரி கொண்டார், கத்தூரிமுண்டார், கஸ்தூரி முண்டார், கத்தரி நாடர், கத்தரியாளியார் : கத்தரிம சோழனின் மரபினர். கத்தரிம சோழனின் வேறு பெயர்களான கத்தரி கொண்டான், கத்தரி, கத்தரிநாடன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப் பட்டப் பெயர்களைப் [கஸ்தூரி முண்டார், கத்தூரிமுண்டார்] முதலான) பெறுவாராயினர்.

கத்தரிம சோழன் கத்தரி, கத்தரிமங்கலம், கத்தரிகுடி, கத்தரிகாடு, கத்தரிப்புலம், கத்தரிக்கொல்லை என்னும் ஊர்களை உண்டாக்கினான். [-சூரிய குலக் கள்ளர் சரித்திரம்.]

காங்கயர், காங்கயார், காங்கியர், காங்கெயர், காங்கேயர் : காங்கம சோழன் என்றழைக்கப்படும் கிள்ளி வளவனின் மரபினர். காங்கம சோழன் "காலனுக்கிது வழக்கென உரைத் தவன்" ஆவான். [-கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம்-15]

பிற்காலச் சோழர்கள் [விக்கிரம சோழன்] காலத்தில் இராசேந்திர சோழன் காங்கேராயன் என்னும் பெயரில் சிற்றரசன் ஒருவனும் [-Ins. 103 of 1922; Ins. 112 of 1922];

பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் கண்டன் உதயஞ் செய்தான் காங்கேயன் என்னும் பெயரில் அரசியல் அதிகாரி ஒருவனும்.

ஒட்டக்கூத்தர் காலத்தில் புதுவையில் காங்கேயன் [இவன் மீது நாலாயிரக் கோவை பாடப்பட்டது.] என்னும் பெயரில் வள்ளல் ஒருவனும், [- இலக்கிய வரலாறு, பக்கம்-337. கா. சுப்பிரமணியபிள்ளை.]

பதினாலாம் நூற்றாண்டின் இறுதியில் காங்கேயன் என்னும் பெயரில் [உரிச்சொல் நிகண்டு எழுதியவர்] புலவர் ஒருவரும் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. [-இலக்கிய வரலாறு, பக்கம்-364, கா. சு. பிள்ளை].

கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன் வரலாறு: இவன் சுந்தர பாண்டியனுடைய அரசியல் அதிகாரிகளுள் ஒருவன்; தேனாற்றுப் போக்கிலுள்ள நியமம் என்ற ஊரில் பிறந்தவன். [- Ins. 26 of 1926.] சிறு பெருச்சியூர்க் கொடிக் கொண்டான் பெரியான் ஆதிச்சதேவன் என்ற புலவன் பாடிய பிள்ளைத் தமிழ் பெற்றவன். அது காங்கேயன் பிள்ளைத்தமிழ் எனப் படும். அதற்குப் பரிசிலாகக் காத்தனேரி என்ற ஊரில் அப்புல வர்க்கு இவன் இறையிலி நிலம் வழங்கியிருத்தல் குறிப்பிடத் தக்கதாகும் [-Ins. 75 of 1924] [- பாண்டியர் வரலாறு பக்கம் 122]

காசிநாடர், காசிநாடார்: சோழ மரபினர். மாமன்னன் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் கங்கை படையெடுப் பின்போது, கங்கை நதிக்கரையில் காசி என்னும் பகுதியை வெற்றி கொண்டு கங்கையில் நீரை எடுத்தார்கள். தமிழன் கங்கையைக் கொண்டான் என்னும் வீர வரலாற்றிற்குச் சொந் தங் கொண்டாடக் கூடியவர்கள் இவர்களும் இவர்களைச் சார்ந்த பிற கள்ளர்கள் மட்டுமேயாவர்.

காடவராயர், காடுரார்: பல்லவ அரச மரபினர். பல்லவ அரசர்களைக் காடவரென முதன்முதல கத் தமிழ் இலக்கியங் களில் வைத்துப் பாடிச் சிறப்பித்தவர் நம்பியாரூராவார். அச் சான்றோர் மொழிக்குப் பின்னர் பிற்காலப் பல்லவர்கள் தம் மைக் காடவர் என்றும், காடவர் குலத்தார் என்றும் கூறிக் கொண்டார்கள். காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் கல் வெட்டுக்கள், நந்திவன்ம பல்லவ மல்லன் தந்தையான இரணி

வன்மனைக் "காடவேசகுல ஹிரண்ய வன்ம மகாராஜர்" [S. I. I. Vol IV No. 135 A. R. No. 37 of 1888.] என்றும், அவையே நந்திவன் மனைக் குறிக்குங்கால், "காடவகுலம் சிறக்கத் தோன்றிய சத்தியந்த சுபுத்திரன்" என்றும் குறிக்கின்றன. நிருபதுங்கனுடைய கல்வெட்டொன்று [-S. I. I Vol. XII. No. 65] அவன் மனைவியைக் காடவன் மாதேவியார் என்று கூறுகிறது. [சைவ இலக்கிய வரலாறு, பக்கம்-179.]

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான ஐயடிகள் காடவர்கோன் இம்மரபைச் சார்ந்தவராவார்.

ஐயடிகள் காடவர்கோன் வரலாறு: தமிழ்மொழியிலும் வடமொழியிலும் சிறந்த புலவர். மகனிடம் அரசை ஒப்பித்து, சிவத்தளி யாத்திரை செய்து, தலத்துக்கொரு வெண்பாப் பாடினவர் [- Murthi Nayanar Puranam, S. 2-6]. இவர் வடமொழிப் புராணத்தில் சிம்ஹாங்க, பதசிம்ஹா பஞ்சபதசிம்ஹா என்ற பெயர்களை உடையவராகக் காண்கிறார்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் காடவராயர் பட்டப்பெயர்களில் சிற்றரசர்களாகவும் அரசியல் அதிகாரிகளாகவும் இருந்தவர்:

1 ஏழிசை மோகன் ஆட்கொள்ளியான குலோத்துங்க சோழன் காடவாரயன்: திருமுனைப்பாடி நாட்டின் சிற்றரசன் [-Ins. 467 of 1921; S. I. I Vol. VIII. Nos. 319 and 320). இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் [கி. பி. 1136] தென்னார்க்காடு மாவட்டத்தில் திருமாணி குழியைச் சார்ந்த நிலப்பரப்பில் நாடுகாவல் அதிகாரியாக இருந்தவன். இவன் அரசனால் அளிக்கப்பட்ட குலோத்துங்க சோழ காடவராயன், கச்சிராயன் என்னும் பட்டங்களைப் பெற்றவனாவான்.

குலோத்துங்கசோழ காடவராயன் திருநாவலூர், திருவதிகை, விருத்தாசலம் ஆகிய ஊர்களிலுள்ள சிவாலயங்களுக்கு நிவந்தங்கள், அணிகலன்கள் அளித்துச் சிறப்புப் பெற்றவனாவான். (- S. I. I. Vol. VII. No. 1004; Ins. 391 of 1921; S. I. I. Vol. VII No. 150.)

2 கூடலூர் ஆளப்பிறந்தான் மோகன் ஆகிய இராசராச காடவராயன் : இவன் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் நாடுகாவல் அதிகாரியாக இருந்த குலோத்துங்கசோழ காடவராயனின் தமையனாவான். இவன் மலையவிச்சாதிரி நல்லூரிலிருந்து பல வரிகள் மூலம் கிடைத்திட்ட பொருள்கள் அனைத்தையும் கி. பி. 1152-இல் எலவானாசூர்க் கோயிலுக்கு நிவந்தமாக அளித்தான். [Ins. 166. of 1906]

3 கூடலூர் அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரக் காடவராயன் : தென்னார்க்காடு மாவட்டத்தில் கூடலூர் என்ற நகரில் வாழ்ந்தவன். மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் திருமுனைப்பாடி நாடு எனப்படும் நடு நாட்டில் பாடிகாவல் அதிகாரியாய் விளங்கியவன். திருவதிகை, திருவெண்ணெய் நல்லூர், திருமாணி குழி, திருவண்ணாமலை, எலவானாசூர், சித்தலிங்கமடம் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களுக்கு நிவந்தங்களும் அணிகலன்களும் அளித்தவன். [- S. I. I Vol. VII No. 941; Ibid Vol. VIII. No. 121]

4 கூடல் ஏழிசை மோகன் மணவாளப் பெருமாள் வாணிலை கண்ட பெருமாளாகிய இராசராசக் காடவராயன் : இவன் வீரசேகரக் காடவராயனின் மகனாவான். இவன் தன் தந்தைக்குப் பிறகு திருமுனைப்பாடி நாட்டில் நாடு காவல் அதிகாரியாக விளங்கினான். மூன்றாம் குலோத்துங்க சோழன் நிகழ்த்திய போர் ஒன்றில் வாள்கொண்டு பேராண்மையுடன் பொருது பகைவனை வென்று வாகை சூடிய காரணம் பற்றி இவன் அரசனால் வாணிலை கண்ட பெருமாள் என்ற பட்டம் வழங்கிப் பாராட்டப் பெற்றான். மேலும் இவன் அரசனின் மகளையும் மணந்தான் [- S. I. I. Vol. Intro. P-10.]

காடுவெட்டியார் : பல்லவ அரசமரபினர். பல்லவ மன்னர்களுக்கிருந்த சிறப்புப் பெயர்கள் பலவற்றுள் காடுவெட்டி என்பதும் ஒன்றாகும்.

காடுவெட்டியார் பற்றிய குறிப்புகள் பல்லவர் காலத்துச் சாசனங்களிலும் பழைய திருவிளையாடற் புராணத்திலும் காணப்படுகின்றன.

கங்க வேந்தர்களான சீபுருஷன், சிவமாறன் முதலியோர் செப்பேடுகள் [-My. Arch, Reports. 1923. 52 : 3. 1907. P. 3. Kondaji - I. Agrahara Plates ] காஞ்சியைக் காடு வெட்டிகள் ஆண்டனரெனக் குறிக்கின்றன. சத்தியவேடு கல்வெட்டுக்கள் [- A. R. No. 31 & 32 of 1912.] பல்லவர் கீழிருந்த தலைவர்களுள் இருவரைக் காடுவெட்டிப் பேரரையன் என்றும் காடு வெட்டித் தமிழ்ப் பேரரையன் என்றும் கூறுகின்றன. நிருபதுங்கனுடைய பாகூர்ச் செப்பேடுகள், ஒரு தலைவனை, "விடேல் விடுகு காடுபட்டி தமிழ்ப் பேரரையன்" [- EP. Indi. Vol. XVIII. P. 11] என்று செப்புகின்றன. காடு வெட்டி யெனவரும் குறிப்புக்களுள் மிகப் பழமையானது. சிரகுண்டா கல்வெட்டிற் காணப்படுவதாகும். [EP. Car. Vol. VI. C. M. 50]. [சைவ இலக்கிய வரலாறு பக்கம், 180.]

பழைய திருவிளையாடற் புராணத்தில் காடுவெட்டியாரின் மூதாதை ஒருவனைப் பற்றிக் காணப்படும் வரலாறு : சிவ பக்தியில் மேம்பட்டவனும் மிக்க புகழ் வாய்ந்தோனும் ஆகிய காடுவெட்டியென்னும் ஓர் தலைவன் மதுரையிற் சொக்கலிங்கப் பெருமானைப் பணிதற்குச் சென்று வையை யாற்றின் வடகரையை அடந்தான். அப்பொழுது பாண்டியன் நாற்புரத்து மதிற்கதவையும், சாத்தித்தன் முத்திரையிட்டு, அவனுடன் பண்டயெடுக்க முயன்றான். வையையும் பெருகிவிட்டது. இந் நிலைமையில் சிவபிரானானவர் காடு வெட்டியின் அன்புக்கு இரங்கி, நள்ளிரவில் வடக்கு மதில் வாயிலை முரித்துவந்து, ஓர் இயந்திரத்தால் அவனை யாற்றின் தென்கரையில் ஏற்றுவித்து, மதில் இடித்த வழியாகக் கொண்டு சென்று, இருளை வெளிதாக்கி, அவனுக்குச் சோதி விமானத்தையும், தமது ஒப்பற்ற திருவுருவத்தையும் காட்டியருள, அவனும் கண்டு போற்றி மனமுருகி நின்றான். நின்றவன் பின் பெருமானது கட்டளையால் விடியுமுன்னே மதுரையை விட்டுப்போய் விட, ஆலவாயடிகளாரும் மதிலைப் புதுப்பித்துத் தமது இடபவிலச்சினை யிட்டுப் பாண்டியனுக்குக் கனவில் அறிவித்தருளினார். [- கள்ளர் சரித்திரம், பக்கம். 27.]

பிற்காலச் சோழர்கள் காலத்திலிருந்த காடுவெட்டியாரின் மூதாதை ஒருவனின் வரலாறு: இரண்டாம் இராசராச சோழன் காலத்தில் இராசேந்திர சோழ வல்லவராதித்த காடுவெட்டி என்பான் ஒருவன் கங்க நாட்டில் சோழனின் அரசப் பிரதிநிதி யாக இருந்தானெனக் கருநாடக மாநிலம், கோலார் மாவட்டத் திலுள்ள தூரூர் மலைக் கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது [- பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி II, பக்கம்- 120.]

காரைக்காச்சியார், காரையாட்சியார்: கார்சோழன் மரபினர். கார்சோழனின் வேறு பெயரான காரையாட்சி என்னும் பெயரால் இவனது மரபினர் காரைக்காச்சியார் [காரையாட்சி யர்] என வழைக்கப்பட்டார்கள். கார் சோழன் காரைக் கோட்டை [காரக்கோட்டை], காரை வாயில் [காராயில்], காரைமேடு [கழிப்பாலை], காரைக் காடு, காரைக்கால், காரை யூர், காரைப்பாக்கம் என்னும் ஊர்களை உண்டாக்கியவனா வான் [- சூரியகுலக்கள்ளர் சரித்திரம்.]

காளி, காளியார், காளிராயர்: தமிழர் தெய்வங்களுள் ஒன்றான வெற்றி தேவதை காளியின் மரபினர். காளி என்பதற்கு இறவாதவள் அல்லது என்றும் இளமையாக இருப் பவள் என்பது பொருளாகும். கடல் கொண்ட தென்னகமான குமரிக்கண்டம் காளியின் மறுபெயரான குமரி என்னும் பெய ரால் அமைந்திருந்த தென மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவ நேய பாவாணர் அவர்கள் உரைப்பார் [-பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும், பக்கம்-16, 17.]

காளிக்கட், கல்கத்தா என்னும் ஊர்களின் பெயர்கள் காளி என்னும் பெயரின் அடிப்படையில் தோன்றியதாகும்.

காலாடியார், காலாக்குடியர், காலாக்குடியார் காவலகுடியர், காவலகுடியார், காவலியார், காவாடியார், காவளியார், காவாலர் ளியார்: காவலசோழனின் மரபினர். காவல சோழனின் வேறு பெயர்களான காவலகுடியன், காவாளி என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். காவலசோழன் காவலகுடி, காலம் (கைச்சினம்), காவளூர் (காவலூர்), காவனூர் என்னும் ஊர்களை உண்டாக்கினான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.)

காவிரிவெட்டி, காவிரிவெட்டியார், காவெட்டி, காவெட்டார், காக்காவெட்டி : மாமன்னன் பஞ்சநதி சோழனின் மரபினர். பஞ்சநதிசோழன் காவிரி, கபிலை, பவானி, நொய்யல், ஆன்பொருனை என்னும் ஐந்தாற்றையும் ஒன்றிணைத்துப் பொன்னி என்று பெயரிட்டு அதனைப் புகார்ப்பட்டினத்தில் கடலிற் கலக்கச் செய்தான். [- கலிங்கத்துப் பரணி, இராசபாரம் பரியம்]. பஞ்சநதி சோழனின் வேறு பெயரான காவிரிவெட்டி சோழன் என்னும் பெயரால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

பஞ்சநதிசோழன் காலமுதலே சோழநாட்டுக்குக் காவிரி நாடு, பொன்னிநாடு, புனனாடு என்னும் பெயர்களும் காவிரியின் வடமுறமுள்ள சோழ நாட்டுக்கு வடகரைநாடு என்னும் பெயரும், காவிரியின் தென்புறமுள்ள சோழ நாட்டுக்குத் தென்கரைநாடு என்னும் பெயரும், சோழர்களுக்குக் காவிரிநாடன், பொன்னி நாடன், பொன்னித்துறைவன், புனனாடன் என்னும் பெயர்களும் வழங்கலாயிற்று.

கிளிகண்டார், கிள்ளியண்டார், கிள்ளிராயர், கிள்ளியார், கிள்ளிகண்டார், கிள்ளி கொண்டார், கிள்ளியாளியர், கிளியிநார் : கிள்ளி சோழனின் மரபினர். கிள்ளி சோழனின் வேறு பெயர்களான கிள்ளிராயன், கிள்ளி கொண்டான், கிள்ளியாண்டான், கிள்ளிப் பிரியன், கிள்ளியாளி என்னும் பெயர்களால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்).

சோழர்கள் நிலத்தைக் கிள்ளி உழுதமையால் கிள்ளி எனப் பெயர் பெற்றார்கள்.

சோழ மன்னர்களில் கிள்ளியென்னும் பெயரைப் பெற்றிருந்தவர்கள் 1. சோழன் இராயசூயம்வேட்ட பெருநற்கிள்ளி; 2. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்; 3. சோழன் நலங்கிள்ளி; 4. சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி 5. சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி; 6. சோழன் நெடுங்கிள்ளி; 7. சோழன் நெடுமுடிக்கிள்ளி ஆகியோர் கிள்ளியென்னும் பட்டப்பெயரைப் பெற்றிருந்த சோழ மன்னர்

களாவார்கள். இவர்களின் வரலாற்றைப் புறநானூறு என்னும் பழந்தமிழ் இலக்கியத்தில் நிரம்பக் காணலாம்.

கீரங்கொண்டார், கீரமுடையார், கீரரையர், கீரையர். கீருடையர், கீருடையார், கீரைக்கட்டையர், கீரைக்கட்டையார், கீழுடையர், கீழுடையர், கீழுடையார், கீவுடையார் : கீரம சோழனின் மரபினர். கீரம சோழனின் மரபினர். கீரம சோழனின் வேறு பெயர்களான கீரமுடையன், கீரையன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். கீரமசோழன் கீர நகரம் கீரமங்கலம், கீரங்குடி, கீரனூர் என்னும் ஊர்களை உண்டாக்கினான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.]

குங்கிலியர் : சோழ மரபினர். அறுபத்துமூன்று நாயன்மார் களில் குங்குலியக் கலயர் என்னும் நாயன்மார் ஒருவர் இருந் தார். குங்குலியர் என்பது காலப்போக்கில் குங்கிலியர் எனத் திரிந்து வழங்கியிருக்கலாம். குங்குலியக்கலயர் தாலியை விற்றுக்குங்கிலியப் பணியைச் செய்தவராவார். [- பெரிய புராண ஆராய்ச்சி, மா. இராச மாணிக்கனார்].

குடிகொண்டார், குடிக்கமுண்டார், குடியாளர், குடிபாலர் கொடிக்கமுண்டார், கொடி கொண்டார், கொடிக்கவிராயர் கொடி யாளர், கொடிபாலர் : சோழ மரபினர். மாமன்னன் முதலாம் இராசேந்திரசோழன் இப்பட்டப்பெயர்களைச் [கொடி கொண் டான், கொடிராயன், கொடியாளன் ஆகியவற்றை] சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தானெனக் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன. (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.]

குருகுலராயர் : சோழ மரபினர். குருகுலத்தரையர் என்பது காலப் போக்கில் குருகுலராயர் என வழங்கப்படலாயிற்று. சோழன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன் என்னும் இவர்களின் முதாதை ஒருவன் சுந்தரபாண்டியனின் அமைச்ச னாக இருந்தான்.

சோழன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன் வர லாறு:இவன் சுந்தரபாண்டியனிடத்தில் அமைச்சனாக விளங்கிய பெருமையுடையவன்;தடங்கண்ணிச் சிற்றூரில் பிறந்து வளர்ந் தவன்; இராமநாதபுரம் மாவட்டத்தில் திருத்தாங்கலிலுள்ள

திருமால் கோயிலையும் சிவன் கோயிலையும் கி பி. 1232-இல் கற்றளியாக எடுப்பித்தவன் [- Ins. 75 of 1924] அன்றியும் திருமால் கோயிலில் சுந்தரபாண்டியன் சந்தி என்ற வழிபாடு நாள்தோறும் நடைபெறும் பொருட்டு இவன் தென்னவன் சிற்றூறு என்ற ஊர் ஒன்றை இறையிலியாக அளித்திருத்தல் அறியத்தக்கது. இவன் அரசனால் வழங்கப்பெற்ற குருகுலத் தரையன் என்னும் பட்டம் பெற்றவனாவான். [- பாண்டியர் வரலாறு, பக்கம்-122, T. V. சதாசிவபண்டாரத்தார்.]

குமரண்டார், குமராண்டார், குமாராண்டார், குமறண்டார், குமரையாண்டார், குமரையண்டார், குமரர், குமரநாடர் : குமரிக் கண்டத்தை ஆண்டவர்தம் மரபினர்.

குமரிக்கண்ட வரலாறு: குமரிக்கண்டத்திற்கு இலெமூரியா கண்டம் என்று ஒரு பெயரும் உளது.குமரிக் கண்டம் அல்லது இலெமூரியா கண்டம் என்பது இந்தியாவின் தென்கோடிப் பகுதியிலுள்ள கன்னியாகுமரியை ஒட்டித் தென்பகுதியிலிருந்த ஒரு பெரிய நிலப்பரப்பாகும். இது கிழக்கில் சப்பான் முதல் மேற்கில் மடகாஸ்கர் வரையில் பரவியிருந்தது. இது ஏழ் தெங்க நாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ்முன்பாலை நாடு, ஏழ் பின் பாலை நாடு, ஏழ் குன்ற நாடு, ஏழ் குணகரை நாடு, ஏழ் குறும் பனை நாடு என்னும் 49 நாடுகளையும் பஃறுளி,குமரி என்னும் ஆறுகளையும், குமரி என்னும் மலையையும் கொண்டிருந்தது. உலகெங்கும் பரவியுள்ள மனிதர்களின் முதல்முதாதை இந்த நிலப் பரப்பிலிருந்தே தோன்றினானென உயிரியல் வல்லுநர்கள் உரைக்கின்றார்கள்.

குமரண்டார் பட்டப் பெயருடை யோரைக் குமாரசோழ னின் மரபினர் என்பார் எம்.சுவாமிநாத மாதவராயர் அவர்கள். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்].

குமரர் பட்டப் பெயருடையோரைக் குமரக் கடவுளின் [முருகன்] மரபினர் என்கின்றனர் சில அறிஞர் பெருமக்கள்.

'குமரன்' என்பதற்குப் பொருள் கூற வந்த மொழி நூல் முதறிஞர் ஞா. தேநேய பாவாணர் அவர்கள் "திரண்ட இளை

ஞன், இளைஞனான முருகன்". என்கிறார். [-பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும், பக்கம்-17.]

குருக் கொண்டார், குறுக்கண்டார், குறுக்காண்டார், குறுக் கொண்டார்; குறுக்கையர், குறுக்கையாண்டார் : முதலாம் இரா சேந்திரசோழன் காலத்தில் கங்கை படையெடுப்பின் போது கங்கை நதிதீரத்தில் குரு என்னும் நாட்டை வெற்றிக்கொண்டு கங்கையில் நீரை எடுத்த வீரர்களின் மரபினர். தமிழன் கங்கையைக் கொண்ட வீர வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள். குருக்கொண்டார் என்பது காலப்போக்கில் குறுக்கொண்டார், குறுக்கொண்டார் என வழங்கப்படலாயிற்று.

குருசார், கூர்சார் : சோழ மரபினர். பிற்காலச் சோழர்கள் காலத்தில் வட நாட்டில் கூர்ச்சரம் என்னும் பகுதியை வெற்றி கொண்டு சோழனின் பிரதிநிதியாக இருந்து ஆண்டவர்கள் தம் மரபினர்.

கூடலர் : பாண்டிய மரபினர். மதுரைக்குக் கூடல் என்று ஒரு பெயர் உள்ளது. இவர்கள் கூடல் நகரைத் தலைமையிட மாகக் கொண்டு ஆண்டதால் கூடலர் எனப்பட்டிருக்கலாம்.

கூராயர், கூராட்சியர், கூராட்சியார், கூராண்டார், கூரப் பிரியர், கூராளியார், கூரராயர், கூரையர் கூரையார் : கூர சோழனின் மரபினர். கூர சோழனின் வேறு பெயர்களான கூர ராயன், கூராண்டான், கூராட்சி, கூரப்பிரியன், கூராணி என்னும் பெயர்களால் இவர்கள் இப்பட்டப்பெயர்களைப் பெறுவாரா யினர். கூர சோழன் கூப்பாச்சிக்கோட்டை, கூகூர் என்னும் ஊர்களையும் கோரையாறு [கூரயாறு] என்னும் ஆற்றையும் உண்டாக்கினான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.)

கைராயர் : மருங்கம சோழனின் மரபினர். மருங்கமசோழ னின் வேறு பெயரான மருங்கராயன் என்னும் பெயரால் இவனது மரபினர் மருங்கைராயர் - கைராயர் எனவழைக்கப் பட்டார்கள். [-சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.]

கொங்கணர் : கொண்கான நாட்டை [கொங்கண நாடு] வெற்றி கொண்டு ஆண்டவர்கள்தம் மரபினர். கொண்கானர்

என்பது காலப்போக்கில் கொங்கணர் எனத் திரிந்து வழங்கப் படலாயிற்று.

கொண்கானம் என்பது சேலம், கோயமுத்தூர் மாநாடு களின் கீழ்ப்பகுதி நாடாகும் இந்நாட்டில் கொண்கானங் கிழான் என்னும் பெயரில் வள்ளல் ஒருவன் இருந்தான். இந் நாடு பொன் வளம் சிறந்தது. இதனால் இதனைப் "பொன்படு கொண்கானம்" [- நற்றிணை-391] என்று சான்றோர் பாராட் டியுள்ளனர் மேனாட்டு ஆராய்ச்சியாளர் இப்பகுதியைக் கண்ணுற்று," ஒரு காலத்திற் பொன் வளஞ்சிறந்திருந்து இப் போது குறைந்து போயிற்றென்று கூறியுள்ளார் [Vide Asiatic Nations Bohm edm, Vol. II., P-32., Indian Antiquary, August, 1884.] [- புறநானூறு, 1-200 பாட்டுக்கள், மூலமும் உரையும். பக்கம்-325, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை.]

கொங்குராயர் குமரிப் பகுதியை ஒரு காலத்தில் ஆண்ட கொங்கர் என்ற சிற்றரசனின் மரபினர். குமரி ஒரு காலத்தில் இச்சிற்றரசனின் ஆளுகையின் கீழ் இருந்தமையால் "கொங்கு தண்குமரி" என்றழைக்கப்படலாயிற்று. நாகர் கோயிலில் உள்ள திருக்கோயிலில் இவனது நினைவைப் போற்றும் வகையில் 'கொங்கன் விழா' என்னும் பெயரில் ஒரு விழா இற்றை நாளிலும் எடுக்கப்படுகிறது. [- சைவ இலக்கிய வரலாறு, பக்கம்-161].

கொடும்பர், கொடும்புரார், கொடும்பையர், கொடும்பராயர், கொடும்பைராயர், கொடும்பையரையர், கொடும்புராயர், கொடும்பா ளூர்ராயர், கொடுமளூர்ராயர், கொடும்பைப்பிரியர், கொடும்பப்பிரியர்: சோழ மண்டலத்திற்கும் பாண்டி மண்டலத்திற்கும் இடையி லுள்ள கொடும்பாளூர் என்னும் பகுதியை ஆண்ட ஒரு சிற்றர சனின் மரபினர். கொடும்பாளூர் அரையர் [கொடும்பாளூர் அரசர்] என்னும் பட்டப்பெயர் காலப் போக்கில் கொடும்புரார் கொடும்புரார், கொடும்பையர், கொடும்பராயர், கொடும் பைராயர், கொடும்பையரையர், கொடும்புராயர், கொடும்பா ளூர்ராயர், கொடுமளூர்ராயர் எனத்திரிந்து வழங்குவதாயிற்று.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான இடங்கழி நாயனார் இம்மரபைச் சார்ந்தவராவார்.

கோட்டைராயர், கோட்டரையர், கோட்டைப்பிரியர், கோட்டையாண்டார், கொட்டையாண்டார், கொட்டையுண்டார், கோட்டைகொண்டார்: கோட்டம சோழனின் மரபினர். கோட்டம சோழனின் வேறு பெயர்களான கோட்டைராயன், கோட்டரையன், கோட்டைப்பிரியன், கோட்டையாண்டான், கோட்டை கொண்டார் என்னும் பெயர்களால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்].

கொற்றங்கொண்டார், கொற்றப்பராயர், கொத்தப்பராயர், கொத்தப்பிரியர், கொற்றப்பிரார், கொற்றபிரியர், கொற்றப்பிரியர், கொற்ற மாண்டார், கொத்தமண்டார்,கொற்றரையர், கொற்றாண்டார், கொற்றாளர், கொற்றாளியார், கொற்றாட்சியார்: கொற்றமசோழனின் மரபினர். கொற்றமசோழனின் வேறு பெயர்களான கொற்றங்கொண்டான், கொற்றப்பிரியன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப்பெயர்களைப் பெறுவாராயினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்].

கொல்லத்தரையர்,கொல்லமுண்டார்:சேர நாட்டில் கொல்லம் என்னும் பகுதியைப் பிற்காலச் சோழர்கள் காலத்தில் வென்றவர் தம் மரபினர். இராசமகேந்திரசோழன் கொல்லத்தரையன் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றிருந்தானெனக் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன.

குழந்தைராயர், கொழுந்தராயர்: குழந்தைராய சோழனின் மரபினர்.

கொண்டையர், கொன்டையர், கொன்றையர்: சோழ மரபினர் குண்டையூர், குண்டூர், குண்டாகோயில், குண்ணூர், குண்ணனூர், குண்ணூவாரந்தி என்னும் ஊர்கள் இவர்களின் மூதாதைகுண்டையன் என்பவனால் உண்டாக்கப்பட்டதாகும். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-101.]

கோதண்டப்பிரியர்: சோழ மரபினர். போர்க்களத்தில் கோதண்டம் என்னும் ஆயுதத்தை ஏந்தி போர்செய்த வீரர்கள் தம் மரபினர். இதிகாச நாயகன் இராமன் கோதண்டம்

எனும் ஆயுதத்தைக் கொண்டிருந்ததால் கோதண்டபாணி என்றும், கோதண்டராமன் என்றும் பெயர் பெற்றான். [கோதண்டம் - இராமன்வில், கழக அகராதி, பக்கம்-404 ]

கோனேரிராயர், கோனேரிகொண்டார், கோனேரியாண்டார், கோனேரிப்பிரியர், கோனேரியாளியர் சோழ மரபினர். கோனேரின்மை கொண்ட சோழன் இப்பட்டப் பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தானெனக் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன.

கோனேரின்மை கொண்ட சோழன் போர்க்களம் புகுந்து பல வெற்றிகளை ஈட்டியதுடன் கூட கோனேரி என்னும் தெய்வத்தன்மை பொருந்திய ஏரியையும், கோனேரிராயன் என்று எழுதப்பெற்ற நாணயத்தையும் உண்டாக்கினான். முல்லை நில மக்களுக்குக் கோன் என்ற பட்டத்தை கொடுத்ததும் கண்மாளற்கு இரட்டை சங்கு ஊதவும் பேரிகை கொட்டுவித்துக் கொள்ளவும்,பாதரட்டை அணிந்து கொள்ளவும் வீடுகளுக்குச் சாந்து பூசவும் கட்டளையளித்ததும் இவனேயாவான். "கோனேரின்மை கொண்டான் வெங்கால நாட்டு கண்மாளற்கு 15-வது ஆடி முதல் இரட்டைச் சங்கு ஊதவும், பேரிகை கொட்டுவித்துக் கொள்ளவும், பாதரட்சை அணிந்து கொள்ளவும் வீடுகளுக்குச் சாந்து பூசவும் கல்லில் வெட்டிக் கொள்ளவும்" - கல்வெட்டு.

"கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனை"
- குலசேகராழ்வார் திருமொழிப் பிரபந்தம்.

கோபாலர் : கோவிராசகேசரி இராசராச சோழனின் மரபினர். இராசராசசோழன் கிழக்கே கடலையும் தெற்கே [வெள்ளாற்றின் தென்பாலுள்ள] திருமய்யமலையையும், மேற்கே கருவூர்க்கோட்டைக் கரையையும் வடக்கே பெண்ணையாற்றையும் எல்லைகளாகக் கொண்ட இருபத்து நான்கு காதத்துக்குத் தம் தந்தையால் முடிசூட்டப் பெற்றவனாவான்.

"கடல் கிழக்குத் தெற்குக் கரை புரளும் வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் - வடதிசையில்
ஏனாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கொல்லையெனச் சொல்".

- தனிப் பாடல்.

இவன் முல்லைநில மக்கள் மரபில் வந்த உலகுடைய முக்கோக்கிழானடிகள் என்னும் பெண்ணரசியை மணஞ் செய்து கொண்டு அவன் சுற்றத்தாருக்குக் கள்ளிரிடையர் என்னும் பட்டத்தைக் கொடுத்தான்.

கோப்புலி, கோப்புலியார், கோப்புலிங்கம், கோட்புலியார் : கோட்புலி நாயனார் மரபினர் காலப்போக்கில் கோப்புலியென அழைக்கப்பட்டிருக்கலாம்.

கோட்புலிநாயனார் வரலாறு : இவர் சுந்தரர் காலத்தவர் [கி. பி. 840 - 865]; நாட்டியத்தான் குடிப்பதியினர்; சோழர் சேனைத்தலைவர்; சிங்கடி, வனப்பகை என்னும் இரு பெண் மக்களைப் பெற்றவர்; அரசன் ஏவலால் பகைவர் மீது படையெடுத்துச் சென்று பகைப் புலத்தில் தம் கடமையைச் செய்து அரசன் பால் பரிசுபெற்று மீண்டவர். இவரது பெண்மக்கள் இருவரையும் சுந்தரர் தம் மக்களாக ஏற்றுக் கொண்டார். [- பெரியபுராண ஆராய்ச்சி, பக்கங்கள் 241, 242.]

கோழயர் [கோழியர்] : விவராதித்த சோழனின் மரபினர். விவராதித்த சோழனின் வேறு பெயரான கோழியன் என்னும் பெயரால் இவனது மரபினர் கோழயன்-கோழயர் [உயர் சொற்கிளவியாக] எனவழைக்கப்படுகிறார்கள்,

விவராதித்த சோழன் வரலாறு : இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். இவன் திருவுலாப் போகும் போது ஏறியிருந்த யானையை, தெய்வத்தன்மை பொருந்திய ஒரு கோழி போர் செய்து வென்ற காரணத்தினால் இவனுக்குக் "கோழியன், கோழியர்கோன், கோழிவேந்தன்" என்னும் பெயர்களும், அந்நகருக்கு "கோழியூர், கோழிநகர்" என்னும் பெயர்களும் வழங்கலாயிற்று. இவன் காலமுதல் சோழர்களுக்கு "கோழியன், கோழிவேந்தன், கோழியர்கோ" என்னும் பெயர்கள் வழங்கின; இவன் "கோழியின்" உருவம் பொறிக்கப்பெற்ற நாணயங்கள் வழங்கச் செய்தான்; அக்காலமுதல் சோழராளுகையுள்ளவரையில் "கோழியின்" உருவம் பொறிக்கப்பெற்ற நாணயங்களே வழங்கின ; இக்காலத்திலும் பூமியிற்கிடந்தகப்படும் பழைய செப்பு நாணயங்

களில் "கோழியின்" உருவத்தைக் காணலாம். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-114].

பிற்காலச் சோழ மன்னர்களில் கண்டராதித்த சோழன் கோழிவேந்தன் என்றழைக்கப்பட்டது ஒரு பாடல்மூலம் தெரிய வருகிறது.

"சீரான் மல்குதில்லைச் செம்பொனம் புலத்தாடி தன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர்கோன் கலந்த
ஆரா வின்சொற் கண்டராதித்தன் அருந்தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமை யோடும் பேரின்பம் எய்துவரே!"

[- கண்டராதித்தர் திருவிசைப்பா, கோயிற் பதிகம் பா-10.]

கோறர் [கோசர்] : சங்க காலத்தில் வாழ்ந்த கோசர் என்னும் அரச மரபினர். கோசர் என்பது காலப்போக்கில் கோறர் எனத் திரிந்து வழங்கலாயிற்று.

கோசர் வாய்மைக்கும் நாணயத்திற்கும் பேர்போனவர் களாவார்கள்.

"வாய்மொழி நிலைஇய சேண் விளங்கு நல்லிசை
வீளங்கெழு கோசர்" - அகநானூறு 205. வரிகள் 8, 9.

"தொன்மு தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி" - குறுந்தொகை, வரிகள் 2, 3.

கோசர் வீரத்திற்கும் அஞ்சா நெஞ்சத்திற்கும் பேர்போன வர்கள்.

"பெருங்கடலொ ழுழக்கிற் றாகி; யாணர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கடுங்கண் கோசர் ........."- அகநானூறு ?0, வரிகள் 10, 12.

"பல்வேல் கோசர்" - அகநானூறு 113, வரி 5.

"பெய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும்பெயர் மாறன் தலைவனாகக்
கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்"
- மதுரைக்காஞ்சி, வரிகள் 771, 773.

பெண்கொலைப் புரிந்த நன்னனை நாட்டை விட்டுத் துரத்தியது இவர்களே யாவர்.

"..................................... நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
ஒன்று மொழிக் கோசர்" - குறுந்தொகை 73, வரிகள் 2-5.

**சக்கரர், சக்கரை, சர்க்கரை, சக்கரையர், சாக்கரையர், சக்கராயர், சக்காநாடார், சக்கரநாட்டார், சக்கரையப்ப நாடாள்வார்:** நாக அரச மரபினர். மத்திய பிரதேசத்திலுள்ள சக்கர கோட்டகம் என்னும் பகுதியை ஆண்டதால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [- பிற்காலச் சோழர் சரித்திரம், I பாகம், பக்கங்கள் 169, 170 ]

**சங்கரதேவர் :** முதல் இராசராச சோழன் காலத்தில் வாழ்ந்த திருவையன் சங்கரதேவன் என்னும் குறுநில மன்னனின் மரபினர். சங்கரதேவன் வட-ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவல்லத்தில் திருவையேச்சுரம் என்னும் கோயில் ஒன்றை எடுப்பித்து அதற்கு அர்ச்சனா போகமாக நிவந்தம் அளித்தான். [- S. I. I. Vol. III No. 51].

**சங்கர தேவன் அறச்சாலை :** விக்கிரமசோழன் காலத்தில் சங்கரதேவன் பெயரில் அறச்சாலை ஒன்று இருந்ததாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. [- Ins, Nos. 158 of 1925 and 71 of 1926.] [- பிற்காலச் சோழர் சரித்திரம்].

**சங்கரர், சங்கரராசர் :** சங்கர சோழனின் மரபினர். பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் சங்கர சோழன் [இரண்டாம் இராசாதிராசன்] மீது பாடப்பட்ட உலாவின் பெயர் சங்கரசோழன் உலா எனப்படும். [-இலக்கிய வரலாறு பாகம்II பக்கம்- 345. கா. சுப்பிரமணிய பிள்ளை].

சமயர், சமையர், சமயாளியார், சமயாட்சியார், சமட்டியார், சம்பட்டியார், சவுட்டியார், சவுளியார் : சமய சோழனின் மரபினர். சமய சோழனின் வேறு பெயர்களான சமயன், சமய தேவன், சமயாளி என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்].

சந்திரங்கொண்டார், சந்திரதேவர், சந்திரப்பிரியர், சந்திரத் தேவர் : சந்திரசோழனின் மரபினர். சந்திரசோழனின் வேறு பெயர்களான சந்திரதேவன், சந்திரங்கொண்டான், சந்திரப் பிரியன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [ சூரியகுலக் கள்ளர் சரித் திரம்]

சாதகர், சாத்தயர், சாத்தரையர், சாமுத்தரையர், சாமுத்திரியர் சாமுத்திரையர் : சாத்தமசோழன் மரபினர். சாத்தம சோழனின் வேறு பெயர்களான சாத்தையன், சாத்தரையன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.]

சாளுவர், சாளுவராயர் சாளுவசோழன் மரபினர். சாளுவ சோழனின் வேறு பெயர்களான சாளுவராயன், சாளுவன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர் களைப் பெறுவாராயினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம் ]

விசயநகர அரசர்களில் மல்லிகார்ச்சுனராயர், விருபாட்ச ராயர் என்பவர்களின் காலத்தில், தென்னாட்டில் அவர்களின் பிரதி நிதியாக சாளுவர் திருமலைராயர் என்பார் ஒருவர் இருந் தாரென சீரங்கத்தில் கிடைத்த சிலாசாசனம் குறிப்பிடுகிறது. [- இலக்கிய வரலாறு. பாகம் II, பக்கம்-369, கா. சு பிள்ளை].

சிங்கநாடர், சிங்காரியர் சிங்கப்பிலியர், சிங்கப்பீலியர், சிங்கப் புலியர், சிங்காரிக்கர், சிங்களர், சிங்களார் சிங்களராயர், சிங்களப் பிரியர், சிங்களாந்தகர், சிங்களேந்தியார், சிங்களாளியார், சிங்காரி யர், சிங்காரிக்கர். சோழவயோத்தியராசர் : பராந்தக சோழனின் மரபினர். பராந்தக சோழனின் சிறப்புப் பெயர்களான சிங்கள

ராயன், சிங்களப்பிரியன், சிங்களாளி, சோழவயோத்திய ராசன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

> ........................................................ "தோள்வலி
> மேவிகல் பராந்தக தேவனைச் சோழ
> வயோத்திய ராச னென்றும்."
>
> - இரசேந்திர சோழன் கல்வெட்டு.

இவர்களைக் கலிங்க சோழ அரசன் விசயனின் மரபினர் என்று உரைப்பாரும் உளர்.

சிங்களம் பெயர்க்காரணம்: கலிங்க நாட்டைச் சேர்ந்த சிங்க வமிசத்தவனாகிய தமிழ் மன்னன் இலங்கையை ஆளத் தொடங்குமுன் அந்நாட்டிற்கு எல்லம் என்பதே பெயராகும் சிங்கவம்சத்து அரசன் அதனை ஆளத் தொடங்கிய பின்னர், சிங்கவம்சம் என்னும் சொலில் உள்ள சிங்கம் என்னும் அடிச் சொல்லும் எல்லம் என்னும் சொல்லும் இணைந்து சிங்க எல்லம் - சிங்கலம், சிங்களம் ஆயிற்று.

சிட்டாட்சியார், சித்தாட்சியார், சிற்றாட்சியார் : சித்த சோழன் மரபினர். சித்த சோழனின் வேறு பெயரான சித்தாட்சி என்னும் பெயரால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [-சூரியகுலக்கள்ளர் சரித்திரம், பக்கம்-112].

சிந்துராயர்: சேந்தசோழன் மரபினர். சேந்த சோழனின் வேறு பெயரான சேந்தராயன் என்னும் பெயரால் இவனது மரபினர் இப்பட்டப் பெயரைப் பெறுவாராயினர்.

சேந்தசோழன் அழிசிசோழனின் மகனாவான். இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவனாவான்.

> "ஏந்துக் கோட்டியானைச் சேந்தனுறந்தை"
>
> - குறுந்தொகை-258.

சிலம்பர், சிலுப்பர், சிலுப்பியர், சிலுப்பியார், சிறுகியர், சிலுக்கியர், சிறுநாடர், சிறு நாட்டுராயர், சிறு மடார், சிறு மாடார், செருமடார் : சிறுகிள்ளிசோழனின் மரபினர். சிறுகிள்ளி சோழனின் வேறு பெயர்களான "சிறுராயன், சிறுநாடன்,

சிறுப்பிரியன் என்னும் பெயர்களால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.[-சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-127.]

**சீனத்தரையர் :** சோழ மரபினர். கடாரங்கொண்ட சோழனான இராசேந்திரசோழனின் சிறப்புப் பெயர்கள் பலவற்றுள் சீனத்தரையன் என்பதும் ஒன்றாகும். [-சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-171.]

மூன்றாம் இராசராசசோழன் காலத்தில் வீரகங்கநாடாழ்வான் சீனத்தரையன் என்னும் பெயரில் படைத்தலைவன் ஒருவன் இருந்தானெனப் பிற்காலச்சோழர் வரலாறு குறிப்பிடுகிறது. [- பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம் II பக்கம் 194.]

**சுக்கிரர், சுக்கிரராயர், சுக்கிரபராயர், சுக்கிரியராயர், சொக்கராயர் :** சொக்கசோழனின் மரபினர். சொக்கசோழனின் வேறு பெயரான சொக்கராயன் என்னும் பெயரால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.]

**சுந்தர், சுந்தரராயர், சுண்டையர், சுன்றையர் :** புகழ்முடி கொண்ட சோழனின் மரபினர்.புகழ்முடி கொண்ட சோழனின் வேறு பெயரான சுந்தரராயன் என்னும் பெயரால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [-.சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்–174].

**சுரக்குடியார், சுரக்குடையர், சூரக்குடையர், சூரக்கொடையர், சுரப்பிடுங்கியார், சுரைப்பிடுங்கியார், சூரக்கோட்டையர், சூரக்கோட்டையார், சுரப்பிரியர், சூரப்பிலியர் :** சூரவாதித்த சோழனின் மரபினர். சூரவாதித்த சோழனின் வேறு பெயர்களான சூரக்கோட்டையன், சூரங்கொண்டான், சூரமாண்டான், சூரப்பிரியன், சூரமுடையன், சூரமாளி என்னும் பெயர்களால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-135.]

**சூரவாதித்த சோழன் வரலாறு :** சூரவாதித்த சோழன் நாகர் குலமகளை மணந்தவன். நாகருலகஞ் சென்று நாகர்

கன்னியாகிய காந்திமதியை மணந்து அங்கிருந்து வெற்றிலைக் கொடியைச் சோழநாட்டிற்குக் கொண்டு வந்தான். [-விக்கிரம சோழனுலா, கழக வெளியீடு.]

சூரயர், சூரியர், சொறியர் : சுரகுரு என்னும் சோழனின் மரபினர். [- இராசராச சோழனுலா.]; சோழர்கள் பட்டப் பெயர்கள் பலவற்றுள் சூரியன் என்பதும் ஒன்றாகும். [-சூடா மணி நிகண்டு]. சூரியன் என்பது உயர்சொற்கிளவி சூரியர் என வழங்கப்பட்டிருக்கலாம்.

செட்டியார், செட்டிரையர் : தமிழ்க்கடவுள் முருகனுக்குரிய பட்டப்பெயர்கள் பலவற்றுள் செட்டி என்பதும் ஒன்றாகும். [கழக அகராதி]. இப்பட்டப் பெயரையுடையோர், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்திலுள்ள ஒக்கநாடு கீழையூரில் உள்ளார்கள்.

செட்டிசத்திரம், செட்டிபுலம், செட்டிபத்து என்பன இப் பட்டப்பெயர்களின் அடிப்படையில் அமைந்த ஊர்களாகும்.

செம்படையர், செம்பியமுத்தரசர் : சிபிச்சக்கரவர்த்தியின் மரபினர். சிபியின் வேறு பெயர்களான செம்பியரையன், செம் பியத்தரையன் என்னும் பெயர்களால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

சிபிச்சக்கரவர்த்தியின் வரலாறு : சங்க காலத்திற்கு முற் பட்ட சோழ மன்னன். முதலேழு வள்ளல்களில் ஒருவன். புறா ஒன்றினுக்காகத் தன்னையே கொடுக்க முன் வந்தவன்.

"உடல் கலக்கற வரிந்துதசையிட்டு மொருவ
னொருதுலைப் புறவொடொக்க நிறை புக்க புகழும்"
- கலிங்கத்துப்பரணி [13]

"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்த வெள்வேல்."
- சிலப்பதிகாரம், வழக்குரைகாதை, வரிகள்-51, 52.

"சினங்கெழு தானைச் செம்பியன்."
- புறநானூறு-37.

"புறவி னல்லல் சொலியக் கறையடி

யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன்". - புறநானூறு 39.

"புறவி னல்ல லன்றியும் பிறவும்
பலவும் விடுத்தோன்'' - புறநானூறு 46.

செம்பர், செம்பியர், செம்பொர், சென்னிராயர்: சோழ மரபினர். செம்பியன், சென்னி என்பன சோழர்களின் பட்டப் பெயர்களாகும்.

**சென்னி என்னும் பெயரிலிருந்த சோழ மன்னர்கள்:** 1. சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி; 2. சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி; 3. சோழன் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி ஆகியோர் சோழ மன்னர்களில் சென்னி என்னும் பட்டப்பெயர் தாங்கி நின்றவர்களாவார்கள்.

**சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி வரலாறு:** இவன் சோழன் கரிகால் வளவனுக்குத் தந்தையாவான். பொருநராற்றுப்படையும் கரிகாலனை, "உருவப் பஃறேர் இளையோன் சிறுவன்'' என்றே குறிப்பிடுகிறது. இளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட்கொடை கொண்டான் எனத் தொல்காப்பியவுரையில் நச்சினர்க்கினியர் உரைக்கின்றார். பெருங்குன்றூர் கிழார், இவனை, "நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல், வான்றோய் நீள்குடை வயமான் சென்னி'' [புறநானூறு 266] என்று பாராட்டுகின்றார்.

**சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி வரலாறு:** நெய்தலங்கானல் என்பது இச்சோழன் பிறந்த ஊராகும். "நெய்தலங்கானல் நெடியோய்" என்று ஊன்பொதி பசுங்குடையார் கூறுவர். இவன் தென்னாட்டுப் பரதவரையும் வட நாட்டு வடுகரையும் வென்று புகழ் மேம்பட்டவன். இரப்போர்க்கு வரையாது வழங்கும் வண்மையுடையவன். இவன் பாமுளூர் என்னுமிடத்தும் செருப்பாழியென்னுமிடத்தும் பகைவரை வென்று முறையே பாமுளூரெறிந்த இளஞ்சேட் சென்னியென்றும் செருப்பாழியெறிந்த இளஞ்சேட் சென்னியென்றும் கூறப்படுகின்றான்.

செம்பியன், சென்னி ஆகிய பெயர்களில் அமைந்த ஊர்கள் : செங்கற் பட்டிலுள்ள செம்பியம், வடஆர்க்காட்டிலுள்ள செம்பிய மங்கலம், பாண்டி நாட்டிலுள்ள செம்பியனேந்தல், தஞ்சை நாட்டிலுள்ள செம்பிய நல்லூர், செம்பங்குடி (செம்பியன் குடி), சென்னிவனம், சென்னிய நல்லூர், சென்னிய விடுதி ஆகியன செம்பியன், சென்னி என்னும் பட்டப்பெயர்களின் அடிப்படையில் பிறந்த ஊர்களாகும். [- தமிழகம் ஊரும் பேரும், பக்கங்கள்-97, 98].

சேய்ஞலரையர் (செம்மைக்காரர்) சேய்ஞலாண்டார், சேய்ஞலாளர், சேய்ஞலாளியார், சேய்ஞலாட்சியார், சேய்ஞற் கொண்டார். (செம்மை கொண்டார்), சேய்ஞற்பிரியர் : தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்திலுள்ள சேய்ஞலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டவர்தம் மரபினர்.

சேய்ஞலூர் கல்வெட்டொன்றால் இவர்களின் உள்ளத் தூய்மையும் கிராம நிர்வாகத்தில் இவர்களுக்கிருந்த அனுபவங் களும் தெரிய வருகின்றன.

கிராம ஆட்சிக்குரிய விதிகளாகச் சேய்ஞலூர் கல்வெட்டில் குறிக்கப்பட்டவை பின்வருமாறு :

1. ஓராண்டில் ஊர் வாரியத்தின் உறுப்பினராகத் தேர்ந்-தெடுக்கப் பெற்றுத் தம் கடமைகளை நிறைவேற்றியவர்கள் மறுபடியும் பழைய விதியின்படி ஐந்தாம் ஆண்டில் தான் வாரிய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெறுதல் வேண்டும். அவர்களுடைய புதல்வர்கள் நான்காம் ஆண்டிலும் உடன பிறந்தார் மூன்றாம் ஆண்டிலும் அதில் உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப் பெறலாம்.

2. நாற்பது வயதுக்குக் குறையாதவர்களே வாரியப் பெருமக்களாகத் தேர்ந்தெடுக்கப் பெறுதல் வேண்டும்.

3. இவ்வாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமிடத்து அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட நாளில் ஊர்ச்பையார் ஒருங் கே திரண்டு, முன்னோர்கள் மேற்கொண்ட முறைகளைப் பின் பற்றி நடப்போமென்று உறுதி கூறியவர்களையே தேர்ந் தெடுத்தல் வேண்டும்.

4. அரசியல் அதிகாரிகளின் துணைகொண்டு மறைமுக மாக உறுப்பினரானவர்களும் விதிகளுக்கு முரணாக உறுப்பி னராக அமர்ந்தவர்களும் இருந்தால், அவர்கள் கிராம துரோகி கள் ஆவர். அவர்களுடைய எல்லாவகையான பொருள்களும் பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள் விதிப்படி ஓராண்டு முடிய அலுவல் பார்த்தல் வேண்டு மாதலின் ஆண்டு தோறும் வாரியத்திற்குப் புதிய உறுப்பினர் தேர்ந்தெடுத்தல் வேண்டும். ஓராண்டிற்குமேல் உறுப்பினராகயிருப்பதற்கு முயலுவோர் கிராம துரோகிகளாகி அக்குற்றத்திற்குரிய தண்ட தண்டனைக்கு உட்பட வேண்டும்.

6. இங்ஙனம் தேர்ந்தெடுக்கப் பெற்ற வாரியப் பெரு மக்கள், ஊரில் கடமை, குடிமை, சபா விநியோகம் ஆகிய வரிகளை வாங்குமிடத்து, அவரவர்கள் நியாயமாகக் கொடுக்க வேண்டிய வரித்தொகைக்கு மேல் அதிகமாக எதனையும் வாங்குதல் கூடாது

7. சபா விநியோகம் என்ற வரியைக் குடி மக்கள் கொடுக்க வேண்டிய பிற வரிகளோடு சேர்த்து வாங்காமல் தனியாக வாங்கி, ஊர்க்கணக்கனுக்கு எழுத்து மூலமாக உத் தரவு அனுப்பிச் செலவிடல் வேண்டும்.

8. ஒரு காரியம் பற்றி இரண்டாயிரம் காசுகளுக்குமேல் அதிகமாகச் செலவிட நேருமாயின், மகா சபையாரின் அனு மதியை முன்னரே பெறுதல் வேண்டும்.

9. இவ்விதிகளின்படி செலவழிக்காமல் இவற்றிற்கு முரண்படச் செலவழித்த துண்டாயினும், நியாயமாக வாங்க வேண்டிய வரிக்குமேல் அதிக வரி வாங்கியிருப்பினும் அவற் றிற்குக் காரணவரான வாரியப் பெருமக்கள் அத்தொகைக்கு ஐந்து மடங்கு தண்டம் கொடுத்தல் வேண்டும்.

10. குடி மக்கள் கொடுக்க வேண்டிய கடமை, குடிமை ஆகிய வரிகளுள் எஞ்சி நிற்கும் தொகையை ஒன்றுக்கு இரண் டாகத் தண்டம் சேர்த்து வசூலித்தல் வேண்டும்.

11. மேலே குறிப்பிட்ட தண்டத் தொகைகள் எல்லா வற்றையும் வாங்கி, சபா விநியோகத்தோடு சேர்த்துக் கொண்டு செலவிடுதல் வேண்டும்.

12. ஊர்க் கணக்கனும் வாரியப் பெருமக்களும் குடும்பின் பிரதிநிதிகளும் மகாசபையாரின் உத்தரவின்படி ஆண்டு தோறும் மாறி நிற்றல் வேண்டும்.

"[1] ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜ ராஜதேவர்க்கு யாண்டு முப்பதாவது கன்னிநாயற்று பூர்வபக்ஷத்து பிரதமையும் சனிக்கிழமையும் பெற்ற சித்திரை நாள் விருதராஜபயங்கர வளநாட்டு மிழலைநாட்டு சேய்ஞலூர் உடையார் விஸ்வேஸ்வர தேவர் கோயில். [2] மூலபருஷையார் கூட்டங் குறைவறக் கூடியிருந்து கிராம காரியம் வியவஸ்தை பண்ணினபடி; நம்மூர்க் கூட்டம் இடுமிடத்து ஒருஸம்வற்சரங் கூட்டஞ் செய்தார். அஞ்சாம் வற்சரஞ் செய்யவும் புத்ரர்கள் நாலாம் வற்சரஞ் செய்யவும் ப்ராதாக்கள் மூன்றாம் வற்சர [3] ஞ் செய்யக் கடவதாகவும் அனாதியாக வியவஸ்தை யுண்டாகையில் இந்த வியவஸ்தைப்படியே செய்யவும். இப்படி செய்யுமிடத்து நாற்பது வயசில் தாழாதாரைப் பார்த்து இடவும் - இப்படி கூட்டம் இடுமிடத்து ஊராகத் திரண்டிருந்து இராஜ கீய [4] மானநாளில் பூர்வ புருஷர்கள் செய்த படிக்கீடாக ஆமென்ன இடக் கடவதாகவும் - இப்படி தவிர முதலிகளுடனே கூடி நின்று உள்வரிக் கூட்டம் புகுதல் வியவஸ்தை படியைத் தவிரப் புகுதல் செய்தாருண்டாகில் கிராமதுரோகிகளா யிவர்களை ஸர்வஸ்வ ஹரணம் [5] பண்ணக் கடவதாகவும். இப்படி கூட்டஞ் செய்யுமிடத்து சம்வற்சர வரணமாகச் செய்யவும். மேற்பட நின்றருண்டாகில் கிராம துரோகிகளா யிவர்களாய் இப்படி தண்டிராகக் கடவர்களாகவும். இப்படி வியவஸ்தைப்படி கூட்டஞ் செய்யுமிவர்கள் நம்மூர்க் கடமை குடிமையும் ச [6] பாவினியோகமும் வரிக் கொள்ளுமிடத்து ப்ராப்தமான படிக்கு மேற்பட்ட வரிக்கொள்ளா தொழியக் கடவர்களாகவும் சபா வினியோகம் குடிமையுடன் கூட்டாதே தனியே வரிக் கொண்டு கணக்கனுக்கு நியோக மெழுதிக் குடுத்து நியோகப்படியே செலவழிக்கக் கடவ [7] தாகவும்

செலவழிக்குமி .........க்கு ஒரு பொருளுக்கு இரண்டாயிரங் காசுக்கு மேற்பட்ட துண்டாகில் மகாசபா நியோகமெழுதிக் கொண்டு செலவழிக்கக் கடவர்களாகவும். இப்படி தவிரச் செலவழிந்த துண்டாகிலும் ஏறவரிக் கொண்டதுண்டாகிலும் வரிக்கோளுக்கு [8] நியோக மெழுதின சபை ...... கவாசறுதி யாக ஒன்றுக்கு அஞ்சாக வந்த காசும் பேர்வழிசிகைகிடந்த போகளிரட்டியாக வந்த காசும் தண்டி சபாவினியோகத்துக் குச் செலவழிக்கக் கடவதாகவும். ஊர்க்கணக்கும் வாரியமும் குடும்பும் ஆண்டுமாறி நியோகப்படி நிற்கக் கட [9] வதாக வும் மூலபருஷையார் எழுதின வியவஸ்தை இவ்வூருடையார் திருவிரவீஸ்வரமுடையார் கோயில் திருநடை மாளிகையிலே இப்படி கல்வெட்டக் கடவதாக நிஸ்சயித்து இப்படி வியவஸ் தை பண்ணினோம்; பணிப்பணியால் ஊர்க்கணக்கு சாத்தனூ ருடையான் பண்டித [10] ப்ரியன் எழுத்து இவை பணிப்பணி யால் ஊர்க்கணக்கு சேய்ஞலூருடையான் அலங்காரப்பிரியன் எழுத்து. இவை பணிப்பணியால் ஊர்க் கணக்கு இலங்கூரு டையான் மூலபருஷைப்பிரியன் எழுத்து. இவை பணிப் பணி யால் ஊர்க்கணக்கு காட்டுடையனார் பட்டப்ரி [11] யன் எழுத்து ஸ்வஸ்தி ஸ்ரீ." - கல்வெட்டு.

சேப்ளார், சேப்பிளார், சேப்பிள்ளையார், சேப்பிளையார், சேப்பிழார், சேய்ப்பிளார், சேய்ப்பிழார் : தமிழகத்திலிருந்த பழங்குடிகளான சேர அரசர் குடியையோ, சேக்கிழார் குடி குடியையோ சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். சேரர்கள் தொலைவில் [சேய்மையில்] இருந்தமையால் சேய்மை அரை யர் [அரசர்] - சேரர் எனப்பட்டார்கள். சேய்மை அரையர் என்பது காலப் போக்கில் சேய்ப்பிளார், சேய்ப்பிழார், சேப் ளார், சேப்பிளார், சேப்பிள்ளையர், சேப்பிளையாரெனத் திரிந்து வழங்கியிருக்கலாம்

சேக்கிழார் என்பதும் இவ்வாறு திரிந்து வழங்கிடவாய்ப் புள்ளது.

பெரியபுராணம் என்னும் நூல் அருமொழித்தேவர் என் னும் இயற்பெயரையும், உத்தமசோழப் பல்லவராயன், காலிங்

கராயன், தொண்டையன், பல்லவராயன், காடவராயன், கச்சிராயன், சேதிராயன் என்னும் சிறப்புப் பெயர்களையும் பெற்ற சேக்கிழார் [சேப்ளார்] குடியைச் சேர்ந்த ஒருவரால் இயற்றப் பட்டதாகும். [-பெரியபுராண ஆராய்ச்சி, பக்கம்-3, மா. இராச மாணிக்கனார் ]

செயங்கொண்டார், சயங்கொண்டார், சேங்கொண்டார், போரிற் கொளுத்தி, போரிற்கொளுத்தியார், போரைக்கொளுத்தியார் : சோழ மரபினர். இராசாதிராச சோழன் இப்பட்டப் பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகக்கொண்டிருந்தானெனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்- 163]

சேண்ராயர், சேணரையர், சேண்கொண்டார், சேணாண்டார், சேண்பிரியர், சேணாடர், செனவராயர், சன்னவராயர், சனகராயர் சென்னண்டார், சேண்டப்பிரியர், சேண்டாப்பிரியர். சாணர், சாணூரர், சன்னாடர், சேனை கொண்டார், சேனைநாட்டார் : சோழ மரபினர். சோழன் இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி இப்பட்டப் பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தான்.

சோழன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி வரலாறு : இவன் சிறந்த வீரமுங் கொடையுமுடையவனாவான். இவன் நீர் வாவி சூழ்ந்த சோலையில் துயின்ற காரணத்தினால் இப்பெயரினைப் பெற்றான். இவன் கால முதலே சோழர்கட்குச் சென்னி என்னும் பெயரும், சோழ நாட்டிற்குச் சென்னி நாடு என்னும் பெயரும் வழங்கலாயிற்று இவன் புறநானூறு 61-ஆம் பாடலில் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக்குமரனார் என்னும் புலவரால் பாடப்பெற்றுள்ளான்.

சேதிராயர், சேதிரார், சேதுராயர், சேதுரார், சேதிநாடர், சேதுநாடார் : தென்-ஆர்க்காடு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியிலிருந்த சேதி நாட்டை [சேதிநாட்டிற்குத் திருமுனைப் பாடி நாடு, மலைநாடு, மலாடு என்னும் வேறு பெயர்களும் உண்டு ] ஆண்ட அரச மரபினர்.

கடையெழு வள்ளல்களில் ஒருவனான மலையமான் திருமுடிக்காரியும், அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவ ரான மெய்ப்பொருள் நாயனாரும் இம்மரபைச் சேர்ந்தவர் களாவார்கள்

**மலையமான் திருமுடிக்காரியின் வரலாறு:** கோவலூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டவன். கடையெழு வள்ளல் களில் ஒருவன். காரி என்னும் பெயருடைய குதிரையயுடை யவன். ["காரிக் குதிரைக் காரி" சிறு பாணாற்றுப்படை. வரி ; "காரியூர்ந்து பேரமர் கடந்த மாரியீகை மலையன்" - புறநானூறு 158] தன் வேற்படையின் துணைகொண்டு வட வாரியரை வென்று வெற்றி மேம்பட்டவன்.

"ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த வொள்வாள் மலையன
தொருவேற் கோடி யாங்கு" - நற்றிணை 170.

இவன் புலவர் பாணர் முதலிய இரவலர் பலர்க்கும் களி றும் தேரும் பல நல்கிப் பெரும்புகழ் விளைத்தான். இவனைக் காரியென்றும், மலையமான் என்றும், கோவற்கோமான் என்றும் கூறுவர், "துஞ்சா முழவிற் கோவற்கோமான், நெடுந் தேர்க்காரி" (- அகநானூறு 35) யென்றும், "முரண்கொள் துப் பின் செவ்வேல் மலையன்" (-குறுந்தொகை 312.) என்றும் கூறுதல் காண்க. இத்துணைப் புகழ்படைத்த மலையன் தமிழ் வேந்தர் பாலும் ஒத்த நட்புக் கடம்பூண்டு அவரவர்க்கும் வேண்டுங்கால் உதவி புரிந்துள்ளான். கபிலர் பாலும் பேரன் புடையன். இவனது கோவலூரில் வாழ்ந்த பார்ப்பாரிடத்திற் றான் கபிலர் பார்மகளிரை அடைக்கலப் படுத்தியிருந்தார். புறநானூற்றில் காணப்படும் 121, 122, 123, 124, 125, 126 ஆகிய பாடல்கள் இவன் மீது கபிலர், மாறோக்கத்து நப்ப சலையார், வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் ஆகிய சங்கச் சான்றோர் பாடியவைகளாகும்.

மெய்ப்பொருள் நாயனார் (மிலாடுடையார்) வரலாறு: திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சிற்ற ரசர். இவரது காலம் கி. பி. 660-840 ஆகும். முத்திநாதன் என்

னும் அரசனுக்கும் இவருக்கும் பகைமை உண்டாக, முத்தி நாதன் சிவவேடமிட்டு எளிதாக இவர் அறையில் நுழைந்து ஆகமம் உபதேசிப்பதாகக் கூறி இவரை உடைவாளால் குத்திக் கொன்றான். பொய்த்தவ வேடத்தவனான முத்தி நாதன் இவரைக் குத்திக் கொள்ளும்போது, இவர் காவலனிடம் 'தத்தா ! நமரே காண்' என்று சொல்லி மன்னித்தார். தஞ்சைப் பெரிய கோயிலில் 'தத்தா நமரே காண்' என்ற மிலாடுடையார் படிமம் ஒன்று உள்ளது. (- பெரிய புராண ஆராய்ச்சி, பக்கங்கள் 288, 289, 314).

பிற்காலச் சோழர்கள் காலத்தில் சேதிராயர் மரபிலிருந்த குறுநில மன்னர்கள் : 1. கிளியூர் மலையமான் பெரிய உடையானான இராசராச சேதிராயன் (- S. I. I. Vol. VII. No. 874 ); 2. விக்கிரமசோழ சேதிராயன் (- S. I. I. Vol. VIII No. 915; Ins. 371 of 1908; Ins. 177 of 1906; 3. இராசகம்பீர சேதிராயன் (Ins 297 of 1912) ஆகியோர் பிற்காலச் சோழர்கள் காலத்தில் சேதிராயர் பட்டப்பெயரிலிருந்த குறுநில மன்னர்களாவார்கள்.

**சேர்வை, சேர்வைகாரர், சேரவரையர் :** சேர அரச மரபினர். சேர வரையர் (சேர அரசர்) என்பது காலப்போக்கில் சேர்வை, சேர்வைகாரர் எனத் திரிந்து வழங்கப்படலாயிற்று.

**சேனாதிபதி, சேனாதிபதியார், சேனாபதியார், சேனாதியார், சேனாதி, சேனாதிபர் :** படைத்தலைவர்களின் மரபினர். இவர்கள் போரில்லாத அமைதிக் காலங்களில் நீதிபதிகளாக விருந்து தமது கடமைகளை ஆற்றினார்கள். (- தமிழ் இந்தியா பக்கம்-78. ந. சி. கந்தையாபிள்ளை).

கங்கை கொண்ட சோழனான இராசேந்திரசோழன் இப் பட்டப் பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந் தானெனக் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன.

**சோழகர் :** சோழ அரச மரபினர். சோழர் என்பது காலப் போக்கில் சோழகர் என வழங்கப்படலாயிற்று.

சோழகன்னகுச்சிராயர் சோழ மரபினர். இரண்டாம் இராசேந்திர சோழனின் மகன்களில் ஒருவன் இப்பட்டப் பெயரைத் தமது சிறப்புப் பெயராகக் கொண்டிருந்தானெனக் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன.

சோழ கோன் : சோழ மரபினர். விக்கிரமசோழன் காலத்தில் சோழ கோன் என்னும் பெயரில் படைத்தலைவன் ஒருவன் இருந்தான்.

சோழகோன் வரலாறு : இவன் விக்கிரம சோழனுடைய படைத்தலைவர்களுள் ஒருவன்; அரசனால் அளிக்கப்பெற்ற சோழ கோன் என்னும் பட்டம் பெற்றவன். இவன், கங்கர், மகாராட்டிரர், கலிங்கர், கொங்கர், குடகர், ஆகியோரைப் போரில் வென்று வாகைசூடியவனென்பது விக்கிரம சோழனுலாவினால் அறியப்படுகின்றது. (வரிகள் 143-146). இவன் முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியின் பிற்பகுதியில் அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாக நிலவியவன் என்பது திருமழபாடியிலுள்ள ஒரு கல்வெட்டால் (- S. I. I. Vol. V. No. 640.) தெரிகின்றது. அக் கல்வெட்டால், இவன் பூபாலசுந்தரன் என்னும் பெயரினன் எனபதும் இவனுடைய மனைவி இராசேந்திர சோழியார் என்னும் பெயருடையவள் என்பதும் புலப்படுகின்றன். (- பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம் II, பக்கம், 83, 84).

சோழங்கர், சோழங்கதேவர், சோழகங்கதேவர், சோழங்கதேவ அம்பலகாரர், சோழங்க நாடர், சோழங்க நாடார் : சோழ மரபினர். இப்பட்டப் பெயர்களில் சோழகங்கன், சோழகங்கதேவன், சோழ கங்க நாடன் என்பனவற்றை மதுராந்தக சோழன் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தான்.

> "................................ பொருதொழில்
> வாள் வலித் தடக்கை மது ராந்தகனை
> சோழ கங்க னென்றும்". - இராசேந்திரசோழன்

கல்வெட்டு அழகிய பெருமாளாகிய சோழகங்கன் என்பவன் மூன்றாம் இராசேந்திர சோழன் காலத்தில் அரசியல் அதிகாரிகளில் ஒருவனாக இருந்துள்ளான். (- Ins. 202 of 1908.)

சோழ கேரளர் : சோழ மரபினர். பிற்காலச் சோழ மன்னர்களில் மூன்றாம் குலோத்துங்கசோழன், சோழ கேரள தேவன் (– Ins. 75 of 1925.) என்னும் சிறப்புப் பெயரைக் கொண்டிருந்தான். வீரராசேந்திர சோழனின் அரண்மனைக்கு சோழகேரளன் மாளிகை என்பது பெயராகும். (பிற்காலச் சோழர் சரித்திரம் பாகம் I, II, பக்கங்கள் 257, 169).

சோழன் கிளையார் : சோழ அரச மரபினர். சோழ மன்னர்களின் உடன் பிறந்தவர்களாயிருந்து, சோழர்களால் வெற்றிக் கொள்ளப்பட்ட பகுதிகளை அரசப் பிரதிநிதிகளாக இருந்து ஆண்டவர்கள்.

சோழ பாண்டியர் : சோழ மரபினர். பிற்காலச் சோழர்களில் முதல் இராசேந்திர சோழனின் மகன்களில் ஒருவனும், மூன்றாம் குலோத்துங்கசோழனும் இப்பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தார்கள். மூன்றாம் குலோத்துங்க சோழனின் காலத்தில் பாண்டி மண்டலத்திற்கு சோழ பாண்டி மண்டலம் என்பது பெயராகும். (- பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம் II, பக்கங்கள், 19, 158.)

சோழரசர், (சோமரசர்) சோழராசர், (சோமராசர்) சோழமாராசர் சோழ மாராசர் என்பது காலப்போக்கில் சோழரசர், சோழராசர் எனத் திரிந்து வழங்கலாயிற்று. சோழ மாராசர் என்பது பிற்காலச் சோழ மன்னர்களால் அளித்திட்ட பட்டமாகும். கங்கநாட்டுச் சிற்றரசன் புசபல வீரன் ஆகோ மல்லராசன் இத்தகைய பட்டத்தைப் பெற்றவனாவான்.

புசபல வீரன் ஆகோ மல்லராசன் வரலாறு: இவன் கங்க நாட்டிலிருந்த ஒரு சிற்றரசன்; சோழமாராசன் என்னும் பட்டம் பெற்றவன். மகா மண்டலாதிபதி என்று அக்காலத்தில் வழங்கப்பெற்றவன். இவன் காஞ்சி மாநகரில் ஒரு நந்தவனத்திற்கு நிலம் வாங்கும் பொருட்டுப் பொருள் வழங்கியுள்ளனன் என்பது காஞ்சிக் கல்வெட்டால் (S.I.I., Vol. No. 861) உணரக் கிடக்கின்றது. (-பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம் II, பக்கம்- 144)

ஞானி சேவகர் : பழந்தமிழ் வேந்தர்களின் உளவுப் படையைச் சேர்ந்தவர்கள். (ஞானி- பேரறிவாளன்; சேவகன்- போர்வீரன், கழக அகராதி.)

தஞ்சைக்கோன், தஞ்சிராயர், தஞ்சைராயர் : சோழ மரபினர். கண்டராதித்த சோழனுக்குத் தஞ்சைக் கோன் என்பது சிறப்புப் பெயராகும்.

"சீரான் மல்குதில்லைச் செம்பொனம்பலத்தாடி
தன்னைக்
காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர்கோன்
கலந்த
ஆரா வின்சொற் கண்டராதித்தன் அருந்தமிழ் மாலை
வல்லார்
பேராவுலகிற் பெருமையோடும் பேரின்பம்
எய்துவரே."

- கண்டராதித்தர் திருவிசைப்பா - கோயிற்பதிகம், பா-10.

தஞ்சிராயர், தஞ்சைராயர் பட்டப் பெயர்களையுடையோரை பெரும்பிடுகு முத்தரையரின் மரபினர் என்பார். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள். (- கள்ளர் சரித்திரம், பக்கம்-16).

தலையர், தலைவர், தலைராயர், தலைசைராயர், தனராயர், தனசைரயார், முதலியார் : மானும் புலியும் ஒரு துறையில் நீருண்ணும்படி (ஒரு துறைப்புனல் சினப்புலியு மானுமுடனே, யுண்ணவைத்தவுரவோ னுலகில் வைத்தவருளும்.) அரசாண்ட மாந்தாதாவின் மரபில் வந்த தலைமன் என்பவனின் மரபினர். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம் 65, 66.)

தாளிதியர், தாளதியார், தாளியர் : முசுகுந்தன் மரபில் வந்த பனையமன் என்பவனின் மரபினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-71].

தானாதியார், தானாதிபதியார், தானாபதியார், தானாதிபர், படைத்தலையார், படைத்தலைவர், படையெழுச்சியார், படையாட்சியார், மாவெட்டியார், மாவெற்றியார் : கங்கை கொண்ட

சோழனின் மரபினர். கங்கை கொண்ட சோழன் இப்பட்டப் பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்].

திண்ணாப்பிரியர், தென்னாப்பிரியர், தென்னரையர், தென் கொண்டார், தெங்கொண்டார், தெங்கிண்டார் : செங்கண் சோழன் [கோச்செங்கணான்] மரபினர். செங்கண் சோழன் இப்பட்டப் பெயர்களைச் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தான்.

கோச் செங்கணான் வரலாறு : கடைச் சங்க காலத்தின் இறுதியில் வாழ்ந்தவன். சிறந்த சிவத் தொண்டன். இவன் 'எண் தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து' உலகம் ஆண்ட தாகத் திருமங்கை யாழ்வார் பாடுகின்றார் (-நாலாயிரத்திவ்விய பிரபந்தம், 1505). இவன் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவனாவான். சேரமான் கணைக்கால் இரும் பொறையைச் சிறைபிடித்துக் குடவாயில் (குடவாசல்) கோட்டத்துச் சிறை யிற் வைத்தவன். களவழி நாற்பது என்னும் நூலின் பாட்டு டைத் தலைவன். (- பெரியபுராண ஆராய்ச்சி, மா. இராச மாணிக்கம்.)

திருக்கட்டியர், திருக்காட்டியார் : அரசர்களின் மெய்க் காப்பாளர்கள் (இராச சமூகம் காத்த மரபினர்). திருக்கட்டியர் என்பது திருக்காட்டியார் எனத் திரிந்து வழங்கிற்று. (- சூரிய குலக் கள்ளர் சரித்திரம்).

திருப்பூவாட்சியார், பூவாட்சியர், பூவாட்சியார், பூச்சியர் : பூமன் என்ற அரசனின் மரபினர். இவனது வேறு பெயரான பூவாட்சி என்னும் பெயரால் இவர்கள் இப்பட்டப் பெயர் களைப் பெறுவாராயினர் (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-77).

துண்டுராயர், துண்டீராயர் துண்டயர், தொண்டார் : சோழ அரச மரபினர். சோழர்கள் பட்டப் பெயர்களில் ஒன்றான தொண்டியோர் என்பது காலப் போக்கில் இவ்வாறு திரிந்து வழங்கிற்று. (- தொண்டியோர் - சோழகுலத்தோர், சிலப்பதி காரம் ஊர்காண் காதை, அடியார்க்கு நல்லார் உரை.)

துறவாண்டார், துறைகொண்டார், துறையாண்டார், துறையுண்டார், தொரையண்டார், தொரையாண்டார் : மகாராட்டிர மாநிலத்தில் கிருஷ்ணை, துங்கபத்திரை ஆகிய இரு பேராறுகளுக்குமிடையில் அமைந்திருந்த இடைதுறை நாட்டை பிற்காலச் சோழர்கள் காலத்தில் வெற்றி கொண்டு ஆண்டவர்கள் தம் மரபினர்.

"நெடிதியலூழியுள் இடைதுறை நாடு".

- மெய்க்கீர்த்தி.

தெலிங்க தேவர், தெலிங்கராயர் : கரிகால் சோழன் மரபினர் தெலுங்கு நாட்டை ஆண்டதால் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். (- பல்லவர் வரலாறு, பக்கம்-4, மா. இராசமாணிக்கனார்; K. A. N. Sastry's Cholas, Vol. I. PP. 121,122.)

தேவர் : சோழ மரபினர். பிற்காலச் சோழர்களில், கண்டராதித்த சோழன்; 2. அரிஞ்சய சோழன் ; 3 சுந்தர சோழன் 4. உத்தம சோழன் ; 5. முதல் இராசராச சோழன் ; 6 முதல் இராசேந்திரசோழன்; 7. இரண்டாம் இராசேந்திர சோழன் ; 8. வீர ராசேந்திரசோழன் ; 9. அதிராசேந்திர சோழன்; 10. முதற் குலோத்துங்க சோழன் ஆகியோர் தேவர் என்னும் பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தார்கள்.

கண்டராதித்த சோழன் : சிதம்பரம் வட்டம், உடையார் குடியில் காணப்படும் கல்வெட்டில் 'மேற்கெழுந்தருளிய தேவர்' என்றும்,

அரிஞ்சய சோழன் : வட-ஆர்க்காடு மாவட்டம், ஆற்றூரில் காணப்படும் கல்வெட்டில், 'ஆற்றூர்த் துஞ்சின தேவர்' என்றும்,

இரண்டாம் பராந்தகனாகிய சுந்தர சோழன், கல்வெட்வெட்டொன்றில், 'பொன் மாளிகைத் துஞ்சின தேவர்'(-S. I. I. Vol. II No. 6; Vol. V. Nos. 723 and 980.) என்றும்,

உத்தம சோழன் : கல்வெட்டொன்றில்; 'உத்தமசோழன் ஸ்ரீ உத்தம தேவர்' என்றும்,

மாமன்னன் முதல் இராசராச சோழன் கல்வெட்டுக்களில், 'உடையார் ஸ்ரீ ராசராச தேவர்' என்றும்,

மாமன்னன் முதல் இராசேந்திர சோழன், கங்கை கொண்ட சோழபுரத்திற்குத் தென்கிழக்கே உள்ளதும் இக்காலத்தில் திருலோக்கி என்று வழங்குவதுமாகிய திரைலோக்கி மாதேவிச் சதுர்வேதி மங்கலத்திலுள்ள கல்வெட்டில், 'இராசேந்திர சோழ தேவர்' என்றும்,

இரண்டாம் இராசேந்திர சோழன், கல்வெட்டொன்றில், 'ஸ்ரீ இராசேந்திர சோழ தேவர்' (S. I. I. Vol. VII. No. 798; E. P. Can. Vol X KL 107) என்றும்,

வீரராசேந்திர சோழன், செங்கற்பட்டு மாவட்டம், திருமுக்கடல் கல்வெட்டில், 'ஸ்ரீ வீர ராஜேந்திர தேவர்' E. P. Ind. Vol. XXI. No. 38) என்றும்,

அதிராசேந்திர சோழன், கல்வெட்டொன்றில், 'ஆதிராசேந்திர தேவர்' என்றும்,

குலோத்துங்க சோழன் : கல்வெட்டொன்றில், 'குலோத்துங்க சோழ தேவர்' என்றும் குறிக்கப் பெற்றுள்ளார்கள்.

ஓரிசாவை [கலிங்கத்தை] ஆண்ட தேவர் பட்டப் பெயருடையோர் : முன்பு கலிங்கநாடு என்றும் பின்னர் ஒட்டரதேசம் என்றும், இந்நாளில் ஒரிசா என்றும் வழங்கப்பெறும் நிலப் பரப்பை ஒரு காலத்தில், 1. சங்கரதேவர் (கி. மு. 1807 –1407); 2 மகேந்திரதேவர் [கி. மு. 1307-822]; 3. இஷ்டதேவர் [கி. மு. 689 - 538]; 4. பஜரதேவர் [கி. மு. 538 - 421]; 5. நரசிங்க தேவர் [கி. மு. 426 - 306]; 6. மன்கிருஷ்ணதேவர் [கி. மு. 306 – 144]; 7. போஜதேவர் [கி. மு. 184-57] என்போர் ஆண்டதாக ஒரிசா மாநிலத்தில் புகழ் வாய்ந்த ஆலயமாகவுள்ள பூரி செகந்நாதர் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன. [– சங்க கால தமிழக வரலாற்றில் சில செய்திகள். பக்கங்கள், 10, 11, மயிலை. சீனி. வேங்கடசாமி.]

தேவர் பட்டப் பெயருடைய புலவர் பெருமக்கள் : 1. சீவக சிந்தாமணி என்னும் அருந்தமிழ்க் காப்பியத்தை இயற்றிய திருத்தக்கதேவர்; 2. திருநாவுக்கரையதேவர்; 3. திருமாளிகைத் தேவர்; 4. கருவூர்த் தேவர்; 5. கல்லாடதேவர் (கல்லடனார்): 6. பரணதேவர் (பரணர்) 7. தேவ குலத்தார் ஆகியோர் தேவர் பட்டப் பெயரைத் தாங்கியிருந்த புலவர் பெருமக்களாவார்.

தொண்டமார், தொண்டைமான், தொண்டாயர், தொண்டைப்பிரியர், தொண்டைமான் கிளையர் : கரிகால சோழனின் இளைய மகன் தொண்டைமான் என்பவனின் மரபினர். தொண்டைமான் கிழக்கே கடலையும், தெற்கே பினாகி என்னும் பெண்ணையாற்றையும், மேற்கே பவளமலையையும் வடக்கே திருவேங்கடமலையையும் எல்லைகளாகக் கொண்டு காஞ்சிபுரத்திலிருந்து அரசாண்டவனாவான்.

"மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குப் - பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருபதின் காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு".

தொண்டைமான் காலமுதல் அவன் ஆண்ட நாடு தொண்டை நாடு அல்லது தொண்டை மண்டலம் எனப்பட்டது.

தொண்டைமான் குடியினர் பழந்தமிழகத்தில் மிகவும் சீரும் சிறப்புமாக வாழ்ந்த குடியினராவார்கள். திருப்பதி வேங்கடாசலபதி பெருமான் இக்குடியில் சீரும் சிறப்பும் பெற்ற முனியத் தொண்டைமான் என்பவரின் மகளான அலர்மேல் மங்கையை மணந்து கொண்டாரெனத் திருமலை மான்மியம் குறிப்பிடுகிறது. (- கள்ளர் சரித்திரம், பக்கம்- 83.)

தொண்டைமான் இளந்திரையன் வரலாறு : தொண்டைமான் அரசர்களில் தலைசிறந்தவன். சோழன் நெடுமுடிக் கிள்ளிக்கும் நாகநாட்டு இளவரசி பீலிவளைக்கும் மகனாகப் பிறந்தவன் (- மணிமேகலை, ஆபுத்திரனாடடைந்த காதை.) சிறந்த வீரமும் கொடை நலமும் வாய்க்கப் பெற்றவன். கவி பாடுவதில் வல்லவன். இவன் பாடிய பாடலாகப் புறநானூற்

றிலும் நற்றிணையிலும் பாடல்கள் பல காணப்படுகின்றன. இவன், இளந்திரையம் என்னும் ஒரு நூலை இயற்றினான், சங்க இலக்கிய நூலான பெரும்பாணாற்றுப்படை கடியலூர். உருத்திரங்கண்ணனார் என்னும் புலவரால் இவனமீது பாடப் பெற்றதாகும். தமிழ்மகள் அவ்வையார் இவனைப்பற்றி பாடிய பாடலொன்று புறநானூற்றில் (35) காணப்படுகிறது.

புதுக்கோட்டை தொண்டைமான் அரசர்களில் தலைசிறந்தவர்கள்: பொன்னம்பலநாத தொண்டைமான்; 2 ஆவுடைரகுநாத தொண்டைமான் ஆகியோர் புதுக்கோட்டை தொண்டைமான் அரசர்களில் தலைசிறந்தவர்களாவார்கள்.

பொன்னம்பலநாத தொண்டைமான், இலங்கையை ஏழு நாட்களில் அழித்தவராவார்.

ஆவுடைரகுநாத தொண்டைமான், இராமேசுவரத்திற்குப் பயணம் வைத்த ஸ்ரீரங்கராயலு என்ற விஜயநகர அரசனின் மதங்கொண்ட யானையை அடக்கி அவனிடமிருந்து 'ராய ராகுத்த ராயவஜ்ரடு ராய, மன்னீடு ராய என்னும் பட்டத்தையும், நிலம், யானை, சிங்கமுகப் பல்லக்கு ஆகியவற்றையும் பரிசாகப் பெற்றவராவார். (- கள்ளர் சரித்திரம், பக்கங்கள் 34, 35.)

நண்டர், நண்டல்ராயர், நண்டலாறுவெட்டி, நண்டலாறு வெட்டியார், நண்டு வெட்டி, நண்டு வெட்டியார்: ஆந்திர நாட்டில் கடப்பை, கர்நூல், கோட்டங்களைச் சிற்றரசர்களாக இருந்து ஆண்ட 'ரேநாண்டுச் சோழர்களின் மரபினர். 'ரேநாண்டு' என்பது காலப் போக்கில் நாண்டு நண்டு எனத் திரிந்து அம்மரபினர் நாளடைவில் நண்டர், நண்டல் ராயர் (ரேநாண்டு அரையர் [அரசர்] நண்டலாறு வெட்டி, நண்டலாறு வெட்டியார், நண்டு வெட்டி, நண்டு வெட்டியார் [ரேநாண்டு வெற்றி, ரேநாண்டு வெற்றியார் என்றே வழங்கப் படுதல் வேண்டும்) என அழைக்கப்படுவாராயினார்.

நந்தர் நந்தியர், நந்திராயர் நந்தியராயர்: நந்திசோழனின் மரபினர். நந்திசோழனின் வேறு பெயரான நந்தியன் என்னும்

பெயரால் இம்மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாரா யினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்.], நந்திசோழன் காலத்தில்தான் தேல் காசு முதன்முதலில் புழக்கத்திற்கு வந்தது.

நரங்கியர், நரங்கியார், நரயர், நரியர், நரங்கியப் பிரியர், நரங்கியப் பிலியர், நரங்கிப்பிலியர், நரசிங்கர், நரசிங்கதேவர், நரங்கிய தேவர், நரசிங்கப்பிரியர், நரசிங்கராயர் : நரசிங்க சோழனின் மரபினர். நரசிங்க சோழனின் வேறு பெயரான நரசிங்கப் பிரியன் என்னும் பெயரால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாரராயினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்].

நல்லவன்னியர், வன்னியர், வன்னிமுண்டார், வன்னிய முண்டார் : அரச மரபினர். இலங்கையின் ஒரு பகுதியை ஒரு காலத்தே ஆண்டவர்கள். (பழைய மகாவம்சம்.)

பிற்காலச் சோழர்கள் காலத்தில் சோழ மன்னர்கட்குப் படைகளை அனுப்பி உதவியமைக்காக வன்னியப்பற்று என்னும் நிலங்களைப் பெற்றதையடுத்து இவர்கள் இப்பட்டப் பெயர்களை பெறுவாராயினர். டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அவர்கள் எழுதிய பாயும்புலி பண்டாரக வன்னியன் என்னும் வரலாற்று புதினம், இவ்வரலாற்று நாயகர்களை அடிப்படை-யாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

நல்லப்பிரியர், நல்லிப்பிரியர், நள்ளிப்பிரியர் : கடையெழு வள்ளல்களில் ஒருவரான நள்ளியின் மரபினர். நள்ளியின் வேறு பெயரான நள்ளிப்பிரியன் என்னும் பெயரால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாரராயினர்.

நள்ளி இயேசு பிறப்பதற்கு முன்னரே வலக்கையால் அளிப்பதனை இடக்கை அறியாது கொடுத்த வள்ளலாவான். புறநானூற்றில் 148, 149, 150 ஆகியன இவன் மீது பாடப் பெற்ற பாடல்களாகும்.

நாடர், நாடார், நாட்டார், நாட்டரசன், நாட்டரையர், நாட்டறையர், நாட்டாள்வார், நாட்டாள்வார், நாடாள்வார் நாடாழ்வார், நாடாவார்: சோழ மரபினர். இராசராச சோழனின் வேறு பெயர்களான நாடன், நாட்டான், நாட்டரையன், நாடாழ்வான் என்னும்

பெயர்களால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் முக்கியப் பொறுப்புகளிலிருந்த நாடாழ்வார்கள்[நாடாள்வார்கள்: 1. சேனாதிபதிகள் ஐயமுரி நாடாழ்வான்; 2. சேனாபதி அரையன் கடக்கங்கொண்ட சோழன் இராசராச அணிமுரி நாடாழ்வான்; 3. இராசராச மகதை நாடாழ்வான்; 4. வீரகங்க நாடாழ்வான்; 5. மலையன் நரசிம்மவர்மன் ஆகியகரிகால் சோழ ஆடையூர் நாடாள்வான் ஆகியோர் பிற்காலச் சோழர்கள் காலத்தில் முக்கியப் பொறுப்புகளிலிருந்த நாடாள்வார்கள் ஆவார்கள்.

சேனாதிபதிகள் ஐயமுரி நாடாழ்வான்: இவன் இரண்டாம் இராசேந்திர சோழனுடைய படைத்தலைவர்களுள் ஒருவன். இவன் இலங்கையை வென்று சில ஆண்டுகள் அங்கு அரசப் பிரதிநிதியாக இருந்தான். [S. I. I. Vol. IV No. 1408]

சேனாபதி அரையன் கடக்கங்கொண்ட சோழன் இராசராச அணிமுரி நாடாழ்வான்: இவன் இரண்டாம் இராசேந்திர சோழனுடைய படைத்தலைவர்களுள் ஒருவன். இவனுடைய ஊர் திருவையாறு; இவன் திருமழபாடிக் கோயிலில் பொன்னார் மேனியர் திருவுருவம் ஒன்றைச் செம்பினால் எழுந்தருளுவித்து அதற்கு நாள் வழிபாட்டிற்கு நிவந்தமாக நிலம் அளித்துள்ளான். அன்றியும், அதற்குப் பல அணிகலன்களும் கொடுத்துள்ளான். (- S. I. I Vol., No. 644.)

இராசராச மகதை நாடாழ்வான் இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியில் நாடுகாவல் அதிகாரியாய் இருந்தான். இவன் திட்டகுடித் தேவதான நிலங்களிலிருந்து தனக்குக் கிடைக்க வேண்டிய பெரும்பாடி காவல் என்னும் வரியை அவ்வூர்க் கோயிலுக்கு நிவந்தமாக அளித்தான் (- S. I. I. Vol. VIII. No 283)

மலையன் நரசிம்மவர்கன் ஆகிய கரிகால் சோழ ஆடையூர் நாடாள்வான்: ஒரு குறுநில மன்னன். ஆடையூரைத் தலைநகராகக் கொண்டு சேதி நாட்டில் ஒரு பகுதியை ஆட்சி புரிந்

தவன். இரண்டாம் இராசாதிராசன், மூன்றாங் குலோத்துங்க சோழன் ஆகிய இரு வேந்தர்களின் ஆட்சியில் படைத்தலைவனாக இருந்தவன். இவன், இராசாதிராச சோழன் ஆட்சியில் திருச்சிற்றம்பலமுடையான், பெருமானம்பிப்பல்லவராயனோடு பாண்டிநாடு சென்று இலங்கைநாட்டுப் படையுடன் போர் புரிந்து வாகை சூடினான். (மகாவம்சம்; இலங்கையின் பழைய வரலாற்றைக் கூறும் நூல்.) (- பிற்காலச் சோழர் சரித்திரம், T. V. சதாசிவ பண்டாரத்தார்.)

குலசேகர பாண்டியனின் அரசியல் அதிகாரிகளில் ஒருவனாக இருந்த சயங்கொண்ட சோழசீவல்லபன் என்பவன் களவழி நாடாள்வான் என்னும் பட்டப் பெயரைக் கொண்டிருந்தான். (- பாண்டியர் வரலாறு, பக்கம், 111.)

நாகர், நாகராயர், நாகங்கொண்டார், நாகதேவர், நாகநாடர், நாகநாடார், நாகப்பிரியர், நாகாண்டார், நாகாளர், நாகாளியார், நாகாட்சியார், நாகுடையர், நாகுடையார் : நாக அரசமரபினர் நாகநாடு வரலாறு ! நாக நாட்டிற்கு நாகபுரம், நாகர் மலை என்னும் வேறு பெயர்களும் உண்டு. நாகநாடு தமிழ்நாட்டுக்குக் கிழக்கில் அல்லத் தென்கிழக்கிலிருந்த ஒரு பெரிய தீவாகும். இது "நானூறு யோசனை பரப்பளவு உடையதாகும்.

"கீழ்நிலை மருங்கில் நாக நாடாளும் இருவர்"
"நாக நன் னாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்து கோடய் தும்"

- மணிமேகலை

நாகர் வரலாறு நாக மன்னர்களில் தலைசிறந்தவன் வளைவணன் என்பவனாவான். பீலிவளை இவனின் மகளாவாள். பீலிவளை சோழன் ஒருவனை மணந்து தொண்டைமான் இளந்திரையனை ஈன்றெடுத்தவளாவாள்.

"நாக நன்னா டாள்வோன் றன்மகள்
பீலிவளை யென்பாள் பெண்டிரின் மிக்கோள்
பனிப்பக வானவன் வழியிற் றோன்றிய
புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி".

"வென்வேற் கிள்ளிக்கு நாகநா டாள்வோன்
றன்மகள் பீலி வளைதான் பயந்த
புனிற்றிளங் குழவியை."

நாகர்களைப் பற்றிக் கனகசபைப் பிள்ளை அவர்கள் கூறுவது: "நாகர்கள் பல நுட்பத் தொழில்களில் தெளிவடைந்திருந்த தோடு, நெய்தற் றொழிலில் மிக்க திறமை யடைந்திருந்தனர். கலிங்க நாட்டிலிருந்த நாகர் இத்தொழிலில் அடைந்திருந்த புகழ் பற்றிக் கலிங்கம் என்ற சொல்லே தமிழில் துணியை உணர்த்துவதாயிற்று. பாண்டி நாட்டின் கீழைக் கரையிலிருந்த நாகர் இத்தொழிலில் மிக மேம்பாடெய்தி. துணியும், மசிலினும் பெருக ஏற்றுமதி செய்தனர். இவர்கள் நெய்த நுட்ப இழை களான ஆடைகள் தமிழர்களால் மிக மதிக்கப்பட்டும். பிற நாடுகளில் நம்பத்தகாத விலைக்கு விற்கப்பட்டும் வந்தன. நாகரிடமிருந்து தான் ஆரியர் எழுதும் வித்தையைக் கற்றுக் கொண்டனர், அது பற்றி இற்றைக்கும் வடமொழியெழுத் திற்குத் தேவநாகரி என்ற பெயர் வழங்குகிறது"

நாகர்களைப் பற்றி ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கூறுவது: "நாகர் குலத்து மகளிர் பேரழகு வாய்ந்தேரென மணிமேகலையாலும், பிற நூல்களாலும் அறியப்படுகின்றது அவர்கள் சிவபத்தியிலும் மேம்பட்டவரென்பது நாககனியர் சிவபெருமனைப் பூசித்து வரம் பெற்றனரென்று உறையூர்ப் புராணம், பழைய திருவானைக்காப்புராணம், செவ்வந்திப் புராணம் முதலியன கூறுதல் கொண்டு அறியலாகும்.

நாகர் வீரத்திலும் மேம்பட்டவ ரென்பது, சோழ நாகர் என்பார் உறையூரிலிருந்து அரசு புரிந்த சோழர்களை அப்பதி யினின்றும் போக்கிச் சோழராட்சியைக் கைப்பற்றிக் கொண் டனரென்று பழைய ஐரோப்பிய ஆசிரியரான தாலமி என்ப வர் கூறுவதால் அறியலாகும்" [- கள்ளர் சரித்திரம், பக்கம்-19]

நாகர்களைப் பற்றி டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி கூறுவது: நாகர்கள் நகர நாகரிகமொன்றை வளர்த்தமைத்த தலைவர்கள் ஆவர். நாகரி [தேவநாகரி] என்னும் எழுத்து முறையைப் பரப்பியவர்கள் அவர்களே. இவ் வெழுத்து முறை

யின் பெயர் அவர்களின் பெயரோடு தொடர்புடையது நாகர்களுக்கும் மற்றக் குடியினருக்கும் நடந்த போர்களைப் புனைந்துரைக்கும் புராணக் கதைகளில நாகருடைய வலிமையும் செயல்களும் நன்கு கூறப்பட்டுள்ளன. நாகர்கள் வாழ்ந்த பகுதியை நாகலோக மென்றும், சுவர்க்க வகையில் அதுவும் ஒன்றென்றும் பிற மக்கள் கூறுமாறு அவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு இன்பமான பொருள்கள் பலவும் துய்த்து வாழ்ந்தனர் [- சிலப்பதிகாரம், மங்கலவாழ்த்துக்காதை, வரி 21], உலூபி, சித்திராங்கதையென்ற நாக கன்னியர் இருவரை அருச்சுனன் மணந்ததையும், நாகர் நாகர்குடியினனாகிய தக்ஷன் என்பான் ஒரு புறமும், பரீக்ஷித்தும் அவன் மகன் ஜனமேஜயனும் ஒரு புறமும் நின்று போரிட்டதையும் மகாபாரதம் கூறுகிறது. பேரரசன் மாந்தாதாவின் மகன் புருகுச்சன், நரமதியென்ற நாக கன்னியை மணம் புரிந்ததும், அவனுடைய வழித்தோன்றல்களாகத் திரிசங்கு, ஹரிச்சந்திரன் என்பார் பிறந்ததும் விஷ்ணு புராணத்தில் பேசப் படுகின்றன. அனுமானும் பிற வானரரும் சீதையைத் தேடப் புறப்பட்ட போது, தென்னிந்தியாவில் போகவதி நதி அருகில் அமைந்த. அகன்ற தெருக்களும் கோட்டைகளும் நிறைந்த, நாகரது பெருநகரத்திற்கும் சென்று தேடும்படி சுக்கிரீவன் அவர்களுக்குக் கட்டளையிட்டதாக வால்மீகி இராமாயணம் கூறுகிறது. மகதப் பேரரசு, ஒருகால் நாக மன்னர்களின் ஆணையின் கீழ் இருந்தது. அவர்களில் ஆறாம் மன்னனே புத்தர் காலத்திலிருந்த அஜாதசத்துரு என்பான். இலங்கைத் தீவின் மேற்குப் பகுதி நாகர்களின் ஆணையின் கீழ் இருந்தமையால் பழங் காலத்தில் அது நாகதீபம் என்றழைக்கப்பட்டது. அமராவதி ஸ்தூபத்தில் நாகமுடியுடைய நாகர்களுடைய உருவங்கள் உள்ளன. அங்கே அரசரும் அரசியரும் - முத்தலை நாகமுடிகளும், பொது மக்கள் - ஒருதலை நாகமுடிகளும் உடையவராய் விளங்குகின்றனர். நாகத்தின் தலை வடிவமான முடியை அணிந்த மன்னரை முடி நாகராயர் என்ற பெயர் குறிக்கிறது எனலாம். [- சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பக்கம்-84, 85.]

முரஞ்சியூர் முடிநாகராயர், நன்னாகனார், தமிழ்க்கூத்தன் நாகன் தேவனா ஆகியோர் நாகர் மரபைச் சேர்ந்த புலவர் பெருமக்களாவர் முரஞ்சியூர் முடிநாகராயர் புறநானூற்றில் 2-ஆம் பாடலையும் நன்னாகனார் 376-ஆம் பாடலையும், தமிழ்க் கூத்தன் நாகன் தேவன 334-ஆம் பாடலையும் பாடியுள்ளார்கள்.

முரஞ்சியூர் முடிநாகராயர் தலைச் சங்க காலத்துப் புலவராவார்.

"தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம்" என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்.

அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருக வேளும், முரஞ்சியூர் முடி நாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்நூற்று நாற்பது ஒன்பதின்மர் என்ப" - களவியல் என்ற இறையனார் அகப்பொருள்.

நாய்கர், நாய்க்கர், நாயக்கர் : நாய்கன் என்பது உயர் சொற்கிளவியாக நாய்கர் என்றாயிற்று. நாய்கர் என்பது காலப் போக்கில் நாய்க்கர், நாயக்கர் எனத் திரிந்து வழங்கியிருக்கலாம்.

சங்க காலத்தில் முக்காவல் நாட்டு ஆமூரைத் தலைமையிடமாகக் கொண்டு பெருங்கோழி நாய்கன் என்பவன் ஒருவன் ஆண்டு வந்தான். சங்க கால பெண்பாற் புலவர்களில் ஒருவரான நக்கண்ணையார் இவனது மகளாவார். நக்கண்ணையார, சோழன் போரவை கோப்பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னன் முக்காவல் நாட்டு ஆமூர் சென்று. அங்கே மல்லன் ஒருவனை மற்போரில் வென்று வெற்றி மேம்பட்டதையடுத்து அவன்மீது காதல் கொண்டார்.

நாய்கன், மாநாய்கன் என்பதெல்லாம் ஒரே குடியினராக இருக்கலாம் என்கிறார் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் [- புறநானூறு, 1-200 பாடல்கள், மூலமும் உரையும் பாடல்கள் 80-85].

மாநாய்கன் கண்ணகியின் தந்தை என்பது குறிப்பிடத் தக்கது.

"மாநாய்க ன்குலக்கொம்பர்" - சிலப்பதிகாரம்,
மங்கல வாழ்த்துக் காதை.

நாக்காடியார், நாய்க்காடியார், நாய்க்காவாடியார், நாவிளங்கியார் : மாந்தாதா மரபில் வந்த நாகமன் என்பவனின் மரபினர். நாகமன் நாகபட்டினம் என்னும் [தேவாரம் பெற்ற] சிவதல நகரத்தையுண்டு பண்ணி இராச தானியாகக் கொண்டவன்; இவன பெயர் "நாகாளி" எனவும் வழங்கும்; சிவராத்திரி முதல் யாமத்தில் திருக்குடந்தைக் கீழ்க் கோட்டத்திலும், இரண்டாம் யாமத்தில் திருநாகேச்சரத்திலும், மூன்றாம் யாமத்தில் திருப்பாமபுரத்திலும். நான்காம் யாமத்தில் திருநாகூரிலும் திருக்கோயிலமைத்துச் சிவலிங்கபூசை செய்தவன் ; "நாகேக்சரம்" என்னும் சிவதலத்தையும்; "நாகன்பாடி, நாகன்குடி" நாகன் பேட்டை, நாகமங்கலம், நாகலூர், நாகளூர், நாகபட்டினம், நாகலாபுரம்" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான்.(-சூரிய குலக் கள்ளர் சரித்திரம், பக்கங்கள் 67, 68 )

நெடுங்காளியார். நெடுங்கொண்டார், நெடுத்தார், நெடுந்தரையர், நெடுவாண்டார், நெறிமுண்டார் : நெடுங்கிள்ளி சோழனின் மரபினர். நெடுங்கிள்ளி சோழன் "நெடுவாக் கோட்டை" என்னும் நகரத்தை உண்டுபண்ணி இராசதானியாகக் கொண்டவன். இவன் பெயர் "நெடுவாண்டான்;நெடுங் கொண்டான், நெடும் பிரியன், நெடுவாளி, நெடுந்தரையன்" எனவும் வழங்கும் "நெடுங்களம், நெடுவாயில்" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலங்களையும்; "நெடுங்காடு, நெடுங்குளம்" என்னும் சிவதலங்களையும். "நெடுவூர், நெடுங்குடி, நெடுமங்கலம்; நெடும்புலம், நெடுங்கரை, நெடுவயல், நெடும்பட்டி" என்னும் ஊர்களையும் உண்டாக்கினவன். [- சூரியகுல கள்ளர் சரித்திரம். பக்கம்-127 ]

பசும்படியார், பசும்பிடியர், பசும்பிடியார், பசுபதியர், பசுபதியார் : பஞ்சநத சோழன் மரபில் வந்த பசுபோக சோழனின் மரபினர். பசுபோக சோழன் "ஆலூர்" என்னும் [தேவாரம்

பெற்ற] சிவதல நகரத்தையுண்டு பண்ணி இராசதானியாகக் கொண்டவன். இவன் பெயர் "பசுபதி" எனவும் வழங்கும். இவன் "ஆவடுதுறை, ஆப்பாடி, பசுபதிமங்கை [பசுபதி கோயில்] என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலங்களையும்; "பசுபோக ஆறு" என்னும் சிற்றாற்றையுமுண்டாக்கினான். பசுபோக, ஆறு தற்போது மறைந்து போயிற்று. [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம், 113.]

பசும் பூண்பாண்டியனின் மரபினர் பசும்படியார் எனக் கருதிடவும் வாய்ப்புள்ளது. பசும்பூண்பாண்டியர் என்பது காலப்போக்கில் பசும்படியார் எனத்திரிந்து வழங்கியிருக்க லாம்.

சங்க கால தமிழகத்தில் பசும்பூண்பாண்டியன் என்னும் பெயரில் அரசன் ஒருவன் இருந்தான் என்பதைப் பின்வரும் பாடல்கள் சான்று பகர்கின்றன.

"வில்கெழு தானைப் பசும்பூண்பாண்டியன்"
- அகநானூறு 162, வரி, 21.

"வாடாப் பூவிற் கொங்கர் ஓட்டி
நாடு பல தந்த பசும்பூண் பாண்டியன்"
- அகநானூறு 253, வரிகள் 4, 5.

"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும் பூண் பாண்டியன் ...................."
- குறுந்தொகை 393, வரிகள் 2, 3.

பண்ணிகொண்டர், பண்ணிகொண்டார், பன்னிகொண்டார், பன்றி கொண்டார், பண்ணிமுண்டார், பண்ணியமுண்டார், பண்ணிக்குட்டியார் : பழனிமலையைச் சார்ந்திருந்தபன்றி என்னும் நாட்டை ஆண்ட அரச மரபினர். [- தமிழ்ப் பேரக ராதி, சென்னைப் பல்கலைக்கழகம்; தொல்காப்பியம், சொல் லதிகாரம், 394.]

பம்பாளியார், வம்பாளியார் : பாம்பசோழனின் மரபினர். பாம்பசோழன் சோழநாட்டிற்கும் சிங்கள நாட்டிற்கும் கப்பல் வியாபாரம் நடைபெறும் பொருட்டு பாம்பன் கால்வாய்

[இராமேசுவரத்தீவை இந்தியாவின் பிரதானப் பகுதியுடன் இணைக்கும் பாம்பன் பாலத்திற்கு அடியில் ஓடிக் கொண்டிருக்கிறது.] என்னும் ஓர் பெரிய கால்வாயை உண்டு பண்ணி வங்காளக்குடாக் கடலை இரத்தினாகரக் கடலில் புகவிட்டான்.

"புணரி யொன்றிடை யொன்றுபுக விட்டவன்."
- கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம்

பருதிகொண்டார், பருதிதேவர், பருதிநாடர், பருதிப்பிரியர், பருதியர், பருதியாண்டார், பருதியாளர், பருதியாளியார், பருதியாட்சியார், பருதியுடையர், பருதிராயர், பருத்திகொண்டார், பருத்திக்குடையர், பருத்தி வாண்டையார் : முசுகுந்தன் மரபில் வந்த பருதிமன் என்பவனின் மரபினர். பருதிமன் "பருதி [பருத்தி] கோட்டை" என்னும் நகரத்தை யுண்டு பண்ணி இராசதானியாகக் கொண்டவன்; இவன் பெயர் "பருதி கொண்டான், பருதியாண்டான், பருதிப்பிரியன்" எனவும் வழங்கும். "பருதீச்சரம் (பருத்தியப்பர் கோவில்), மிகைச்சூர்" என்னும் (தேவாரம் பெற்ற) சிவ தலங்களையும்; "பருத்திக்கோட்டை" என்னும் மற்றொரு நகரத்தையும்; பருத்திகுடி, பருத்தியூர், பருத்திச்சேரி, பருத்தி மங்கலம் பருத்திப்பள்ளம்" என்னுமூர்களையும் உண்டாக்கினான். [-சூரியகுலக் கள்ளர் சரித்திரம் பக்கம்-71.]

பாண்டிய மன்னர்களில் வீரபாண்டியனின் மகன் ஒருவனின் பெயர் பருதிகுலபதி எனவிருப்பதையடுத்து இவர்கள் அவன் மரபினராகவும் இருக்கலாம் எனக்கருதிடவும் வாய்ப்புள்ளது.

பல்வவர், பல்லவராயர், பல்லவரையர், பல்லவாண்டார், பல்லவ வாண்டார்: பல்லவ மரபினர். பல்லவர் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு தமிழகத்தை ஆண்டவர்களாவார்கள். பல்லவ மன்னர்களில் சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், நந்திவர்மன் ஆகியோர் புகழ் வாய்ந்த மன்னர்களாவார்கள். உலகப் புகழ்பெற்ற மாமல்ல

புரம் [மகாபலிபுரம்] சிற்பங்களையும் சித்தன்னவாசல் ஓவியங்களையும் உருவாக்கியவர்கள் பல்லவர்களாவார்கள்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் முக்கியப் பொறுப்புகளிலிருந்த பல்லவராயர்கள் :

இராசராசப் பல்லவரையன் : உத்தம சோழனது பெருந்தரத்து அதிகாரிகளுள் ஒருவன். இவன் கோவந்த புத்தூரிலுள்ள திருவிசயமங்கை என்ற சிவன் கோயிலைக் கற்றளியாக எடுப்பித்து அதற்கு நிவந்தமாக நெடுவாயில் என்னும் ஊரையும் நூறு கழஞ்சு பொன்னையும் அளித்தான்

ஈராயிரவன் பல்லவரையனான உத்தம சோழப் பல்லவவரையன் சோழநாட்டில் பாம்புணிக் கூற்றத்திலுள்ள அரசூரில் பிறந்தவன். முதல் இராசேந்திர சோழனுடைய பெருந்தரத்து அதிகாரிகளுள் ஒருவன்.

கருணாகரன் சுந்தரத் தோளுடையான் ஆகிய வளவன் பல்லவரையன். இவன் நடு நாட்டில் பெண்ணாகடத்திலிருந்த ஓர் அரசியல் அதிகாரி இவள் அவ்வூர்க் கோயிலில் யாத்திரிகர்கட்கு உணவளிக்கும் பொருட்டுப் பொருள்கள் அளித்துள்ளான். (- Ins. 262 of 1929).

தண்ட நாயகன் வெண்காடன் சங்கரனாகிய இராசாதிராசப் பல்லவரையன் : உத்தம சோழ நல்லூரினன். இராசாதிராச சோழனின் படைத்தலைவர்களுள் ஒருவன். அரசாங்க அலுவலாருள் பெருந்தரம் என்ற உயர் நிலையில் அமர்ந்திருந்தவன. அரசனால் வழங்கப்பெற்ற இராசாதிராசப் பல்லவராயன் என்னும் பட்டத்தைப் பெற்றவன். இவன் அந்தணர்களையும் சிவயோகிகளையும் நாள் தோறும் உண்பித்தற்குத் திருச்சிராப்பள்ளிக்கு வடமேற்கேயுள்ள திருப்பைஞ்ஞீலிக் கோயிலைச் சார்ந்த செந்தாமரைக்கண்ணன் மடத்திற்கு நிலம் அளித்தான் [- S. I. I. Vol. No. 537].

திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பியான பல்லவராயன் : சயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர்க்கோட்டத்துக் சிறுகுன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூரைச் சேர்ந்த

வன். இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன் ஆகிய சோழ மன்னர்களின் காலத்தில் முதலமைச்சனாகவும், அரசியல் அதிகாரியாகவும், படைத்தலைவனாகவும் இருந்த வன். சேரனையும் சிங்கள வேந்தனையும் வென்றவன். இராச ராச சோழன் இறந்த பிறகு அவனது மனைவி, மக்களைப் பாதுகாத்து, அவன் விரும்பியவாறே அவனது மகன் இரண் டாம் இராசாதிராசனுக்கு முடிசூட்டியவன். இவன் இராசாதி ராசசோழனுக்குச் செய்த உதவிக்கு நன்றிக் கடன்பாடாக, இவன் இறந்த பிறகு [கி. பி. 1171] இவனது மனைவிக்கும் மக்களுக்கும் அரசன் குளத்தூரில் 40 வேலி நிலங்களை அளித் தான் மேலும் இப்பல்லவராயன் பெயரில் மயிலாடுதுறைக்கு அருகில் பல்லவராயன் பேட்டை என்னும் ஓர் ஊரையும் உண் டாக்கினான். [- ED. Ind. Vol. XXI. No 31].

திருச்சிற்றபலமுடையான் பெருமான் நம்பியான பல்லவ ராயன் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் தக்கயாகப் பரணி யில் பாராட்டப் பெற்றுள்ளான். இவன் சோழமண்டலத்து இராசராசேச்சுரம் என்னும் கோயிலை எடுப்பித்து அதற்கு நிவந்தம் அணித்துள்ளான். (-Ins. 427 of 1924 and 435 of 1924.)

வேதவதனமுடையான் அம்மையப்பன் அண்ணன் பல்லவ ராயன்: தொண்டை மண்டலத்தில் பழையனூர் நாட்டிலுள்ள பழையனூர் திருவாலங்காட்டிற் பிறந்தவன். திருச்சிற்றம்பல முடையான் பெருமானம்பிப்பல்லவராயன் இறந்த பின்னர், இராசாதிராச சோழன் பால் அமைச்சர் தலைவனாக நிலவிய பெருமையுடையவன். இவ்வரசன் ஆணைப்படி பாண்டி நாட்டின்மேற் படையெடுத்துச் சென்று நன்றி மறந்த குல சேகர பாண்டியனை அரியணையினின்றும் நீக்கி அதனை வீர பாண்டியனுக்கு வழங்கிய பெருவீரன். சிங்கள வேந்த னாகிய பராக்கிரமபாகுவின் எண்ணம் நிறைவேறாதவாறு சீவல்லபனுக்குத் துணைப்படையளித்து அவ்வேந்தனைப் போரில் வெல்லும்படி செய்த சூழ்ச்சித் திறம் வாய்ந்தவன். இவன், சோழ இராச்சியத்திற்குப் புரிந்த பெருந்தொண்டுகள் பற்றி இவனுக்கு அருமொழித்தேவ வளநாட்டு நென்மலிநாட்டு இராசராசன் பழையனூரில் பத்துவேலிநிலம் இராசாதிராச

சோழனால் அளிக்கப் பெற்றது. இவன் திருவாரூரிலும், வட திருவாலங்காட்டிலும் கோயில்களுக்கு முறையே இறையிலி நிலமும் மூன்று திருவிளக்குகட்கு நிவந்தமும் அளித்தான். (- Ins. 538 of 1903; Ins. 474 of 1905).

**வேளான் மாதவனாகிய இராசவல்லபப் பல்லவரையன் :** சோழ மண்டலத்து விருதராச பயங்கர வளநாட்டு மண்ணி நாட்டிலுள்ள கடம்பங்குடி என்னும் ஊரினன். முதற் குலோத் துங்க சோழனின் அமைச்சர்களில் ஒருவன். அரசனால் அளிக் கப்பெற்ற வேள்இராச வல்லபப் பல்லவராயன் என்னும் பட்டங்களைப் பெற்றவன் இவன் ஆந்திரமாநிலம், சோதா வரி மாவட்டம், பீமாவரத்திலுள்ள திருமால் கோயிலுக்கு ஒரு நுந்தா விளக்கு அளித்துள்ளான் [- S. I. I. Vol. IV No. 20]

**சிவந்தெழுந்த திருமலைராய பல்லவராயர்:** தஞ்சை மாவட்டம், அய்யம்பேட்டைக்கு அருகில் உள்ள வழுத்தூரில் வாழ்ந்தவர். பாண்டியர்களைப் பாதுகாத்த பெருமையுடைய வர். இவர் பாண்டியர்களைப் பாதுகாத்தமையை திருநாரண குளத்திலுள்ள கி. பி. 1539-ஆம் ஆண்டு கல்வெட்டுக் குறிப் பிடுகிறது.

பல்லமடையார்: இலங்கையை அடுத்துள்ள மணிபல்ல வத்தீவை [காரைத்தீவை] பிறப்பிடமாகக் கொண்டவர்கள். [மணி] பல்லவமுடையார் என்பது காலப்போக்கில் பல்லமடை யார் எனத் திரிந்து வழங்கப்படலாயிற்று.

**மணி பல்லவம் வரலாறு:** காவிரிப் பூம்பட்டினத்திற்குத் தெற்கே 30 யோசனையளவிலுள்ள ஒரு சிறு தீவு; தன்னைத் தரிசித்தோர்க்குப் பழம் பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்த பீடிகையென்றும் கோமுகி என்னும் பொய்கையொன் றும் இதில் இருந்தன. அமுதசுரபி என்னும் அதிசய பாத்திரம் இங்குள்ள கோமுகிப் பொய்கையிலிருந்தே மணிமேகலைக்குக் கிடைத்தது. மணிமேகலா தெய்வம் உறைந்ததும், மணிமேக லைத் தமது பழம்பிறப்பின் வரலாறு அறிந்ததும் இத்தீவிலே யேயாகும்.

அமுதசுரபி வரலாறு: தென்மதுரையிற் கலாநியமத்துள்ள சிந்தாதேவியால் ஆபுத்திரனுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வத்தன்மையுள்ள ஒரு பாத்திரம்; இது தன்னுட் பெய்த அன்னத்தை எடுக்க எடுக்கக் குறையாது மேன்மேலும் வளரச் செய்யுந்தன்மையை உடையது; சிலகாலம் ஆபுத்திரன் கையிலிருந்து பலவுயிர்களுக்குப் பசித்துயரைப் போக்கி மணிபல்லவத்துள்ள கோமுகியென்னும் பொய்கையில் அவனாலிடப்பட்டு அதிற் சில நாட்கிடந்து அப்பால் மணிமேகலை கையிற் சென்று தங்கிப் பல உயிர்களுடைய பசித்துயர்களைப் போக்கியதன்றிக் காயசண்டிகையென்னும் ஒரு வித்தியாதர மங்கையினது தீராப்பசியாகிய பஸ்மக வியாதியையும் போக்கிற்று; இஃது அறனோடு, ஆருயிர் மருந்து, உயிர் மருந்து. ஐயக் கடிஞை, ஓடு, கடவுட் கடினஞ, கடிஞை, தெய்வப் பாத்திரம்' பசிப்பிணி மருந்து, பலர்தொழு பாத்திரம், பாத்திரம், மாபெரும் பாத்திரம், வணங்குறு பாத்திரம், விஞ்சைப் பாத்திரம் எனவும் மணிமேகலை காப்பியத்தில் வழங்கப்படும்.

மணிமேகலா தெய்வம் வரலாறு: அரக்கர் வாதை பண்ணாதபடி இந்திரன் ஏவலாலே சிலதீவைப் பாதுகாத்துக் கொண்டிருத்தலை உடைய ஒரு தெய்வம்; கோவலன் தன் குலத்தோனொருவனை இத்தெய்வம் கடலிற் பாதுகாத்த நன்றி பராட்டியே தன் புதல்விக்கு மணிமேகலையென்று பெயரிட்டான். மணிமேகலையை நல்வழிப் படுத்தற்கு எண்ணி அவளை உவவனத்திருந்து மணிபல்லவங் கொண்டு சென்று புத்தபீடிகைக் காட்சியாற் பழம் பிறப்பு உணர்வித்துப் பூர்வஜன்ம நாயகன் இன்னானென்பதைத் தெரிவித்ததன்றிச் சிறந்த மூன்று மந்திரங்களைப் பின்பு அவளுக்கு உபதேசித்தது [- மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், டாக்டர் உ. வே சா ]

பழங்கண்டார், பழங்கொண்டார், பழனங்கொண்டார்: இன்றைய மாலத்தீவுகளையும் அதனைச் சார்ந்திருந்த பழந்தீவுகள் பன்னிராயிரத்தையும்[முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரத்தையும்] முதலாம் இராசராச சோழன் காலத்தில் வெற்றி கொண்டு ஆண்டவர்கள் தம் மரபினர். பழந்தீவு பன்னீராயிர

கொண்டார் எனபது காலப்போக்கில் பழந்தீவுகொண்டார்-பழங்கண்டார், பழங்கொண்டார், பழனங்கொண்டார் எனத் திரிந்து வழங்கலாயிற்று.

பழைசைகொண்டார், பழைசைநாடர், பழைசைநாடார், பழைசையாண்டார், பழைசையுடையார்: பாண்டியநாட்டு மோகூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட பழையன் மாறன் என்பவனின் மரபினராகவோ அல்லது சோழ நாட்டில் 'போர்' என்னும் ஊரைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட பழையன் என்பவனின் மரபினராகவோ இருக்கலாம்.

பழையன் மாறன், பழையன் ஆகிய குறுநில மன்னர்களைப் பற்றிய வரலாறுகள் பதிற்றுப்பத்து, அகநானூறு [186-ஆம் பாடல்], மதுரைக்காஞ்சி ஆகியவற்றில் காணப்படுகின்றன.

பத்தாளர், பக்தாளர், பயத்தார், பத்தாளியார், பத்தாட்சியார், பத்தாச்சியார், பெத்தாச்சியார்: முசுகுந்தன் மரபில் வந்த பத்தாளன என்பவனின் மரபினர். பத்தாளன், பத்தாளன் கோட்டை என்னும் நகரத்தையுண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன் "பத்தூர்" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலத்தையும். பத்தூர், பத்தகுடி, பத்தமங்கலம், பத்தாளன்பட்டி என்னும் ஊர்களையும் உண்டாக்கினவன். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கங்கள்-73, 74.]

பதுங்கராயர்: செம்பியன் மரபில் வந்த பயற்றமன் என்பவனின மரபினர் பயற்றமன் "பயிற்றூர்" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலத்தையும்; "பயற்றங்குடி, பயற்றஞ்சேரி" என்னுமூர்களையுமுண்டாக்கினான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்- 98].

பரங்கிராயர், பரங்கிலிராயர்: செம்பியன் மரபில் வந்த பரங்கிமன் என்பவனின் மரபினர். பரங்கிமன் "பரக்கலக் கோட்டை" என்னும் நகரத்தை உண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன். இவன் "பரங்கிப்பேட்டை, பரங்கிவெட்டிகாடு பரம்பைக்குடி, பரமந்தூர்" என்னுமூர்களை உண்டாக்கினான் [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-95].

பழுவேட்டரையர் சேர அரச மரபினர். முதற் பராந்தக சோழன் மனைவியும், மாமன்னன் இராசராச சோழனின் மனைவி பஞ்சவன்மாதேவியும் [Ins. 385 of 1924]. இம்மரபில் தோன்றியவர்களாவார்கள் அடிகள் பழுவேட்டரையன் கண்டன் மறவன் என்பவன் இம்மரபில் தோன்றி, திருச்சிராப் பள்ளி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், பழுவூரில் வாழ்ந்த குறுநில மன்னனாவான். (- S. I I, Vol. V. Nos. 667, 670, 671, 672 and 676) (- பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம் I பக்கம்-143.)

பழையாறு கொண்டார், பழையாற்றார், பழையாற்றரையர் : சோழ மரபினர். பழையாறு எனனும் ஊரைத் தலைநகரமாகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டதையடுத்து இவர்கள் இப் பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

பழயாறை வரலாறு : பழையாறு நகர் இந்நாளில் ஒரு சிற்றூராகக் கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் உள்ளது. அது முற்காலத்தில் 5 மைல் நீளமும் 2 மைல் அகலமுள்ள பெருநகராயிருந்தது. அது முழையூர், பட்டீச்சுரம், திருச்சத்தி முற்றம் [நாராய் நாராய் செங்கால் நாராய் என்னும் பாடலைப் பாடிய சத்திமுத்த புலவர் ஊர்], சோழ மாளிகை, அரிச்சந்திர புரம், ஆரியப்படையூர், பம்பைப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், கோணப்பெருமாள் கோயில், திருமேற்றளி, தாராசுரம், நாதன் கோயில் என்று வழங்கும் நந்திபுரவிண்ண கரம் ஆகிய ஊர்களைத் தன்னகத்தே அடக்கி பெருநகராக இருந்ததென தேவாரப் பதிகங்களும் அவ்விடங்களில் கண டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன.

சேக்கிழார் அடிகள் பழையாறையைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து-பாரில் நீடிய பெருமை சேர் பதி பழையாறை" [- பெரியபுராணம் நீதி நாயனார் புராணம், பா-1] என்றார்.

சோழநாட்டில் அரசுரிமை ஏற்கும் ஒவ்வொரு மன்னர்களும்

முடிசூட்டிக் கொண்டது பழையாறையிலே என்பார் சேக்கிழார் அடிகள்.

பழையாறைநகர் கி. பி எட்டாம் நூற்றாண்டில் நந்திபுரம் எனவும், ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் பழையாறை நந்திபுரம் எனவும்,பதினொன்றாம் நூற்றாண்டில் முடிகொண்ட சோழபுரம் எனவும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் இராசராச புரம் எனவும் வழங்கப்பட்டது. (– பிற்காலச் சோழர் சரித்திரம் பக்கங்கள் 8, 9, 90).

பண்டாரத்தார் : அறிவு நூல்களை நிரம்பக் கற்ற அறிஞர் களின் மரபினர். பண்டாரம். என்பதற்கு மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவநேய பாவாணர் அவர்கள் விளக்கந்தருகின்றபோது, 'அறிவு நூல்களை நிரம்பக்கற்ற பண்டிதன்' [- பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும், பக்கம்-85]. என்கிறார்.

பிற்காலச் சோழர்கள் காலத்திலிருந்த கோயில் விசாரணை சபையான பண்டாரவாரியத்தின்கண் இவர்களே நீதிபதிகளாக இருந்தார்கள்.

பனைகொண்டார், பனைநாடர், பனைப்பிரியர், பனையதேவர் பனையர், பனையாண்டார், பனையாளர், பனையாளியார், பனையாட்சியார், பனையுடையர், பனையுடையார், பனைராயர் : சேர அரச மரபினர். பனை மரங்கள் மிகுந்திருந்த நாட்டை ஆண்டதாலும், பனம்பூ மாலையையும், பனந்தோட்டையும் அணிந்ததாலும் ("இரும்பனை வெண்டோடு மலைந்தோன் - புறநானூறு 45, வரி 1.) சேர அரசர்களும் அவர்களது மரபின ரும் இப்பட்டப் பெயர்களைப் பெற்றிருக்கலாம்.

பட்டாண்டார், பட்டாளர், பட்டாளியார், பட்டாட்சியார், பட்டுக்கட்டியர், பட்டுக்கட்டியார், பட்டு கொண்டார், பட்டுடை யர், பட்டுப்பிரியர், பட்டுராயர், பவட்டுவார், பாட்டுவார், பாடுவர் : நியமி மரபில் வந்த பட்டிமன் என்பவனின் மரபினர். பட்டிமன் "பட்டுக்கோட்டை என்னும் நகரத்தையுண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன். இவன் "பட்டீச்சரம்" என்னும் தேவாரம் பெற்ற சிவதலத்தையும்;" பட்டி மங்கலம்,

பட்டவெளி, பட்டம், பட்டுராயன்பட்டி (பவட்டுரான்பட்டி)" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம்-பக்கம்-79.)

பாண்டராயர், பாண்டுராயர், பாண்டுரார் : பஞ்சநத சோழனின் மரபில் வந்த பாண்டு சோழனின் மரபினர் பாண்டு சோழன் "பஞ்சநதிக் கோட்டை''யை இராசதானியாகக் கொண்டவன். இவன் "பாண்டவாய்" என்னும் ஆற்றையும், "பாண்டூர்" என்னும் சிவதலத்தையும், பாண்டூர், பாண்டுகுடி; பாண்டுமங்கலம், பாண்டமங்கலம், பாண்டராயன்பட்டி என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். (- சூரியகுலக்கள்ளர் சரித்திரம், பக்கம்-111)

கண்டப்பிள்ளை, கண்டப்பிரியன், கண்டர்கிள்ளி, கண்டர் சில்லி, காடப்பிள்ளை : கண்டர்கிள்ளி சோழனின் மரபினர். கண்டர்கிள்ளி சோழனின் வேறு பெயர்களான கண்டன், கண்டராயன், கண்டப்பிரியன் என்னும பெயர்களால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

கண்டியர், கண்டியார் : சோழ மரபினர். தஞ்சை பெரியக் கோயிலைக் கட்டியவனும் உலகநாடுகளில் முதன்முதலில் காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்தியவனுமான மாமன்னன் இராசராச சோழனுக்கு இராசன் கண்டியன் என்னும் ஒரு சிறப்புப் பெயர் உள்ளது.

சங்க காலச் சோழ மன்னர்களில் சீரும் சிறப்பும் பெற்ற கரிகாற்சோழன் இலங்கையின்மீது படையெடுத்துக் கண்டி என்னும் பகுதியை வென்றதையடுத்து அவனும் அவனது படை வீரர்களும் கண்டியன் என்னும் பட்டப் பெயரைப் பெற்றார்கள் என வரலாற்றாய் வாளர்கள் உரைப்பர்.

கரிகால் சோழன் வரலாறு : இவனுக்குக் கரிகால் பெரு வளத்தான், திருமாவளவன் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவன் பொருநராற்றுப்படை, பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவனாவான். இவன் தந்தையின் பெயர் சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி என்பதாகும்.

இவனுடைய மாமன் பெயர் இரும்பிடர்த்தலையர் என்பதாகும்.

இவன் இளமையில் தீயில் சிக்கி கால் ஒன்றைக் கருக்கிக் கொண்டதால் கரிகாலன் எனப்பட்டான். இவன் தமது 12ஆம் வயதிலே முதியோர் இருவர் வியக்கும் வண்ணம் வழக்கொன்றை விசாரித்துத் தீர்ப்புரைத்தான் (மணிமேகலை 4 : 107-108) பொருநராற்றுப்படை 187-8; பழமொழி நானூறு, 21, 62 105 ) இவன் அரியணையில் ஏறியது விந்தையானதாகும். இவன் கருவூரில் தங்கியிருந்தபோது கழுமலத்திலிருந்து யானை ஒன்று வந்து இவனைத் தன் முதுகின்மேல் ஏற்றிக் கொண்டு வந்து அரியணையின்மேல் அமர்த்திற்றென செய்திகள் உரைக்கின்றன.

கரிகாலன் சிறந்த தமிழ்ப் புரவலன். தன்மீது பட்டினப் பாலை என்னும் நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு இவன் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான். (- கலிங்கத்துப் பரணி 198.)

நீடாமங்கலத்திற்கு அருகில் உள்ள வெண்ணி [கோயில் வெண்ணி] என்னும் ஊரில் நிகழ்ந்த ஒரு போரில் சோழன் கரிகாலன் சேரன் பெருஞ்சேரலாதனையும், பாண்டியன் ஒருவனையும் பதினொரு வேளிரையும் ஒருங்கே தோல்வியுறச் செய்தான். (- பொருநராற்றுப்படை; 146-8; அகநானூறு 55 : 10-11; 246; 8-13; புறநானூறு 7, 66, 224.) இவனைப் பற்றிய பாடல்கள் புறநானூற்றில் பெருமளவில் சேர்க்கப்பட்டுள்ளன. இவன் இமயம் வரையில் படையெடுத்துச் சென்று தன்னை எதிர்த்து நின்ற மன்னர் அனைவரையும் வணக்கி இமயத்தில் புலி இலச்சினையைப் பொறித்துத் திரும்பினான். தன் தோள் வல்லமையினால் தமிழகம் முழுவதையும் தன் ஆட்சியின்கீழ்க் கொணர்ந்தான்.

கரிகாலன் இலங்கையின்மீது படையெடுத்துச் சென்றான். அது இவனுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். இலங்கைப் போரினால் கரிகாலனுக்கு விளைந்த நன்மைகள் பல. அவன் சிங்களவர் பன்னீராயிரவரைச்சிறை செய்து கொண்டு வந்து காவிரிப்பூம்பட்டினத்தில் கோட்டை

கட்டவும் காவிரியின் குறுக்கே கல்லணையைக் கட்டவும் பயன்படுத்திக் கொண்டான். [- தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், பக்கம்-174, 175, டாக்டர் கே கே. பிள்ளை].

மாமன்னன் இராசராச சோழன் வரலாறு: இவன் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழனுக்கும் வானவன் மாதேவிக்கும் சதயநாளில் மகவாகப் பிறந்தவனாவான். [S. I. I. Vol. II, No. 26.]

இம்மன்னன் தில்லைச் [சிதம்பரம்] சிற்றம்பலத்திற்குப் பல்வகைப் பணிகள் புரிந்தமை பற்றித் தில்லைவாழ் அந்தணர்கள் கி. பி. 1004-ஆம் ஆண்டில் இவனுக்கு இராசராசன் எனும் பட்டம் வழங்கிப் பாராட்டினர் என்றும் அது முதலே இவன் இராசராசன் எனவும் வழங்கப்பெற்றனன் என்றும் வரலாற்றாய்வாளர்கள் சிலர் உரைக்கின்றனர். [- S. I. I., Vol. II, Introduction, PP 13 & 14.) ஆனால் இது உண்மையல்ல; மாமன்னன் இராசராசன் அடைந்த வெற்றியின் அடிப்படையிலேயே கி. பி. 988-ஆம் ஆண்டு முதல் இச்சிறப்புப் பெயரைப் பெற்றானென திருவாளர் டி. வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தமது பிற்காலச் சோழர் சரித்திரம் என்னும் நூலின்கண் உரைப்பார்.

இவனை இளமையில் வளர்த்தவர்கள் முதல் கண்டராதித்த சோழன் மனைவியாகிய செம்பியன் மாதேவியும் இவன் தமக்கையாகிய குந்தவைப் பிராட்டியுமாவர்.

தன் ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்றுண்மைகளை நன்கு விளக்கும் [1]மெய்க்கீர்த்தியை இனிய தமிழ்மொழியில் அகவற்பாவில் அமைத்துத் தன் கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் பொறிக்கும் வழக்கத்தை முதலில் மேற்கொண்ட பெருவேந்தன் நம் இராசராச சோழனேயாவான்.

மாமன்னன் தென்னிந்தியாவின் பெரும் பகுதியையும் இலங்கை, மாலத்தீவுகள் போன்ற கடல்கடந்த நாடுகளையும் வென்றவனாவான். இவன் காலத்திலும் இவன் காலத்திற்குப் பிறகும் தென்னிந்தியாவின் பெரும் பகுதியையும் கடந்த நாடு

களையும் வெற்றி கொண்ட முதல் இராசேந்திர சோழன் இவனது மகனேயாவான்.

இராசராச சோழனின் சிறப்புப் பெயர்கள்: இராசராசனின் இயற்பெயர் அருண்மொழித் தேவன் என்பதாகும். இராசராசன் க்ஷத்திய சிகாமணி, இராசேந்திரசிங்கன், உய்யக் கொண்டான் பாண்டியகுலாசனி, கேரளாந்தகன், நித்த வினோதன, இராசன் கண்டியன், நாட்டான், நாட்டரையன், இராசாசிரயன், சிவ பாதசேகரன், சநநாதன், சிங்களாந்தகன், சயங்கொண்ட சோழன், மும்முடிச் சோழன், இரவிகுலமாணிக்கம், நிகரிலி சோழன், சோழேந்திரசிங்கன், சோழமார்த்தாண்டன், இராச மார்த்தாண்டன், தெலுங்குல காலன், கீர்த்திப் பராக்கிரமன் என்பன இவனது சிறப்புப் பெயர்களாகும்.

தஞ்சை பெரியக் கோயில் வரலாறு: உலகப் புகழ் பெற்ற தஞ்சை பெரியக் கோயிலைக்கட்டியவன் மாமன்னன் இராச ராச சோழனாவான். தஞ்சை பெரியக்கோயிலுக்கு இராசராசன் இட்டப் பெயர் இராசராசேச்சுரம் என்பதாகும். அக்கோயில் 793 அடி நீளமும் 397 அடி அகலமும் உடையதாகும். (- S. I. I, Vol. II, No. 1). அதன் கண் அமைந்துள்ள நடு விமானம் 216 அடி உயரம் உடையது. அதன் உச்சியில் போடப்பட்டிருப்பது ஒரே கருங்கல். அதன் எடை 80 டன் களாகும். மேலே உள்ள உருண்டைக் கல்லுக்கும் கீழுள்ள தலத்தில் ஒரு மாட்டு வண்டி கோபுரத்தின் உச்சியைத் தாராள மாகச் சுற்றி வரலாம். கோபுரத்தின் உச்சியிலுள்ள தலத்தின் நான்கு புரங்களிலும் கீழே கோயிலின் முகப்பிலுள்ள பெரிய நந்தியைப் போன்று, மூலைக்கு இரண்டு நந்திகளாக மொத் தம் எட்டு நந்திகள் உள்ளன கோபுரம் இடையில் பிடிமானம் இல்லாமல் கட்டப்பட்டுள்ளது கோபுரத்தின் அஸ்திவாரம் வெறும் 5 அடி ஆழமட்டுமே உடையதாகும். கோபுரத்தின் உச்சியிலுள்ள செப்புக்குடம் 3083 பலம் நிறைவுடையது என்றும் அக்குடத்தின்மேல் போடப்பட்டுள்ள பொற்றகடு 2926½ கழஞ்சு கொண்டது என்றும் அவற்றை ஆராய்ந்த அறிஞர்கள் கூறுகின்றார்கள். (The Great Temple at Tanjure' PP. 6, 8, 9; S. I. I., Vol. II. P 3.)

அக்கோயிலின் திருப்பணி இராசராச சோழனது ஆட்சியின் 19-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 23-ஆம் ஆண்டில் நிறைவுற்றது,

அக்கோயிலுள்ள முதற்கோபுர வாயிலாகிய திருத்தோரண வாயில் கேரளாந்தகன் வாயில் எனவும் (- S. I I., Vol. II., No 1), இரண்டாம் வாயிலாகிய திருமாளிகை வாயில் இராசராசன் வாயில் எனவும் [S. I I. Vol. II, PP. 227 and 332] அந்நாளில் வழங்கியுள்ளன. அக்கோயில் விமானம் தட்சிணமேரு என்று வழங்கியது. [S. I. I., Vol. II., Page-7]. கோயிலின் வெளித் திருச்சுற்றிலுள்ள நந்தி ஒரே கல்லில் அமைக்கப்பட்டது. அது பன்னிரண்டடி உயரமும் பத்தொன்பதரை அடி நீளமும் எட்டேகாலடி அகலமும் உடையது. [The Great Temple at Tanjure, Page 12.]

கண்ணரையர்: மகாபாரதக் கண்ணனின் மரபினர். கண்ணன் + அரையர் [அரசர்] = கண்ணரையர் என அழைக்கப்பட்டார்கள். கண்ணனை திராவிட மன்னன் என்பார் மொழி நூல் மூதறிஞர் ஞா. தேவநேய பாவாணர் அவர்கள்.

குமரிக்கண்டம் [இலமூரியாகண்டம்] கடல் கோளால் அழிவதற்குமுன் இவனும் இவனது மூதாதையரும் வட இந்தியா சென்று, தென்னகத்திலிருந்து வந்த நினைவைப் போற்றும் வகையில் மதுரா [மதுரை] என்னும் பதியை உருவாக்கி அதன்கண் அரண்மனை அமைத்து அரசாட்சி செலுத்தி வந்தாகள். [- பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்கம் 18, ஞா. தேவநேயர்.]

கதவாடியார்: சேர அரச மரபினர். கதகளி என்னும் ஆடற் கலையைத் தோற்றுவித்த ஒரு சேர நாட்டுச் சிற்றரசனின் மரபில் வந்தவர்கள். கதகளி ஆடியார் என்பது காலப்போக்கில் கதவாடியார் எனவழங்கப்படலாயிற்று. கரிகாற் சோழன் மகள் ஆதிமந்தி என்பவளை மணந்த ஆடற்கலை வல்லுநன் சேர மன்னன் ஆட்டனத்தி இம்மரபைச் சார்ந்தவனாவான்.

பாண்டியர், பாண்டியராயர் : பாண்டிய மரபினர். பாண்டியர் குமரிக்கண்டத்தையும் [இலெமூரியா கண்டம்] பாண்டிய

நாட்டையும் ஆண்டவர்களாவார்கள். இவர்கள் முச்சங்கம் வைத்து புலவர்களை ஆதரித்துத் தமிழை வளர்த்தார்கள்.

பாண்டியர்களில் சிறந்தவர்கள், 1. நிலந்தருதிருவிற் பாண்டியன்; 2 பொற்கைப் பாண்டியன்; 3. ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்; 4. தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோராவர்.

**நிலந்தரு திருவிற்பாண்டியன் :** இவன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனவும், பாண்டியன் மாகீர்த்தியெனவும், நெடியோன் எனவும் [- மதுரைக்காஞ்சி, வரி-60-61] வழங்கப்பெறுகிறான். இவனது பேரவையின்கண்ணே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது. [- தொல்காப்பிய பாயிர உரை, நச்சினார்க்கினியம், பக்கம்-9].

இவன் கடற்பிரளயத்தால் குமரிமுனைக்குத் தெற்கிலிருந்த குமரிநாடு [இலெமூரியா கண்டம்] முதலியன அழிதற்கு முன்னர் அக்குமரி நாட்டில் பஃறுளி என்றதோர் ஆற்றை வெட்டுவித்துக் கடற்றெய்வத்திற்கு விழவெடுத்தனன்.

"முன்னீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே,"

[- புறநானூறு-9].

**பொற்கைப் பாண்டியன் :** இவன் கடைச்சங்க நாளில் வாழ்ந்த பாண்டியருள் ஒருவனாவான். கண்ணகி முன் தோன்றிய மதுரை மாதெய்வம் பாண்டியர்களது செங்கோற் பெருமையை அவளுக்கு உணர்த்துங்கால் இவனது வரலாற்றையே எடுத்தோதியது. அவ்வரலாறு பின்வருமாறு :

ஒருநாள், கீரந்தை என்னும் வேதியனொருவன் தன் மனைவியை மன்றத்தின்கண் இருத்தி, அரசனது செங்கோல் அவளைக் காக்கும் என்று கூறிவிட்டு வெளியே சென்றனன். மற்றொரு நாள் அவன் தன் இல்லாளுடன் மனையகத்திருக்குங்கால், பாண்டிய அரசன் ஒருவன் கதவைப் புடைத்தனன். உடனே அம்மறையோன் தன் மனைவிபால் ஐயமுற்று

அவளை நோக்க, அதனையுணர்ந்த அந்நங்கை முன்னொரு நாள் அரசனது செங்கோல் என்னைக் காக்கும் என்று கூறி, மன்றத் திருத்திச் சென்றீர்களே, இன்று அச்செங்கோல் காவாதோ? என்றுரைத்தாள். அதனைப் புறத்தே கேட்டுக் கொண்டு நின்ற அரசன, தன் செய்கைக்குப் பெரிதும் வருந்தி, விரைவில் அரண்மனைக்குச் சென்று அது தனக்குத் தகவன்று என்றெண்ணித் தன் செய்கைக்குத் தானே சான்றாகி, வாளால் தன் கையைக் குறைத்துக் கொண்டனன். பிறகு பொன்னாற் பொய்க்கையமைத்துக்கொண்டு, பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்து வந்தான். இது பற்றியே இவன் பொற்கைப் பாண்டியன் என்று வழங்கப் பெற்றான். [- பாண்டியர் வரலாறு, பக்கங்கள் 5, 11, 12].

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்: சிலப்பதிகார காலத்தில் வாழ்ந்தவன். கண்ணகியின் கணவன் கோவலனை ஆராயாமல் கொன்றமைக்காக அரியணையிலே உயிரை விட்டவன். இவனோடுகூட இவனது மனைவி கோப்பெருந்தேவியும் உயிர்நீத்தாள்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்: இவன் கடைச்சங்க நாளில் வாழ்ந்த பாண்டியர்களுள் ஒருவனாவான். இளமையில் அரசுகட்டில் ஏறியவன். பால்மனம் மாறாப் பருவத்திலேயே சேர, சோழ மன்னர்களையும் வேளிர் ஐவரையும் வென்றவன். இவனிடம் தோற்றோடிய மன்னர் எழுவரையும் இவன் தலையாலங்கானம் என்னுமிடத்தில் பெரும்போர் நடத்தி வாகை சூடியதால் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் எனப் பெயர்பெற்றான்.

பாப்பரையர், பாப்பிரியர், பாப்புடையர், பாப்புடையார், பாப்பு ரெட்டியார், பாப்புவெட்டியார்: பாப்பனசோழன் மரபினர். பாப்பனசோழன் பாப்புநகரம், பாப்புமங்கலம், பாப்பனசேரி, பாப்பா கோயில், பாப்பாகுடி, பாப்பூர், பாப்பரையன்பட்டி, பாப்புடையன் பட்டி என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-109].

பாலண்டார், பாலாண்டார், பாலியர், பாலியார், பால்ராயர் பாலைநாடர், பானாடர், பாலைநாட்டார், பானாட்டார், பால் நாட்டார், பாலையர், பாலைராயர், பாலையாண்டார், பாலை யுடையர், பாலுடையர், பாலுடையார், பாவுடையார் : பலைய சோழன் என்பவனின் மரபினர். பாலையசோழன் "பாலைய கோட்டை" என்னும் நகரத்தை உண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன். இவன். "பாலாறு, பழைய பாலாறு" என்னும் பேராறுகளையும். பாலைத்துறை, பாற்றுறை [பால்துறை]" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலங்களையும், "பாலையூர், பாலைக்குடி, பாலைக்குரிச்சி, பாலைக்காடு, பாலைப்பட்டி, பாலைப்பட்டு, பாலாகுடி, பாலைவாய், பாலாண்டான்பட்டி" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். [சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-123 ]

பிச்சயர், பிச்சயன்கிளையார், பிச்சராயர். பிச்சாளியர், பிச்சா ளியார், பிச்சாடியர், பிச்சாடியார் : திருக்கற்றளிப் பிச்சன் என்பவனின் மரபினராக இருக்கலாம்.

திருக்கற்றளிப் பிச்சன் வரலாறு : முதல் பராந்தக சோழன் மற்றும் சுந்தரசோழனின் படைத்தலைவனாக இருந்தவன். முதல் பராந்தக சோழனின் பொருளுதவியால் திருவாவடு துறையில் கோயில் ஒன்று எடுப்பித்தான். [ Ins. 126 of 1925 and 143 of 1925.] சுந்தரசோழன் ஆட்சியில் படைத் தலைமை பூண்டு ஈழ நாட்டின்மீது போர்த்தெடுத்தான். [- S. I. I. Vol. III, No. 51.]கோனாட்டின் தலைநகராகிய கொடும்பாளூரி லிருந்த வேளான் சுந்தரசோழன் என்னும் சிற்றரசன் இவனது மகனாவான்.

பிச்சாண்டார் : முதல் இராசாதிராச சோழன் மரபினராக வோ அல்லது அவன் காலத்தில் அவனது ஆட்சிக்குட்பட்டி ருந்த பிச்சாண்டார் கோயிலை ஆண்ட ஒரு சிற்றரசனின் மரபின ராகவோ இருத்தல் வேண்டும். பிச்சாண்டார் கோயிலில் முதல் இராசாதிராச சோழனின் 30-ஆம் ஆட்சி ஆண்டின் கல்வெட் டொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. [- பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கம்-214].

பிரமராயர், பிரமர் செம்பியன் மரபில் வந்த பிரமன் என்பவனின் மரபினர். பிரமன் "பிரமபுரம் [சீகாழி]" என்னும் நகரத்தை இராசதானியாகக் கொண்டவன். "பிரம்பில்" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலத்தையும், "பிரம்பூர்" என்னும் சுப்பிரமணிய தலத்தையும் "பிரம்பூர்'' என்னும் ஊர்களையும் உண்டாக்கியவன். [சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம் 95].

பிற்காலச் சோழர்கள் காலத்தில் பிரமமாராயன் என்னும் பட்டம் பெற்றவர்களின் மரபினர்கூட பிரமர், பிரமராயர் என வழைக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது.

இப்பட்டப் பெயர்களை அடிப்படையாக வைத்து நோக்குகின்றபோது பிற்காலச் சோழர்கள் பிரமமாராயன் என்னும் பட்டத்தை அரசு அலுவலிருந்த பிராமண குலத்தவர்க்கன்றி கள்ளர் இனத்தவருக்கும் அளித்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. [- பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம் III, பக்கங்கள் 17, 18.]

பிலிராயர், புலிராயர், பீலிமுண்டார், புலிகொண்டார், புலிக்கொடியார், புலிக்குட்டியார் பெரும்பற்ற சோழனின் மரபினர். பெரும்பற்ற சோழனின் வேறு பெயர்களான புலிராயன், புலி கொண்டான், புலிக்கொடியன் என்னும் பெயர்களால், இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். பெரும்பற்ற சோழன் காலம் முதலே சோழர்களுக்குப் புலிக்கொடியும் "புலிக்கொடியோன" எனனும் பெயரும் உண்டாயிற்று.

'புலியெனக்கொடியி லிந்திரனை வைத்தவனும்''
- கலிங்கத்துப்பரணி, இராசபாரம் பரியம்,
[- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம், 115, 116.]

''புலி'' என்னும் நாட்டை வெற்றி கொண்டு ஆண்டவர்கள் இப்பட்டப்பெயர்களைப் பெற்றிருக்கவும் வாய்ப்புள்ளது.

புலிநாடு வரலாறு : சித்தூர் மாவட்டத்தின் புங்கனூர்ப் பகுதியும், நுளம்பபாடி, பெல்லாரி மாவட்டத்தின் ஒரு பகுதியும் கர்நாடகத்தின் ஒரு பகுதியும் இணைந்தது "புலிநாடு'' என்பதாகும். [- சைவ இலக்கிய வரலாறு, பக்கம் 6].

புள்ளவராயர், புள்ளராயர், பிள்ளைராயர் : செம்பியன் மரபில் வந்த "புள்ளமன்" என்பவனின் மரபினர். புள்ளமன் "புள்ளன்பாடி" என்னும் நகரத்தை இராசதானியாகக் கொண் டவன். இவன் "புள்ள மங்கை" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலத்தையும், "புள்ளமங்கலம், புள்ளங்குடி, புள்ளம்பட்டி, புள்ளராயன்பட்டி, புள்ளவராயன்குடிக்காடு என்னும் ஊர் களையும் உண்டாக்கினான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-91].

புல்லியின் மரபினர் புள்ளவராயர் [புல்லியரையர், புல்ல ராயர் – புள்ளராயர் - புள்ளவராயர்] என அழைக்கப்பட்டிருக் கலாம் எனக் கருதிடவும் வாய்ப்புள்ளது.

புல்லியின் வரலாறு : சங்க காலத்தில் வாழ்ந்தவன். வீரத் திலும் வள்ளன்மையிலும் மேம்பட்டவன். கல்லாடனராலும் மாமூலனராலும் பாடப்பெற்றவன்.

புல்லியைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன,

"கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம்"
'புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து.'
'புல்லி நன்னாட் டும்பர்'
'பொய்யா நல்லிசை மாவண் புல்லி'
'நெடுமொழிப் புல்லி'
'புல்லி - வியன்றலை நன்னாட்டு வேங்கடம்'
'மா அல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடம்'- அகநானூறு
'கடுமான் புல்லிய காடிறந்தோரே'
- நற்றிணை.
'காவிரி கனையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி யம்பர் கிழவோன்
நல்லருவந்தை வாழியர் புல்லிய
வேங்கட விறல்வரைப் பட்ட
ஓங்கல் வானத் துறையிலும் பலவே' – புறநானூறு.

புண்ணாக்கர், புன்னாகர், புன்னையர், பூனையர்: செம்பியன் மரபில் வந்த புன்னாகமன் என்பவனின் மரபினர். புன்னா கமன் ''புன்னையூர்'' என்னும் நகரத்தையுண்டாக்கி இராச தானியாகக் கொண்டவன்; இவன் "புன் கூர்" என்னும் [தேவா ரம் பெற்ற] சிவதலத்தையும் "புன்னவாயில், புன்னைத்தூர், புன்னையூர், புன்னைக்குடி, புன்னை மங்கலம், புன்னாகன் குடி என்னுமூர்களையும் உண்டாக்கினான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-93, 94].

பொன்னாக்கர் என்பது காலப்போக்கில் புன்னாக்கர் அல்லது புண்ணாக்கர் என்று திரிந்து வழங்கிடவும் வாய்ப் புள்ளது.

போர்க்களத்தில் விழுப்புண்களைப் பெறுவதை ஆக்க மாகக் [செல்வமாக] கொண்டவர்கள் அல்லது மாற்றார் சேனைக்குப் புண்களை ஏற்படுத்திய போர் வீரர்கள் புண் ணாக்கர் என்றழைக்கப்படவும் வாய்ப்புள்ளது.

விழுப்புண் : முகத்தினும் மார்பினும் பட்டபுண். [-திருக் குறள், 776, பரிமேலழகருரை.]

பழந்தமிழ் வீரர்கள் விழுப்புண்படாத நாட்களையெல் லாம் வீண் நாட்களாகவே கருதினார்கள் என்று வள்ளுவப் பெருந்தகைக் குறிப்பிடுகிறார்.

"விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து." - திருக்குறள், 776.

புறம்பயங்கொண்டார், புறம்பையங்கொண்டார், புறம்பயத் தார், புறம்பையத்தார், புறம்பயப்பிரியர், புறம்பயமுடையார், புறம் பயர், புறம்பயாண்டார், புறம்பயாளர், புறம்பயாளியார். புறம் பாளியார், புறம்பயாட்சியார் : திருப்புறம்பயப் போரில் வெற்றி வாகை சூடிய போர்வீரர்களின் மரபினர்.

திருப்புறம்பயப் போர் வரலாறு: திருப்புறம் பயப்போர் விசயாலய சோழன் காலத்தில் நடந்த ஒரு பெரும் போராகும். திருப்புறம் பயப் பெரும் போரின் பயனாக, பாண்டியர் முதற்

பேரரசின் வலிமையும் பல்லவர் வலிமையும் குறைந்து போயின; சோழர் முடி மன்னராகிச் சோழ மண்டலம் முழுமையும் தம் ஆணை செல்லுமாறு ஆட்சிபுரியும் பேறு பெற்றனர் பல்லவர் ஆட்சியும் பாண்டியர் ஆட்சியும் சோணாட்டில் சிறிதுமின்றி ஒழிதற்கும் சோழரது ஆட்சி மீண்டும் நிலை பெறுதற்கும் ஏதுவாயிருந்த இத்திருப் புறம்பயப் பெரும்போர் தமிழக வரலாற்றில் முதன்மையான இடம் பெறுதற்குரிய ஒரு பெரிய நிகழ்ச்சியாகும். இப்பெரும் போருக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் இளமையில் வென்ற தலையாலங்கானப் போரையும் ஆங்கிலேயர் வென்ற பிளாசிப் போரையும் ஒப்பாகக் கூறலாம். [- பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கம்-26 ]

திருப்புறம்பயம் என்னும் ஊர் கும்பகோணத்திற்கு வடமேற்கில் எட்டுக்கல் தொலைவில் மண்ணியாற்றின் வடகரையிலுள்ளது. அதாவது, கும்பகோணத்திலிருந்து திருவையாறு செல்லும் பேருந்து வழித்தடத்தில் உள்ளது

திருப்புறம் பயத்திலும் கச்சியாண்டவன் கோயிலிலும் திருப்புறம்பயப்போரில் தனக்கு உதவியாயிருந்த பல்லவ மன்னனுக்குக் கங்கமன்னன முதற் பிருதிவிபதிக்கும் விசயாலய சோழன் எடுப்பித்த நடுகல்லும் கோயிலும இன்றும் உள்ளன.

புத்திகழிச்சார், புத்திசழிந்தார், புட்டில்கழிந்தார், புற்றில் கழிந்தார்: பஞ்சநத சோழனின் மரபில் வந்த புத்திகழிச்ச [அறிவின் மிகுந்த] சோழனின் மரபினர். புத்திகழிச்ச சோழன் "புத்திகழிச்சான் கோட்டை" என்னும் நகரத்தையுண்டு பண்ணி இராசதானியாகக் கொண்டவன். இவன "புத்தூர்" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலங்களையும். 'புத்தபுரம், புத்தூர், புத்தகுடி, புத்தமங்கலம், புத்தங்கோட்டகம் என்னுமூர்களையும், "புத்தாறு" என்னும் சிற்றாற்றையும் உண்டாக்கினான். [- சூரியகுலக கள்ளர் சரித்திரம், பக்கம்-112.]

பூழிநாடர், பூழிநாடார், பூழியர்பிரான், பூழியூரார், பூழிராயர் சேர நாட்டில் பூழி நாட்டையாண்ட அரச மரபினர் சேர

அரசர்களில் செல்வக் கடுங்கோவாழியாதன் "பூழியர் மெய்ம் மறை" [- பதிற்றுப்பத்து. 73:13] என்றும் இளஞ்சேரல் இரும் பொறை "பூழியர் கோ" என்றும் குறிப்பிடப்பட்டார்கள்.

செல்வக் கடுங்கோவாழியாதன் வரலாறு: இவன் சேரமான் கடுங் கோவாழியாதன் என்றும் அழைக்கப்படுவதுண்டு. இவனைப் "பொறையன் பெருந்தேவி யீன்ற மகன்" என்று பதிற்றுப்பத்து ஏழாம் பதிகம் கூறுகிறது இவன் திருமாலி டத்து மிக்க ஈடுபாடுடையவன். இவன் தன்னைப்பாடிய கபிலருக்கு நூறாயிரங் காணம் பொன் தந்து நன்றா வென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் பரிசாகக் கொடுத்தான்.

இளஞ்சேரல் இரும்பொறை வரலாறு: தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைக்குப்பின் சேரநாட்டு அரசனாக விளங்கியவன். மிக்க செல்வமும் சிறப்பும் உடையவன். பெருங் குன்றூர் கிழாரால் பாடப் பெற்றவன். பதினாறாண்டுகள் அரச வீற்றிருந்தவன்.

பெரிச்சியர், பெரிச்சியார், பெரியாட்சியார், பெரிச்சிக்கணக்கர்: பெரிய சோழனின் மரபினர். பெரிய சோழன் "பெரிய கோட்டை" என்னும் மூன்று நகரங்களை யுண்டுபண்ணி இராசதானிகளாகக் கொண்டவன். இவன் "பெரியகுடி, பெரிய லூர்" என்னும் நகரங்களை உண்டாக்கினான், [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-123].

பேரரையர், பேதரையர்: பேர்சோழன் மரபினர். பேர் சோழன் "பேரையூர்" என்னும் [சிவதல] நகரத்தையுண்டாக்கி இராசதானியாக கொண்டவன். இவன் "பேரூர், பேராவூர், பேரெயில் "என்னும் [தேவாரம் [பெற்ற] சிவதலங்களையும், "பேரையூர், பேராவூருணி முதலிய ஊர்களையும் உண்டாக்கி னான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம் 124.]

பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகன் என்பவனின் ஆட்சிக் காலத்திலிருந்த அரசியல் தலைவர்கள் பலரில் தீரதரன் மூர்த்தி எயினன் என்பவனும் சங்கரன் சீதரன் என்பவனும் பேரரையன் என்னும் பட்டத்தைப் பெற்றிருந்தார்கள்.

தீரதரன் மூர்த்தி எயினன் வரலாறு: இவன் பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகனது 17-ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப் பெற்ற சீவரமங்கலச் செப்பேடுகளில் [-Indian Antiquary PP. 69-75] ஆணத்தியாகக் குறிக்கப் பெற்றவன். பராந்தகனது ஆட்சியின் பிற்பகுதியில் பாண்டிப் படைகட்கு மாசாமந்தனாக நிலவியவன். அரசனால் அளிக்கப்பெற்ற வீர மங்கலப் பேரரையன் என்னும் பட்டம் எய்தியவன்.

சங்கரன் சீதரன் வரலாறு: இவன் பாண்டிய நாட்டுக் கெழுலூரின் கண் பிறந்தவன். பாண்டியன் நெடுஞ்சடையன் பராந்தகனது யானைப் படைக்குத் தலைவன். பாண்டியனால் வழங்கப் பெற்ற பாண்டி இளங்கோமங்கலப் பேரரையன் என்னும் பட்டம் உடையவன். (Indian Antiquary PP. 69-75; பாண்டியர் வரலாறு, பக்கம்-55.)

பொதியர், பொய்யர், பொய்த்தார், பொய்ந்தார், பொய்ந்த ராயர், பொய்ந்தரையர்: பாண்டியர் மரபினர். பாண்டியர் பட்டப் பெயர்கள் பலவற்றுள் பொதிய வெற்பன் என்பதும் ஒன்றாகும். [- சூடாமணி நிகண்டு, மக்கட் பெயர்த் தொகுதி 20-ஆம் செய்யுள்.] பொதிய வெற்பன் என்றால் பொதிய மலைக்குத் தலைவன் என்பது பொருளாகும். [- சங்க காலச் சிறப்புப் பெயர்கள் பக்கம்-222] பொதிய மலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டவர்கள் பொதியர் முதலான பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். சங்க காலத்தில் பொதியமலையைப் பாண்டியர்களைப் போல கடையெழு வள்ளல்களில் ஒருவனான ஆய் அண்டிரன் என்பவனும் ஆண்டு வந்ததாக வரலாறு கூறுகிறது,

பொதியமலை வரலாறு: தமிழ்நாட்டு மலைகளுள் மிகப் பெருமையுடையது. [-புலவர் புராணம், பொதிகாசலப் படலம், 44]. மலையம் என்னும் பொதுப் பெயரைத் தனக்கே உரிமை யாக்கிக் கொண்ட பொதிய மலையை இமயமலைக்கு இணையாகக் கண்டனர் தமிழ்ப் புலவர். 'பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று'' என்று வாழ்த்தினார் ஒரு புலவர். [- புறநானூறு 2]. தமிழ் முனிவர் என்று புகழப்படுகின்ற

அகத்தியர் வாழும் அம்மலையைத் தமிழகம் முழுவதும் தொழுவதாயிற்று.

"திங்கள் முடிசூடும் மலை தென்றல் விளையாடுமலை
தங்கு புயல் சூழு மலை தமிழ் முனிவன் வாழுமலை",

என்று புகழ்ந்து மகிழ்ந்தாள் அம்மலைக் குறவஞ்சி. [மீனாட்சியம்மை குறம்-13]. இத்தகைய மலையைத் திருநாவுக்கரசரும் தேவாரத்திற் குறித்துள்ளார்.

"பொய்த்தார் புர மூன்றெரித்தானைப்
பொதியில் மேய புராணனை."

என்னும் திருவாக்கால் திரிபுரமெரித்த பழம் பொருளாகிய சிவன் பொதியமலையையும் கோயிலாக் கொண்டவன் என்பது விளங்கும். இப்பொதிய மலையின் அடிவாரத்தில் பொருநையாறு செவ்வன தெளிந்து செல்கிறது. [- தமிழகம் ஊரும் பேரும், பக்கம்-178.]

**ஆய் அண்டிரன் வரலாறு** : கடையெழு வள்ளல்களில் ஒருவன்; சிறந்த வீரன். பொதிய மலையைத் தலைமையிடமாகக் கொண்டு வேணாட்டையாண்டவன். ஆய் அண்டிரனென்றும் இவன் பெயர் வழங்கும்; பாணர்க்கும் இரவலர்க்கும் யானைகளையும் பிறவற்றையும் மிகுதியாகக் கொடுத்தவன்; சுரபுன்னைப்பூ மாலையை உடையவன்; கொங்கு நாட்டாரோடு போர் செய்து அவர்களைப் புறங்காட்டியோடச் செய்தவன்; யாதொரு பயனையுங் கருதாது இரவலர்க்குக் கொடுத்து மகிழ்வித்தலையே கடனாகவுடையவன். இவனுடைய நற்குண நற்செய்கைகள் யாவும் மனமுருகிப் புலவர்கள் இவனைப் பாடிய பாட்டுக்களால் (- புறநானூறு பாடல்கள் : 127-36, 240-41, 374-5) நன்கு புலப்படும். இன்னும், பாம்பு பெற்றுக் கொடுத்த நீல உடையுனை ஆலின் கீழெழுந்தருளிய தலைவனுக்கு (பரமசிவனுக்கு) இவன் கொடுத்தனன்; இதனை நீல நாக நல்கிய கலிங்கம், ஆலமர் செல்வற் கமர்ந்தனன்" கொடுத்த, சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள், ஆர்வ நன்மொழி யாயும்" என்கிறது சிறு பாணாற்றுப்படை [96-9].

பொன்னங்கொண்டார், பொன்னமுண்டார், பொன்னாண்டார், பொன்னாரம்பூண்டார், பொன்னாப்பூண்டார் பொன்னாளியார், பொன்னானியார் : பாம்பசோழனின் மரபில் வந்த பொன்ன சோழனின் மரபினர். பொன்ன சோழன் "பொன்ன வராயன் பேட்டை" என்னும் நகரத்தையுண்டு பண்ணி இராசதானியாகக் கொண்டவன் இவன் "பொன்னூர் என்னும் தேவாரம் பெற்ற) சிவதலத்தையும், "பொன்னூர், பொன்னிறை, பொன்பற்றி, பொன்னகுடி, பொன்னாப்பூர், பொன்னமங்கலம் பொன்னேரி" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். "தில்லை" என்னும் (தேவாரம் பெற்ற) சிவதலத்தில் சபநாயகப் பெருமானுக்கு "பொன்னம்பலம்" என்னும் திருக்கோயிலும் உண்டாக்கினான். (-சூரியக்குலக் கள்ளர் சரித்திரம், பக்கம்118)

பகைநாட்டு வேந்தர்களைப் போரில் வென்று அவர்களின் பொன்னாலான முடிகளை உருக்கிப் பொன்னாரமாக்கி மார்பில் பூண்டவர்கள் [அணிந்து கொண்டவர்கள்] பொன்னாரம் பூண்டார் முதலான பட்டப் பெயர்களைப் பெற்றிருக்கவும் வாய்ப்புண்டு.

பழந்தமிழ் வேந்தர்கள் பகைநாட்டு அரசரைப் போரில் வென்றமைக்கு அடையாளமாக இவ்வாறு அவர் [பகைவர்] தம் முடியை உருக்கிப் பொன்னாரமாக அணிந்து கொண்டதைப் போல் வீரக் கழல்கள் செய்து கால்களில் அணிந்து கொள்வதும் வழக்கமாகும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பகை நாட்டு வேந்தன் ஒருவனைப் போரில் வென்று அவனது பொன்னாலான முடியை உருக்கித் தமது கால்களில் வீரக்கழல் களாக அணிந்து கொண்டதைப் புறநானூறு பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"நீயே, பிறரோம்புறு மறமன்னெயில்
ஓம்பாது கடந்தட்டவர்
முடி புனைந்த பசும் பொன்னின்
அடி பொலியக் கழறைஇய
வல்லாளனை...... ...... ."

(- புற நானூறு 40)

பொறையர் : சேர அரச மரபில் பொறையர் குடியைச் சேர்ந்தவர்கள். பொறையர் குடியில் தலைசிறந்த மன்னர்கள், 1. சேரமான் தகடுரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை ; 2. சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை ; 3. சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை ; 4. சேரமான் கணைக்கால் இரும் பொறை ஆகியோராவர்.

சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேலிரும் பொறை : இவன் செல்வக்கடுங்கோவாழியாதனுக்கும் வேளாவிக் கோமான் பதுமன் தேவிக்கும் பிறந்தவனாவான். இவன் தகடூருக்குரிய அதியமானொடுபொருது அவனது தகடூரையெறிந்து கொண்ட தனால் இவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுகின்றான். இவனைப் பதிற்றுப்பத்திற் காணப்படும் எட்டாம் பத்தைப்பாடிய அரிசில் கிழாருக்கு இவன்தன் கோயிலாளுடன் வெளிப்போந்து கோயி லில் உள்ளனவும் அரசுங்கொள்கவென வழங்கினான். இவன் 17 ஆண்டுகள் அரசு வீற்றிருந்தான்.இவன் ஆட்சிக் காலத்தே புலவர் பலரும் இவனால் உயிரினும் சிறந்தாராகப் பாராட்டப் பட்டனர். ஒருகால், இவனைக் காண்பதற்கு வந்திருந்த மோசிகீரனார் என்னும் சான்றோர், வெற்றிமுரசு வைக்கும் கட்டிலின்மேல் தம்மையறியாது கிடந்து உறங்கவிட்டார். வெற்றித் திருவீற்றிருக்கும் கட்டிலின்மேல் வேறு பிறர் இருந்து உறங்குவது குற்றமாகும். அது செய்வோர், கொலைத் தண்ட னைக்கு உரியவராவார். இஃது அக்கால அரசுமுறை; இதனை அறியாதவர் புலவர். அவர் உறங்கியதை அறிந்த இவ்விரும் பொறை அவரைக் கொலை புரியாது, இனிதே உறங்குமாறு அவர்க்குக் கவரி கொண்டு வீசலுற்றான் [- புறநானூறு 50.]

சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும் பொறை : ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் என்பது இவனது இயற்பெயராகும். இவன் தன் அரசியலைக் கொங்கு நாட்டுக் கருவூர் வரையில் நிலவச் செய்து அந்நகர்க்கண்ணே அரசு கட்டிலேறி முடிசூடிக் கொண்ட சிறப்புப்பற்றி, கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை என வழங்கப்

படுகின்றான் இவன் சிறந்த மெய்ப்பொலிவுடையவன் தன்னைக் கண்டார்க்கு நலஞ் செய்யும் இவனது தோற்றச் சிறப்பு, நரிவெரூஉத் தலையார் என்னும் சான்றோர்க்குற்ற மெய்வேறுபாடு இவனது காட்சியால் நீங்கிப் பண்டைய நலத்தை அடைந்தது என்று கூறுவர்.

சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை : சேய் என்பது இவனது இயற்பெயராகும். யானையினது நோக்குப் போலும் நோக்கினையுடையவன் என்பது பற்றி இவன் யானைக் கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை எனப்படுகிறான். "வேழ நோக்கின விறல் வெஞ்சேய்" என இவனைக் குறுங்கோழியூர் கிழார் குறிப்பிடுகிறார். இவன் காக்கும் நாடு "புத்தே ளுலகத்தற்று" என்பது. இவனுக்கும் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கும் ஒரு கால் நடந்த போரில் இச்சேரமான் தோல்வியுற்று அவனாற் சிறைப்படுத்தப் பட்டான். அச்சிறையினின்றும் தன் வலியினால் சிறைகாவலரை வென்று தப்பிச் சென்று மீண்டும் அரசு கட்டிலில் ஏறினான். இவன் பால் புலவர் பெருமக்களுக்குப் பேரீடுபாடுண்டு எட்டுத் தொகையுள் ஒன்றாகிய ஐங்குறு நூற்றைத் தொகுப்பித்தவன் இவனேயாவான். இவனைக் குறுங்கோழியூர் கிழார், பொருந்தில் இளங்கீரனார், கூடலூர் கிழார் ஆகிய சங்க காலச் சான்றோர்கள் பாடியுள்ளார்கள்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை : இவன் புலவர் பெருமக்களால் கோச்சேரமான் என்றும் சேரமான் என்றும் அழைக்கப்பட்டான். இவன் பெரும் படையும் மிக்க போர்வன்மையும் உடையவனாவான். இவனுடைய தலைநகர் தொண்டியாகும். இந்நகர்க்கண் பெரிய கோட்டையிருந்தது. இவன் தன்னோடு பகைத்துப் போருடற்றிய மூவன் என்பவனைக் கொன்று அவன் வாயிற் பல்லைப் பிடுங்கிக் கோட்டை வாயிற்கதவில் வைத்து இழைத்திருந்தானெனப் பொய்கையார் கூறியுள்ளார். சோழ நாட்டையாண்டு வந்த செங்கணானுக்கும் இக்கணைக் கால் இரும் பொறைக்கும் யாது காரணத்தாலோ பெரும்பகை

யுண்டாக, இருவரும் பெரும்படையுடன் கழுமலம் என்னு மிடத்தே பொரத் தொடங்கினர். இவன் பாசறைக்கண் தங்கி யிருக்கையில் ஒருநாள் இரவு யானைப் படையிலிருந்த களிறு ஒன்று மதஞ் செறிந்து தீங்கு செய்யலுற்றது. அதனால் பலரும் அஞ்சி அலமந்தனர். அதனையறிந்த சேரமான் சென்று அடக்கி வீரர் பலரும் "திரைதபு கடலின் இனிது கண்படுப்ப'ச் செய் தான். பின்னர்ப் போர் முடிவில் சேரமான் படையுடைந்து கெட்டது. அவனும் சோழன் கையகப்பட்டுக் கால்யாப்புற்றுச் சிறையிடப் பெற்றான். அவ்வாறியிருக்கையில் ஒருநாள் சேர மான் நீர் வேட்கையுற்றுக் காவலர்களை நீர் கொணருமாறு பணித்தான். அவர் அவன் பணியை அவமதித்துச் சில நாழிகை கழித்துக் கொணர்ந்து கொடுத்தனர். அந்த மானத்தைப் பொறாத சேரமான் "அரசராயினார் குழவியிருப்பினும் ஊன் தடி பிறப்பினும் இவை வாள் வாய்ப்பட்டு இறந்தாலன்றி நல மின்றெனக் கருதி அவற்றையும் வாளாற் போழ்ந்து அடக்கம் செய்தவர்; அக்குடியிற்பிறந்த யான் சிறைப்பட்டுக் கிடந்து உயிர்நீத்தல் தீது; இத்தகைய மறக்குடியினரான எம் பெற் றோர் பகைவர்பால் உணவிரந்துண்டு உயிர் வாழுமாறு மக்களைப் பெறார் காண்" எனறு நினைந்து, இதனை ஒரு பாட்டாக எழுதி வைத்து உயிர் நீத்தான். [- புறநானூறு 74.] [- புறநானூறு, மூலமும் உரையும், ஔவை. சு. துரைசாமி பிள்ளை.]

போர்க்காட்டியார் : போர்க்களம் காத்த மரபினர்.

போரிற்கொளுத்தியார், போரைக்கொளுத்தியார், போரிற் சுற்றியார், போரைச்சுற்றியார் இராசாதிராச சோழன் மரபினர். இராசாதிராச சோழன் கள்ளர் இனத்தின் பட்டப் பெயர்களான 'போரிற் கொளுத்தி' 'போரைக் கொளுத்தி' எனபவைகளைச் சிறப்புப் பெயர்களாகக் கொண்டிருந்தான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-163.]

மங்கலர், மங்கலார், மங்கலதேவர், மங்கதேவர் : முசுகுந்தன் மரபில் வந்த மங்கலன் என்பவனின் மரபினர். மங்கலன் "திருமங்கலக் கோட்டை" என்னும் நகரத்தை உண்டாக்கி

இராசதானியாகக் கொண்டவன். இவன் ''மங்கலக்குடி, என்னும் (தேவாரம் பெற்ற) சிவதலத்தையும், "மங்கலம், மங்கலூர், மங்கநல்லூர்" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-74.)

மட்டையர், மட்டையாண்டார், மட்டைராயர் : பிற்காலச் சோழர்களில், முதற் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்ல் வாழ்ந்த மட்டையன் என்னும் அரசியல் தலைவனின் மரபினராக இருக்கலாம். மட்டையன் என்பது உயர்சொற்கிளவியாக மட்டையர் எனப்பட்டிருத்தல் வேண்டும்.

மட்டையன் முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் கலிங்க நாட்டில் கருணாகரத் தொண்டைமான் தலைமையில் நடந்த போர் நிகழ்ச்சியில் மாதவன், எங்கராயன், ஏச்சணன், இராசணன், தாமயன், போத்தயன், கேத்தணன் என்ற தலைவர்களுடன் உயிர் துறந்தவனாவான் என்று மெய்க்கீர்த்தி உணர்த்தின்றது. (- S. I. I. Vol IV. No, 445.) (-பிற்காலச் சோழர் சரித்திரம் பாகம் II பக்கம்-28).

ஏத்தாண்டார், ஏற்றாண்டார் : அரசர்கள் தாம் வெற்றிக் கொண்ட பகுதிகளில் முறையாக அரசப் பிரதிநிதிகளை நியமித்து ஆளச் செய்கின்ற வரையில், அந்தப் பகுதிகளில் அரசாட்சியை ஏற்றிருந்த அரசர்களின் மரபினர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஏற்றாண்டார்பட்டியில் இப்பட்டப் பெயருடையோர் நிரம்ப வாழ்கின்றார்கள்.

மணவாளர் : மாந்தாதா மரபில் வந்த மணவாள சோழனின் மரபினர். மணவாள சோழன் ''மணவை'' என்னும் நகரத்தை உண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன். இவன் ''மணஞ்சேரி, மணற்கால்'' என்னும் [தோவாரம் பெற்ற] சிவ தலங்களையும், "மணக்கரை, மணக்கரம்பை, மணக்காடு. மணக்குடி, மணம்பூண்டி, மணலி, மணப்பாறை, மணமேற்குடி, மணவூர், மணலூர், மணவயல், மணமங்கலம், மணவாளன் பேட்டைச்" என்னும் ஊர்களை உண்டாக்கினான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-66.)

மணிராயர் : மணிமுடிச் சோழனின் மரபினர். மணிமுடிச் சோழன் பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியின் தந்தையாவான். [- திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - திருவாலவாய் 1]. இவன் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் சோழ நாட்டை ஆண்டவனாவான். [-பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம் I, பக்கம்-10.]

மதமடக்கு, மநமடக்கு, மதமடக்கியார், மநமடக்கியார், மறமடக்கியார் : போர்வீரர் மரபினர். 'மறம் அடக்கி' என்பதே காலப் போக்கில் மத மடக்கி, மநமடக்கு, மதமடக்கியார், மநமடக்கியார் எனத் திரிந்து வழங்கியிருத்தல் வேண்டும்.

'மறம் அடக்கி' என்பது பழங்காலத் தமிழகத்தில் கொடுமை விளைத்த கூட்டத்தை ஒடுக்கிய வீரர்க்குத் தரப் பட்ட பட்டமாகும் இப்பட்டப் பெயரில் தஞ்சை நாட்டில் ஊர்கள் உள்ளன. [- தமிழகம் ஊரும் பேரும், பக்கம்-85].

மணிக்கராயர், மணிக்கிரார், மணிக்கிராயர், மண்ணிராயர் : பஞ்சநத சோழன் மரபில் வந்த மண்ணிசோழனின் மரபினர். மண்ணிசோழன் "மண்ணி" என்னும் நகரத்தை உண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன். இவன் "மண்ணியாறு" என்னும் ஆற்றையும் "மண்ணிப்படிக்கரை" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலத்தையும், மண்ணிப்பள்ளம்" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-113.] இவர்கள் மண்ணிநாட்டையாண்ட சிற்றரசன் ஒருவனின் மரபினராக இருந்திடவும் வாய்ப்புள்ளது. மண்ணி நாடு என்பது கும்பகோணத்திற்கு வடகிழக்கில் திருவியலூர், வேப்பத்தூர், இடையா நல்லூர், திருக்குடித்திட்டை, திரைலோக்கி, திருப்பனந்தாள் முதலியவற்றை உள்ளடக்கியதாகும். (S. I. I. Vol. II, Introduction. P. 23).

மயிலண்டார், மயிலாண்டார் : பாம்ப சோழனின் மரபில் வந்த மயிலாடு சோழனின் மரபினர். மயிலாடு சோழன் "திருமயில் கோட்டை" என்னும் சிவதல நகரத்தையுண்டுபண்ணி இராசதானிகளாகக் கொண்டவன்; இவன் "மயிலாடுதுறை, மயிலாப்பூர்" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலங்களையும்

'மயிலடி" என்னும் சிவதலத்தையும் "[பழைய] மயிலம்'' என்னும் (திருப்புகழ் பெற்ற) சுப்பிரமணிய தலத்தையும், மயிலடி புரம், மயின்மங்கலம்'' முதலிய ஊர்களையும் உண்டாக்கினான். பைங்கா நாட்டின் தென்புறமுள்ள "திருமயிலேறி [திருமேரி] இவனால் உருவாக்கப்பட்டதாகும். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-117.]

மலையர், மலையமான், மலையரார், மயைரையர், மலைராயர், மலையராயர் : சேர அரச மரபினர். சேரர் பட்டப் பெயர்கள் பலவற்றுள் மலையர், மலையமான் என்பவைகளும் அடங்கும். [சூடாமணி நிகண்டு; மக்கட் பெயர்த் தொகுதி - பாட்டு-18.] சேரநாடு, மலைகள் நிறைந்த நாடாகும். சேரர் மலைகளுக்குத் தலைவர்களாக இருந்தமையால் மலையன் (மலையர்) மலையமான் எனப்பட்டார்கள். [சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பக்கம்-235, 248.]

மலையமான் திருமுடிக்காரி, மலையமான் சோழிய ஏனாதி, மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன் ஆகியோரை இவர்கள் தம் மரபினர் என்பார் டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி அவர்கள்.

மலைராயர், மலையராயர் பட்டப் பெயர்களுடையோரை மாமன்னன் மலையனின் மரபினர் என்பார் எம். சுவாமிநாத மாதவராயர் அவர்கள். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம் பக்கம்-91].

மல்லிகொண்டார் : செம்பியன் மரபில் வந்த மல்லிய சோழன் மரபினர். மல்லியன் "மல்லிப்பட்டினம்" என்னும் நகரத்தை உண்டாக்கி இராசதானியாகக் கொண்டான். "மல்லியம்'' என்னும் ஊரை உண்டாக்கியவனும் இவனேயாவான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-105.]

மழவராயர், மழுவாடியார் : மழவர் குடியைச் சேர்ந்தவர்கள். மழவர் பிற்பட்ட காலங்களில் மழவராயர், மழுவாடியார் என வழைக்கப்பட்டார்கள்.

மழவர் பற்றி டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி கூறுவது : மழவர் குடியைச் சேர்ந்த சில குழுவினர். சேரர்க்கும் அதியர்க்கும் பிற மன்னர்க்கும் மெய்காப்பாளர் ஆயினர். சேர மன்னன் 'மழவர் மெய்ம்மறை' என அழைக்கப்படுகிறான் (- பதிற்றுப் பத்து, 21, 55.) அதியமான் 'மழவர் பெருமகன்' என அழைக்கப்படுகிறான (-புறநானூறு 88,90). எந்த அரசனின் ஆணைக்கும் அடங்கி நடக்க முடியாத மழவர் குடியைச் சார்ந்த மற்றவர் தமிழ் நாட்டின் வடக்கே திருவேங்கட மலைவரையில் சுற்றித் திரியலாயினர். (-அகநானூறு 61.) பிறகு, அவர்கள் சோழ நாட்டில் நிலையாகத் தங்கி வாழத் தலைப்பட்டனர். அவர்கள் வாழ்ந்த பகுதி மழநாடு எனப்பட்டது. மழவர்கள் அங்குப் பெருஞ் சிறப்போடு வாழ்ந்தனர். மழபாடி (மழவர்கள் பாடியமைத்துத் தங்கிய இடம்) என்ற பெயரும், இன்னும் அது போன்ற சில இடங்களின் பெயரும் அவர்களுடைய பெருமைக்கும் இன்றியமையாமைக்கும் சான்று பகர்வனவாகும்.

மழவர்கள் எல்லோரும் வீரத்திற் சிறந்தவர்களாக இருந்தனர். இதனால்,மழவர் என்ற சொல் பொதுவில் வீரர் என்னும் பொருள் குறிப்பதாயிற்று; மழவர் என்பார் 'சிலவீரர்' என்பது நச்சினார்க்கினியர் உரை. (- மதுரைக்காஞ்சி-395, 687-ஆம் வரிகள், நச்சினார்க்கினியர் உரை.) (- சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பக்கங்கள், 251, 252.)

பிற்காலச் சோழர்கள் காலத்திலிருந்த மழவராயர்கள் : பிற்காலச் சோழர்கள் காலத்தில் கண்ட தேவ மழவராயன் என்பான் ஒருவனும் மழவச் சக்கரவர்த்தி என்பான் ஒருவனும் அரசியல் தலைவர்களாக இருந்தார்கள்.

இவர்களுள் கண்ட தேவன் மழவராயன் என்பவன் பாண்டி நாட்டில் கீழை மங்கலம், மேலை மங்கலம் முதலான ஊர்களடங்கிய பகுதியையும், மழவச்சக்கரவர்த்தி என்பவன் தொண்டி, கருந்தங்குடி முதலான ஊர்களடங்கிய பகுதியையும் ஆண்டு வந்தார்கள்.

சோழர்கட்கும் மழவராயர்கட்குமிடையிலான மண உறவு: பிற்காலச் சோழ மன்னர்களில் கண்டராதித்த சோழன்

மனைவி செம்பியன் மாதேவி மழவராயர் குடியில் பிறந்தவளா வாள். இதனை, "மழவரையர் மகளார் ஸ்ரீ கண்டராதித்தப் பெருமாள் தேவியார் செம்பியன் மாதேவியார்" என்னும் கல் வெட்டுப் பகுதியால் நன்கறியலாம். (- S. I I. Vol. III No. 141) [- பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கம்-131.]

மண்வெட்டிக் கூழ்வாங்கியார், மண்வெட்டியில் கூழ்வாங்கி யார், மண்வெற்றிக் கூழ்வாங்கியார், மன்வெற்றிக் கூழ்வாங்கியார், கூழாக்கியார், கூழாளியார், கூழாணியார், கூழையர் : கூழைமன் என்ற அரசனின் மரபினர். கூழைமன் மண்ணை வெட்டிப் பொன்னை எடுத்ததால் மண்வெட்டி கூழ்வாங்கி என்றும் மண்ணிலிருந்து பொன்னை உருக்கி எடுத்ததால் கூழாக்கி என்றும் பெயர்கள் பெற்றான். கூழைமனின் இப்பெயர்களால் அவனது மரபினர் மண்வெட்டியில் கூழ்வாங்கியார், கூழாக்கி யார் முதலானப் பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். கூழைமனின் காலமுதலே பூமியில் சுரங்கம் உண்டுபண்ணி பொன் எடுக்கும் வழக்கம் உண்டாயிற்று. [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-92]. [கூழ்-பொன், கழக அகராதி, பக்கம்-378.]

மண்ணியார், மண்ணியர், மண்ணையர், மண்ணையார், மணியர், மன்னயர், மன்னியர், மன்னையர், மன்னையார் : முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் மண்ணைக்கடக்கம் என்னும் பகுதியை வெற்றி கொண்டவர்கள். மண்ணைக் கடக்கத்தை வென்றவர்கள் சுருக்கமாக மண்ணையர் எனப் பட்டார்கள்.

மண்ணைக்கடக்கம் என்பது இராஸ்டிர கூடர்களுக்குத் தலைநகரமாயிருந்த மானியகேடமாகும். இக்காலத்தில் அது மால்கெட் என்று வழங்கப்படுகிறது. இந்நகர் சில ஆண்டுகள் மேலைச் சளுக்கியர்களுக்கும் சில ஆண்டுகள் இராஸ்டிர கூடர்களுக்கும் தலைநகரமாய் இருந்துள்ளது. [- பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம்-I. பக்கம்-158.]

மாங்காடர், மாங்காட்டார் : பேரரசன் மாந்தாதாவின் மரபினர். மாந்தாதாவின் வேறு பெயரான மாங்காட்டான்

என்னும் பெயரால் இவனது மரபினர் இப்பட்டப் பெயரைப் பெற்றார்கள்.

மாந்தாதா ஒரே துறையில் மானும் புலியும் நீருண்ணும்படி அரசாண்டவனாவான்.

"ஒரு துறைப்புனல் சினப்புலியு மானுமுடனே
யுண்ணவைத்தவுரவோ னுலகில் வைத்தவருளும்".
- கலிங்கத்துப் பரணி [இராசபாரம்பரியம்.]

மாஹூர், மாங்குடி, என்னும் தேவாரம் பெற்ற சிவதலங்களையும் மாங்குடி, மாஹூர், மாம்பட்டி என்னும் ஊர்களையும் உண்டாக்கியவன் மாந்தாதாவேயாவான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-65].

மாதராயர், மாதவராயர், மாதயர், மாதயாண்டார், மாதிரார், மாதுரார், மாதுராயர் மாத்துராயர், மாதையர், மாதையாண்டார், மாத்துளார் : செம்பியன் மரபில் வந்த மாதையன் என்பவனின் மரபினர்.மாதையன் "மாதையபட்டினம்" என்னும் அரண்கட்டி இராசதானியாகக் கொண்டவன். மாதையனின் வேறு பெயர்களான "மாதராயன், மாதயாண்டார்" என்னும் பெயர்களால் அவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். மாதையன் "மாதராயன் புதுக்கோட்டை என்னும் நகரத்தையும், "மாத்தூர்" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலத்தையும் ஊர்களையும் உண்டாக்கினான். மாதையபட்டினம் கோட்டையின் வடபுறமுள்ள "செம்பிய மாதேவிகோயில்" இவனது மனைவியால் கட்டப்பட்டதாகும். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-102, 103.]

சேர நாட்டின் குடநாட்டில் மாந்தை அல்லது மாதை நகர்க் கண்ணிருந்து அரசாண்டவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெற்றிருக்கவும் வாய்ப்புள்ளது.

மாந்தை அல்லது மாதை நகர் வரலாறு : ஒரு கடற்கரைப் பட்டினம். சேர அரசர்களில் நெடுஞ்சேரலாதன் போன்றவர்கள் இந்நகர்க் கண்ணிருந்தே ஆட்சி புரிந்தார்கள். மாந்தை நகரைப் பண்டைச் சான்றோர், "நன்னகர் மாந்தை" (-அகநா

னூறு-127); "துறைகெழு மாந்தை", "கடல்கெழு மாந்தை" (- நற்றிணை, 35. 395), "குட்டுவன் மாந்தை" "நன்றுமன் மாந்தை" [- குறுந்தொகை, 34, 166]. என்று குறிப்பிட்டார்கள்.

"மல்லனீர் மாந்தையார் மாக்கடுங் கோதைக்கு" எனக் குறிப்பிடுகிறது முத்தொள்ளாயிரம். மாந்தையை மேற்றிசை யாத்திரிகர் மாதை என்றே பிற்காலத்தில் வழங்கினர் என்பார் ரா. இராகவ ஐயங்கார் அவர்கள். [-குறுந்தொகை மூலமும் உரையும், பக்கம் 240, பெருமழை புலவர் சோமசுந்தரத் தேவர்].

மாந்தராயர், மாந்தையரையர், மாந்தரையர் : இவர்களும் சேர நாட்டில் மாந்தை என்னும் நகரையாண்ட அரச மரபினர் களாகவே இருத்தல் வேண்டும். ஆனால் சுவாமிநாத மாதவ ராயர் அவர்கள் இவர்களை மாந்தை சோழனின் மரபினர் என்கிறார்.

மாந்தை சோழன் வரலாறு : 'மாந்தை" என்னும் நகரத் தையுண்டுபண்ணி இராசதானியாகக் கொண்டவன். இவன் பெயர் "மாந்தைராயன், மந்தையரையன், மாந்தைகொண் டான், மாந்தையாண்டான், மாந்தைப்பிரியன், மாந்தையுடை யன், மாந்தையாளி எனவும் வழங்கும். இவன் "மாந்துறை, கீழை மாந்துறை, மேலை மாந்துறை என்னும் [தோவாரம் பெற்ற] சிவதலங்களையும்"மாந்துறை, மாந்தைகுடி" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். [- சூரியகுலக் கள்ளர் சரித் திரம், பக்கம்-121.]

மாம்பழத்தார், பழத்தார் : பழையன் என்பவனின் மரபினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-67.]

பழையன் வரலாறு : கொங்கு மண்டலத்திலுள்ள மோ கூரின் கண் இருந்த ஒரு குறுநில மன்னன். இவன் சேரமன்ன ரைப் பகைத்துப் பாண்டிய மன்னருடன் நட்புக் கொண்டிருந் தான். இவன் காவல் மரம் வேம்பாகும். இவனைப் பற்றி சங்க பாடல்களும் சிலப்பதிகாரமும் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

"பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்டு
வேம்புமுதல் தடிந்த வேந்துவாள் வலத்துப்
போந்தைக் கண்ணிப் பொறைய கேட்டருள்"
- சிலப்பதிகாரம், 27-124-126.

"பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முழாரை முழுமுதல் துமியப் பண்ணி"
- பதிற்றுப்பத்து; 5 - பதிகம்.

"வென்வேல்
மாரி அம்பின் மழைத்தோல் பழையன்
காவிரி வைப்பிற் போஒர் அன்ன".
- அகநானூறு 186, வரிகள் 14-16.

பஞ்சரமார், பஞ்சராயர், பஞ்சரையர் : பாண்டியர் மரபினர். பாண்டியரைக் குறிக்கும் பட்டப் பெயர்களில் ஒன்றான 'பஞ்சவர்' [பாண்டியர், கவுரியர், மாறர், வழுதியர், செழியர் என்பவர்க்குத் தலைவன்] என்ற சொல்லின் திரிபே "பஞ்சரமார், பஞ்சராயர், பஞ்சரையர்" என்பவைகளாகும்.

"அருநரை உருமிற் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவ ரேறே நீயே".
- புறநானூறு, 58, வரிகள் 7, 8.

"பழியொடு படரா பஞ்சவ வாழி"
- சிலப்பதிகாரம், வழக்குரை காதை, வரி-33.

என்ற இலக்கிய வரிகள் பாண்டியரைப் பஞ்சவர் எனக்குறித்து நிற்கின்றன.

மால் : சோழ அரச மரபினர். சோழர்கள் பட்டபெயர்கள் பலவற்றுள் மால் என்பதும் ஒன்றாகும். [- சூடாமணி நிகண்டு மக்கட் பெயர்த் தொகுதி, 19-ஆம் செய்யுள்.]

மால் : என்பதற்கு ஓர் இடத்திற்குத் தலைவன் என்பது பொருளாகும்.

"அகம் பன்மால்" - நற்றிணை, 81.
[- சங்க காலச் சிறப்புப் பெயர்கள், பக்கங்கள்-226, 228.]

மாலையிட்டார், ஆர்சுத்தியார், ஆர்சுற்றியார், ஆரச்சுத்தியார், ஆரஞ்சுற்றியார், ஆரம்பூண்டார், ஆரமுண்டார், ஆரிச்சுற்றியார் : செம்பியன் மரபில் வந்த ஆத்திமன் என்பவனின் மரபினர். ஆத்திமன் "ஆத்திக்கோட்டை" என்னும் நகரத்தை உண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன். இவன் "ஆத்தூர், ஆத்தங்குடி, ஆத்தமங்கலம்" என்னும் ஊர்களை உண்டாக்கினான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-95].

மாவலியார் : சேரர் அல்லது தொண்டைமான் மரபில் வந்த மாவலி என்பவனின் மரபினர். மாவலியின் பெயரால் அவனது மரபினர் மாவலியார் எனவழைக்கப்படுகிறார்கள்.

சேரன் செங்குட்டுவனிடம் மாவலி என்னும் பெயரில் படைத் தலைவன் ஒருவன் இருந்தான். இவனது ஆட்சி பம்பாய் வரையிலும் பரவியிருந்தது. [- பண்டைத்தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்கம்-23].

மாளிச்சுத்தியார், மாளிச்சுற்றியார், மாள்சுத்தியார், மாள் சுத்தியார், மாளிகைசுத்தியார், மாளிகைசுற்றியார், மாளுசுத்தியார், மாளுசுற்றியார் அரண்மனையைக் காத்த மரபினா. [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-212.]

பங்களராயர் : "பங்களர்" என்பது காலப்போக்கில் பங்கராயர் எனத் திரிந்து வழங்கியிருக்கலாம். பங்களராயர் என்போர் வங்க நாட்டை வெற்றிக் கொண்டு ஆண்டவர்கள் தம் மரபினராகவோ, அல்லது தென்னார்க்காடு மாவட்டத்தில் வாழ்ந்த பங்களம் என்ற மக்களின் மரபினராகவோ இருத்தல் வேண்டும். (- தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், பக்கங்கள் 124, 125, டாக்டர் கே. கே. பிள்ளை.]

மின்கொண்டார், மின்னாண்டார், மின்னாளியார் : அரச மரபினர். இவர்களின் மூதாதை ஒருவன் இலங்கையில் மின்னேரிக்குளம் எனும் பெயரில் ஒரு குளத்தை வெட்டுவித்து மின்னேரிக்கடவுள் என மக்களால் வணங்கப்பட்டான்.

மீனவராயர் : பாண்டிய மரபினர். வையை ஆற்றில் தெய்வத் தன்மைப் பொருந்திய மீன் ஒன்றைப் பாண்டியன்

ஒருவன் கண்டதையடுத்த அவனும் அவனது மரபினரும் மீன வராயர் என்னும் பட்டத்தைப் பெற்றார்கள். தெய்வத்தன்மைப் பொருந்திய மீனைக்கண்ட பாண்டியன் காலமுதல் பாண்டியர் மீனைத் தமது இலச்சனையாகக் கொண்டார்கள்.

மானங்காத்தார், மானத்தரையர், மானமுத்தரையர், மான முழுங்கியார், மானவிழுங்கியார், மானம்விழுங்கியார் : நியமி மரபில் வந்த மானங்காத்தமன் என்பவனின் மரபினர். மானங் காத்தமனின் வேறு பெயர்களான "மானத்தரையன், மானம் விழுங்கி" என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவராயினர். இவன் "மானகாத்தான் கோட்டம், மானலூர், மானூர்" முதலிய ஊர்களை உண்டாக்கினான். [- சூரியகுலக் களளர் சரித்திரம்-பக்கம்-83 ]

இளங்கொண்டார், இளமுண்டார் : சோழனை பாலமுளூ ரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் மரபினர் இளஞ்சேட் சென்னியின் வேறு பெயர்களான இளங்கொண் டான், இளமாண்டான், இளம்பிரியன், இளமுடையன், இள மாளி, இளநாடன் என்னும் பெயர்களால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

இளஞ்சேட் சென்னியின் சுருக்க வரலாறு : நற்குணங்கள் பலவும் நிறைந்தவன். இரப்போரைப் பாதுகாத்தலையே நோனபாகக் கொண்டவன். சேரனுடைய பாமளூரையெறிந்து அதன் அண்மையிலுள்ள குன்றில் புலிக்கொடியை நாட்டி, அதற்குச் "சென்னிமலை" என்று பெயரிட்ட காரணத்தாலும், வெள்ளாம்பற் பூத்தேரிற் சென்ற காரணத்தினாலும் "பாமளூ ரெறிந்த நெய்தலங்கான லிளஞ்சேட்சென்னி" என்று பெயர் பெற்றான். "இளமர் (இளமதுக்கூர்), இளங்கடம்பனூர்" என்னும் (தேவாரம் பெற்ற) சிவதலங்களும், "இளமங்கலம், இளங்கார்குடி. இளங்காடு, இளவனூர், இளையான்குடி" என்னும் ஊர்களும் இவனால் உண்டாக்கப்பட்டதாகும். இவன் ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவரால் புகழ்ந்து பாடப் பெற்றவனாவான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-132, 133.)

முத்தரையர் : முத்துக்கள் கிடைக்கும் பாண்டி நாட்டை யாண்டதால், அல்லது சேர, சோழ, பாண்டிய நாடு என்னும் முத்தரைகளை ஆண்டதால் முத்தரையர் எனப் பெயர் பெற்றிருக்கலாம். முத்தரையர் சங்கம் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சாதியாரும் இவரும் ஒன்றல்ல.

முத்தரைய மன்னர்களில் பேரும் புகழும் பெற்றவன், பெரும் பிடுகு முத்தரையன் II அல்லது சுவரன் மாறன் என்பவனாவான். இவன், ஸ்ரீ மாறன், ஸ்ரீகள்வர் காவலன், ஸ்ரீ சத்ருகேசரி, ஸ்ரீ களப்ர காவலன் எனப் பலவாறு வழங்கப்பட்டான் (- செந்தமிழ், தொகுதி-6)

முத்தரையரைப்பற்றி டி. வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கூறுவது : முத்தரையர் என்பார், தஞ்சை மாநகர்க்கு வடமேற்கில் இந்நாளில் செந்தலை என்று வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலத்திலிருந்து (- Inscription No. 202 of 1926) அதனைச் சூழ்ந்த நாட்டை ஆண்டுவந்த குறுநில மன்னர் ஆவர்; முத்தரையர்கட்குத் தஞ்சைக்கு அண்மையிலுள்ள வல்லமும் ஒரு காலத்தில் தலைநகரமாக இருந்தது. [-Epi. Ind., Vol. XIII, Pages 142 & 143.] தஞ்சை மாநகர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர்களின் தலைநகராதற்கு முன்னர் முத்தரையர்க்குரிய நகரமாக இருந்தது. இக்காரணம் பற்றி முத்தரையன் ஒருவன். 'தஞ்சைக்கோன்' [இராசராச சோழனுலா. வரிகள் 35-46] , 'தஞ்சை நற்புகழாளன்' [-கலிங்கத்துப்பரணி, பாடல்கள், 197-200] எனக் குறிப்பிடப்பட்டான். [- பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கங்கள் 17-18].

முத்தரையரைப் பற்றி ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கூறுவது : 'முத்தரையர்' வள்ளன்மை மிக்க ஓர் குழுவினர். நாலடியாரில் இவர்களைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அவை,

'பெருமுத்தரையர் பெரிதுவந்தீயும்
கருணைச் சோறார்வர்.' [-200]
'நல் கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரையரே
செல்வரைச் சென்றிரவாதார்' [-296].

என்பன. இவற்றிலிருந்து, இவர்கள் யாவர்க்கும் நறிய உண வளித்துப் போற்றிவந்தவரென்பதும், எல்லையிகந்த செல்வ முடையாரென்பதும் விளங்க நிற்கும். விஜயாலயன் என்னும் சோழ மன்னன் கி. பி. 849-ல் தஞ்சையைப் பிடித்துச் சோழ ராட்சியை நிலை நிறுத்துமுன், தஞ்சையில் மன்னராயிருந் தோர் முத்தரையரே என்பர் சரித்திரக்காரர். [- கள்ளர் சரித் திரம், பக்கம்-15, 16.]

பாண்டி நாட்டில் முத்தரையர் அரசு செலுத்திய பொழுது தான் கி.பி.470-இல் சமண சங்கம் மதுரையிற் கூட்டப்பட்டது. 'திகம்பர தரிசனம்' என்னும் சமண நூல் இதனைக் குறிக்கிறது. நாலாடியார், பழமொழி நானூறு, தமிழ் முத்தரையர் கோவை ஆகியன முத்தரையர் காலத்தில் இயற்றப்பட்ட நூல்களாகும். [- பல்லவர் வரலாறு, பக்கம் 43, டாக்டர் மா. இராசமாணிக் கனார்.]

முண்டர், முண்டார், முனைதரையர், முனையதரையர், முனை திரியர், முனுக்காட்டியார், முணுக்காட்டியார் : அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவரான நரசிங்கமுனையரையரின் மர பினர். நரசிங்க முனையரையரின் வேறு பெயர்களான முனை யரையன், முனையாண்டான், முனைகொண்டான், முனைப் பிரியன், முனையாளி என்னும் பெயர்களால் இவனது மரபினர் முண்டர் முதலான பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

நரசிங்க முனையரையர் தம் சுருக்க வரலாறு : திருமுனைப் பாடி நாட்டையாண்டவர். சுந்தரமூர்த்தி நாயனாரைத் தமது மகனாக வளர்த்தவர். ஒவ்வொரு திருவாதிரை விழாவின் போதும் சிவனடியார்கட்குத் தலா 100 பொன்னுக்குக் குறையா மல் கொடுத்தவர். இவர் ஒரு திருவாதிரை விழாவின்போது சிவனடியார்களில் ஒருவர் மீது "துர்நோய்" இருக்கக் கண்டு, மற்றைய சிவனடியார்களெல்லாம் விலகிட்டப் போதிலும் தான் மட்டும் விலகாதிருந்து அவரை வழிபட்டு இருநூறு பொன்னை அளித்தார். [-சூரியகுலக் கள்ளர் சரித்திரம் [பக்கம்-210.]

முண்டர் என்னும் பெயரில் பழந்தமிழ்க்குடியில் ஒரு வகுப்பார் வட-இந்தியாவில் சூடிய நாகபுரியில் வாழ்ந்தார்கள் என்பார் ந. சி. கந்தையாபிள்ளை அவர்கள் [- தமிழ் இந்தியா, பக்கங்கள்-291-294.]

மும்முடியர், மும்முடியார் : சோழ மரபினர். மும்முடி சோழன் என்பது காலப் போக்கில் மும்முடியர், மும்முடியார் என வழங்கப்பட்டிருக்கலாம். மாமன்னன் இராசராசசோழன் தன் ஆட்சியின் மூன்றாம் ஆண்டாகிய கி. பி. 988-இல் சேரனையும் அவனுக்கு உதவிபுரிய வந்த பாண்டியனையும் காந்தளூர் போரிற் புறங்கண்டு அவர்களது முடிகளைக் கைப்பற்றியதையடுத்து மும்முடிசோழன் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். [- பிற்காலச் சோழர் சரித்திரம், பக்கம்-103.]

மும்முடி சோழன் என்னும் பெயரை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்கள் உள்ளன. தஞ்சை நாட்டுப் பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள சோழபுரம் என்னும் ஊரின் முழுப் பெயர் மும்முடிச் சோழபுரம் என்பதாகும். நாஞ்சில் நாட்டில் நாகர் கோயிலுக்கு அருகேயுள்ள கோட்டாறு, மும்முடிச் சோழ நல்லூர் என முன்னாளில் வழங்கிற்று.தொண்டை நாட்டிலுள்ள திருக்காளத்தி, மும்முடிச் சோழபுரம் என்னும் மறுபெயர் பெற்றது. இராஜராஜன் கால முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை அவ்வூர் மும்முடிச் சோழபுரம் என வழங்கிற்று. திருச்சி மாவட்டத்தில் மும்முடிச் சோழமங்கலம் என்னும் பெயரிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மும்முடிக்குப்பம் என்னும் பெயரிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மும்முடிக்குப்பம் என்னும் பெயரிலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் மும்முடிச் சோழகன் என்னும் பெயரிலும் ஊர்கள் உள்ளன. [- தமிழகம் ஊரும் பேரும், பக்கம்-119].

மூரியர், மூரையர், முறையார், மூவரையர் : முவசோழனின் மரபினர் மூவசோழனின் வேறு பெயரான "மூவரையன்" என்னும் பெயரால் இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

மூவசோழன் சேர,பாண்டியர்களோடு பெரும்போர் செய்து அவர்களுடைய முடிகளைப் பறித்து, அவைகளைத் தனது முடியின்மேல் ஒன்றின் மேலொன்றாகச் சூட்டிக் கொண்டு அவர்கள் தலையில் விளக்குகள் வைத்தவனாவான்.

"ஒருவர் முன்னொர்நா டந்து பின்செலா
வுதியர் மன்னரே மதுரை மன்னரென்
றிருவர் தம்மையுங் கிழிகள் சுற்றுவித்
தெரிவி ளக்குவைத் திகல்வி ளைத்ததும்"

- கலிங்கத்துப்பரணி [இராசபாரம் பரியம்].

மூரியர் என்போர் வட இந்தியாவில் மிகவும் சீரோடும் சிறப்போடும் ஆண்ட மௌரிய அரசமரபினராக இருந்திடவும் வாய்ப்புள்ளது மௌரிய மன்னர்களில் தலைசிறந்தவர்கள் சந்திரகுப்த மௌரியர், அசோக சக்கரவர்த்தி ஆகியோராவர். சாணக்கியரின் [கௌடில்யரின] அர்த்தசாத்திரம் மௌரியர்கள் காலத்தில் இயற்றப்பட்டதாகும்.

மெட்டத்தேவர், மொட்டத்தேவர், மெனக்கடார், மேனாடர் மேல்கொண்டார், மேற்கொண்டார், மேனாட்டரையர், மேல் நாட்டுராயர், மேல்நாட்டரையர், மேல்நாட்டுத்தேவர், மேனாட்டுத் தேவர், கோனரிமேல்கொண்டார் : செம்பியன் மரபில் வந்த மேலைமன் என்னும் அரசனின் மரபினர் மேலைமன் அரசனின் வேறு பெயர்களான "மேனாட்டரையன, மேனாட்டுராயன மேனாட்டுத் தேவன், மேனாடன்,மேல் கொண்டான் என்னும் பெயர்களால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாரா யினர். மேலைமன் அரசன் "மேனாங்குடி, மேல் கொண்ட வெளி, மேலைவாயில், மேலைநத்தம்" என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-103].

கோனேரிமேல்கொண்டார் பட்டப் பெயரும் சோழ மனனர் களும் : சோழ மன்னர்களில் மூன்றாங் குலோத்துங்கசோழனும் விக்கிரம சோழனும் கோனேரி மேற்கொண்டான் என்னும் பட்டப்பெயரைப் பெற்றிருந்தாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடு கின்றன.

"திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ கோனேரிமேல் கொண்டான் வெங்கல நாட்டுக் கண்மாளர்க்கு 15-வது ஆடி மாதம் முதல் தங்களுக்கு நன்மை தின்மைகளுக்கு இரட்டைச் சங்கம் ஊதி, பேரிகை உள்ளிட்டவும் கொட்டுவித்துக் கொள்ளவும் தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்குப் பாதரக்ஷை சேர்த்துக் கொள்ளவும், தங்கள் வீடுகளுக்குச் சாந்து இட்டுக் கொள்ளவும் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை செல்லத் தக்கதாகத் தங்களுக்கு வேண்டின இடங்களிலே கல்லிலும், செம்பிலும் வெட்டிக் கொள்க, இவை விழுப்பாதராயன் எழுத்து."

"கோனேரி மேல் கொண்டான் கருவூர்த் திருவானிலை ஆளுடையார் கோயில் தேவர்கன்மிகளுக்கு – இந்நாயனார் கோயிலுக்கு நம் பெயரால் இயற்றின வீரசோழன் திருமடவளாகத்தில் குடியிருந்த தவசியர்க்கும், சிவப்பிராமணர்க்கும், தேவரடியார்க்கும், உவச்சர்க்கும், பலபணி நிமந்தக்காரர்க்கும் சீவனசேஷமாகத் தென்கரை ஆந்தனூரான வீரசோழ நல்லூர் கொடுத்து இவ்வூரால் வந்த இறையும் எலவையும் உகவையும் கொள்ளப் பெறாதோமாக விட்டு மற்றுள்ள குடிமைப்பாடும் எப்பேர்ப்பட்டதும் இந்நாயனார் கோயிலுக்குச் செய்து இவ்வூர் இப்படி சந்திராதித்தவரை அனுபவிப்பார்களாக நம்மோலைக் கொடுத்தோம். இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கொள்க இவை விலாடத்தரையன் எழுத்து".
[– கருவூர் பசுபதீச்சுரர் கோயில் கல்வெட்டுக்கள்.]

ராரண்டர், ரார‍ாண்டார், இராராண்டர், இராராண்டார், இராதராண்டார், இறையாண்டார் : செம்பியன் மரபில் வந்த இறையமன் என்பவனின் மரபினர். இறையமனின் வேறு பெயரான "இறையாண்டான்" என்னும் பெயரால் இவர்கள் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். இறையமன் "இறையனூர், இறையான் சேரி" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலங்களையும் "இறையான்குடி, இறையான் சேரி, இறைமங்கலம்" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். [-சூரிய குலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-98.]

வங்கர், வங்கணர், வங்கராயர், வங்கத்தரையர், வங்காரமுத்திரியர், வங்காரமுத்தரையர், வங்கானமுத்திரையர் : செம்பியன் மரபில் வந்த வங்காரமன் என்பவனின் மரபினர். வங்காரமன் [மிகுதியான பொன்னையுடையவன் என்பது பொருள்.]

"வங்கநகர்" என்னும் நகரத்தையுண்டுபண்ணி இராசதானியாக கொண்டவன்; "வங்கன், வங்கராயன், வங்கத்தரையன்" என்னும் இவனது பெயர்களால், இவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். வங்காரமன் "வங்காரமன் பேரையூர், வங்காரம் பேட்டை, வங்கத்தான்குடி, வங்கமங்கலம்" என்னும் ஊர்களை உண்டாக்கினான். [-சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-85].

வங்காளதேசம் உள்ளிட்ட வங்க நாட்டை வெற்றிக் கொண்டவர்கள் இப்பட்டப்பெயர்களைப் பெற்றிருக்கவும் வாய்ப்புண்டு. இப்பட்டப் பெயர்கள் கள்ளர் இனத்தாரில் ஒரு வகுப்பாருக்கு மாமன்னன் முதல் இராசேந்திர சோழனின் கங்கை படையெடுப்பின் போது கூட கொடுக்கப்பட்டிருக்கலாம்

இரண்டாம் இராசராசசோழன் காலத்தில் இராசராச வங்கார முத்தரையன் என்னும் பெயரில் நாடு காவல் அதிகாரி ஒருவனும் இரண்டாம் இராசாதிராச சோழன் காலத்தில் கடந்தை சேந்தன் ஆதித்தனான இராசராச சிங்கார முத்தரையன் என்னும் பெயரில் நாடு காவல் அதிகாரி ஒருவனும் இருந்தார்களெனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

இராசராச வங்கார முத்தரையன் வரலாறு: இவன் இரண்டாம் இராசராசசோழன் காலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் திட்டக்குடி, பெண்ணாடகம் என்னும் பகுதிகளுக்கு நாடுகாவல் அதிகாரியாக இருந்தான். [-Ins 28 of 1908]. இவன் திட்டக்குடியில் தனக்குப் பாடிகாவல் வரியாக கிடைத்திட்ட நெல்லை ஆண்டு தோறும் அவ்வூர்க் கோயிலதிகாரிகள் நிவந்தமாகப் பெற்றுக் கொண்டு, இறைவர்க்கு அர்த்தயாம வழிபாடு செய்து வருமாறு ஏற்பாடு செய்தனன் என்று

அங்குள்ள கல்வெட்டொன்று உணர்த்துகின்றது. (- S. I. I., Vol , VIII. No. 285 )

கடந்தை சேந்தன் ஆதித்தனான இராசராச சிங்கார முத்தரையன் வரலாறு: இவன் பெண்ணாகடத்தைச் சூழ்ந்த நிலப்பரப்பில் நாடு காவல் அதிகாரியாயிருந்தவன்; இவன், திட்டகுடியிலுள்ள திருமால் கோயிலுக்கு ஐந்து வேலி நிலத்தை இறையிலியாக கி பி. 1168-ல் அளித்துள்ளனன் என்பது இங்குள்ள ஒரு கல்வெட்டால் [- S. I I. Vol. VIII No. 298] அறியக் கிடக்கின்றது. [- பிற்காலச் சோழர் சரித்திரம், பாகம் II, பக்கம் 121, 143.]

வடிவிராயர், வடுகராயர், வடுராயர் : செம்பியன் மரபில் வந்த வடுகமன் என்பவனின் மரபினர், வடுகமன் "வடுகூர்" [வடுவூராகவிருக்கலாம்] எனனும் நகரத்தையுண்டுபண்ணி இராசதானியாகக் கொண்டவன். வடுகமன் ' வடுக்குடி, வடுகச்சேரி, வடுகமங்கலம், வடுகந்தெருமேடு என்னும் ஊர்களையும் உணடாக்கினரான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-93

வர்மர் : பல்லவ அரச மரபினர். கம்போடியா வரையில் குடியேறியவர்கள். கம்போடியா அரசர்கள் பலரும் வர்மர் என்னும் பட்டப்பெயர் புனைந்தே முடி சூட்டப்பெற்றார்கள். [- தமிழ் இந்தியா, ந சி. கந்தையா பிள்ளை ]

வல்லத்தரையர், வல்லமாண்டார், வல்லாளதேவர், வல்லாளியார், வல்வல்லாடியார், வல்லிடியார் : செம்பியன் மரபில் வந்த வல்லபன் என்பவனின் மரபினர். வல்லபன் "வல்லம்" என்னும் நகரத்தையுண்டுபண்ணி இராசதானியாகக் கொண்டவன். வல்லபன் "வல்லம்" என்னும் [தேவாரம் பெற்ற] சிவதலத்தையும், "வல்லூர், வல்லம்பாடு, வல்லம்படுகை" என்னும் ஊர்களையும் உண்டாக்கினான்.

வல்லாளதேவர் என்னும் பட்டப் பெயருடையோர் போசள மன்னன் வல்லாளதேவனின் மரபினராகக்கூடவிருக்கலாம்.

போசள மன்னன் வல்லாள தேவன் வரலாறு: மூன்றாம் இராசராச சோழன் காலத்தில் வாழ்ந்தவன். சோழர் குலப்

பெண்மணியை மணந்தவன். வீர நரசிம்மனை மகனாகக் கொண்டவன். சுந்தர பாண்டியன் கைப்பற்றிய சோழநாட்டை சிலதிங்களுக்குள் மீட்டு, இராசராச சோழனை மீண்டும் அரியணையில் ஏற்றியவன். சோழ இராச்சியத்திற்குரிய பட்டப் பெயர்களான, 'பிரதிட்டா சாரியன்'(Journal of Indian History, Vol. VI. P. 200), 'பாண்டிய கஜகேசரி' (- Ibid. PP. 200 and 201.), 'சோழகுல ஏகரட்சகன்' (- Ibid, P. 203) ஆகியவற்றைச் சூட்டிக் கொண்டவன். [- பிற்காலச் சோழர் சரித்திரம்' பக்கங்கள்-187, 188.]

போசள மன்னன் வல்லாள தேவன் அல்லாது வீரவல்லாள தேவன் என்னும் பெயரில் மன்னவன் ஒருவன் வாழ்ந்து வந்துள்ளான். இவனது கல்வெட்டொன்று அரிசிக்கரையில் உள்ளது. [- புறநானூறு, மூலமும் உரையும், 201-400 பாட்டுக்கள்; ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.]

வல்லவரையர் : சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கிய வல்லவரையர் நாட்டை ஆண்ட அரச மரபினர். [Ins. 157 of 1915]. வல்லவரையன் வந்தியதேவன் இவர்களில் தலை சிறந்தவனாவான்.

வல்லவரையன் வந்திய தேவன் வரலாறு : பிற்காலச் சோழர்கள் காலத்தில் சிறந்த படைத்தலைவனாக விளங்கியவன். மாமன்னன் இராசராச சோழனின் தமக்கையான குந்தவைப் பிராட்டியை மணந்தவன். வட-ஆர்க்காடு மாவட்டத்தில் பிரமதேசம் என்னும் ஊரைச் சூழ்ந்த பகுதிகளை அரசாட்சி செய்தவன். [Ins. 191 and 243 of 1915]. அமரர் 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதிய 'பொன்னியின் செல்வன் என்ற வரலாற்றுப் புதினத்தில் இவனது சிறப்பையும், மாமன்னன் இராசராச சோழனின் மேன்மையையும் நிரம்பக் காணலாம்.

வளம்பர், வளவர் : பஞ்சநதசோழன் மரபில் வந்த வளவ சோழனின் மரபினர். வளவசோழன் காலமுதலே சோழ நாட்டுக்கு "வளநாடு" என்னும் பெயரும் சோழர்களுக்கு

''வளவன்'' என்னும் பெயரும் வழங்கலாயிற்று. [-சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-113].

வண்டயர், வாண்டையார்; வண்டை நகர அரச மரபினர். வண்டை நகர் என்பது முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் வண்டாழஞ்சேரி (- S. I. I. Vol., IV. No. 862] என்றழைக்கப் பட்டு தற்போது வண்டுவாஞ்சேரி என்றழைக்கப்படுகிறது.

வண்டுவாஞ்சேரி தற்போது தஞ்சை மாவட்டம், குடந்தை வட்டம், நாச்சியார் கோயிலுக்கு அருகில் ஓர் சாதாரண கிராம மாக இருந்து வருகிறது.

வாண்டையார் மரபில் தலைசிறந்தவன் கருணாகரத் தொண்டைமானாவான்.

கருணாகரத் தொண்டைமான் வரலாறு: இவனது தந்தை பெயர் சீரிளங்கோ; இவனது இயற்பெயர் திருவரங்கன் (E. P. Ind. Vol. XXII. No. 23) இவன் திருமாலிடம் பெரிதும் ஈடு பாடுடையவன். இவன் அறிவாற்றல்களில் சிறந்து விளங்கிய மையால் முதலில் முதற்குலோத்துங்க சோழனுடைய அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாகிப் பிறகு படிப்படியாக உயர்நிலை யை எய்தி இறுதியில் இவ்வேந்தற்கு அமைச்சர் தலைவனாக வும் படைத்தலைவர்களுள் முதல்வனாகவும் ஆயினன். இவனே வடகலிங்கப் போருக்குத் தலைமை படைத்தலைவனாகச் சென்று போர் நடத்தி, அந்நாட்டு வேந்தனாகிய அனந்தவர்ம சோடகங்கனை வென்று, குலோத்துங்க சோழர்க்கு வாகை மாலை சூடியவன். கவிச் சக்கரவர்த்தியாகிய சயங்கொண் டாரும் இவனை 'வண்டையர் அரசன் அரசர்கள் நாதன் மந்திரி - உலகுபுகழ் கருணாகரன்' [- கலிங்கத்துப்பரணி, 11, தா. 132]. எனவும், கலிங்கப்பரணி நம் காவலனைச் சூடிய தோன்றல் [- கலிங்கத்துப் பரணி, 13-தா, 33] எனவும் புகழ்ந் துள்ளனர். இவனது அரசியல் தொண்டைப் பாராட்டி 'வேள்' 'தொண்டைமான்' என்னும் பட்டங்கள் குலோத்துங்க சோழ னால் கொடுக்கப்பட்டது. இவன் விக்கிரமசோழன் ஆட்சியின் முற்பகுதியிலும் இருந்துள்ளனன் என்பது விக்கிரம சோழனு

லாவினால் அறியக்கிடக்கின்றது [விக்கிரம சோழனுலா, வரிகள் 136-138.] இவனை, வண்டைமன் எனவும், வண்டை நகரரசன் எனவும் வண்டையர்க்கரசு எனவும், வண்டையர் கோன்' எனவும் கலிங்கத்துப்பரணி குறிப்பிடுகிறது. [- கலிங்கத்துப்பரணி, தா, 16, 30, 53, 160.]

வாணராயர், வாணரையர், வாணதரையர், வாணதிரியர், வாணதிரையர், வீணதிரியர், வீணதிரையர், வீணாதிரியர், வீணாதிரையர் : செம்பியன் மரபில் வந்த வாணன் என்பவனின் மரபினர். வாணன் "வாணரையன் பட்டினம், [வாண தரையன் பட்டினம்] வாணன்பாடி [வாணியன்பாடி, வாணியம் பாடி]" என்னும் நகரங்களை யுமுண்டுபண்ணி இராசதானிகளாகக் கொண்டவன். வாணனின் வேறு பெயரான "வாண ராயன், வாணரையன் என்னும் பெயர்களால் அவன மரபினர் பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர். வாணன் வாணாதரை [தற்போது கும்பகோணத்தில் ஒரு பகுதியாயிருக்கிறது] என்னும் சிவதலத்தையும் "வாணதரையன் குடிக்காடு" என்னும் ஊரையும் உண்டாக்கினான். (- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-103, 104].

வாணாதிராயர் பற்றி டி வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் கூறுவது : கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மாவலி வாணாதிராயன் என்னும் பட்டமுடைய சில அரசியல் தலைவர்கள் பாண்டி நாட்டில் இருந்தனர் அவர்களுள், பிள்ளை குலேசகர மாவலி வாணராயனின் மேற்பார்வையில் புதுக்கோட்டை நாட்டிலுள்ள கோனாடு இருந்தது. இராமநாத புரம் மாவட்டத்திலுள்ள கேரள சிங்கவளநாடும் வாணாதி ராயன் என்ற தலைவன் ஒருவன் கண்காணிப்பில் அமைந் திருந்தமை அறியத் தக்கது. (The Pandyan Kingdom, P. 187).

பாண்டி வேந்தரிடம் படைத்தலைவர்களாக நிலவிய இவ் வாணாதிராயர்கள் அன்னோர் அயலார் படையெழுச்சியினால் ஆற்றலிழந்து இன்னல் எய்திய காலத்தில் பாண்டி நாட்டில் தாம் சுயேச்சையாகத் தனியரசு புரியத் தொடங்கியமையோடு பாண்டியர் திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்று அங்குக்

குறுநில மன்னர் நிலையில் இருந்து வருமாறு செய்தும் விட்டனர். எனவே, பாண்டியர் பேரரசின் வீழ்ச்சிக்கு இம்மாவலி வாணராயர்களின் அடாத செயலே காரணமாகும். [- பாண்டியர் வரலாறு, பக்கம்-146.]

வாணாதிராயர் நாடு : வாணாதிராயர்க்குரிய நாடு பாணனாடாகும். இது சித்தூர் மாவட்டத்தின் கீழ்ப் பகுதியில் இருந்தது. 'வடா அது, நல்வேற் பாணன் நன்னாடு' [- அக நானூறு, 325].

வாட்கொண்டார், வாள்கொண்டார், வாப்பிரியர், வாப்பிலியர், வாயாண்டார், வாயாளர், வாயாளியார், வாயாடியார், வாயாட்சியார், வாளாடியார் : நியமி மரபில் வந்த வாமன் என்பவனின் மரபினர். வாமன் வாகோட்டை என்னும் நகரத்தையுண்டாக்கி இராசதானியாகக் கொண்டவன். வாமனின் வேறு பெயர்களான "வாகொண்டான் வாயாண்டான், வாப்பிரியன், வாயாளி" என்னும் பெயர்களால் அவனது மரபினர் இப்பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர் (-சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-81].

வாச்சார், வாச்சியர், வாச்சியார் : வாச்சியன் என்பவனின் மரபினர். வாச்சியன் என்பது வாச்சார், வாச்சியர், வாச்சியார் என வழங்கப்படலாயிற்று. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்றில் காணப்படும் வாச்சியன் இரவி கூத்தன் என்பவன் இவர்கள் மரபைச் சேர்ந்தவனாகவும் இருந்திட வாய்ப்புள்ளது. இவன் இளவர் [Minor] ஒருவருக்குப் பாதுகாப்பாளனாக (Guardian) இருந்தது பின்வரும் கல்வெட்டால் தெரியவருகிறது

"வாச்சியன் இரவி கூத்தனை முதுகண்ணாகவுடைய இவன் பிரமணிதேவன் நீலியும் இவன் மகன் கூத்தன் இரவியும்" (- S. I. Ins. Vol. IV. No 227). [-புறநானூறு, மூலமும் உரையும், 201-400 பாட்டுக்கள், பக்கம்-245, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை.]

வாட்டாச்சியர், வாட்டாச்சியார், வாட்டாட்சியார் : வாட்டாற்று ஆட்சியார் என்பது காலப் போக்கில் வாட்டாச்சியர்

வாட்டாச்சியார், வாட்டாட்சியார் என வழங்கப்பட்டிருக் கலாம். வாட்டாறு என்னும் பெயர் தாங்கிய ஊர்கள் சோழ நாட்டிலும் (பட்டுக்கோட்டைப் பகுதியில்) தென்பாண்டி நாட்டிலும் உள்ளன. எழினி என்னும் மன்னன் சங்க காலத் தமிழகத்தில் வாட்டாற்றைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்டான். இவன் வாட்டாற்றைத் தலைமையிட மாகக் கொண்டு ஆண்டதால் 'வாட்டாற்று எழினியாதன்' எனப் பெயர் பெற்றான். [- புறநானூறு, மூலமும் உரையும், 201-400 பாட்டுக்கள், பக்கம்-448.]

மன்றாயர், மன்றாடியார், மண்டலராயர், மண்கொண்டார், மங்கொண்டார், மங்கண்டார் : நியமி மரபில் வந்த மண்டலன் என்பவனின் மரபினர். மண்டலன் "மண்டலக்கோட்டை" என்னும் நகரத்தையுண்டுபண்ணி இராசதானியாகக் கொண் டவன். மண்டலன் மண்டளியென்னும் சிவதலத்தையும் மண்கொண்டான் என்னும் ஊரையும் உண்டாக்கினான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-83, 84.]

பண்டை நாட்களில் பொது மக்களின் பொருட்டு அசர னது அவையில் முன்னிலையாகி நியாயங்கேட்கு வாதாடி யோர் மன்றாடியார் என்றும், பிற்காலச் சோழர்கள் காலத்தில் நீதிவழங்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்த ஊர்ச்சபை யார் மன்றாயர் [மன்ற அரையர் [அரசர்] என்றும் அழைக்கப் பட்டிருக்கலாம்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் நீதிநிர்வாகும் : பிற்காலச் சோழர்கள் காலத்தில் நீதி வழங்கும் பொறுப்பானது ஊர்ச் சபையினரிடமும், குலப்பெரியதனக்காரரிடமும் ஒப்படைக்கப் பட்டிருந்தது. வழக்குகளை விசாரிக்கவும், தீர்ப்பு வழங்கவும் விதிகளும் முறைகளும் வகுப்பட்டிருந்தன. ஆவணச்சான்று களைக் கொண்டும், பிறர்கூறும் சான்றுகளைக் கொண்டும், தாந்தாம் நேரில் கண்டவற்றைக் கொண்டும் நீதிமன்றத்தினர் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறினர், [-தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், பக்கம்-309.]

வாலியர், வாலிராயர் : வாலிசோழனின் மரபினர். வாலி சோழன் "வாலி கொண்டபுரம்" என்னும் சிவதல நகரத்தை யுண்டாக்கி, இராசதானியாகக் கொண்டவனாவான். [- சூரிய குலக்கள்ளர் சரித்திரம், பக்கம், 128.]

வாளமரர், வாளால் வெட்டியார், வாள்வெட்டியார், வாள் வெற்றியார் : முசுகுந்தன் மரபில் வந்த வாளமரன் என்பவனின் மரபினர். வாளமரன், "வாளமரன் கோட்டை" என்னும் நகரத் தையுண்டுபண்ணி இராசதானியாகக் கொண்டவன். வாட் போரிற் சிறந்தவன். மிக்க வீரமுடையவன். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-72.]

விக்கிரமத்தார், விக்கிரமத்தரையர் : விக்கிரம சோழனின் மரபினர். விக்கிரம சோழன் வரகுண பாண்டியனுக்கு மகட் கொடுத்தவன். அறம் வழாதவன்; திக்கு விசயம் பண்ணி விசயாபிடேகஞ்செய்தவன். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-145 ]

விசயத்தேவர் (விஜயத்தேவர்) : முதல் இராசேந்திரசோழன் காலத்தில் இந்து மாக்கடலிலிருந்த ஸ்ரீ விசயம் என்ற நாட்டை வென்றவர்கள் ஸ்ரீ விசயத்தேவர் என்பதாகும். காலப்போக்கில் 'ஸ்ரீ' தவிர்ந்து விசயத்தேவர் [விஜயத் தேவர்] என வழங்கப் படலாயிற்று.

ஸ்ரீ விசய நாடு என்பது யாது : சுமத்ரா என்று இக்காலத்தில் வழங்கும் சொர்ண தீவத்திலுள்ள பாலம்பாங் என்னும் பகுதி யே ஸ்ரீ விசயநாடு என்பதாகும். (- The Cholas, Vol. I. P. 259). சுமத்ரா கி. பி. எட்டாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற் றாண்டு வரையில் சிறந்த நாடாக இருந்து தமிழகத்துடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. [- பிற்காலச் சோழர் சரித்திரம் பாகம்-I, பக்கம்-178.]

விசலண்டார், விசலாண்டார், பிசலண்டார், பெசலாண்டார், வீசண்டார், வீசாண்டார், விசலாளியார், விச்சாடியார், விசல் கொண்டார், விசலுண்டார், விசுலுண்டார், பிசலுண்டார் : முசுகுந்தன் மரபில் வந்த விசலமன் என்பவனின் மரபினர். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-71 ]

**விசராயர், விசுவராயர், விசுவரார், விசயராயர், விசையராயர் :** விசயாலய சோழனின் மரபினர். விசயாலய சோழனின் வேறு பெயரான விசயாடராயன் என்னும் பெயரால் இவர்கள் இப் பட்டப் பெயர்களைப் பெறுவாராயினர்.

**விசயாலய சோழன் சுருக்க வரலாறு :** சிறந்த வீரன். மார்பில் தொண்ணூற்றாறு புண்களைக் கொண்ட வெற்றிப் புரவலன் (விக்கிரம சோழனுலா, 27-32; குலோத்துங்க சோழனுலா 38-44; இராசராச சோழனுலா 35-40). தமிழக மண்ணில் பிற்காலச் சோழப்பேரரசை மீண்டும் நிலைநாட்டியவன். திருப்புறம்பயப்போர் இவனது ஆட்சிக் காலத்தில் நடந்த தலைசிறந்த போராகும். இப்போரின் பயனாக பாண்டியர், பல்லவர் வலிமை குன்றி சோழர் எழுச்சியுற்றார்கள். திருப்புறப் பயப்போரை டி. வி சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் பாண்டியன் நெடுஞ்செழியன் இளமையில் வென்ற தலையாலங் கானப் போரோடும், ஆங்கிலேயர் வென்ற பிளாசிப் போரோடும் ஒப்பிடுவார்.

**வஞ்சிராயர், வாஞ்சிராயர், விஞ்சிரார், விஞ்சிராயர், விஞ்சைராயர் :** வாஞ்சி சோழனின் மரபினர். வாஞ்சியாறு என்னும் சிற்றாறும் ‘வாஞ்சியூர், வாஞ்சிமங்கலம், வாஞ்சிகுடி’’ என்னும் ஊர்களும் இவனால் உண்டாக்கப்பட்டதாகும். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-118 ]

**விட்டுணர், விற்பனர், விற்பன்னராயர் :** செம்பியன் மரபில் வந்த விட்டுணுமன் என்பவனின் மரபினர். விட்டுணுமன் விட்டுணுபுரம், விட்டுணம்பேட்டை [விஷ்ட்ணம்பேட்டை] என்னும் ஊர்களை உண்டாக்கியவனாவான். [- சூரியகுலக் கள்ளர் சரித்திரம், பக்கம்-100].

**விருதலார், விருதுளார், விருதராசர், விருதராச பயங்கரர் :** விசயதரனான குலோத்துங்க சோழனின் மரபினர். (Ibid,P185.)

**வில்லர், வில்லதேவர், வில்லவதரையர், வில்வராயர், வில்லவராயர் :** சேர அரச மரபினர். வில்லை இலச்சனையாகக் கொண்டமையால் இப்பட்டப் பெயர்களைப் பெற்றார்கள்.

விளப்பர் விளப்பசோழனின் மரபினர். விளப்பசோழன் "விளப்பாறு" என்னும் ஆற்றையும், விளத்தூர், விளக்குடி, விளாங்குடி, விளார், விளாங்குளம், விளமங்கலம் என்னும் ஊர்களையும் உண்டாக்கினான். [- Ibid. P-112].

வீரங்கொண்டார், வீரமுண்டார், வீரப்பிலியர், வீரப்புலியர், வீரப்பிரியன் வீரபோக சோழனின் மரபினர். வீரபோக சோழன் "வீரபுரம்,வீரமங்கலம், வீரனூர்,வீரக்குடி,வீரக்குரிச்சி, வீரமாங்குடி, வீரப்பட்டி,வீராக்கி என்னும்ஊர்களை உண்டாக்கியவனாவான். [- Ibid P. 105].

வெங்கிராயர், வேங்கைராயர் : பிற்காலச் சோழர்கள் காலத்தில் ஆந்திர நாட்டில் கோதாவரி ஆற்றுக்கும் கிருஷ்ணை ஆற்றுக்கும் இடைப்பட்டுக் கிடந்த வெங்கி நாடு அல்லது வேங்கை நாட்டை வெற்றிக் கொண்டவர்கள். வேங்கையரையர் என்போர் காலப்போக்கில் வெங்கிராயர் எனவழைக்கப் பட்டார்கள்.

வெட்டுவராயர், வெட்டுவார் : வெட்டுவ சோழனின் மரபினர். வெட்டுவசோழன் "வெட்டாறு" என்னும் பேராற்றை வெண்ணியாற்றின் [வெண்ணாறு எனத் தற்போது வழங்குகிறது.] ஒரு கிளையாக [தென்பிரம்பூருக்சருகில்] பிரித்து [வேதிகுடிக்கருகில்]முள்ளியாற்றிற் சேர்த்து, கொரடாச் சேரிக்கருகில் கிழக்கே திருப்பி, நாகூருக்கருகில் கடலில் சேர்த்தவனாவான். [- Ibid. P. 119]

வெண்டர், வெண்டார், வென்றார் : போர்க்களம் புகுந்து வெற்றி வாகை சூடியோர். வென்றார் என்பது காலப் போக்கில் வெண்டர், வெண்டார் என வழங்கப்படலாயிற்று.

வெள்ளங்கொண்டார் : நீல சோழனின் மரபினர். நீல சோழன் வெள்ளம், வெள்ளாம்பிரம்பூர், வெள்ளைக்குடி, வெள்ளுகுடி, வெள்ளூர், வெள்ளங்கால், வெள்ளமங்கலம் [விண்ணமங்கலம்] என்னும் ஊர்களையும் நீவா நதி, வடவெள்ளாறு, தென்வெள்ளாறு, வெள்ளையாறு, வள்ளையாறு என்னும் ஆறுகளையும் உண்டாக்கினான்.[-Ibid PP. 117.118.]

**வேணுடையார் :** சேர மரபினர். சேரநாட்டில் வேணாடு என்னும் பகுதியை ஆண்டவர்கள். வேணாடு என்பது கேரள மாநிலத்தில் கோட்டாறும் திருவாங்கூரும் இணைந்த பகுதி யாகும்.

**வேளாளர் :** கொடும்பாளூரிலிருந்த வேளான் சுந்தர சோழனின் மரபினராக இருக்கலாம்.

**வேளூரர், வேளூரார், வேளூடையார் :** மாந்தாதா மரபில் வந்த வேள் என்பவனின் மரபினர். (Ibid. 66.)

**வேம்பர் :** பாண்டிய மரபினர். பாண்டியர் பட்டப்பெயர் களில் வேம்பன் என்பதும் ஒன்றாகும். வேம்பன், உயர்சொற் கிளவியாக வேம்பர் என வழங்கியிருக்கலாம்.

**வைகராயர், வைகைராயர் :** பாண்டிய மரபினர். பாண்டியர் வைகைக்கரைக்குரியவராததால் அவர்களும் அவர்களது மரபினரும் இப்பட்டப் பெயர்களைப் பெற்றிருக்கலாம்.

**வைதும்பர், வைதுங்கர், வைதும்பராயர், பைதுங்கர், பதுங்கர் :** பிற்காலச் சோழர்கள் காலத்தில் வைதும்ப நாட்டை வெற்றிக் கொண்டவர்கள்.

**வயிரவர், வயிராயர், வைராயர் :** முதற்குலோத்துங்க சோழன் காலத்தில் வயிராகரம் என்னும் பகுதியை வென்ற வர்கள்.

# கள்ளர் பட்டப் பெயர்கள் பட்டியல்

அகத்தியர், அகத்தியார்
அங்கராயர், அங்குராயர், அன்கராயர்
அனகராயர்
அங்கதராயர்
அச்சமறியார்
அச்சிப்பிரியர்
அச்சித்தேவர், அச்சுத்தேவர்
அச்சுதத்தேவர்
அச்சிராயர்
அச்சுதர்
அச்சுதப்பண்டாரம்
அச்சுதராயர்
அசையாத்துரையர்
அசையாத்துரையார்
அஞ்சாத்தேவர்
அடக்கப்பட்டார்
அடைக்கப்பட்டார்
அடக்குப்பாச்சியார்
அடங்காப்பிரியர்

அடைவளைந்தார்
அடவளைந்தார், அடை
வளைஞ்சார், அடவளைஞ்சார்
அண்டம் வளைந்தார்
அண்டங்கொண்டார்
அண்டப்பிரியர்
அண்டமுடையர்
அண்டக்குடையர்,
அண்டாட்சியார்
அண்ணாகொண்டார்
அண்ணுண்டார்
அண்ணாத்திப்பிரியர்
அண்ணுத்திப்பிரியர்
அண்ணுப்பிரியர்
அண்ணாப்பிரியர்
அதிகமார், அதியமார்
அதிகாரியார்
அதிகையாளியார்
அத்திப்பிரியர்

அத்தியாக்கியார், அத்திரியாக்
கியார், [அத்திரிமாக்கியார்]
அத்தியாளியார், அத்தாணியார்
அத்திரியர், அத்திராயர்,
அத்தி அரையர், அத்திரையர்
அநந்தர், ஆநந்தர், அறந்தர்
அமரகொண்டார்
அமரண்டார், அமராண்டார்
அம்பர்கொண்டார்
அம்பராண்டார்
அம்பர்த்தேவர்
அம்பலத்தார், அம்பலம்
அம்பலகாரர்
அய்யனார்
அய்யாதேவர்
அம்பாணர்
அம்பானையர், அம்பானைதேவர்
அம்மலதேவர், அம்மாலைதேவர்,
அம்மானைத்தேவர், அம்பானைத்
தேவர்

அம்மையார், அம்மையர்
அம்மையத்தரையர்
அம்மையத்தேவர், அம்மையதேவர்
அய்யாதேவர், அய்யாத்தேவர்
அயிரப்பிரியர்
அரசர், [அரதர்]
அரசதேவர்
அரசப்பிரியர், அரசுப்பிரியர்,
அரசுப்பதித்தார்
அரசாண்டார்
அரசாளர், அரசாளி, அரசாளியார்
அரசாட்சி, அரசாட்சியார்
அரசுகொண்டார்
அரசுக்குடையார், அரசுக்குடையர்
அரசுடையார், அரசுடையர்
அரசுக்குழைச்சார்
(அரச்சுக்குழைச்சார்
அரசுக்குவாச்சார்)
அரசுக்குழைத்தார்
அரசுப்பதித்தார்
அரிப்பிரியர், அரியதர்

அரியப்பிள்ளை, அரியபிள்ளை
அரியதன்
அருண்மொழிதேவர்
அருமொழிதேவர்
அருமடார்
அருமத்தலைவர்
அருமநாடார், அருமைநாடார்
அருமநாடர், அருவாநாடர்
அருவாநாடார்
அருமநாட்டார், அருமைநாட்டார்
அருவாநாட்டார்
அருவாத்தலைவர்
அருவாத்தலையர்
அலங்காரப்பிரியர்
அலங்கற்பிரியர்
அல்லிநாடாள்வார்
அழும்புள்ளார்
அன்னக்கொடியார்
அன்னக் கொடியர்
அன்னமுடையர்
அன்னமுடையார்

அன்னவாயில் ராயர் அன்னவாசல்
ராயர், அண்ணவாசல்ராயர்
ஆக்காட்டரையர்
ஆற்காட்டரையர், ஆக்காட்டுராயர்
ஆக்காட்டியார், ஆக்காட்டியர்
ஆக்காடு கொண்டார்
ஆர்க்காடு கொண்டார்
ஆச்சங்கொண்டார்
ஆச்சதேவர்
ஆச்சர்
ஆச்சராயர்
ஆச்சாண்டார்
ஆச்சாப்பிரியர், ஆட்சிப்பிரியர்
[இராச்சாப்பிரியர்]
ஆச்சாளர், ஆச்சாளியார்
ஆச்சுடையர்
ஆடல்மெய்ச்சியார்
[ஆடுமேய்க்கியார்]
ஆதனழிசியார்
ஆதாழியார்
ஆதித்தர், ஆதிவாத்தர், ஆதியார்

# கள்ளர் பட்டப் பெயர்கள் பட்டியல்

அகத்தியர், அகத்தியார்
அங்கராயர், அங்குராயர், அன்கராயர்
அனகராயர்
அங்கதராயர்
அச்சமறியார்
அச்சிப்பிரியர்
அச்சித்தேவர், அச்சுத்தேவர்
அச்சுதத்தேவர்
அச்சிராயர்
அச்சுதர்
அச்சுதப்பண்டாரம்
அச்சுதராயர்
அசையாத்துரையர்
அசையாத்துரையார்
அஞ்சாத்தேவர்
அடக்கப்பட்டார்
அடைக்கப்பட்டார்
அடக்குப்பாச்சியார்
அடங்காப்பிரியர்

அடைவளைந்தார்
அடவளைந்தார், அடைவளைஞ்சார், அடவளைஞ்சார்
அண்டம் வளைந்தார்
அண்டங்கொண்டார்
அண்டப்பிரியர்
அண்டமுடையர்
அண்டக்குடையர்,
அண்டாட்சியார்
அண்ணாகொண்டார்
அண்ணுண்டார்
அண்ணாத்திப்பிரியர்
அண்ணுத்திப்பிரியர்
அண்ணுப்பிரியர்
அண்ணாப்பிரியர்
அதிகமார், அதியமார்
அதிகாரியார்
அதிகையாளியார்
அத்திப்பிரியர்

அத்தியாக்கியார், அத்திரியாக்கியார், [அத்திரிமாக்கியார்]
அத்தியாளியார், அத்தாணியார்
அத்திரியர், அத்திராயர்,
அத்தி அரையர், அத்திரையர்
அநந்தர், ஆநந்தர், அறந்தர்
அமரகொண்டார்
அமரண்டார், அமராண்டார்
அம்பர்கொண்டார்
அம்பராண்டார்
அம்பர்த்தேவர்
அம்பலத்தார், அம்பலம்
அம்பலகாரர்
அய்யனார்
அய்யாதேவர்
அம்பாணர்
அம்பானையர், அம்பானைதேவர்
அம்மலதேவர், அம்மாலைதேவர்,
அம்மானைத்தேவர், அம்பானைத்தேவர்

அம்மையார், அம்மையர்
அம்மையத்தரையர்
அம்மையத்தேவர், அம்மையதேவர்
அய்யாதேவர், அய்யாத்தேவர்
அயிரப்பிரியர்
அரசர், [அரதர்]
அரசதேவர்
அரசப்பிரியர், அரசுப்பிரியர்,
அரசுப்பதித்தார்
அரசாண்டார்
அரசாளர், அரசாளி, அரசாளியார்
அரசாட்சி, அரசாட்சியார்
அரசுகொண்டார்
அரசுக்குடையார், அரசுக்குடையர்
அரசுடையார், அரசுடையர்
அரசுக்குழைச்சார்
(அரச்சுக்குழைச்சார்
அரசுக்குவாச்சார்)
அரசுக்குழைத்தார்
அரசுப்பதித்தார்
அரிப்பிரியர், அரியதர்

அரியப்பிள்ளை, அரியபிள்ளை
அரியதன்
அருண்மொழிதேவர்
அருமொழிதேவர்
அருமடார்
அருமத்தலைவர்
அருமநாடார், அருமைநாடார்
அருமநாடர், அருவாநாடர்
அருவாநாடார்
அருமநாட்டார், அருமைநாட்டார்
அருவாநாட்டார்
அருவாத்தலைவர்
அருவாத்தலையர்
அலங்காரப்பிரியர்
அலங்கற்பிரியர்
அல்லிநாடாள்வார்
அழும்புள்ளார்
அன்னக்கொடியார்
அன்னக் கொடியர்
அன்னமுடையர்
அன்னமுடையார்

அன்னவாயில் ராயர் அன்னவாசல்
ராயர், அண்ணவாசல்ராயர்
ஆக்காட்டரையர்
ஆற்காட்டரையர், ஆக்காட்டுராயர்
ஆக்காட்டியார், ஆக்காட்டியர்
ஆக்காடு கொண்டார்
ஆர்க்காடு கொண்டார்
ஆச்சங்கொண்டார்
ஆச்சதேவர்
ஆச்சர்
ஆச்சராயர்
ஆச்சாண்டார்
ஆச்சாப்பிரியர், ஆட்சிப்பிரியர்
[இராச்சாப்பிரியர்]
ஆச்சாளர், ஆச்சாளியார்
ஆச்சுடையர்
ஆடல்மெய்ச்சியார்
[ஆடுமேய்க்கியார்]
ஆதனழிசியார்
ஆதாழியார்
ஆதித்தர், ஆதிவாத்தர், ஆதியார்

ஆதித்த நெடுவாண்டார்
ஆந்தையார்
ஆந்தைராயர்
ஆயப்பிரியர், ஆளற்பிரியர்
ஆய்ப்பிரியர், ஆப்பிலியர்
ஆரக்கண்ணியார்
ஆரக்கண்ணியர்
ஆரஞ்சுற்றியார், [ஆரச்சுத்தியார்
ஆர்சுற்றியார், ஆர்சுத்தியார்
ஆரிச்சுற்றியார்
ஆரம்பூண்டார், ஆரமுண்டார்
ஆரூரார் [ஆரார்]
ஆருராண்டார்
ஆருராளியார், [ஆராளியார்]
ஆலங்கொண்டார்
ஆலத்தொண்டார்
ஆலத்தொண்டமார்
ஆலத்தரையர்
ஆலப்பிரியர், ஆலம்பிரியர்
ஆளம்பிரியர்
ஆளற்பிரியர், ஆளம்பிரியர்

ஆலம்பிரியர், ஆய்ப்பிரியர்
ஆவத்தியார், ஆவத்தயர்
ஆவத்தார்
ஆவணத்தார்
ஆவாண்டார் [ஆவண்டார்,]
ஆவண்டையார், ஆவாண்டையார்
ஆவாளியார், ஆதாழியார், ஆளியார்
ஆள்காட்டியார், ஆள்காட்டியர்
ஆற்காடுராயர்
இடங்காப்பிறந்தார்
இரட்டப்பிரியர் [இரட்டப்பிலியர்]
இராக்கதர் [இராக்கசர்]
இரங்கர்,இராங்கிப்பிரியர் [இராங்கிப்பிலியர்
இராங்கிப்பீலியர்]
இராங்கியர், ராங்கியர், ராங்கியார்
இராசகுலம்
இராசாளியார், இராயாளியார்,
இராஜாளியார், இராஜாளியர்
இராதராண்டார், இராரண்டார்
இராராண்டார், ராராண்டார்

இராதராயர், [இராதரார்]
[இராமலிங்கராயதேவர்]
இராலிங்கராயதேவர்
இராயங்கொண்டார்
(இராயமுண்டார்)
இராயதேவர்
இராயர்
இராயப்பிரியர், இராசப்பிரியர்
இராசாப்பிரியர்
இராயாண்டார், இராரண்டர்
இராயாளர்
இருங்களர், இருங்கள்ளர்
இருங்களார்
இருங்கோஇளர், [இருங்கோளர்]
இரும்பர்
இருப்பறையர்
இளங்கொண்டார் [இளமுண்டார்]
இளந்தாரியார்
இறைஞர்
இறையாண்டார்
இன்பச்செட்டி

ஈச்சங்கொண்டார்
ஈங்கொண்டார்
ஈழங்கொண்டார் [ஈழமுண்டார்]
ஈழத்தரையர்
ஈழத்தரசு
உத்தங்கொண்டார்
[உத்தமுண்டார்]
உத்தமங்கொண்டார்
உத்தப்பிரியர் [யுத்தப்பிரியர்]
உத்தமப்பிரியர்
உத்தமாண்டார், உத்தமண்டார்
உதாரப்பிரியர் (உதாரப்பிலியர்)
உப்புண்டார்
உய்யக்கொண்டார்
உலகங்காத்தார், உலகம்காத்தார்
உலகாண்டார்
உலகுடையார், உலகுடையர்
உலகுய்யர் [உலயர்]
உழுக்கொண்டார்
உழுப்பிரியர்
உழுவாண்டார், உழுவண்டார்

உழுவாளர்
உழுவாளியார், உழுவாட்சியார்
உழுவுடையர், உழுவுடையார்
உறங்கார்
உறந்தைகொண்டார்
உறந்தைப்பிரியர்
உறந்தையர்
உறந்தையாண்டார்
உறந்தையாளர்
உறந்தையாளியார், உறந்தை
யாட்சியர், உறந்தையாட்சியார்
உறந்தையுடையார்
உறந்தையுடையர்
உறந்தைராயர்
உறயர், உறியர்
ஊணர், ஊணியர்
ஊமத்தநாடார், ஊமத்தநாடர்
ஊமத்தயர்
ஊமத்தரையர்
ஊமப்பிரியர் (ஊமப்பிலியர்)
ஊர்த்தியார்

ஊரத்திநாடார்
ஊரத்தியார், ஊரத்தியர்
ஊரான்பிலியர், ஊரான்பீலியர்
எண்ணாட்டுப்பிரியர் (என்னாட்டுப்
பிரியர்), ஏணாட்டுப்பிரியர்
(ஏனாட்டுப்பிரியர்)
எத்திப்பிரியர், ஏத்திப்பிரியர்,
ஏத்திரிப்பிரியர்
எத்தியப்பிரியர்
எத்திரியப்பிரியர்
எத்தொண்டார், ஏத்தொண்டார்
ஏகம்பத்தொண்டார்
ஏகம்பத்துப்பிரியர்
ஏனாதிகொண்டார்
ஏனாதிநாட்டுப்பிரியர்
ஏனாதிப்பிரியர், ஏனாதியார்
ஐயப்பிரியர், (ஐரைப்பிரியர்)
ஐந்நூற்றுப்பிரியர்
ஐயர், ஐவர்
ஒண்டிப்பிரியர், (ஒண்டிப்பிலியர்)
ஒண்டிப்புலியார்

ஒளிகொண்டார்
ஒளிப்பிரியர்
ஒளியாண்டார்
ஒளியாளர்
ஒளியாளியார், ஒளியாட்சியார்
ஒளியுடையார், ஒளியுடையர்
ஒளிராயர்
ஒளிவராயர்
ஒளிவிராயர்
ஒற்றையார், ஒற்றையர்
ஓசையார், ஓசையர்
ஓடம்போகியார்
ஓட்டம்பிடுக்கியார்
ஓட்டம்பிடிக்கியார்
ஓந்திரியர், ஓந்திரையர்
ஓந்தரையர்
ஓமசையர், ஓமனாயர், ஓனாயர்
ஓமாந்தரையர்
ஓமாமரையர்
ஓமாமுடையர்
ஓம்பிரியர்

ஓமாம்பிரியர் ஓயாம்பிலியர்
கக்கொடையார், (கக்கொடையர்
கக்குடையர்) கக்கோட்டையர்
கங்கர்
கங்கநாடார், கங்கநாடர்
(கங்கைநாடார், கங்கைநாடர்)
கங்கைராயர், கங்கநாட்டார்
கச்சிராயர், கச்சைராயர்
கச்சியராயர்
கஞ்சர்
கஞ்சராயர்
கடம்பர்
கடம்பரார்
கடம்பையர்
கடம்பராயர், கடம்புராயர், கடம்பை
ராயர்
கடம்பப்பிரியர், [கடியப்பிலியர்]
கடாரம் கொண்டார், கடாரத்,
தலைவர் (கடாத்தலைவர்
கடாத்தலையர்)
கடாரத்தரையர் (கடாத்திரியர்)

கடாரந்தாங்கியார்
கடாரம்தாங்கியார்
கட்டகொண்டார்
கட்டத்தேவர்
கட்டராயர்
கட்டவிடார்
கட்டவெட்டியார்
கட்டைகொண்டார்
(கட்டைக்குண்டார்)
கட்டையார், கட்டயர்
கட்டையாளியார், கட்டாணியார்
கடைப்பாடியார்
கண்டப்பிரியர்
கண்டபிள்ளை, கண்டப்பிள்ளை
காடப்பிள்ளை
கண்டர், கவுண்டர்
கண்டராயர், கண்டவராயர்
கண்டர்கிள்ளி, (கண்டர்சில்லி)
கண்டியர், கண்டியார்
கண்டுவார்
கண்ணரையர்

கதவாடியார்
கத்தரிகொண்டார்
கத்தூரிமுண்டார்
கத்தரிநாடர், கத்திநாடர்
கத்தரியர், கத்திரியர், கத்தூரியர்
கத்தரியாளியார்
கரங்கொண்டார், கரமுண்டார்
கரம்பைகொண்டார்
கரடியார் (கருடியார்)
கரம்பராயர்
கரம்பையார், கரம்பையர்
கரம்பயத்தார், கரம்பியத்தார்
கருக்கொண்டார் கருத்துண்டார்
கருத்திரையர்
கருப்புண்டார்
கருப்பூண்டார்
கருடிகருப்பக்கள்ளர்
கருப்பற்றியார் (கருப்பட்டியார்,
கருப்பட்டியர்) கரும்பற்றியார்
கருப்பிரியர்
கருப்பையர், கருப்பளார்
கருமண்டார், கரமுண்டார்
கரும்பராயர்
கரும்பர், கருமர்
கரும்பாண்டார்
கரும்பாளர்
கரும்பாளியார், கரும்பாட்சியார்
கரும்புகொண்டார்
கரும்புடையார்
கரும்பூரார்
கருவபாண்டியர்
கருவாண்டார்
கருவாளர்
கருவாளியார், கருவாட்சியார்
கருவுடையார், கருவுடையர்
கருஊரார், கருப்பூரார்
கலயர்
கலிங்கராயர், காலிங்கராயர்
காளிங்கராயர், காளிங்கராயர்,
காளியங்கராயர்
கலிங்கராயதேவர்
காலிங்கராயதேவர்
கலியர்
கலியனார்
கலியாட்சியார், கலிச்சியார்
கலிராயர்
கல்விராயர்
களத்துவென்றார்
களந்தண்டார், களந்தையாண்டார்
களபர், களவர், கிளாவர்,
களாவர், களர்
களப்பாளர் (களப்பளார்)
களப்பிலார், களப்பிரர்
களப்பாளியார் (களப்பாடியார்)
களப்பாள்ராயர், களப்பாளராயர்
களமுடையார், களமுடையர்
களக்குடையார், களக்குடையர்,
களக்கடையர், கக்குடையர்
கவுண்டர், கண்டர்
கனகராயர்
கன்னகொண்டார்
கன்னகுச்சிராயர்
கன்னதேவர்

கன்னபாண்டியர்
கன்னப்படையார், கன்னபடையர்
கன்னபட்டையார்
கன்னப்பிரியர்
கன்னமுடையார், கன்னமுடையர்
கன்னராயர் (கன்னிராயர்)
கன்னாண்டார்
கன்னாளர்
கன்னாளியார், கன்னாட்சியார்
கவிராயர்
க த்தூரிமுண்டார்(கத்தூரிமுண்டார்)
கஸ்தூரியர் (கத்தூரியர்)
காங்கையார், காங்கையர்,
காங்கெயர், காங்கேயர், காங்கியர்
காசிநாடர், காசிநாடார்
காசிராயர்
காடவராயர்
காடுரார்
காடுவெட்டி, காடுவெட்டியார்
காராட்சியர்
காராண்டார்

கனடப்பாடியார்
காராளர்
காரி, காரியார்
காருடையார், காருடையர்
காரைக்காச்சியார்
காரையாட்சியார்
கார்கொண்டார்
கார்ப்பிரியர்
கார்யோகர்
கார்யோகராயர்
காலாடியார், காவாடியார்
காளி
காவலகுடியார், காவலகுடியர்
காலாக்குடியர், காலாக்குடியார்
காவலாளியார், காவலியார்,
காவாலியார், காவளியார்,
காளியார், காவாலி
காவிரிவெட்டி (காவெட்டி)
காக்காவெட்டி
காவெட்டார்
கிடாத்தியார், கிடாத்திரியர்

கிருட்டினர்
கிளாக்கர்,
கிளண்டார்
கிளாக்கட்டையர்
கிளாக்குடையார், கிளாக்குடையர்
கிளாக்கடையார், கிளாக்கடையர்
கிளாக்கர்
கிள்ளியார்
கிள்ளிநார்
கிள்ளிநாடர் (கிளிநாடர்)
கிள்ளியாண்டார் (கிளியாண்டார்,
கிளியண்டார், கிளிப்பாண்டார்)
கிள்ளிகண்டார் (கிளிகண்டார்)
கிள்ளிகொண்டார்(குளிகொண்டார்)
கிள்ளிராயர் (கிளிராயர்)
கீரக்கட்டையர், கீரைக்கட்டையார்
கீரமுடையார், கீரமுடையர்
கீருடையார், கீருடையர்
கீழுடையர், கீவுடையார்
கீரரையர் (கீரையர்)
கீழப்பிரியர்

கீழரையர்
கீழண்டார், கீழாண்டார்
கீழாளர்
கீழாளியார், கீழாட்சியார்
கீழையர்
கீழுடையார், கீழுடையர்
கீழ்க்கொண்டார்
குங்கிலியர்
குச்சராயர், குச்சிராயர்
குச்சியராயர்
குடிகொண்டார், குடிக்கமுண்டார்
கொடிக்குமுண்டார்
குடியாளர், குடிபாலர்
குட்டுவர்
குட்டுவழியர், குட்டுவள்ளியர்
குண்டையர், (கொன்றையர்)
குமதராயர்
குமரர்
குமரண்டார், குமராண்டார்
குமாராண்டார், குமறண்டார்
குமரையாண்டார், குமரையண்டார்

குமரநாடர்
கும்பத்தார், கும்பந்தார்
குருகுலராயர்
குருசார்
குழந்திராயர்
குழந்தைராயர் (கொழந்தைராயர்)
கொழந்தராயர், குளந்தைராயர்
கொழந்தைராயர்
குறுக்கண்டார், குறுக்காண்டார்
குறுக்கொண்டார், குருக்கொண்டார்
குறுக்களாஞ்சியார்
குறுக்காளர்
குறுக்காளியார், குறுக்காட்சியார்
குறுக்கைப்பிரியர்
குறுக்கையர்
குறுக்கையாண்டார்
குறுக்குடையர், குறுக்குடையார்
குறும்பர்
குறும்பராயர்
கூசார், கூர்சார்
கூடலர்

கூட்டர்
கூத்தப்பராயர். (கொத்தப்பராயர்)
கொற்றப்பராயர், கொத்தப்பிரார்
கொற்றப்பிரார்,
கொற்றப்பிரியர்
கொத்தப்பிரியர்
கூரர் (கோரர்)
கூரராயர் கூராயர்
கூரராசர்
கூழாக்கியார்
கூழாளியார், கூழாணியார்
கூழையர்
கேரளராயர் கேரளாந்தகர்
கொங்கணர்
கொங்கரையர் கொங்ககரையர்
கொங்குதிரையர்
கொங்குராயர்
கொடிகொண்டார், கொடிக்க
முண்டார், கடக்கம்கொண்டார்
கொடியாளர் கொடிபாலர்
கொடிராயர், (கொடிக்கிராயர்
கொடிக்கவிராயர்)

கொடும்பர், கொடும்பையர்
கொடும்பராயர், கொடும்பைராயர்
கொடும்புராயர்
கொடும்பாளூர்ராயர்
(கொடுமளூர்ராயர்)
கொடும்பிரியர், கொடும்புலியர்
கொடுப்புலியர், கொடுப்புலியார்
கொடும்பைப்பிரியர்
கொடும்பப்பிரியர்
கொடும்பையரையர்
கொட்டையாண்டார்
(கோட்டையாண்டார்)
கொம்பியர்
கொப்பனார்
கொல்லத்தரையர், கொல்லத்திரையர்
கொல்லமுண்டார்
கொற்றங்கொண்டார், கொற்றமாண்டார், கொத்தமண்டார்
கொற்றரையர்
கொற்றாண்டார்
கொற்றாளர் கொற்றாளியார்

கொற்றாட்சியார்
கொன்றையர், (கொன்டையர்)
கொண்டையர்)
கொன்னமுண்டார்
கோட்டரையர், கோட்டத்துறையார்
(கோட்டையரையர்
(கோட்டைத்திரையர்)
கோட்டை சுருட்டியார்
கோட்டைமீட்டார்
கோட்டையாண்டார்
(கொட்டையாண்டார்)
கோதண்டபிரியர்
கோதண்டப்புலியர்
கோபாண்டியர் (கொப்பாண்டியர்)
கோப்பணர் (கோப்பர்)
கோபாலர்
கோப்புலி, கோப்புலியார்
கோப்புலிங்கம்
கோழயர், கோழியர், கோழிராயர்
கோறர், (கோசர்)
கோனேரிகொண்டார்

கோனேரிப்பிரியர்
கோனேரிமேல கொண்டார்
கோனேறிமேற்கொண்டார்
கோனாடுகொண்டார்
கைலாயதேவர்
கைலாயராயர்
கையராயர்
சக்கரர்
சக்கரை, சர்க்கரை, சக்கரையர்
சாக்கரையர்
சக்கராயர், சக்காராயர்
சக்கர நாடர்
சக்கர நாட்டார்
சக்கரப்பநாடாள்வார்
சக்கரையப்பநாடாள்வார்
சர்க்கரையப்பநாடாள்வார்
சங்கத்தியார், சங்காத்தியர்
சங்காத்தியார், சங்கத்தியாகர்
சங்கேந்தியார்
சங்கப்பிரியர் (சங்கப்பிலியர்)
சங்கரர்

சங்கரதேவர்
சங்கரராசர்
சங்கரராயர்
சட்டம்பியார்
சண்டப்பிரதேவர்
சந்திரங்கொண்டார்
சந்திரதேவர்
சமயர், சமையர்
சமயதேவர்
சமயாளியார், சமயாட்சியார்
சம்பிரதியார்
சம்பிரத்தேவர், சம்பிரதேவர்
சம்புராயர்
சம்புவராயர்
சம்மதிராயர்
சரவணர், சரவர்
சவுட்டியார், சமட்டியார்,
சம்பட்டியார்
சவுளியார்,
சன்னநாடார், சள்ளாடர்
சன்னராயர், சன்னவராயர்
சாகோட்டைதாங்கியார்
(சாகொடைதாங்கியார்
சாணர், சாணையர், சானூரர்,
சானூரர்
சாதகர்
சாத்தயர்
சாத்தரையர்
சாமூத்தரையர், சாமுத்திரையர்,
சாமுத்திரியர்
சாம்பாளியார், (சாம்பலாண்டியார்)
சாலியதேவர்
சாளுக்கியர்
சாளுவர்
சாவாளியார், [சாவாடியார்
சாடியார்]
சிக்கராயர், சிங்கராயர்
சிங்களநாடர், சிங்கநாடார்
சிங்களப்பிரியர், சிங்கப்பிலியர்
சிங்கப்பீலியர், சிங்கப்புலியர்
சிங்களராயர்
சிங்களர், சிங்களார்
சிங்களாளியர்
சிங்களாந்தகர், சிங்களேந்தியாயர்
சிங்காரியர், சிங்காரிக்கர்
சிட்டாக்கியார்
சிட்டாட்சியார், சிற்றாட்சியார்
சித்தாட்சியார்
சிந்துராயர்
சிலம்பர், சிலுப்பர், சிலுப்பியர்
சிலுகியர், சிலுப்பியார்
சிவலிதேவர்
சிவலிங்கதேவர்
சிவன் [சேவன்]
சிறுநாடர்
சிறுநாட்டுராயர்
சிறுப்பிரியர்
சிறுமாடர், சிறுமடார்
சிறுராயர்
சீனத்தரையர்
சுக்கிரர்
சுக்கிரராயர், சுக்கிரபராயர்,
சுக்கிரியராயர்
சுண்டையார், சுண்டையர்

சுற்றயர்
சுத்தவீரர், சுற்றிவீரர்
சுந்தர்
சுந்தரராயர்
சுரக்குடியார், சுரக்குடையர்
சூரக்குடையர், சூரக்கொடையர்
சுரைப்பிடுங்கியார், [சுரைப்
பிடுங்கியர், சூரப்பிடுங்கியர்
சூரக்கோட்டையார்
சூரக்கோட்டையர்
சூரப்பிரியர், (சூரப்பிலியர்)
சூரயர், (சொறியர்), சூரியர்
செட்டியார், செட்டிரையர்
செம்படையார், செம்படையர்
செம்புடையர்
செம்பரையர்
செம்பியங்கொண்டார்
செம்பொன்கொண்டார்
செம்பியத்தரசு
செம்பியதரையர்
செம்பியப்பிரியர், (செம்பிலியர்
செம்பிழியர்)

செம்பியமுடையார்
செம்பியமுத்தரசு
செம்பியமுத்தரசர்
செம்பியமுத்தரையர்
செம்பியமுத்திரியர்
செம்பியர், (செம்பர், செம்பொர்)
செம்பியரையர்
செம்மைக்காரர்
செம்மைக்கொண்டார்
செயங்கொண்டார்
சயங்கொண்டார், சேங்கொண்டார்
செல்லர்
செல்லரையர்
செழியதரையர்
செனவராயர், (சன்னவராயர்,
சனகராயர்), சோழசனகராசர்
சென்னிகொண்டார், சேனை
கொண்டார், சேனக்கொண்டார்
சென்னித்தலைவர்
சென்னிநாடர், (சேனைநாடர்)
சேனைநாடார்

சென்னியாண்டார், சென்னண்டார்
சென்னிராயர்
சேணர், சாணர், சாணையர்
சேனரையர், சாணரையர்
சேணாடர் சேணாநாடார்
(சென்னாடார்), சேனைநாடார்
சேணாண்டார், சென்னண்டார்
சேங்கொண்டார்
சேண்கொண்டார், சேனக்
கொண்டார், சேனைக்கொண்டார்
சேண்டப்பிரியர்
சேண்டாப்பிரியர், (சேண்பிரியர்)
சேண்ராயர், (செனவராயர்)
சேதிராயர், சேதுராயர்
சேதிரார், சேதுரார்
சேதிநாடார், சேதிநாடர்
சேந்தமுடையார்
சேந்தமுடையர், சேந்தமடையார்
சேந்தராயர், சிந்துராயர்
சேந்தர், செந்தார், செந்தியார்
சேந்தூரியர், சேத்தூரியர்
சேய்ஞலரையர், (செம்மைக்காரர்)

சேய்ஞலாண்டார்
சேய்ஞலாளர்
சேய்ஞலாளியார்
சேய்ஞலாட்சியார்
சேய்ஞற்கொண்டார்
செம்மைகொண்டார்
சேய்ஞற்பிரியர்
சேய்நற்பிரியர்
சேய்ப்பிரியர்
சேய்ப்பிளர், சேப்பிளார்
சேப்பிழார், சேக்கிழார்
சேரமுடியர், சேறைமுடியர்
சேர்வைக்காரர், சேர்வை
சேரவரசர், சேரவையார்
சேலைக்கொண்டார்
சேறியர்
சேறைராயர்
சேற்றூரரையர்
சேனாதிபதி, சேனாதிபதியார்
சேனாபதியார், சேனாதியார்
சேனாதி

சேனாதிபர்
சேனைத்தலைவர்
(சேனைத்தலையர்)
சேனைநாடார்
சொக்கராயர்
சொரப்பரையர், சொரப்பளிங்கியார்
சோணாடர்
சோணாடுகொண்டார்
சோணாருண்டார்
சோணையர்
சோதிரையர், சோதிரியர்
சோமணநாய்க்கர், சோமநாயக்கர்
சோமநாடர், சோமநாடார்
சோமரசர்
சோழர், சோழகர், சோழவர்
சோலையர், சோமணர்
சோழகங்கநாடர், கங்கநாடர்
கங்காளநாடார்
சோழங்கதேவ அம்பலம்
சோழங்கதேவ அம்பலகாரர்
சோழகங்கநாட்டார்

சோழகங்கர், கங்கர்
சோழகன்னகுச்சிராயர்
சோழகேரளர்
சோழகோன்
சோழங்கர்
சோழங்கதேவர்
சோழகங்கதேவர்
சோழங்கநாடர், சோழங்கநாடார்
சோழங்கொண்டார்
சோழசனகராசர். (சனகராயர்)
சோழதரையர், சோழதிரையர்,
சோழதிரியர், சோழுதிரையர்
சோதிரையர்
சோழதேவர், (சோமதேவர்)
சோழநாடர், (சோமநாடர்
சோமநாடார்)
சோழநாயகர்
சோழபல்லவர்
சோழபாண்டியர், (பாண்டியர்)
சோழப்பிரியர்
சோழரசர், (சோமரசர்)

சோழராசர், (சோமராசர்)
சோழரையர்
சோழவயோத்தியராசர்
சோழன் கிளையார்
சோழாட்சியார், சோமாசியார்
ஞானிசேவகர்
தக்கலையார்
தக்கோலர்
தக்கோலாக்கியர், தக்கேரலாக்
கியார், தாக்கலக்கியார்
தஞ்சைக்கோன்
தஞ்சைராயர், தஞ்சிராயர்
தனஞ்சராயர், தஞ்சுண்டார்
தண்டத்தலைவர்
(தண்டத்தலையர்)
தண்டநாயகர்
தத்தாண்டார், தத்துவண்டார்
தத்துவாண்டையார், தெத்து
வென்றார், தெத்துவெண்டார்
தமிழுதரையர்
தம்பாக்கியார், தம்பாக்குடிக்கியார்

தம்பிராயர், தம்பிரார்
தலைமையார் தலைமுறையார்
தலையர், தலைவர்
தலைராயர், தனராயர்
தலைசைராயர், தனசைராயர்
தளவாய்
தளிகொண்டார்
தளிநாடர்
தளிப்பிரியர்
தளியர்
தளியாண்டார்
தளியாளர்
தளியாளியார், தளிபாட்சியர்
தளியுடையார்
தளிராயர்
தனிராயர்
தனுசர், தனுச்சர்
தன்மபால்குடிக்கியார்
தாங்கியர்
தாளிதியார் தாளிதியர்
தாளியர்

தானாதியார், தானாதிபதியார்,
தானாதிபர்
தானைத்தலைவர்,
(தானைத்தலையர்)
தான் தோன்றியார், (தாந்தோணியார்)
தியாகர் (தியாகி)
திராணியார், திராணியர்
திருகட்டியர், திருகாட்டியர்
திருக்காட்டியார்
திருக்காட்டுராயர்
திருப்பூவாட்சியார், திருப்
புகழூச்சியார், திருவளச்சியார்
திருமக்கோட்டைதாங்கி,
(திருவுடைதாங்கி)
திருமயிலர், திருமார்
திருமயிலாண்டார், மயிலாண்டார்
திருமயிலாட்சியார், திம்மாச்சியார்
திருமுடியார்
துண்டர், (தொண்டர்)
துண்டயர், (தொண்டையர்)
துண்டராயர், (துண்டுராயர்).

துண்டுரார், துண்டீரராயர்
துவார்
துறைகொண்டார்
துறையமர்ந்தார், (துறவந்தார்)
துறையாண்டார், துறவாண்டார்
துறையுண்டார்
தெலிங்கதேவர்
தெலிங்கராயர்
தென்கொண்டார், (தெங்கொண்டார்
தெங்கண்டார்)
தெங்கிண்டார்
தென்னங்கியர்
தென்னதிரையர்
தென்னப்பிரியர், (தின்னாப்பிரியர்
திண்ணாப்பிரியர்)
தென்னரையர், தென்னறையர்
தென்னவராயர்
தென்னன், தென்னர்
தேசிராயர், தேசுராயர்
தேட்டாளர் (தோழர்)
தேவர்

தேவப்பிரியர்
தேவராயர்
தேவாண்டார், தேவண்டார்
தேவாளர்
தேவாளியார், தேவாட்சியர்
தேவுகொண்டார்
தேவுடையார், தேவுடையர்
தொண்டாம்பிரியர்
தொண்டைப்பிரியர்,
(தொண்டாப்பிரியர்)
தொண்டைமான், தொண்டைமார்
தொண்டைமான்கிளையார்
தொரையண்டார்
தோப்பையார், தோப்பையர்
தோப்பைராயர்
தோழர்
தோன்றார், (தோணார்)
நண்டர்
நண்டல்ராயர்
நண்டலாறுவெட்டி, நண்டலாறு
வெட்டியார், (நண்டுவெட்டி)

நண்டுவெண்டியார்
நந்தியர், (நந்தர்)
நந்திராயர், நந்தியராயர்
நரங்கியார், நரங்கியர், (நரயர், நரியர்)
நரங்கியப்பிரியர், (நர்கியப்பிலியர்),
நரங்கிப்பிலியர்
நரசிங்கர்
நரசிங்கதேவர், (நரங்கியதேவர்)
நரசிங்கப்பிரியர்
நரசிங்கராயர்
நல்லப்பிரியர்
நல்லவன்னியர்
நல்லிப்பிரியர், நள்ளிப்பிரியர்
நன்னியர், நயினியர், நைனியர்
நைனியார்
நன்னிராயர்
நாகங்கொண்டார்
நாகதேவர்
நாகநாடர்
நாகப்பிரியர்
நாகர்

நாகராயர்
நாகாண்டார்
நாகாளர்
நாகாளியார், நாகாட்சியார்
நாகுடையார், நாகுடையர்
நாணசிவன், நாணசேவர், நான
சேவர், ஞானசெவன், ஞானியர்
நாடர், நாடார்
நாட்டார்
நாட்டாள்வார், நாடாள்வார்
நாடாவார்
நாட்டரசர்
நாட்டரையர், நாட்டறையர்
நாய்க்கர், நாயக்கர்
நாய்க்காடியார், நாக்காடியார்
நாய்க்காவாடியார்
நார்த்தேவர், நார்த்தவார்
நாரத்தேவர்
நாவிளங்கியார், நாவலங்கியார்
நீலங்கொண்டார்
நெடுங்கொண்டார் நெடுமுண்டார்,

நெறிமுண்டார்
நெடுத்தர், நெடுத்தார்
நெடுந்தரையர்
நெடுவர், நெட்டையர்
நெடுவாண்டார், நெடுவண்டார்
நெடுவாண்டையர்
நெடுவாளியார், நெடுங்காளியார்
நெல்லிகொண்டார்
நெல்லிதேவர்
நெல்லிப்பிரியர், (நல்லிப்பிரியர்)
நெல்லியர்
நெல்லியாண்டார்
நெல்லியாளர்
நெல்லியாளியார்
நெல்லியாட்சியார்
நெல்லியுடையர்
நெல்லிராயர்
பகட்டுவார், பவட்டுவர்ர்
பசண்டியார்
பவட்டுரார்
பகட்டுராயர்

பத்தாளர்
பங்களராயர்
பசும்படியார், பசும்பிடியார்
பசும்பிடியர்
பசுபதியார், பசுபதியர்
பஞ்சரமார்
பஞ்சராயர்
பஞ்சரையர்
பஞ்சந்தரையர், பஞ்சநதரையர்
படைத்தலைவர், [படைத்தலையர்],
படைத்தலையார்
படையாட்சி, படையாட்சியார்
படையெழுச்சியார்
பட்சியர்
பட்டாண்டார்
பட்டாளர்
பட்டாளியார், பட்டாட்சியார்
பட்டி, பட்டியார்
பட்டுக்கட்டியார்
பட்டுகொண்டார்
பட்டுடையர்

பட்டுப்பிரியர்
பட்டுராயர்
பட்டி, பட்டியார்
பணிகொண்டார்
பணிபூண்டார்
பண்ணிகொண்டார், பண்ணி
கொண்டர், பன்னிகொன்டார்,
பன்றிகொண்றார். பன்றிநாடு
கொன்டார்)
பண்ணிமுண்டார், பண்ணிய
முண்டார், பண்ணிக்குட்டியார்
பண்டாரத்தார்
பத்தாண்டார்
பத்தாளர், பக்தாளர், (பயத்தார்)
பத்தாளியார், பத்தாட்சியார்
பத்தாச்சியார், பெத்தாச்சியார்
பத்துகொண்டார்
பத்துடையார், பத்துடையர்
பதுங்கராயர், பதுங்கரார்
பதுங்கிரார், பதுங்கியார், பதுங்கர்,
பைதுங்கர்

பம்பாளியார்
பயிற்றுராயர்
பரங்கிலிராயர், பரங்கிராயர்
பருதிண்டார்
பருதிதேவர்
பருதிநாடார்
பருதிப்பிரியர்
பருதியர்
பருதியாண்டார்
பருதியாளர்
பருதியாளியார், பருதியாட்சியார்
பருதியுடையர்
பருதிராயர்
பருத்திகொண்டார்
பருத்திக்குடையர்
பருத்திவாண்டையார்
பலமுடையர், பலமுடியர்,
பல்லமடையார், பல்லமுடையார்
பல்லவமுடையார்
பல்லவதரையர்
பல்லவநாடர்

பல்லவர்
பல்லவராயர்
பல்லவவாண்டார், பல்லவாண்டார்
பவட்டுவார், (பாட்டுவார்)
பழங்கொண்டார், பழனங்
கொண்டார், பழங்கண்டார், பழந்
தீவு கொண்டார்
பழைசப்பிரியர்
பழைசயர், பழைசயார்
பழைசயாளர், பழைசயாளர்
பழைசயாளியார், பழைசை
யாளியார், பழைசயாட்சியார்,
பழத்தார், பழுவேட்டரையர்
பழைசைகொண்டார்
பழைசைநாடர்
பழைசையாண்டார்
பழைசையுடையர்
பழையாறுகொண்டார்
பழையாற்றார்
பழையாற்றரையர்
பனங்கொண்டார்

பன்னுண்டார்
பனைகொண்டார்
பனைநாடர்
பனைப்பிரியர்
பனையதேவர்
பனையர், பன்னையர்
பன்னையார்
பனையாண்டார்
பனையாளர்
பனையாளியார், பனையாட்சியார்
பனையுடையார், பனையுடையர்
பனைராயர்
பாச்சிகொண்டார், [பாச்சுண்டார்]
பாச்சிப்பிரியர், பாப்பிலியர்
பரிசப்பிலியர்
பாச்சிராயர்
பாச்சிலாளி, பிச்சாடி,
பாச்சிலாளியார், பிச்சாடியார்
பாண்டராயர், பாண்டுராயர்
பாண்டராயர், பாண்டவராயர்
(பாண்டவ அரசர்)

பாண்டிராயர்
பாண்டியர்
பாண்டியராயர்
பாப்பரையர்
பாப்பிரியர், பாப்பிலியர்
பாப்புடையார், பாப்புடையர்
பாப்புரெட்டியார்,பாப்புவெட்டியார்
பாம்பாளியார், பாம்பாளியர்
பம்பாளியார், பம்பாளியர்
வம்பாளியார், வம்பாளியர்
பாலைநாடர், பான்நாடர்
பாலைநாட்டார், பானாட்டார்
பால்நாட்டார்
பாலையர், பாலியர், பாலியார்
பாலையாண்டார், பாலாண்டார்
பாலண்டார்
பாலையுடையர், பாலுடையர்
பாவுடையர், பாவுடையார்
பாலைராயர், பால்ராயர்
பிசலண்டார்
பிச்சயன், பிச்சயர்

பிச்சயன்கிளையார்
பிச்சராயர்
பிச்சாண்டார்
பிச்சாளியார், பிச்சாளியர்
பிரமராயர்
பிரமர்
பிலிமீண்டார்
பிலியராயர்
பீலிமுண்டார்
புலிமுண்டார்
பெரிச்சியார்
புத்திகழிச்சார்
புத்திகழிந்தார், (புற்றில்கழிந்தார்
புட்டில்கழிந்தார்)
புலிகொண்டார்,(பிலிமுண்டார்)
புலிக்கொடியார், புலிக்கொடியோர்,
(புலிக்குட்டியார், புலிக்குட்டியர்,
புல்லுக்கட்டியர்)
புலியாக்கியார், (புலிக்கியார்,
புளுக்கியார்)
புலியூரார்

புலிராயர், புலியிரார்
புள்ளராயர், (பிள்ளைராயர்),
புளுக்கியார்
புல்லியரையர், புள்ளவராயர்
புறங்காட்டார்
புறம்பையங்கொண்டார், பொய்
கொண்டார்
புறம்பையத்தார்
பொய்ந்தார்
புறம்பயப்பிரியர்
புறம்பயமுடையர்
புறம்பயர்
புறம்பயாண்டார்
புறம்பயாளர்
புறம்பயாளியார், புறம்பயாளியர்,
புறம்பயாட்சியார், புறம்பயாட்சியர்
புன்னாகர், புண்ணாக்கர்
புன்னைகொண்டார்
(பின்னுண்டார்)
புன்னையர், (பூனையர்)
பூக்கட்டியார்

பூக்கொண்டார்
பூச்சியார், பூட்சியார்,
திருப்பூட்சியார்
பூட்டாங்கண்ணியர்
பூதரையர், (போதரையர்)
பூதாங்கியார் (பூராங்கியார்)
பூப்பிரியர்
பூராயர்
பூவர், பூலர்
பூவாண்டார், பூவாண்டர்
பூவாளர்
பூவாளியார், பூவாட்சியார்
பூவுடையர்
பூழிநாடர், பூமிநாடார்
பூழியர்பிரான்
பூழியூரார்
பூழிராயர்
பூவனையரையர்
பெசல்கொண்டார்
பெசலண்டார்
பெசலாண்டார்

பெரிச்சிக்கணக்கர்
பெரியாட்சியார்
பேத்திரியர், பேதறியார்
பேரரையர், பேதரையார்
பொதியர், பொய்யர், பொய்ந்தார்
பொம்மையர்
பொய்கொண்டார், பொய்யுண்டார்
பொய்கையாண்டார்
பொய்ந்ததேவர், போசுதேவர்
பொய்ந்தராயர், போய்ந்தராயர்,
பொய்ந்தரையர், பொய்ந்திரையர்
பொயிந்தார்
போய்ந்தாராயர்
பொறையர்
பொறைபொறுத்தார்
பொற்றையர் (பொத்தையர்)
பொற்றைவெட்டியார், பொற்றை
வெட்டி, (பொத்தன்வெட்டியார்)
பொன்னங்குட்டி,
பொன்னங்குட்டியார்
பொன்னங்கொண்டார்

(பொன்னமுண்டார்)
பொன்பூண்டார்
பொன்னதேவர்
பொன்னவராயர்
பொன்ணாண்டார்
பொன்னாப்பூண்டார்
பொன்னாரம்பூண்டார்
பொன்னாளியார், பொன்னானியார்
பொன்மாரியார்
போசளார்
போய்ந்தார்
போற்கொளுத்தியார்
(போரைக்கொளுத்தியார்)
போரிற்சுற்றியார், (போரைச்
சுற்றியார்)
போரிற்பொறுக்கியார் போர்பொறுச்
கியார் பொரிப்பொறுக்கியார்
போர்க்கட்டியார், போர்க்கட்டியர்,
போர்க்காட்டியார்
போறிற்கட்டியார்
போர்முட்டியார்

மங்கலதேவர், மங்கதேவர்
மங்காத்தேவர், மொங்கத்தேவர்
மங்கலத்தார்
மங்கலநாடர்
மங்கலப்பிரியர்
மங்கலராயர்
மங்கலர், மங்கலார்
மங்கலாண்டார்
மங்கலாளர்
மங்கலாளியார், மங்கலாட்சியார்
மங்கல்கொண்டார்
மட்டியார், மாடர்
மட்டையர்
மட்டையாண்டார்
மட்டைராயர்
மணவாளர்
மணிக்கிரார், மணிக்கிராயர்
மணிகொண்டார்
மணிராயர்
மண்கொண்டார், (மங்கொண்டார்
மங்கண்டார்,) மண்ணைகொண்டர்

மண்டலமாளியார்
மண்டலராயர், மண்டராயர்
மண்ணியார், மண்ணியர்
மண்ணையார், மண்ணையர்
மனியர், மன்னயர், மன்னியர்
மண்ணிராயர், மணிக்கராயர்
மண்மலைக்காளியார்
மண்வெட்டிக்கூழ்வழங்கியார்
மண்வெற்றிக்கூழ்வாங்கியார்
மண்வெற்றிக்கூழ்வழங்கியார்
மண்வெட்டியில் கூழ்வாங்கி
மதப்பிரியர், (மதப்பிலியர்
மதியாப்பிரியர்)
மதமடக்கு
மதில்சுற்றி
மந்திரியார், (மந்தியார்)
மயிலாண்டார், [மயிலண்டார்]
மருங்கராயர், [பருங்கைராயர்,
கைராயர்
மலையர்
மலையமாள்

மலையரார்
மலையரையர்
மலைராயர், மலையராயர்
மல்லிகொண்டார்
மழநாடர்
மழவராயர்
மழவர்
மழவாளியார், மழுவாடியார்
மனமஞ்சார்
மன்னசிங்கர், மன்னசிங்காரியார்
மன்னைசிங்காரி
மன்னதேவர்
மனவேளார், மன்னவேள்
மன்றாயர்
மன்றாடியார், (மண்டலராயர்)
மாகொண்டார்
மாங்காடர்
மாங்காட்டார்
மாதராயர், மாதைராயர், (மாதுராயர்
மாத்துராயர்)
மாதவராயர்

மாதிரார், மாதுரார்
மாதையர், மாதயர்
மாதையாண்டார், (மாதயாண்டார்)
மாத்துளார்
மாநாடர், மாடர்
மாந்தராயர்
மாந்தையரையர், மாந்தரையர்
மாப்பிரியர்
மாமணக்காரர்
மாம்பழத்தார், பழத்தார்.
மாலையிட்டார்
மால்,
மாலதியார், மாலத்தியார்
மாவலியார்
மாவாண்டார், மாவண்டர்
மாவாளர்
மாவாளியார், மாவாட்சியார்
மாளிகைசுற்றியார், மாளிச்சுற்றியார்
மாளிச்சுற்றியார், மாளிச்சுத்தியார்
மாளிச்சர்
மாளுவராயர், மாளுசுத்தியார்,

மாள் சுத்தியார், மானங்காத்தா
மானத்தரையர், மானமுத்தரையர்
மானம் விழுங்கியார், மானவிழுங்கி-
யார், மானமுழுங்கியார்
மான்சுத்தியார்
மானுசதேவர்
மின்கொண்டார்
மின்னாண்டார்
மின்னாளியார்
மீனவராயர்
முடிகொண்டார், முடியைக்
கொண்டார், முடிபூண்டார்
முட்டியார்
முணுக்காட்டியார்
முனுக்காட்டியார்
முண்டார், முண்டர்
முதலியார்
முத்தரையர்
முத்துக்குமரர்
மும்முடியார், மும்முடியர்
முருகர்

முறையார்
முனைகொண்டார்
முனைமுண்டார்
முனைதரையர், முனையரையர்
முனைதிரியர்
முனையதரையரர், முனையதிரியர்
முனையாளியார்
முனையாட்சியார்
மூங்கிலியார், மூங்கிலியர்
முரியர், முறையர், முவரையர்
முறையார்
முவர், (முக்கு வெள்ளையர்)
மூன்றர்
மூவராயர்கண்டார்
முவாளியார்
மூவெற்றியார், (முவெட்டியார்
முளைவெட்டியார்)
மூவேந்தரையர்
மூன்றாட்சியார், (முண்டவாசியார்,
மூண்டாசிரியார்)
மெய்க்கன்கோபாலர்

மெய்யாடியார், மெய்சொல்லியார்
மெனக்கடார், மெனக்கடர்
மேல்கொண்டார்
(மேற்கொண்டார்)
மேல்நாடர், மேனாடர்
மேல்நாட்டுராயர்
(மேனாட்டுராயர்)
மேல்நாட்டரையர்
(மேனாட்டரையர்)
மேனாட்டுத்தேவர்
மொட்டதேவர், மெட்டத்தேவர்
மொட்டாளியார், மொட்டாளியர்
(மொட்டாணியர்)
மோகூர்ப்பிரியர், (மோதப்பிலியர்)
யுத்தப்பிரியர், உத்தப்பிரியர்
ராராண்டார், இராதராண்டார்
இராரண்டார், ராரண்டர்
இராரண்டர்
வங்கணர், அங்கரான், அங்கரார்
வங்கத்தரையர்
வங்கர், வங்கார், வங்காரு

வங்கராயர்
வங்கனராயர்
வங்காரமுத்தரையர், வங்கார
முத்திரியர், வங்காளமுத்தரையர்
வஞ்சிராயர், வாஞ்சிராயர்
விஞ்சிராயர், விஞ்சைராயர்
வடுராயர், வடுகராயர், வடிவிராயர்
வடுவுரையர்
வணங்காமுடிபண்டாரத்தர்
வண்டர், வாண்டார்
வண்டதேவர்
வம்பாளியார்
வமுண்டர்
வர்மர்
வலங்கொண்டார்
வலங்கண்டார்
வல்லக்கோன்
வல்லங்கொ.ண்டார்
(வல்லுண்டார்)
வல்லத்தரசு, வல்லத்தரசர்
வல்லத்தரையர், வல்லவரையர்

வல்லமாண்டார்
வல்லயார்
வல்லவராயர்
வல்லரண்டார்
வல்லாண்டார், வல்லண்டார்
வல்லாளதேவர், வள்ளாளதேவர்
வல்லாளியார், வல்லாடியார்
வல்லிடியார்
வழியார்
வழுதியார்
வழுவாளியார்
(வழுவாடியார், வழுவாட்சியார்)
வளங்கூரர்
வளத்தாதேவர்
வளம்பர், வளவர்
வள்ளையர்
வள்ளைராயர்
வன்னிகொண்டார்
வன்னிமுண்டார்
வண்ணிமுண்டார்
வன்னியமுண்டார்

வன்னியங்கொண்டார்
வன்னியர், வன்னியனார்
வாச்சார், வாச்சியார்
வாச்சுக்குடையர் (வாச்சிக்குட்டியர்)
வாட்கொண்டார் வாள்கொண்டார்
வாட்டாட்சியர், வாட்டாட்சியார்
வாட்டாச்சியர்
வாணக்கர், வாணாக்கர்
வாணதரையர்
வாணதிரையர்
வாணதிரியர்
வாணாதரையர், வாணாதிரியர்
வாணாதிராயர்
வாளையார்
வீணாதரையர், வீணாதிரியர்
வீணைதிரையர்
வாணராயர், வாணரையர்
வாண்டாப்பிரியர், வண்டப்பிரியர்
வாண்டையார், வண்டயர்
வாண்டராயர். வண்டைராயர்
வாப்பிரியர், (வாப்பிலியர்)

வாயாண்டார்
வாயாளர்
வாயாளியார் (வாயாடியார்)
வாயாட்சியார், வாளாடியார்
வாலியார்
வாலிராயர்
வாவுடையர்
வாளமரர்
வாளாண்டார்
வாளாளர்
வாளாளியார், வாளாட்சியார்
வாளுக்குவலியர்
வாளுக்குவேலியர்
வாளுடையர்
வாளுவராயர்
வாளையார்
வாள்கொளியார்
வாள்பிரியர், வாட்பிரியர்
வாள்ராயர்
வாள்வெற்றியார், வாள்வெட்டியார்
(வாளால் வெட்டியார்)

விக்கிரமத்தார்
விக்கிரமத்தையர்
விசயதேவர், விசயத்தேவர்
விசாதேவர், வீச்சாதேவர்
விசயராயர், விசையராயர்
விசராயர், விசுவராயர், விசுவரார்
விசயாண்டார் (வீசாண்டார்)
விசலர்
விசலப்பிரியர்
விசலராயர்
விசலாண்டார், விசலண்டார்
பிசலண்டார்
விசலாளர்
விசலாளியர், விசலாளியார்
விசலாட்சியார்
விசலுடையர்
விசல்கொண்டார்
(விசலுண்டார், விசாலுண்டர்
பிசலுண்டார்)
விசல்தேவர்
விசல்நாடர்

விசுவராயர்
விஸ்வராயர்
விசாலுண்டார்
விஞ்சைராயர்
விண்டுராயர், வீண்டுராயர்
விருதராசர்
விருதராசபயங்கரர்
விருதலார், விருதுளார்
விலாடத்தரையர்
வில்லர்
வில்லதேவர்
வில்லவதரையர், வில்லவதரையனர்
வில்லரராயர், வில்வராயர்
விழுப்பாதராயர்
விளப்பர்
விற்பனர், விட்டுணர்
விற்பன்னரராயர்
வினவற்பிரியர்
வினைத்தலைப்பிரியர்
வினைத்தலைப்பிலியர்
வீச்சாத்தேவர்

வீசண்டார்
வீணதரையர், வீணாதிரியர்
வீரக்குட்டி, வீரக்குட்டியார்
வீரங்கொண்டார் (வீரமுண்டார்)
வீரமுள்ளார்
வீரப்பிரியர், (வீரப்பிலியர்)
வீரப்புலியர்)
வீராண்டார், (வீரண்டியார்)
வெங்களபர், வெங்களப்பர்
வெங்கிராயர், வேங்கைராயர்
வெட்டுவராயர்
வெட்டுவார், வெட்டுவர், வெட்டர்
வெண்டர், வெண்டார், வென்றார்
வெண்டதேவர், (வெண்டாதேவர்)
வெண்ணுமலையார்
வெண்ணுமலையர்
வெள்ளங்கொண்டார்
வெள்ளடையார், வெள்ளடையர்
வெள்ளதேவர்
வெள்ளப்பனையர்
வெள்ளாளியார், (வெள்ளாணியார்)

வெற்றியர், (வெறியர்)
வேங்கைப்பிரியர்,
(வேங்கைப்பிலியர்)
வேங்கைராயர், (வேங்கிராயர்,
வெங்கிராயர்)
வேங்கையாளியார்
(வெக்காலியார்)
வேட்கொண்டார்
வேட்பிரியர்

வேணாடர்
வேணுடையார், வேணுடையர்
வேம்பராயர்
வேம்பர்
வேம்பாண்டர்
வேலர்
வேளாண்டார்
வேளாளர்
வேளாளியார், வேளாட்சியார்

வேளுடையார் (வேளுடையர்)
வேளூரார், வேளூரர்
வேள்
வேள்ராயர்
வைகராயர், வையராயர்
வைதும்பர், வைதுங்கர்
வைதும்பராயர்
வைராயர், வயிராயர், வயிரவர்